# கூலிக்கு வந்தவன்

நாவல்



ச.வே.பஞ்சாட்சரம்

# கூலிக்கு வந்தவன்

- நாவல் -

ச, வே, பஞ்சாட்சரம்

வெளியீடு:
"தூண்டி"
141, கேணியடி, திருநெல்வேலி
யாழ்ப்பாணம்.

நூல் : கூலிக்கு வந்தவன் (நாவல்)

ஆசிரியர் : ச. வே. பஞ்சாட்சரம்

முதற்பதிப்பு : 2003 ஆவணி

பதிப்புரிமை : ப. வேழத்தெழிலன் ( கனடா)

அச்சுப்பதிப்பு : திருச்செல்வி அச்சகம், மானிப்பாய்.

அட்டைப்படம் : கணியன்

வெளியீடு : தூண்டி இலக்கிய வட்டம்

141, கேணியடி திருநெல்வேலி, இலங்கை.

பக்கங்கள் : 132

விலை : ரூபா 170.00

Name of Book : KOOLIKKU VANTHAVAN (Novel)

Author : S. V. Panchardcharam

First Edition : 2003 August

Royality : P. Verlaththezhilan Canada.

Printing Work : Thiruchelvi Press Manipay.

Cover Picture : Kaniyan.

publishers : Thoondy Ilakkiya Vaddam Thirunelvely.

Pages : 132.

Price : Rs. 170.00

கிடைக்கும் இடங்கள்:

பூபாலசிங்கம் புத்தகசாலை
பேருந்து நிலையம்
யாழ்ப்பாணம்.

வசந்தம் புத்தக நிலையம்
405, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

நிகரி வெளியீட்டாளர்
இணுவில்.

# பதிப்புரை

ஈழத்தின் முக்கிய மரபுக் கவிஞர்களில் ஒருவரான ச. வே. பஞ்சாட்சரம் அவர்களின் முதல் நாவலாகக் 'கூலிக்கு வந்தவன்' நூல் வெளிவருகிறது.

அற்புதமான கவிதைகளைத் தந்தவர் கவிஞர். இலக்கணம் பிசகாத மொழி அறிஞர் கதைகள். அல்லாத கதைகள் எனப்படக்கூடிய சின்னஞ்சிறு கதைகளைத் தந்தவர். அந்தவகையிற் பல்வேறு ஆளுமைகளைத் தம்முள் அடக்கியுள்ள இக்கவிஞரின் இன்னொரு முயற்சியே இந்த நாவலாகும்.

ஈழத்தின் நாவல் முயற்சியானது முளைநிலையிலேயே உள்ளது என்பது ஆய்வாளர் கருத்து.

செங்கை ஆழியான், டானியல், வ.அ. இராசரத்தினம், தெணியான், தெளிவத்தை யோசெப், நந்தி என நீளும் இப்பட்டியலில் இப்போது புதிய நாவலாசிரியராக இவரும் இணைந்து கொள்கின்றார். ஈழத்தின் நாவல் துறைவளர்ச்சியில் இந்நூல் ஒரு மைல்கல்லாக இருக்குமென நம்புகிறேன்.

- நன்றி -

"தூாண்டி"
141, கேணியடி,
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்.

தி. செல்வமனோகரன்

## மூதறிஞர் க. சிவராமலிங்கம் B.A. அவர்கள் வழங்கிய

# முன்னுரை

நவீனம் - புதினம் தமிழ் இலக்கியப் பரப்பில் 19ஆம் நூற்றாண்டில் இடம் பெற்றது என்கின்றார்கள், இலக்கிய வரலாற்று ஆய்வாளர்கள்.

வேதநாயகம்பிள்ளை வழி, வடுவூர்த் துரைசாமி ஐயங்கார், கோமதி அம்மாள் போன்றோரின் புதினங்கள் அக்காலத்தில் பெரிதும் வாசிக்கப்பட்டன. தொடர்ந்து கல்கி, சாண்டில்யன், மு.வ, அகிலன் போன்றோர் தமிழ் வாசிப்பவர்களின் மனங்களைக் கவர்ந்தனர்.

இன்று இலங்கை, இந்தியப் புதினப் படைப்பாளிகளின் ஆக்கங்கள் கணிசமான இடத்தைத் தமிழர் மத்தியில் பெற்றிருப்பது மகிழ்ச்சி தருவதாகும்.

காலத்துக்கு இன்றியமையாத செம்மைக்கருத்துக்களைக் கொண்டு தேன்பிலிற்றி நிற்கும் புதினம் ஒன்றை, நண்பர் பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம் "கூலிக்கு வந்தவன்" என்று மகுடம் தந்து படைத்திருக்கின்றார்.

முன்னுரை எழுதுமாறு அன்புக்கட்டளை. நான் எழுத்தாளனுமல்லன்; கவிஞனுமல்லன்; வெறும் சுவைஞனே! "இலட்சிய வாழ்வுக்கு வழி காட்டுவனவே இலக்கியங்கள்" என்ற பழங்கருத்தாளன் நான்! இலக்கியங்களை இன்பியல் (Comedy) என்றும் துன்பியல் (Tragedy) என்றும் வகுத்துளர். எமது வாழ்வு பெருமளவு துன்பியல் சார்ந்ததாகையால் துன்பியல் சார்ந்த நூல்களையே பெரிதும் விரும்புகின்றோம்.

"தருமனுக்கு வந்த சோதனையை விடவா பெரிது?" என்று எம்மைத் தேற்றிக் கொள்கின்றோம்.

"தருமனுக்கு இருந்த வலிமை என்ன? " என்பதைச் சிந்திக்கிறோமா என்பது வேறு கதை.

‘கூலிக்கு வந்தவன் ஓர் இன்பியல் (Comedy) தான்.

ஆனால் வந்த இன்னல்களையும் சோதனைகளையும் செம்மனத் துணிவால், குறிக்கோள் தவறா உறுதியால் வென்று நிற்கும் ‘பெருந்தகை’ யையும் ‘பூங்கொடி’யையும் நிறைவாகக் காணும்போது ஆனந்தக் கண்ணீர் ஊற்றெடுக்காமல் இருக்க முடியாது.

நண்பரின் தமிழ் இலக்கியப் பயிற்சியும், கற்றதனால் ஆய பயனாம் தெய்வ பக்தியும் அவரின் பாத்திரப் படைப்பில் தேன்கலந்து நிற்கின்றன.

படிப்பவர் உள்ளத்தில் நிலைகொள்ள வேண்டிய கருத்துக்களைப் பொருத்தமான சொற்பதங்களால் சொல்லவல்ல ஆற்றல் நண்பரின் தனி ஆற்றல்.

வேலையற்ற படித்த வாலிபர்களின் உள்ளக் குமுறல் (பக்கம்15) உலகத்தைக் கெடுத்து எங்கள் உலையில் அரிசி போடலாமா? (பக்கம் 28) உழைத்துண்ணும் இன்பம் (பக்கம் 41) தொழிலாளர்களின் தன்மை (பக். 64). இதற்கெல்லாம் யார் காரணம்? சிந்திக்கவும்.

சொற்பதங்களின் செம்மை - ‘பொன்காய்த்த மரம்’ (பக். 74) ‘இன்ப வாடை’ (பக். 80) நெடுநல் வாடையை நினைவுக்கு கொண்டு வருகிறது. வாடைக் காற்றுக்கூட இன்பம் தரும். ஆண்மை இருந்தால் மட்டும் போதாது. இரக்கமும் கலந்து நிற்குமானால் அது தெய்வீகமே. (பக். 97) - பூங்கொடியின் காதல் தத்துவ உலகச் சஞ்சாரம் (பக்.107); சேக்கிழார் காட்டும் பரவையாரின் “சிவனருள் பெற்றவனோ?” என்ற தெய்வம் மணக்கும் அடிகளை நினைவூட்டுகின்றது.

சிகரமாக, “தங்கச்சி! உலகநாதனின் உயிர் அவ்வளவு இலேசில் கழலாது அம்மா?” (பக். 118) என்ற சரவணச்சாமியாரின் சொற்கள் எத்தனை தத்துவங்களைப் பிரதிபலித்து நிற்கின்றன.

Sarcarsm - எள்ளல் என்றால் இதுதான். இது பண்டிதர்களின் கைவந்த கலையன்றோ?

உலகநாதனின் 'பொறிக்கிடங்கு' திடுக்கிட வைக்கிறது. தொடர்ந்து படிக்க மனமின்றிச் சிலபக்கங்களைத் தாவிப்பாய்ந்து பெருந்தகை பொறிக்கிடங்கில் விழவில்லை என்பதைத் தெரிந்து கொண்ட பின்பே, எப்படி வென்றான் என்பதைப் பின்நோக்கி வந்து படிக்க வைத்தது.

திருப்பங்களைத் திகைப்பூட்டும் வகையில் மட்டுமல்லாமல், உள்ளம் சிலிர்க்க வைக்கும் வகையிலும் ஏற்படுத்திக் கதையை நகர்த்திச் செல்லும் பாங்கு நண்பரின் தனிப்பாங்கு!

மொத்தத்தில் 'கூலிக்கு வந்தவன்' வாசிக்கப்பட வேண்டிய புதினமன்று - படித்துச் சுவைத்து இரை மீட்க வேண்டிய ஒன்று என்பது உறுதி.

இந்த மண்ணை வளமாக்க, தமிழ்ப் பண்பையும் சால்பையுங் காக்கப் பெருந்தகை, பூங்கொடி, சரவணச்சாமியார் போன்றோர் நம்மிடையே தோன்றப் பண்டிதர் ச.வே.ப. வின் "கூலிக்கு வந்தவன்" உதவ வேண்டும் என்று தமிழ்த்தாயை வணங்குகிறேன்.

நண்பர் இது போன்ற நூல்களைப் படைக்க ஆசியும் ஆன்ம பலமும் நல்க இணுவை முருகனைப் பணிந்து நிற்கும்,

அன்பன்

**க. சிவராமலிங்கம்**

குமாரசாமி வீதி,
கந்தர் மடம்
யாழ்ப்பாணம்.

# என்னுரை

இற்றைக்கு 36 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட நாவல் இது. 40 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலம் இந்நாட்டில் இன்று போலச் சாதி வேற்றுமை தணிந்திராத-பட்டதாரிகளுமே வேலையற்றலைந்த - ஆனால் 10ஆம் வகுப்புப் படித்தவர்களுமே, கமம், குடிமைக் கைத்தொழில்கள், கூலிவேலைகள் செய்யமுன்வராத- தொழில் மகத்துவம் (Dignity of Lobour) உணரப்படாததனால் கைத்தொழில்கள், விவசாயம், தொழில் வாய்ப்புகள் பெருகியிருக்காத - கமம், கூலித்தொழில் புரியும் இளைஞர்களை நம்யுவதிகள் மணம்புரியச் சம்மதிக்காத- நம்மிளைஞர்கள் வேலைக்காக வெளிநாடுகள் செல்லத் தொடங்கியிராத ஒரு காலகட்டம்.

அந்தச் சமூக நிலையைப் பகைப்புலமாகக் கொண்டு எழுதப்பட்ட நாவல் இது. சமூக முன்னேற்றத்துக்குக் குந்தகமான மேற்குறித்த குறைபாடுகள் களையப்பட வேண்டும் என்ற என் அங்கலாய்ப்பு “நமக்குத் தொழில்கவிதை” என்றிருந்த என்னை நாய்பார்க்கிற வேலையைக் கழுதை பார்க்கப் புகுந்த கதையாக இந்நாவலை எழுதத் தூண்டியது. ஆயினும் உடனடியாக இந்நாவல் வெளிவந்து பயன்நல்கும் நியதி இருக்கவில்லை.

எனினும் ஈழத்து இளம்நெஞ்சங்கள் துடுப்பாட்டச் செய்திகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், உந்துருளிச் சவாரிகளுக்கு அடிமையாகியுள்ள இன்றைய நிலையில் அந்த நெஞ்சங்களையும், இங்கு போரினால் அழிக்கப்பட்டுள்ள இலக்கிய இரசனையையும் மீட்டுக் காக்கிற பணியில் இந்நாவலும் பங்களிக்கும் என்பது எனது உறுதியான நம்பிக்கை.

துரிதமான திருப்பங்கள், ஊசலாடிச் செல்லுங்கதையோட்டம், நெஞ்சங்களின் அனுபவங்களைக் கிளறி உலுக்குகின்ற நடப்பியலுக்குப் பொருந்தும் புதுமையான கதைச்சம்பவங்கள், அறிவு பூர்வமானதும் உணர்வு பூர்வமானதுமான நடை என்பவற்றின்

ஒட்டுமொத்தப் படைப்பான நாவல்களே படித்து முடித்தொழியக் கீழே வைக்கமுடியாதவாறு, வாசகனைக்கட்டி வைத்திருக்கும் விறுவிறுப்புக் கொண்டிலங்க முடியும்.

இவ்வுயிரோட்டப் பண்புகளை இயன்ற வரைக்கும் பொதிந்து இந்நாவலை அன்று எழுதிமுடித்தேன். இன்று மேலும் புடமிட்டு வெளியீட்டுக்கு வழங்கியுள்ளேன்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு நான் கற்பிக்கச் சென்ற புதிதில் அக்கல்லூரித் துணைமுதல்வரும் மூதறிஞருமான திரு. க. சிவராமலிங்கம் அவர்கள் ஆற்றிய இலக்கியச் சொற்பொழிவுகளில், இலக்கியங்களின் ஆழங்களைத்துருவி நிமிர்ந் தெழுந்த அவரது இரசனை விளக்கங்கள் என்னை நடுங்கவைத்தன இவர் பயிற்றும் கல்லூரியில் நானுமா? என்று. பெரிது, சிறிது பார்க்காத இவரது சமத்துவ மனிதநேய மனப்பாங்கும், சொல்ல வேண்டியதை எங்கேயும் சரி சொல்லிவிடுகின்ற அஞ்சாமையும் இவரது இளைப்பாறு விழாவில், "தாழப்பறக்கத் தயங்காத ஹெலிக்கொப்டர்" என்று இவரை நான் நயந்து பாட வைத்தன.

தமது இரசனை வழியிலான மதிப்பீடு இந்நாவலுக்கு முன்னுரையாக வாய்க்க உதவிய மூதறிஞர் சிவராமலிங்கம் அவர்களுக்கும், இந்நூலை விரைந்தும் நேர்த்தியாகவும் அச்சிட்டுத் தந்த மானிப்பாய் 'திருச்செல்வி' அச்சகத்தாருக்கும், அட்டைப்படத்தை அழகுற வடிவமைத்து அச்சிட்டு வழங்கிய இணுவில் கே.கே.எஸ் சாலை 'சன்ஷைன் கிறபிக்' அச்சகத்தாருக்கும், இந்நூலை வெளியிடும் யாழ் திருநெல்வேலித் 'தூண்டி' இலக்கிய வட்டத்திற்கும் குறிப்பாக அதன் அமைப்பாளர் என் மாணவர் தி. செல்வமனோகரன் அவர்களுக்கும் என் மனமுவந்த நன்றி உரித்தாகட்டும்.

இணுவில் மேற்கு,
சுன்னாகம்.
02-07-2003

அன்பன்
**ச.வே. பஞ்சாட்சரம்**

# 1. உழைத்துண்ணாப் பழியாலே......!

தூரத்தில் மருதடி விநாயகர் ஆலயத்தின் வண்ணக் கோபுரம் அழகாகத் தெரிகிறது.

உதயதிக்கை நோக்கிக் கைகூப்பி நிற்கும் சரவணச் சாமியாரின் கண்களுக்குப் பரந்த வயல் வெளிக்கப்பால், மருத மரங்கள் அடர்ந்த பசிய சுற்றுவீதியுடன் அடக்கமாகத் தெரியும் அந்தக் கோயிலின் முழுமையான தோற்றம் அவரின் நெஞ்சில் ஆனந்தக் கிளர்ச்சியை நிரப்பி மெய்ம்மறக்கச் செய்கிறது.

வெள்ளிக் கம்பிகளின் அடுக்குப் படையாகத் தெரியும் வெள்ளிய சடை, நீண்டு தொங்கும் நரைத்த தாடிக்காடு, நெற்றியை நிரப்பும் வெண்ணீற்றுப் பட்டையின்மேல் பொற்காசாக ஒளிவீசும் சந்தன குங்குமப் பொட்டு, வெண்ணீற்றுப் பொலிவில் மறைந்த மேனியில் இடைக்குக் கீழே தெரியும் மஞ்சட் காவி வேட்டி, அதன் மேல் வரிந்த காவிச் சால்வை –கூப்பிய கைகளுடன் கண்மூடி நிற்கும் சரவணச்சாமியாரின் வாய் மெல்ல முனகும் ஓசை! "ஆண்டவா! நீர்வேலி முத்தையா வீட்டில் என்னென்ன சிக்கல்களோ? நீயே என்னை அனுப்புகிறாய்! நீயே எல்லாம் தீர்த்து வைப்பாய்."

விறாந்தையிலிருந்து முற்றத்துக்கிறங்கிய சாமியார் படலையை நோக்கி வேகமாக நடக்கத் தொடங்கிவிட்டார். படலையைத் தாண்டி ஒழுங்கையைக் குறுக்கே கடந்து எதிர்ப்பட்ட வயல்வெளி வரம்பில் அனாயசமாக அவர் புனிதத் திருவடிகள் நடைபோட்டுக்கொண்டிருந்தன. அந்த வரம்புக்கு அவர் காலடிகள் நன்கு பழக்கப்பட்டவை. நீர்வேலி முத்தையா வீடு, வளலாய் மயில்வாகனம் வீடு, மாதகல் தம்பு வீடு இப்படி எத்தனையோ ஊர்களில் எத்தனையோ நூறு வீடுகள்! அவற்றுக்கெல்லாம் அவர் செய்த பயணங்களில் அவர் பாதங்களுக்குப் பழகிப் போய்விட்ட வரம்பு அது!.

முத்தையா குடும்பம் அவருக்குக் கடந்த பதினைந்து வருடகாலப் பரிச்சயமுள்ள ஒரு குடும்பம். ஆண்டு தோறும் திருக்கார்த்திகைப் பரணித் தினத்தில் செல்வச் சந்நிதி ஆலயத்து மடம் ஒன்றில் அவர் நடத்தும் அன்னதானத்தில் பத்துப்படி அரிசி, ஒரு சில காய்கறி இவற்றுடன், குடும்பத்தோடு வந்து கலந்து கொள்ளும் தர்மப்பங்காளி முத்தையா. முதலில் சுவாமி தரிசனத்துக்காகச் சந்நிதி வந்த முத்தையா குடும்பம் தற்செயலாகச் சரவணச் சாமியாரின் அன்னதானத்தையும் அனுபவிக்க நேர்ந்தது. அன்றே சாமியாரிடம்

முத்தையா பெற்றுக்கொண்ட அனுமதியின் பேரிலேயே இந்தக் கூட்டு அன்னதானம் பதினைந்து வருடங்களாக நடைபெற்று வருகிறது. இந்தக் காலப் பகுதியில் சாமியாருக்கும் முத்தையா குடும்பத்துக்குமிடையில் தொடர்பு வளர்ந்து நட்பாகப் பரிணமித்து, அக்குடும்பத்துக்குச் சரவணச்சாமியார் "சுவாமிகள்" ஆகிவிட்டாலும், சுவாமிகளுக்கு முத்தையாமேல் மாணவன் போன்ற மகன் போன்ற பாசப்பிடிப்பு.

இந்த வழியில், கதிர்காமம் நல்லூர், மருதடி, கோணேஸ்வரம், கேதீஸ்வரம் முதலான சைவத் தலங்கள் பலவற்றிலும் அறிமுகமான ஏராளமான குடும்பங்கள் பக்தி பரவசத்துடன் வணங்கும் சுவாமிகள்தாம் சரவணச்சாமி.

இந்த வட்டாரத்தில் சரவணச்சாமியார் மீது அளவிறந்த பயபக்தி தோன்றி வலுவடைவதற்கு முக்கியமான காரணம் ஒன்று இருந்தது. சாமியாருடன் பரிச்சயம் ஏற்படும் பேறுபெற்றவர்களுள் உண்மையான தெய்வபக்தி, தர்மமனப்பாங்கு உள்ள புண்ணிய சீவன்களின் குடும்பங்களில் அவ்வப்போது பயங்கரமான பிரச்சினைகள் ஏற்படுஞ் சோதனைக் காலங்களில் சாமியார் மனத்தில் எப்படியோ அவர்களை உடனே போய்ப் பார்க்க வேண்டும் என்ற உந்தல் உக்கிரமாக எழுந்து அவரை அங்கே கொண்டுவந்து விட்டுவிடும்.

காணி நிலத்தை ஈடுவைத்து மாளிகை கட்டக் கணவனோ மனைவியோ விரும்பியபோது ஏற்பட்ட குடும்பப் பூசல்கள், மகனோ மகளோ மேற் படிப்புக்குச் செல்ல வறுமை தடை விதித்த சந்தர்ப்பங்களில் எழுந்த குடும்பச் சச்சரவுகள், உறவினர் போல் வெளிக்குக் காட்டிக் கொண்டு நயவஞ்சகம் புரிய வழிபார்க்கும் கொடிய உறவினருடன் கொண்டாட்டத்தைத் துண்டித்துக்கொள்ள எத்தனிக்கும் நிலைமையில் குடும்பத்தில் உருவாகும் உள்நாட்டுக் கலகங்கள் இத்தகைய நெருக்கடிகளில் பக்தர் குடும்பங்களில் தெய்வச் செயலாகப் பிரசன்னமாகும் சுவாமிகள் நிதானத்தோடு இடுகின்ற அருட் கட்டளைகளுக்குக் கட்டுபட்டு நடந்து கொண்ட குடும்பங்கள் அத்தனையும், நிச்சயமாக முடிவில் பிரச்சினையின் கெடுபிடியிலிருந்து எந்த அளவிலாவது விமோசனம் பெற்று நன்மை அடைந்தமையே சுவாமிகளின் தெய்வீக பிரபல்யத்துக்குக் காரணமாகும்.

உலக நன்மைக்கு உழைக்கும் நல்ல கருவியாகத் தம்மையும் ஆண்டவன் தேர்ந்தெடுத்துள்ளமைக்குக் காரணங்கள், தாம் மற்றவர்கள் அனைவரும் நல்லவழியில், நல்லபடியாக வாழவேண்டுமென மனமார விரும்புவதும், பாவச் செயல்களுக்கு, பாவப்பேச்சுகளுக்கு பாவச் சிந்தனைகளுக்கு மனப்பூர்வமானவைரியாகத் தாம் வாழ்வதும்தான் என்ற உண்மை அவர் நினைவுக்குவராமல் இருப்பதில்லை. இந்த இரு தெய்வீகப் பண்புகளும் நிரந்தர இயல்புகளாக அவருள்ளே அழுந்திப் பதிந்து கொண்டதற்கு விலையாக அவர் குடும்ப வாழ்வே பலிபோனது பரிதாபகரமான கதை.

குரும்பசிட்டிக் கிராமத்திலே, நோயாளித் தந்தைக்கும் அப்பாவி அம்மைக்கும் மக்களாய்ப் பிறந்த இருவரில் ஒருவன் சரவணன். மற்றவள் அவனுக்குப் பத்து வயது இளையதங்கை பொன்மணி. விவசாயத்தைப் பரம்பரைத் தொழிலாகக் கொண்டிருந்த அந்தக் குடும்பத்திற்குக் கொஞ்சம் நிலம்புலங்கள் சந்ததிச் சொத்தாகக் கிடைத்திருந்தன. கூலியாட்களை வைத்து ஒருவிதமாகப் பயிர்வைத்துப் பலன் எடுத்துக் காலத்தை ஓட்டி வந்தார் படுத்த படுக்கையாகக்கிடந்த அப்பா. குடும்பத்தின் ஈடாட்டமான நிலையைக் கண்டு எள்ளத்தனையும் கவலைப்படாத பிள்ளையாக வளர்ந்து வந்த சரவணன் பாடசாலைக்கு, இல்லைப் பாடசாலைக்கும் போய் வருவான். ஆனால் படிப்பதற்காகத்தான் அங்கு போகிறோம் என்பதை அவன் உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை. சரவணனுக்கு இருபத்தைந்து வயதிருக்கும். அது வரை எட்டு வருடங்கள் பரீட்சைகளில் கோட்டைவிட்டமை காரணமாக அவன் அப்பொழுது ஒன்பதாம் வகுப்பில் வீற்றிருந்தான்.

பொன்மணிக்கு வயது வந்த நிலையில் அவள் வீட்டோடு நிறுத்தப் பட்டாள். இன்றைக்கோ நாளைக்கோ என்று மரண தேவனின் வருகை பற்றிய அச்சத்தில் படுத்திருந்த சரவணனின் அப்பாவுக்கு, பொறுப்பற்ற மகனை நம்பிப் பொன்மணியை நிர்க்கதியாக விட்டு மறுஉலகு செல்ல மனம் இடந்தரவில்லை. அவளை எங்காவது குடியுங் குடித்தனமுமாக வைத்துப் பார்க்கும் வரை தமக்கு ஒன்றும் நேர்ந்துவிடக் கூடாதே என்று ஏங்கினார். பொன்மணிக்கு மாப்பிள்ளை தேடுவதில் அவர் நண்பர்கள் சிலர் உதவினர்.

பக்கத்து ஊரான ஏழாலையிலிருந்து கிடைத்தது ஒரு சாதகம். பையன் ஒரு பொது வேலை இலாகா மேற்பார்வையாளருக்கு உதவியாளாக, கணிசமான சம்பளத்தில் வேலை பார்ப்பவன். சுருட்டு, பீடி, 'தண்ணி வெந்நீர்'ப் பழக்கம் இல்லாதவன், சம்பாத்தியத்தில் விண்ணன் என்று அவனுக்கிருந்த சாதாரண தகைமைகளில் திருப்தியடைந்த பொன்மணியின் அப்பா அவளை அந்த உதவி மேற்பார்வையாளன் உலகநாதனுக்கே கட்டிவைத்தார். கிடந்த நிலம்புலம் வீடு வாசல்களையும் தமக்கு மகன்மேல் இருந்த ஆத்திரம் தீரும்படியாக மகளுக்கே எழுதியும் கொடுத்துவிட்டார்.

மனைவியின் பாதுகாப்புக்கென மீதம் கிடந்த ஒரு சிறு துண்டுக் காணியையும் விற்று அவள்பெயரில் வங்கியில் ஐயாயிரம் ரூபா போட்டு வைத்தார். மாதாமாதம் அதிலிருந்து கிடைக்கும் வட்டிப்பணம் ஐம்பது ரூபா அவள் வயிற்றைக்கழுவ உதவட்டுமே என்று! தன்னால் முற்றாகப் புறக்கணிக்கப்பட்ட தறுதலை மகனின் வெறுப்புக்கும், "மகன் பெயருக்கு வங்கிப் பணத்தையாவது மாற்றிவிடுங்கள்" என்ற அவர் மனைவியின் நச்சரிப்புக்கும் மத்தியில் அந்த நோயாளி அப்பா ஒரு நாள் திடீரெனக் கண்ணை மூடிவிட்டார்.

பொன்மணி மணமாகிப் போன ஓரிரு வாரங்களில் உலகநாதன் நிரந்தர மேற்பார்வையாளனாக நியமனம் பெற்றுவிட்டான். அதோடு அவன் தன் தம்பியின் பெயரில் கட்டட ஒப்பந்தங்கள் வேறு எடுத்து ஆயிரம் ஆயிரமாய்ச் சாம்பதிக்கத் தொடங்கி விட்டான். அப்பாவின் மறைவோடு அம்மாவையும் குடும்ப நிர்வாகந் தெரியாத அண்ணனையும் தன் வீட்டுக்கு அழைத்து வந்து அன்னமிட்டுப் பாதுகாத்து வந்தாள் பொன்மணி.

ஒரு நாள் அண்ணன் சரவணனிடம் அவளுக்கு ஏற்பட்ட வாக்கு வாதத்தின் போது "அண்ணா, அந்தக் காலத்தில் எல்லாம், நீ படிப்பதானால் ஒழுங்காகப்படி. இல்லையென்றால் புத்தியோடு வீட்டில் நின்று விவசாயத்தைக்கவனி. எங்கள் குடும்பத்தை நல்ல நிலைக்குக் கொண்டு வரக் கூடியவன் நீ ஒருவன்தான். வீணாகச் சினிமா, கீரிமலை, கூட்டாளிமார் என்று சுற்றி நீயும் கெட்டுக் குடும்பத்தையும் குட்டிச்சுவராக்காதே" என்று எத்தனை தடவை உன்னை வேண்டியிருப்பேன். அதையெல்லாம் அசட்டை பண்ணி நீ நடந்து கொண்டதால் இன்று நிர்க்கதியாகி விட்டாயே," என்று பொருமிக் கண்ணீர் வடித்தாள்.

உழைக்காமல் உண்ணும் உணவு நஞ்சுக்குச் சமானம். உழைத்துண்ணும் உணவே ஒருவனுக்கு நன்மை மட்டும் செய்வது என்ற தத்துவத்தை அந்த அனாதரவான நிலையிலேனும் அவன் ஏற்றுக் கொள்ள நினைக்கவில்லை. என்றாலும் மைத்துனன் வீட்டில் உட்கார்ந்து தண்டற்சோறு தின்பது சரியன்று என்று எண்ணுமளவுக்காவது மனச் சாட்சியிருந்தது. அதனால் சில தினங்களில் யாருக்குஞ் சொல்லாமல் கொள்ளாமலே கப்பல் ஏறிவிட்டான் மலேயாவுக்கு.

## 2. உழைப்புக்கு மிஞ்சிய ஊதியம்

மலேயாவுக்குச் சரவணனைத் தன்செலவில் அழைத்துச் சென்ற நண்பன், சில மாதங்களில் அவனைப் புகையிரத இலாகாவில் இலிகிதர் வேலையில் அமர்த்தி விட்டான். அதன் பின்தான் தாய்க்கும் தங்கைக்கும் கடிதம் எழுதினான் சரவணன்.

சும்மாதிரிந்து உண்டு வளர்ந்த சரவணனுக்கு, ஓர் இடத்தில் கட்டுண்டு உட்கார்ந்து வேலை பார்ப்பது பெரும் சங்கடமாக இருந்தது. என்றாலும் அவசரமாக அவனுக்கு அவன் நண்பனால் முடித்து வைக்கப் பட்ட திருமணம் அவனை வேலையிலிருந்து விலகவிடாமற் செய்துவிட்டது. அன்பான மனைவி, ஆண்டுதோறும் பிறந்து வளர்ந்த அருமைக் குழந்தைகள், வேலைச் சிறையின் நடுவிலும் சிந்தைக்கினிய வாழ்விலே அவனைக் கட்டிப்போட்டுவிட்டிருந்தன.

பற்றையும் பாசத்தையும் கொடுத்தும் வாங்கியும் குதூகலித்து வாழ்ந்த சரவணனுக்கு அந்த வாழ்வு உணர்ச்சியும் உற்சாகமும் நிறைந்து விளங்கிய அதே சமயம், பேராசைக்கும் மனைவி மக்களை உப்பரிகை வாழ்வுக்கு உயர்த்தி வைத்துவிட வேண்டும் என்ற வெறிக்கும் அவன் மனத்தை அடிமையாக்கிவிட்டது. உழைக்காமல் உண்பது பாவம் என்ற உண்மையை இளமையில் ஏற்க மறுத்த அவன் மனம் இன்று, உழைப்புக்கு மிஞ்சிய ஊதியத்தைப் பெற நினைப்பது பாவம் என்று எண்ணவும் தயாராக இருக்கவில்லை. அதனால் குறுக்கு வழியில் குபேரனாகிவிடத் துடியாய்த் துடித்தான் சரவணன்.

அவனது அப்போதைய கணிப்பின்படி அவன் நல்ல காலம் இரண்டாம் உலகப் போர் தொடங்கிற்று. உணவுப் பொருள்களை மலிய வாங்கிப் பதுக்கி வைத்து உச்ச விலைக்கு விற்றுக் கொள்ளை லாபம் அடிக்கலாம் என்பதை முன்னோடியாக உணர்ந்தான். பார்த்த வேலைக்கும் முழுக்குப் போட்டுவிட்டுக் கள்ளச் சந்தை வியாபாரத்தில் குதித்த அவன் ஆறே ஆறு மாதங்களில் இலட்சாதிபதியாகி விட்டான். கோலாலம்பூரில் சொந்தத்தில் ஒரு மாளிகையையே விலைக்கு வாங்கி ஆசை மனையாளையும் ஐந்து பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு குடியேறினான். பணம் மேலும் இலட்சம் இலட்சமாகக் குவிந்து கொண்டிருந்தது.

அந்த நாட்களில் மலேயாவின் பிரதான நகரங்களில் குண்டு வீச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த யுத்தப்பீதி. அதையும் பொருட்படுத்தாமல் ஓடியாடிச் சம்பாத்தியத்தில் ஈடுபட்டிருந்தான் சரவணன். ஓரிரவு அவன் வியாபார நிமித்தமாக வெளியூர் சென்றிருந்த சமயம் திடீரென்று வானத்தில் தோன்றிய போர் விமானங்கள் நிகழ்த்திய குண்டு வீச்சுக்கு இலக்காகிக் கோலாலம்பூர்ப் பெருநகரின் பல வீடுகள் அரசாங்கக் கட்டடங்கள் எரிந்து சாம்பராயின. அவற்றுள் சரவணன் மனைவி மக்களும் வெந்து துடிதுடித்து மடிந்த மாளிகையும் ஒன்று.

அவசர அவசரமாக நகருக்குத் திரும்பிய சரவணன் நடந்ததை அறிந்து அலறித்துடித்துத் தெருவில் விழுந்து புரண்டு கதறினான். துடி துடித்தான். அவன் வாழ்வில் விழுந்த இடி, அவனைப் பைத்தியமாக்கிப் பலமாதங்கள் தெருத்தெருவாக அலைய வைத்து விட்டது. சித்தம் தெளிந்த போதெல்லாம் "ஐயோ அநியாய வழியில் நான் தேடிய நஞ்சுப்பணம் நகருக்கு அழைத்து வந்து என் குழந்தைகளை என்னுயிர்ச் செல்வங்களைத் துடிக்கப்பதைக்கக் கொன்றுவிட்டதே!. என் மனைவியைப் பச்சையாக எரித்துப் பதைபதைக்கப் பலிவாங்கி விட்டதே. நகருக்கு வந்தோம். நாசமானோம். எல்லாம் என்னால்த்தான் ஐயோ நான் பாவி! நான் குடும்பத்துரோகி," என்று பார்ப்பவர் கண்கலங்கும்படி கதறிவிழுந்து தெருப்புழுதியில்புரண்டு அழுவான்.

இந்தப் பரிதாபத்தைப் பார்க்கச் சகிக்காத மலேயாவாழ் யாழ்ப்பாணத்தவர் சிலர் பணம் போட்டுக் கப்பல் டிக்கட் வாங்கிச் சரவணனை இலங்கைக்கு அவன் தங்கை வீட்டுக்கு அனுப்பி விட்டனர்.

ஏழாலையில் தங்கையின் வீட்டில் தாயின் பாசத்தாலும் தங்கையின் பரிவாலும் மனம் ஓரளவு தேறி மெல்ல மெல்லச் சித்தம் தெளிந்து வந்த சரவணன் சில சமயங்களிலாவது "ஐயோ தங்கச்சி! என்பாவத் தேட்டம் என் குடும்பத்தையே அழித்துவிட்டதே! என்நெஞ்சு ஆறாதம்மா!" என்று கதறிப் பதறத்தவறுவதில்லை.

நான் என்னதான் கதறிப்புலம்பினாலும் செத்தவர்கள் மீளவா போகிறார்கள் என்று சலிப்புற்ற அவன் நடந்தவற்றை மறந்துவிட எடுத்த மனப்பிரயத்தனத்திற்கு, "கறந்தபால் முலைக்கேறாதண்ணா! கவலைப்பட்டு எங்களையும் கலங்க வைக்காதே" என்ற தங்கையின் கண்ணீர்க் கெஞ்சலும் வலுவூட்டிவர, சரவணன் சில மாதங்களில் தன் சுக துக்கங்களை மறந்த மனத்துறவியாகி விட்டான்.

ஆனால் தன்குறுக்கு வழிச்சம்பாத்தியத்தால், உழைப்புக்கு மிஞ்சிய நச்சு வருமானத்தால் தன் குடும்பம் நாசமாகியது போல் வேறெந்தக் குடும்பத்துக்கும் நடந்துவிடக்கூடாதே என்று அங்கலாய்க்கத் தொடங்கினான், யார் யாருக்கெல்லாம் இந்தப் படிப்பினையைச் சொல்ல முடியுமோ அவர்களுக்கெல்லாம் எடுத்துச் சொல்லி அவர்களை அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டுமென்று தவியாய்த் தவித்தான். அதிலும் தன்பாச உணர்ச்சிக்கு வடிகாலாக இன்று விளங்கும் தன் ஒரே தங்கையின் வாழ்விலும் அப்படி ஏதும் நடந்து விடக்கூடாது என்ற பயப்பிராந்தியில் அவள் குடும்பத்து வருமான வழிகளை அவதானிக்கத் தொடங்கினான் அவன்.

அவனறிந்த மட்டில் எந்த ஓவசீயர் குடும்பமும் சரி அடுத்த சந்ததி பாழாகாமல் தப்பி உருப்பட்டதே கிடையாது. இந்த உண்மை வேறு, தங்கை குடும்பம் பற்றிய அச்சத்தால் அவனை உலுக்கி எடுக்கலாயிற்று. இதனாலேதான் தங்கை பொன்மணி பிள்ளைகளைப் பெற்றுப் பெற்று ஒன்றுகூட மிஞ்சாமல் சாகக்கொடுத்து வருகிறாளோ? என்றும் அவன் ஏங்கினான். அவன் மலேயாவிலிருந்து திரும்பிய பின்னர் பொன்மணிக்கு ஆறாவது குழந்தையும் பிறந்த சில நாட்களில் செத்துத் தொலைந்து விட்டிருந்தது.

சரவணன் தன் மைத்துனன் தொழில் முறைகளில் நன்கு புகுந்து ஆராயத் தொடங்கினான். விளைவு அச்சத்துக்கும் ஆத்திரத்துக்கும் அவனை மேலும் மேலும் ஆளாக்கலாயிற்று. உலகநாதன் தன் கூலியாட்களுக்குத் தினக்கூலி தலைக்கு ஆறு ரூபா மட்டும் கொடுத்துக் கொண்டு, பத்து ரூபா பெற்றுக்கொண்டதாக வவுச்சரில் ஒப்பம் வாங்கி வந்தான். ஐம்பதாயிரத்துக்கு

எடுத்த கட்டட ஒப்பந்த வேலையை இருபத்தையாயிரத்துள் பூசி மெழுகி முடித்தும், வீதிகள் அமைக்க, திருத்த அரசாங்கம் கொடுக்கும் தொகைகளில் அரைவாசிக்கும் மேற்பட வெட்டிக் கொத்திச் சுழித்தும் படுபாதகமான இன்னும் பல வழிகளிலும் அவன் சம்பாதித்துப் பணங்குவிப்பது சரவணனுக்கு நன்றாகக் கண்ணிற்பட்டது.

"ஐயோ உலகநாதா! ஒரு சதமேனும் பாவ வழியில் தேடக்கூடாதப்பா! நஞ்சுப்பணத்தால் என் தங்கையின் குடும்பமும் நாசமாக வேண்டாம். இனிமேலாவது நீ திருந்தி நடக்கப்பாரப்பா" என்று உலகநாதனின் கால்களைக் கட்டிக்கொண்டு கதறவேண்டும் போலிருந்தது சரவணனுக்கு.

ஆனால் மாதாமாதம் வங்கியிலிருந்து வட்டியாகக் கிடைக்கும் ஐம்பது ரூபாவைக் கொடுத்து அம்மாவும் அவனும் தங்கை வீட்டில் இருந்து சாப்பிட்டுக் கொண்டு அவள் கணவனின் வருவாய் மார்க்கங்களைக் கட்டுப்படுத்தப் புகுவது வீண் அவமானங்களுக்கும் மனத்தாங்கல்களுக்கும் அந்தக் குடும்பத்தில் குழப்பத்துக்கும் காலாகி விடும் என்ற அச்சம் அவனை இலகுவில் வாய் திறக்கவிடவில்லை.

இப்படியே அவன் மனக்குமுறலை வளர்த்துக் கொண்டு சில மாதங்கள் நகர்ந்து மறைந்தன. அம்மாவும் மெல்லப் படுத்த படுக்கையானாள். அவளைப் பரிகரிப்பதிலும் பராமரிப்பதிலும் அவன் காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கையில், தன் பெயரிலிருந்த வங்கிக் கணக்கை சரவணன் பெயருக்கு அன்னை மெல்ல மாற்றுவித்தாள். அடுத்த ஒருவாரத்தில் அவள் எதிர்பார்த்தபடி சரவணனை விட்டு அவளும் பரலோக யாத்திரை மேற்கொள்ள நேர்ந்துவிட்டது.

ஆணிவேரான பற்றும் பாசமும் நிறைந்த குடும்பத்தை இழந்த அண்ணனுக்குப் பக்கவேர்களுள் ஒன்றாகநின்று உயிர்கொடுத்த அன்னையும் பிரிந்த பின், மேலும் அவன் தடுமாறப் பார்த்ததைக் கண்டு கண்கலங்கினாள் பொன்மணி. ஏழாவது குழந்தையை வயிற்றில் சுமந்து கொண்டு நிற்கும் பொன்மணியைக் காணும் போதெல்லாம் வீணாகச் சுமந்து சுமந்து சாகிறாளே என்று எண்ணிப் பெருமூச்சு விடுவான் சரவணன்.

பிள்ளை வரம் கேட்டு வருடத்தில் பாதிநாட்கள் அவள் கிடந்த பட்டினி விரதங்கள், பிறர் குழந்தைகளைப் பார்த்து அவள் ஏக்கத்தோடு விடும் பெருமூச்சுக்கள் தனிமையில் மூக்குச் சிந்தி அவள் வடிக்கும் கண்ணீர் மழைகள், வாழ்வே வெறுத்து விட்டாற்போன்று ஒவ்வொரு வேளைகளில் அவள் காட்டும் முகக்குறிகள், அவளுக்குப் பைத்தியம் பிடித்துவிடுமோ, அவள் தற்கொலை செய்து கொண்டு விடுவாளோ, என்றெல்லாம் சரவணனை அந்தரங்கத்தில் கலங்க வைத்து வரலாயின. சரவணனைத் தங்கையின் வாழ்வே பெருங்கலக்கமாகி அறுக்கத் தொடங்கி விட்டது.

ஒரு நாள் இரவு படுக்கையில் இருந்தபடி "கடவுளே இந்த ஏழாவது குழந்தையையாவது என் தங்கைக்கு நிரந்தரச் செல்வமாக்கி, அவள் வாழ்வில் விளக்கேற்றி வைக்கமாட்டாயா? என் தங்கையைக் காப்பாற்ற மாட்டாயா?" என்று கலங்கிய கண்களுடன் நெஞ்சால் வேண்டிய சரவணன் மனச் செவிகளில் "எப்படி முடியும்? பாவிகளோடு சேர்ந்தவர்களும் தண்டிக்கப்படத்தானே வேண்டும்" என்று தர்மதேவன் குரல் எழுப்புவது போன்றதொரு சபலம்.

சரவணன் பதறினான். மனம் என்றுமில்லாதபடி குமுறிக் கொந்தளிக்கலாயிற்று. உலகநாதன் மேல் கோபம் கோபமாக எழுந்தது அவனது சூடுபட்ட இதயத்தில். ஆம் இந்த வீட்டை விட்டு நான் துரத்தப் பட்டாலும் பரவாயில்லை. இன்று உலகநாதனிடம் பேசியே விட வேண்டும். என் தங்கையின் துயர்போக்கி உயிர்காப்பதற்காக, ஒன்றுக்கும் உதவாத என்னுயிர் பலிபோனாலும் பரவாயில்லை என்று படுக்கையிலிருந்து துள்ளி எழுந்த சரவணன், வீட்டு விறாந்தைக்கு ஓடினான். அங்கே மேசையருகில் அமர்ந்து வேலையாட்களின் சம்பளக்கணக்குப் பதிந்து கொண்டிருந்த உலகநாதனுக்குக் கிட்டப்போய் நின்றான்.

"உலகநாதா! கொஞ்சம் கேள்" என்ற குரல் கேட்டு ஆச்சரியத்தோடு நிமிர்ந்து பார்த்தான் உலகநாதன். மரியாதைக்காகத் தன்னோடு ஒரு நாளும் தலை நிமிர்ந்து பேசாத சரவணனா இப்படி...? என்று அவன் வியந்தான்.

"பாவ வழிகளில் சம்பாதித்த நஞ்சுப்பணம் என் குடும்பத்தையே நாசமாக்கி விட்டதப்பா. நீயாவது நல்லவழியிற் பணந்தேடப் பழகிக்கொள். நீ படும்பாட்டுக்கு மட்டுமே கூலியைப் பெறு. மேற்கொண்டு நீ சம்பாதிக்கும் பணம் உன் சந்ததி விருத்தியையே கெடுத்துவிடும். மீறிப் பிள்ளை குட்டி பிறந்து தப்பி ஒட்டி வளர்ந்தாலும் அவற்றை அலைத்துலைத்து, உருக்குலைத்து முடிவில் நாசமாக்கி வீசிவிடும். உனக்கு நிறையப் பிள்ளைகள் பிறந்து நல்லபடியாக வளர்ந்து மன நிறைவோடு நீங்கள் வாழவேண்டும் என்ற ஒரே ஆசையால்த்தான் நான் சொல்கிறேன்" என்று விம்மிய சரவணன் மேலும் பேசமுடியாமல் குமுறிக்குலுங்கி அழத் தொடங்கிவிட்டான்.

## 3. சரவணன் சாமியானான்

சமையல் அறைக்குள்ளிருந்து ஓடிவந்த பொன்மணி ஒன்றும் புரியாமல் குழம்பிப் பதறி விழித்து நின்றாள். "என்ன நடந்தது அண்ணா?" என்று கலவரத்துடன் குரல் நடுங்க அவள் கேட்ட கேள்விக்குப் பதில் ஏதுஞ் சொல்லாமல் குலுங்கியழுது நின்ற சரவணன் ஓயும் வரை பொறுத்திருந்த உலகநாதன் உதிர்த்த ஏளனச்சிரிப்பு பொன்மணியின் உள்ளத்தில் சுள்ளென்று உறைத்து வருத்திற்று.

“நான் தவறான வழிகளில் பணம் சம்பாதிக்கிறேன் என்பது யார் உங்களுக்குச் சொன்னது?”

“உனது கூலியாட்களுக்கு ஆறு ரூபா தினக்கூலி கொடுக்கும் நீ அவர்களிடம் பத்து ரூபா பெறுவதாகக் கையெழுத்து வாங்கிக் கொள்ளும் வவுச்சர்கள். ஹூம்! இந்தப் படுபாவிப் பணம் சேரவேண்டிய உழைப்பாளிகளைச் சேராமல் அவர்களைச் சிரட்டையும் கந்தையுமாக்குகிறது. சேரக்கூடாத இடங்களில் சேர்ந்து சேர்ந்தவர்களைப் பாவிகளாக்குகிறது.

“நிறுத்துங்கள்! என் கணக்கு வழக்குகளை ஆராய்ந்து துப்பறிகிற அளவுக்கும் நீங்கள் வந்துவிட்டீர்களா?” என்று தாழ்ந்த குரலில் பேசி வந்த உலகநாதன் திடீரெனப் பேய்பிடித்தவன் போல வீடே அதிரும்படி ஆத்திரத்தோடு கத்தினான் “பொன்மணீ” என்று!

பொன்மணி நடுங்கிக் கிறுகிறுத்துப் போய் “என்ன” என்பதற்குள் “உன் அண்ணனுக்கு இனி இந்த வீட்டில் ஒரு நிமிடமும் தங்க அனுமதி கிடையாது. உடனே மூடை முடிச்சுகளைக் கையில் எடுக்கச் சொல்” என்ற உலகநாதனின் வெஞ்சின வார்த்தைகள் சரவணனைச் சற்றும் ஆத்திரப்படுத்தவில்லை. ஆனால் பொன்மணியின் நெஞ்சைப் பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பிகளாகச் சுழன்று சுழன்று சுட்டுத் துடிதுடிக்க வைத்துவிட்டன. “என்ன? இந்தக் கதியற்றுப்போன பாவி அண்ணன் மேல் இவ்வளவு ஆத்திரம் இருந்திருக்கிறதா இவருக்கு? எங்கள் மகிழ்வுக்காக எங்களையே கெஞ்சி மன்றாடிக் கண்ணீர் வடிக்கும் அவரையா நாயிலும் கேவலமாக்கி வார்த்தைகளால் உதைத்துத் தள்ளுகிறார்? என்று மனக் கொதிப்படைந்து உள்ளே ஓடிய சிலவினாடிகளில் சரவணனின் மூடை முடிச்சுங்கையுமாகத் திரும்பிவந்து அவன் முன்னால் வைத்த பொன்மணி எழுந்த விம்மலை அடக்கிக் கொண்டு உள்ளே நழுவிவிட்டாள்.

“உலகநாதா வீட்டை விட்டென்ன? இந்த உலகத்தை விட்டே நீ என்னை அனுப்பினாலும் நான் உன்மேல் கோபிக்கமாட்டேன். ஆனால் இனிமேல் என்றாலும் பொருளை நல்லவழியில் சேர்ப்பேன் என்ற வாக்குறுதியைத் தருவாயானால் மிகவும் சந்தோசப்படுவேன்.”

“தயவு செய்து வீணாக என் சொந்த விசயத்தில் தலையிட்டு என் ஆத்திரத்தைக் கிளற வேண்டாம்.”

“அப்படியா? சரி விட்டுவிடு, நான் துணிந்து விட்டேன். உன் பாவங்களைக்கழுவி, உன்னைப் புண்ணியாத்மாவாக்கி, பிள்ளையில்லாக் குறையால் பேயாகிக் கொண்டிருக்கும் என் தங்கையின் இதயத் தாகத்தைத் தேன் வெள்ளமாகித் தீர்த்துத் தானும் நீண்ட காலம் நிறைவோடு, உயிரோடு வாழக்கூடிய

ஓர் அருட்பலம் மிக்க குழந்தையை உன் குடும்பத்துக்குத் தந்தருள வேண்டும் என்று கோயில் கோயிலாகச் சென்று இறைவனை வேண்டியழப் போகிறேன். அப்படியான தவக் குழந்தையொன்று கிடைக்குமானால் நிச்சயமாக உன் பாவச் சொத்தில் ஒரு சதமும் அந்தப்பிள்ளை ஏற்றுக்கொள்ளாது எடுத்துக்கொள்ளாது. அந்தப்பிள்ளை வளர்ந்து ஆளும் பேருமாவதற்கு எங்கள் குடும்பத்தால் கிடைத்த பூர்வீகச் சொத்துத் தாராளமாகப் போதும்'' மூச்சுவிடாமல் பேசிவந்த சரவணன் இடையில் நிறுத்தியபோது, பைத்தியக்காரனைப் பார்ப்பதுபோல் அலட்சியமாகப் பார்த்து நையாண்டி போல் சிரித்தான் உலகநாதன்.

''நிற்க, சொந்தக்காரர்களின் தொடர்பை எல்லாம் துண்டித்ததன் மூலம் ஒரு செம்புச் சல்லியும் அவர்கள் பொருட்டாக நழுவாமற் பார்த்துக் கொண்ட நீ, இத்தனை காலமும் என்னை ஆதரித்துச் சோறு போட்டதற்காக நான் என்றும் நன்றியுள்ளவனாக இருப்பேன்; நடந்துகொள்வேன். சரி போகிறேன், வருவேன் ஒருநாள்.''

சமையலறை வாசல் நிலையோடு சாய்ந்து நின்று கண்ணீர் பெருக்கும் தங்கையைப் பாச ஏக்கத்தோடு ஒரு தடவை பார்த்து விட்டு மூடை முடிச்சுகளைக் கையில் எடுத்துக் கொண்ட சரவணன் முற்றத்து இருளில் இறங்கி நடக்கத் தொடங்கினான்.

அன்றிரவு அவ்வூர்க் கோயில் மண்டபம் ஒன்றில் படுத்துத்தூங்கி விட்டு, மறுநாட் காலையில் எழுந்து மூடை முடிச்சுகளுடன் கிளம்பிய சரவணனுக்கு மருதடி விநாயகர் ஆலயத்தில் வருடாந்த மஹோற்சவம் நடந்துகொண்டிருப்பது ஞாபகத்துக்கு வந்துவிடவே அங்கு போய்ச் சேர எண்ணிக் கொண்டான்.

மருதடி ஆலய வாசலை வந்தடைந்த போது நெடுவழி நடந்த களைப்பினாலும் பசியினாலும் சோர்ந்து காணப்பட்டான் சரவணன். கோயில் வாசலை அண்டியிருந்த மருதமர நிழலில் ''அப்பா ஆண்டவா!'' என்ற முனகலுடன் அவர் அமர்ந்து கொண்ட சில விநாடிகளில் அவர் எதிர்பார்த்திராத சம்பவம் ஒன்று தெய்வாதீனமாக இடம்பெற்றது. சுவாமி தரிசனத்தை முடித்துக்கொண்டு கோயிலின் உள்ளிருந்து வெளியே வந்த ஒருவர் அதிசயத்தில் மலர்ந்த முகத்துடன் அவரை நோக்கி வேகமாக நடந்து வரலானார். வியப்போடு உற்று நோக்கிய சரவணன் மலேயாவில் புகையிரத இலாகா அலுவலகத்தில் கடமையாற்றிய காலத்தில் தன்னுடன் வேலை பார்த்த உயிர் நண்பர் செல்லையர்தான் அவர் என்பதைக் கண்டு கொண்டார்.

சரவணனிடம் குசலம் விசாரித்த செல்லையர் அவர் அனாதரவான நிலைகேட்டு இரக்கப்பட்டதுடன், அவரை வற்புறுத்தி அழைத்துச் சென்று தம்வீட்டோடு வைத்துக்கொண்டார். செல்லையருக்கு வீட்டில் ஒரு மகனும்

குடும்பமும் மட்டுமே. மனைவியோ வேறு மக்களோ இல்லை. அந்தப் பெரிய வீட்டின் விறாந்தையை ஒட்டியமைந்த அறை சரவணனுக்கு வசதி செய்து கொடுக்கப்பட்டதுடன் வேளாவேளைக்கு உணவும் பரிமாறப்பட்டதாயினும் அவர் இருவேளைக்கு மேல் உண்ணச் சம்மதிக்கவில்லை.

அந்த வீடு அமைந்து கிடந்த வளவின் பின்புறம் பலா மரங்களும் மாமரங்களும் நெருங்கி வளர்ந்த சோலையாகக் காணப்பட்டது. வீட்டின் விசாலமான முற்றப்புறம் வெட்டை நிலமாகிப் பசுமையற்றுக் கிடந்தது. தென்னைகள் மட்டும் அங்கொன்று இங்கொன்றாக ஓங்கி நின்றன. சரவணன் அந்த வீட்டுக்கு வந்த முதல் நாளே பின் வளவில் இறைத்துக் கிடந்த பலா மாஞ் சருகுகளை எல்லாம் கூட்டி அள்ளிக் குவித்தார். தொடக்கத்தில் செல்லையர், அவர் மகன், மருமகள் இவர்கள் எல்லாரும் எவ்வளவு தடுத்தும் சரவணன் கேட்கவில்லை. "பிறர் உழைப்பை உறுஞ்சி வளர்ந்த, வாழ்ந்த கெடுமதியால் தான் என்குடியே கெட்டது. இனிமேலும் உழைக்காமல் உண்டால் அந்தப்பழி என்னைச் சும்மாவிடாது. நான் வேலை செய்து சாப்பிட அனுமதியுங்கள். என் மனச் சந்தோசத்துக்காகவே இந்தச் சிறு வேலைகளைச் செய்யப்போகிறேன்" என்று வேலையைத் தொடர்ந்தார்.

அவர் ஊக்கத்தின் விளைவாகவும், அவர் ஆலோசனைகளின் பெயரிலும் புதிதாக வீட்டில் ஆடு மாடுகள் சேர்ந்தன. வீட்டு முற்றப் பக்கம் பூந்தோட்டமாகிப் பொலிவு தாங்கிற்று. வளவின் பின்பகுதி ஆலய வீதி போலச் சுத்தமாகக் காட்சி பெற்றது. ஒரு காய்கறித் தோட்டம் அங்கே சரவணன் கையால் உருவாகிக் கொண்டிருந்தது. தெருவால் போவோர் வருவோர் "உந்த வீட்டுக்கு ஆரோ ஒரு கிழவன் வந்து செய்கிற வேலையப்பா" என்று பேசிச் செல்வது செல்லையர் காதிலும் விழுவதுண்டு. மாத முடிவில் கிடைத்த வங்கிக் கணக்கு வட்டிப் பணத்தைக் கொண்டு வந்து செல்லையரிடம் சரவணன் கொடுக்க முயன்ற போது அதனை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டுச் செல்லையர் "உங்கள் யாத்திரைச் செலவுகளுக்கு வைத்துக்கொள்ளுங்கள்" என்று அன்போடு வேண்டிக்கொண்டார். ஆனால் அந்தப் பணத்தை மிச்சம் பிடித்துச் சந்நிதி கோயிலில் அன்னதானத் தொண்டிற்குப் பயன்படுத்தி வந்தார் சரவணன். தினமும் காலை நண்பகல் மாலையாகிய மூன்று வேளைகளும் மருதடியப்பனைச் சென்று தொழுது வந்த சரவணன், அயலூர்களில் தூரத்து இடங்களில் உள்ள அருள்மலிந்த கோயில்களுக்கும் சென்று தெய்வ தரிசனம் புரிந்து கொண்டு அவர் வேண்டிக்கொண்டதெல்லாம் தன் தங்கையின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தக் கூடிய ஒரு குழந்தை வரம் அவளுக்கு அருளவேண்டுமென்பதுதான்.

காலச் சக்கரத்தின் சுழற்சியில் அல்லும் பகலும் அநவரதமும், சரவணன் உள்ளம் அவர் தங்கையின் வாழ்வின் விடிவுக்காக மட்டுமன்றி உலக நன்மைக்காகவும் இறைவனை மானசீகமாக வேண்டி வேண்டி ஏற்பட்ட இடையறா இறை சிந்தனையால் மனதில் பரிசுத்த ஒளி ஏற ஏற ஆத்ம சக்திகள் முகிழ்த்து அதிகரிக்க அதிகரிக்க அவர் நெஞ்சில் பரிபூரண ஆனந்தம் நிறைந்து நிலைபெற்று நிலவத் தொடங்கி விட்டது. காலப் போக்கில் கருணைக் கடலாகவே மாறிவிட்ட அவர் வாழ்வில் அருட்கவர்ச்சி ஓங்க ஓங்க அவரை மதித்துக் கொண்டாடும் நல்லோர் கூட்டமும் பெருகி வரலாயிற்று. அவர் பதினெட்டு ஆண்டுகளில் உள்ளத்தாலும் உடல் தோற்றத்தாலும் முற்றிப்பழுத்த சாமியாகிவிட்டார்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் வற்றாப்பளை அம்மன் கோயிலில் சரவணச்சாமியார் சந்தித்த ஏழாலை வாசி ஒருவர் வாயிலாகப் பொன்மணி வயிற்றில் ஏழாவதாகத் தரித்திருந்த கர்ப்பம் பெண்ணாகப் பிறந்து வளர்ந்து பதினைந்து வயதுப் பருவம் பெற்று நிற்கிறது என்று கேள்விப்பட்டுப் பூரித்துப் போனார். அந்த மகிழ்ச்சிச் செய்தி அவர் துறவி மனத்தில் கூட ஒரு புதிய உற்சாகத்தைத் தோற்றுவித்ததோடு கடவுளை நன்றிப் பெருக்கோடு நினைந்து கண்கலங்கவும் வைத்து விட்டது. கடந்த பதினைந்து ஆண்டுகளாகத் தாம் தம் தங்கையைப் போய்ப் பார்க்க வேண்டும் என்று உருவேற்றப்படாமற் போனதன் அர்த்தம் அவள் குடும்பத்தில் சோதனை ஏதும் ஏற்படவில்லை என்பது தான் என்ற அவர் ஊகத்தை ஊர்சிதம் செய்தது இந்த மங்களச் செய்தி.

ஆயினும் உலகநாதன் சம்பாதித்துக் குவிக்கும் நஞ்சுச் சொத்துக்கு அந்தக் குழந்தையின் எதிர்காலம் இரையாகிவிடக்கூடாதே. அதற்குப்பதில் அவள் வாழ்வும் செப்பமாய் அமைவதுடன் வெள்ளுடைக் கொள்ளைக்காரனாகிய அவள் அப்பன் மனத்தையும் திருத்தி அவன் பாவங்களைக் கழுவிப் புனிதப்படுத்தியாக வேண்டுமே. அதற்குரிய மனப்பக்குவத்தையும் வைராக்கியத்தையும் ஆண்டவன் தான் அவளுக்கு வழங்க வேண்டும் என்று கருணை பொங்க எண்ணிக் கொண்டு நெஞ்சார இறைவனை இறைஞ்சியபோது அவர் நெஞ்சில் ஏற்பட்ட ஒருவகை மனக்கிளர்ச்சி ‘‘எல்லாம் இனிது நிறைவேறும்’’ என்றதொரு நம்பிக்கை மின்னலைப் பாய்ச்சி மறைந்ததால் அவர் திருப்தியுற்று அடங்கிவிட்டார்.

வெள்ளையிலும் சிவப்பிலும் காடாகப் பூத்துக்கிடந்த தாமரை மலர்களின் இடையிலே பசிய இலைகளின் நீக்கலில் தெரிந்த கரிய நீர்ப்பரப்பைப் பார்த்துக்கொண்டே குளத்துப்படிகளில் இறங்கிக் கால்களைக் கழுவிக்கொண்டு மீண்டு கரையேறிக் கோபுரவாசலை அணுகி நீட்டி நிமிர்ந்து விழுந்து வணங்கி எழுந்ததும் சரவணச்சாமியாரின் நெஞ்சிலிருந்து நிம்மதிப் பெருமூச்சொன்று நீண்டு வெளியேறிற்று. அவர் மெல்லப் பஸ்தரிப்பை நோக்கி நடந்தார்.

சுவாமிகள் நீர்வேலியில் முத்தையா வீட்டுப் படலையைத் திறந்து கொண்டு வீட்டு முற்றத்தை நெருங்கிக் கொண்டிருந்த பொழுது, அங்கு முத்தையாவும் மனைவி காமாட்சியும் உரலிலே தினைச் சாமையைக் கொட்டிக் குற்றிக்கொண்டு நின்றார்கள். சுவாமிகளைக் கண்டார்களோ இல்லையோ இருவரும் உலக்கைகளை நிலத்தில் கைநழுவ விட்டு ஓடிவந்து "வாருங்கள் சுவாமிகள் வாருங்கள்" என்று குதூகலத்தோடு அழைத்துச் சென்று வீட்டுக்குள் கட்டிலில் மான்தோல் விரித்து உட்கார வைத்தனர். காமாட்சி எதையோ நினைத்தவளாய்ச் சமையற் கொட்டிற் பக்கமாக ஓடினாள்.

"முத்தையா"

"சுவாமி"

"ஏன்? தோட்டத்தில் இன்று வேலை ஒன்றும் இல்லையோ?"

"தோட்டத்தைச் சொந்தக்காரர் பறித்துக் கொண்டுவிட்டார்களே சுவாமி!"

"அப்படியானால் உங்கள் சீவியப்பாடு?"

"அதற்குத்தான் ஒரு வழியும் இல்லாமல் என் குடும்பமே அலை மோதுகிறது. இந்தவளவுக் காணியும் பெருந்தகையின் படிப்புச் செலவுக்கு ஈடுவைக்கப்பட்டு மூன்று வருடமாகிவிட்டது. ஒரு தொழிலும் செய்ய வசதியுமில்லை. கைமுதலும் இல்லை. அதனாலேதான் காமாட்சியின் தாலிக்கொடியை ஈடுவைத்து ஊரிலே வசதியாகக் கிடைக்கிற ஒரு கள்ளுக்கொட்டிலை எடுத்து நடத்தலாமென்றால், "மானக்கேடு" என்று காமாட்சி சம்மதிப்பதாயில்லை. இதையிட்டுச் சற்று முன்னமும் பெரிய சண்டை சுவாமி.

காமாட்சி பளபளக்க மினுக்கிய பித்தளைக் கிண்ணத்தில் தேநீர் ஏந்திவந்து பணிவுடன் நின்றாள்.

"அம்மா! காமாட்சி! முத்தையாவின் எண்ணப்படியே இப்போதைக்கு நடக்கட்டும். ஆனால் முத்தையா! வேறேதும் தொழிலுக்கு வேண்டியமுதலைத் தேடிக்கொள்ளும் ஒரு குறுகியகால வியாபாரமாகவே அதனை நினைத்துக்கொள். சீவியமெல்லாம் அந்தப் பாவத்தொழிலோடு இருக்க எண்ணாதே!. உன் மூத்த மகன் பெருந்தகையையும் ஏதாவது தொழிலைச் சீக்கிரம் தேடிக்கொள்ளச்சொல். உன்னைப் பொறுத்தமட்டில் வேறு மார்க்கமின்றி இந்தப் பாவவழியில் செல்ல வேண்டியுள்ளது. அதுபோல, படித்துப்பட்டம் பெற்ற பெருந்தகையும் கௌரவம் குறைந்த ஒரு தொழிலைச்சரி, இப்போதைக்குச் செய்வதில் தப்பில்லை என்று அவனுக்கு எடுத்துச் சொல்.

காமாட்சீ! பசிக்கொடுமையால், பிச்சை, பொய், களவு, கொலை, சூது இவற்றில் இறங்கும் கேவலமான நிலை ஏற்படுமுன்னம் கள்விற்றுச் சரி பாடுபட்டுக் கஞ்சி குடிப்பது எவ்வளவோ மேல் மகளே!. கவலை வேண்டாம்.

கடவுள் மிக விரைவில் உங்களுக்கு நல்ல நிலையைத் தந்து அருளுவார்'' என்று ஆசீர்வதித்து எழுந்த சரவணச் சாமியார் காமாட்சி இரு கைகளாலும் நீட்டிய தேநீரை ஏற்றுப்பருகி விட்டு வழமைபோலவே தங்காமல் தரிக்காமல் புறப்பட்டுச் சென்று விட்டார்.

''அப்படியென்றால் சாமியார் சொன்னபடியே செய்யுங்கள். பெருந்தகைதான் இதை அனுமதிக்க மாட்டான்.''

''அவனுக்கும் நீயே மெல்ல விசயத்தைச் சொல்லிச் சமாளியேன். காமாட்சி. ஆமாம்! நம்வீட்டு நிலைமை இன்னும் மோசமாகி, தம்பி மாரின் பட்டினி முகங்களைப் பார்க்கச் சகிக்காத பரிதாப நிலையில் இதைச் சொன்னால் நிச்சயம் ஒத்துக் கொள்வான் காமாட்சி. அதிலும் சரவணச்சாமியாரின் தேவ வாக்கைக் கேள்விப்பட்டால் அப்படியானால் சரிஎன்று மனப்பூர்வமாக ஒத்துவந்துவிடுவான். எதற்கும் இன்றைக்குப் பொறுத்து, அவனை வசப்படுத்தக்கூடிய நியாயங்களை மனதிலே ஒழுங்கு பண்ணி வைத்துக்கொண்டு நாளையோ, மறுநாளோ சமயம் பார்த்துச் சொல்லிச் சமாளித்துப்போடு.''

பழையபடி நிம்மதிப் பெருமூச்சோடு உலக்கைகளைக் கைகளில் எடுத்துக் கொண்ட முத்தையாவும் காமாட்சியும் அவற்றின் முனைகளைக் கைகளால் தடவி மண்ணைத்துடைத்துக் கொண்டு மாற்றுலக்கை போட ஆயத்தமாகினர்.

## 4. தரர் முழக்கு

**அ**ந்தி மயங்கும் நேரத்தின் பொன்னொளி வெள்ளத்தில் குளித்து நின்ற யாழ்ப்பாணப் பட்டினத்தின் நெடிதுயர்ந்த கட்டடங்கள், மாளிகைகள் யாவும் வீதிகளில் எல்லாம் தமது நீண்ட கரு நிழல்களை நிரப்பி வைத்துக் கொண்டிருந்தன. பகல் நேரமெல்லாம், தங்கத் தரிக்கப் போதிய இடமின்றிப் பாழடைந்த கட்டடங்களின் மூலை முடுக்குகளிலும் உத்தியோகத்திற்கும், பல்வேறு சோலிகளுக்கும் கிளம்பிச் சென்றுவிடும் பிரமச்சாரிகளின் பூட்டப்பட்ட வாடகை வீட்டு அறைகளிலும் நட்டமடைந்த வியாபாரிகள் நிரந்தரமாக மூடிவிட்டுச் சென்ற கடைகளின் அறைகளிலும் மட்டுமே அதுவரை பதுங்கிக் கிடந்த இருட்படை, ஒளிப்பகைவனின் ஆட்சி ஒடுங்கத் தொடங்கியதும் மெல்ல வெளிக்கிளம்பி வீதிகளில் மண்டியிருந்த நிழல்களிலெல்லாம் கவியத்தொடங்கிவிட்டது.

பரபரப்பும் சந்தடியும் மிகுந்து மக்கள் வெள்ளம் நிரம்பி வழிந்த அந்த வீதியில் அப்பொழுதுதான் தன் மிதிவண்டியைத் திருப்பிப் புகுந்து

கொண்டிருந்தான் பெருந்தகை. எங்கிருந்தோ அங்கு வீசிய மெல்லிய அந்திக்காற்றின் குளிர்ச்சியில் மெய்சிலிர்ப்படைந்தவனாய்த் தன் முகத்தை ஒரு கையால் கசக்கித் துடைத்து விட்டுக் கொண்டான்; தானாகவே ஒரு பெரு மூச்சு அவன் களைப்பையெல்லாம் வாரிக்கொண்டு கிளம்பியது. அது வரை வயிற்றுப் பசியால் கட்டுப்பட்டு வெய்யிற் சூட்டினால் சுருக்குண்டு கிடந்த அவனது மூளையிலும் ஒரு விசைப்பு! உயிர்த்துடிப்பு! சிந்தனைக் குழந்தை மீண்டும் தவழ்ந்து எழுந்து நின்று தள்ளாடு நடை போடத் தொடங்கிற்று.

“சே! என்னபடிப்பு! என்ன வாழ்க்கை! எத்தனை வர்த்தக நிலையங்களின் படியேறி இறங்கியாகிவிட்டது. எத்தனை அலுவலகங்களில் காத்துக்கிடந்து பார்த்தாயிற்று. எத்தனை தொழிற் பிரமுகர்களைச் சந்தித்து நிலைமையை விளக்கி மன்றாடிப் பார்த்திருக்கிறேன். ஒருவனுக்கு வேலை கொடுக்க ஒரு தொழில் நிலையம் இன்று இல்லையே! ஆமாம்! இன்று தானே இந்த நிலை. ஒரு ஐந்து வருடங்களுக்கு முன்பே நான் இப்படித் தொழில் தேடப் புகுந்திருந்தால் கை நீட்டி வரவேற்றுத் தொழில்தர எத்தனை பேர் முன்வந்திருப்பார்கள். எல்லாம் இந்தப் பட்டப் படிப்பால் வந்த வினை. உள்ள உடைய இடத்துப் பிள்ளைகள் படிக்கிறார்கள் என்று ஓட்டாண்டிப் பிள்ளைகளும் பீ.ஏ, பி.எஸ்.ஸி. படிக்க நினைக்கிறது எத்துணைத்தவறு? பட்டப்படிப்பு எனது வாழ்க்கைக்குத் தொழில் இல்லாமல் பண்ணிவிட்டது. என் அப்பா இராக்கிடந்த இடம் பகலில்லாமல் அடியாவண்ணம் அடித்துத் தேடின காசையெல்லாம் ஆயிரக்கணக்கில் கரைத்து விட்டது. அவர் கொத்திப் பிழைக்கச் சொந்தமாக ஒரு பத்துப் பரப்புக் காணி வாங்கவும் முடியாமற் செய்து விட்டது. சே! எத்தனை கனவுகள் கண்டிருப்பேன்!.

குத்தகைக்கமம் சொந்தக் கமமாய் மாறும்!. அடுத்து எங்கள் ஓலைக்குடிசை கற்கோட்டையாக உருவெடுத்து நிமிர்ந்து நிற்கும். நான்கு தம்பிமார்களையும் பட்டினத்துப் பள்ளிக்கூடங்களிற் படிக்க வைத்து மருத்துவக் கலைவல்லுநர் பொறியியல் நிபுணர்களாக ஆக்கிவிட வேண்டும் என்றெல்லாம் எண்ணி மனப்பால் குடித்தேன். கடைசியில் பார்த்தால் நான் படித்த படிப்பு எங்கள் தோட்ட நிலச் சொந்தக்காரனை எங்கள் குடும்பத்தின் மேல் பொறாமைப்பட வைத்துக் குத்தகை நிலத்தைப் பறிக்கச் செய்துவிட்டது. கமத்தொழிலன்றி வேறு தொழிலெதுவுஞ் செய்யத் தெரியாத அப்பாவுடன் எங்களையும் ஓடேந்தும் நிலைக்கும் வைத்துவிட்டது. ஓலை வீட்டையும் விற்றுவிடும் கடனாளிகளாக்கவும் போகிறது. தம்பிமார்களையோ உள்ளூரில் உள்ள சாதாரண பள்ளிக்கூடத்திலாவது போய்ப்படித்துவர வக்கற்றவர்களாக்கிப் புத்தகம் பேனைக்குக்கூட வழியற்றவர்களாக்கி விட்டது. உழைத்தே உண்ணவேண்டும் என்னும் எண்ணமிருந்தும் உழைக்கும் வழிகிடைக்காது போனால் யாரென்ன செய்வது?”

இப்படியான கவலைகள் ஏக்கங்கள் மனத்தில் பெருகப் பெருகப் பெருந்தகைக்கு அழுகை அழுகையாக வந்தது. அவன் கசிந்த கண்களை அவசரமாகத் துடைத்துக் கொண்டே அந்தக் கவலைகளை மறப்பதற்கு மிதிவண்டியை உன்னி மிதித்தான். அது விரைவாக, கிறீச் கிறீச் என்ற ஓசையைப் புதிதாகக் கிளப்பிக் கொண்டு பறந்தது.

மிதிவண்டி சில நிமிடங்களில் ஆரியகுளஞ் சந்தியை அடைந்து வடக்கு நோக்கித் திரும்பிற்று. குளத்தில் நிறைந்து கிடந்த வெள்ளத்தின் வெடுக்கு நாற்றத்தைக் கரையோரத்தில் தாழ்ந்து கிடந்த மருத மரங்களின் கிளைகளையும் சிலுப்பிக்கொண்டு அள்ளியள்ளித் தெருவில் வீசிக் கொண்டிருந்தது ஆடி மாதத்தின் ஊதல் காற்று. மூச்சை அடக்கிக் கொண்டு மிதிவண்டியை உன்னி உன்னிக் கால்களால் உந்தி மிதித்த பெருந்தகை எதிரில் சற்றே தூரத்தில் தெருப்போடுந் தொழிலாளர் வேலையில் ஈடுபட்டிருப்பதைக் கண்டு கொண்டான்.

கமுகமடல்கள் கால்களை அலங்கரிக்கக் கொதித்து ஆவிதள்ளும் தார் வாளிகளைக் கைகளில் ஏந்திக்கொண்டு திட்டுத் திட்டாகக் கல் நிரப்பப்பட்டுக் கிடந்த குழிகளுக்கு ஓடியோடித் தாரை ஊற்றிக் கொண்டிருப்பவர்கள். நார்க்கடகங்களில் மணலைச் சுமந்து சென்று தாரூற்றிய இடங்களில் கொஞ்சங் கொஞ்சமாகக் கொட்டிக் கொண்டு நிற்பவர்கள், குழிகளைத் துடைத்துக் கல் நிரப்புவோர். மொங்கான் பிடிப்போர் எல்லார் கால்களிலும் விடாப்பிடியான பரபரப்பு, கைகளிலோ புயலின் செயற்பாடு, அவர்கள் பம்பரம் போல் சுழன்றோடிக் கொண்டிருந்தனர். தெருவின் ஓரத்தில் தணல் கொப்பளிக்கும் தார்வண்டி. விரைவாக ஓடிவந்த வண்டியை நிதானப்படுத்தி வண்டி மணியை ஒரு கை ஓயாது கிலுக்க ஆறுதல் நகர்வினால் அவர்களைத் தாண்டிச் செல்ல முயன்றுகொண்டிருந்தான் பெருந்தகை. ஒரு கையில் தார்வாளி மறுகையில் தார் தெளிக்கும் தென்னம்பாளை இந்தக் கோலத்தில் பிய்ந்த சப்பாத்துக் கால்களைத் தூக்கித் தூக்கி வைத்துத் தெருவின் ஓர் ஓரத்திலிருந்து மறு ஓரத்திற்குக் கண்மண் தெரியாமல் ஓடிய ஒரு தொழிலாளி பெருந்தகை அடித்தமணியையும் போட்ட கூச்சல்களையும் பொருட்படுத்தாமல் வந்து மிதி வண்டியில் மோதிக் கொண்டான்.

இந்த நிகழ்ச்சி யாரும் எதிர்பார்க்காத விதத்தில் மின்னி மறைந்தாற் போல் நடந்து தீர்ந்துவிட்டது. அந்தத் தொழிலாளியின் கைப்பாளையில் சொட்டிக் கொண்டிருந்த சுடுதார்த்துளிகள் சிதறுண்டு பெருந்தகையின் வேட்டியிலும் பளபளக்கும் நைலோன் சட்டையெங்கிலும் கரும்புள்ளிகளை அள்ளி இறைத்துவிட்டன. அவசரமாக மிதிவண்டியை விட்டிறங்கிய பெருந்தகை நின்று ஒரு முறை சட்டை வேட்டியைக் குனிந்து பார்த்துக்கொண்டான்

ஆத்திரத் தோடு! ஆனால் தாரைச்சிந்திய தொழிலாளியோ எதுவும் நடந்திராதது போல் தன் கடமையில் ஓடிக் கொண்டிருந்தான்.

பெருந்தகைக்கு ஆத்திரத்தில் கைகள் துடிக்கலாயின; தேகம் பதறிற்று; வண்டியைத் தெருவோரத் தந்தித்தூணில் சார்த்தி விட்டுத் தொழிலாளியை நோக்கி விரைந்தான்.

“இந்தாருங்கள் என்ன இது?” என்று முறைப்போடு மிரட்டிற்று அவன் அழுத்தமான உரப்புங்குரல்! அந்தத் தொழிலாளி தன் கண்களில் கழிவிரக்கமும் கவலையும் தொனிக்க ஊடே அச்சமும் பரபரப்பும் தலைகாட்ட, பெருந்தகையையும் தெருவோரத்தில் நிற்கும் மேற்பார்வையாளரையும் மாறி மாறிப் பார்த்துப் பதைத்தபடி நின்றான். உண்மை நிலையை ஒரு நொடியில் பெருந்தகை புரிந்து கொண்டான். “பாவம் தான் செய்தது தவறு என்று என்னிடம் சொல்லி மன்னிப்புக் கேட்டிருப்பான். அந்த மேற்பார்வையாளன் அதற்குக் கூட நேரந்தர மாட்டான் கண்டிப்பான், தண்டிப்பான் என்றஞ்சியே இவன் இப்படி அலட்சியம் போல் நடந்து கொண்டான்” என்று எண்ணிக் கொண்டான்.

சோற்றுக்கே வழியில்லாத இந்த நேரத்தில் நாற்பது ரூபாச் சட்டையையும் பத்து ரூபா வேட்டியையும் பாழாக்க நேர்ந்து விட்டதே. அந்த நைலோன் சட்டை அவன் பல்கலைக்கழகத்தில் இறுதியாண்டில் படித்துக் கொண்டிருந்த போது அவனுக்கென்று அவன் அப்பா முத்தையா வாங்கியது. அப்படி ஒரு சட்டையைப் பக்கத்து வீட்டுப் பையன் போட்டிருக்கப் பார்த்து ஆசைப்பட்ட அம்மா அப்பா வாங்கித் தந்த அந்தச் சட்டைக்கு இந்தக் கதி நேர்ந்ததே! தான் வேலையில்லா நிலையில் வறுமையால் வீடு அலங்கோலப்படும் நெருக்கடியில் அந்த விலையுயர்ந்த சட்டையைப் போட்டுத் தன்னை அழகு பார்க்க அவனுக்கு விருப்பமில்லைத்தான். இருந்தும் காலையில் வேலை தேடிப் புறப்படும் போது, “இரக்கப்போனாலும் சிறக்கப் போ என்று சொல்வார்கள். நல்ல சட்டையாகப் போட்டுக் கொண்டு போ” என்று அவன் தாய் வலியுறுத்தியதால் மனமின்றி எடுத்துக் கொளுவிக் கொண்டு வந்திருந்தான். “கடைசியில் குளிக்கப் போய்ச் சேறு பூசின கதையாக, உழைப்புத்தேடப்போய் என்னிடமிருந்த ஒரேயொரு நல்ல சட்டையையும் வேட்டியையும் பாழாக்கி ஐம்பது ரூபாவுக்கு நட்டம் ஏற்படுத்திக் கொள்ள நேர்ந்ததே! எல்லாம் என் போதாத காலம்” என்று எண்ணிக் கொண்டு எதிரில்நின்ற தொழிலாளியை நிமிர்ந்து பார்த்தான் அவன்.

அப்பொழுது, “டேய்! இளையவன் என்னடா அங்கே கதை! கதைத்துக் கொண்டு நிற்கிறதற்கும் சம்பளமா?” என்று கிளம்பிய கூச்சல் வந்த திசையில் பெருந்தகை வெறுப்போடு திரும்பிப் பார்த்தான். அங்கு அந்தத் தடியாசாமி

மேற்பார்வையாளர் நின்று தொடர்ந்தும் குரைக்கலானார்; "உங்கள் வியாபாரங்களைப் பற்றி உங்கள் உங்கள் வீடுகளில் வைத்துக் கதையுங்கள். இங்கே வந்து வேலை செய்கிறவர்களைக் குழப்பாமல்!."

பெருந்தகைக்குக் கோபம் எல்லையற்றுப் பொங்கி வந்தது. "இது ஒன்றும் எங்கள் வீட்டு அலுவல் அல்லப் பாருங்கள். இது உங்கள் அலுவல் தான். உங்கள் தாரினால்தான் உங்கள் வேலைக்காரன்தான் உங்கள் மேன்மை தங்கிய மேற்பார்வையின் கீழ்த்தான் என் ஐம்பது ரூபா பெறுமதியான உடுப்பை நாசமாக்கி விட்டான்" என்று நையாண்டியாகச் சொல்லிக் கொண்டே அவரை நெருங்கித் தன் சட்டையைச் சுட்டிக்காட்டி "இதோ பாருங்கள். இதை என்ன செய்கிறது?" என்று தணல் கக்குங் கண்களால் அவரை எரித்து விடுபவன் போலப் பார்த்தான்.

"அதுக்கு என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய்.? இப்போது ஐம்பது ரூபாய் தரச் சொல்லுகிறாயே?" என்று ஒருமையில் சற்றும் மதிப்பின்றி ஏளனமாகக் கேட்டார் மேற்பார்வையாளர்.

"என்ன சொல்கிறீர்? செய்ததையும் செய்து விட்டு ஏளனம் வேறு பண்ணுகிறீர்களா? என்னிலும் வயதில் மூத்தவர் என்று பார்க்கிறேன்" என்று பற்களை நற நறவென்று கடித்த பெருந்தகை ஆத்திரத்தின் எல்லைக் கோட்டின் மிக அருகில் நின்றான்.

"என்ன சண்டித்தனம் பேசுகிறாயா?" என்று அதிகார தோரணையில் தொடங்கிய மேற்பார்வையாளரின் பேச்சைக் குறுக்கே வெட்டி "ஆமாம் என்ன செய்வீர்கள்?" என்று தானும் மேற்பார்வையாளருக்கு அறைகூவல் விடுத்துக் கொண்டே சட்டையைக் கழற்றி மிதிவண்டி மீது அலட்சியமாக வீசிய பெருந்தகை அவசரமாக வேட்டியை மடித்துச் சண்டிகட்டிக் கொண்டான்.

## 5 - புயலில் தப்பிய படகு

**அ**ப்பொழுதுதான் அவனது தோற்றத்தை முழுமையாகக் காண நேர்ந்த மேற்பார்வையாளரின் மனம் மலைப்படைந்துவிட்டது. மாமிச மலைபோல வளர்ந்து நெடிதுயர்ந்து கனத்துத் திரண்டு காணப்பட்ட அவன் உருவம் அவரைப் பயத்தின் தூண்டுதலால் ஆனால் அச்சத்தை மறைக்குங் குரலில் "அடே! என்னடா செய்கிறீர்கள்" என்று சுற்றுமுற்றும் பார்த்து மிரள வைத்துவிட்டது. வேலையில் ஈடுபடாமல் அங்கு நடக்கும் சச்சரவையே உற்று நோக்கி நின்ற தொழிலாளர் சிலர் ஓடிச்சென்று கைகளில் ஒவ்வொரு மண்வெட்டி எடுப்பதைக் கவனித்த பெருந்தகை, அவர்கள் மேல் ஒரே

பாய்ச்சலாகப் பாய்ந்து தள்ளி வீழ்த்திவிட்டு இரண்டு கைகளிலும் இரு மண்வெட்டிகளை எடுத்துக் கொண்டு சுழற்றச் சித்தமானான். "வாருங்கள்! நான் சாகத்தயார்! ஆனால் உங்கள் அத்தனை பேரையும் சாகடித்துத்தான் நானும் சாவேன்" என்று கத்தினான்.

மேற்பார்வையாளருக்குக் கால்களும் கைகளும் பதறத் தொடங்கின. அந்நடுக்கம் அச்சத்தினாலா? ஆத்திரத்தினாலா? இரண்டினாலுந்தான். அவரும் அவருடைய முப்பது வருச அனுபவத்தில் எத்தனையோ பலசாலிகளைச் சந்தித்திருக்கிறார். சில பல பலசாலிகளை ஓட ஓட விரட்டியுமிருக்கிறார்.

கல்கிளறும் வெளிகளிலே தெருவை அகலமாக்கும் இடங்களிலே ஏற்பட்ட சச்சரவுகளில் அவரின் லொறியோட்டி வைரமேறிய கைகளால் பதம்பார்க்கப்பட்டவர்கள் ஏராளம் பேர். அப்படியான சண்டியன் இன்று ஏன் பயந்து நிற்கிறார். ஏன் கைகளை அசைக்கக்கூடத் துணிவின்றி நிற்கிறார். அவருக்குப் பக்கத்தில் தானே கொதிக்கும் தார் தாங்கிய வாளிகள் கிடக்கின்றன. ஆமாம் இந்த வினாக்கள் அவர் நெஞ்சிலும் இந்தச் சிலநொடிகளில் தோன்றித்தான் இருக்கின்றன. இருந்தும் என்ன? அவருக்கு அந்த வினாக்களுக்கு எளிதாகப் பதில் சொல்லிவிட்டது அவரது உள்மனம். "இவன் போன்ற ஒரு பலசாலியை வெல்வது அரிது. இவன் போன்ற ஒரு மனத்துணிச்சலுள்ளவனை வெல்வது அரிதிலும் அரிது. என்ன துணிச்சற்காரனாய் இருக்கிறான்" என்று கோபத்தையும் மீறி அவனை அவர் மனம் வியந்து தளர்ந்தது.

அவர் அசைவற்றுச் சிலையாக நின்றார். தொழிலாளிகளில் விழுந்து எழுந்தவர்கள் உட்படப் பதின்மூன்று பேரும் திகைப்பாலும் அச்சத்தாலும் கட்டுண்டு நின்றனர். அவர்களில் ஒருவன் கிழவன், அனுபவம் வாய்ந்தவன். இந்த நிலைமையை நீடிக்க விடுவது ஏதாவது பயங்கரமான திடீர்த்திருப்பங்களுக்குக் காலாகிவிடும் என்று எண்ணி ஒரு முடிவுக்கு வந்தவனாய் எசமானரின் முகத்தை ஏறிட்டு நோக்கினான். அவர் முகமும் பயத்தால் கலவரமடைந்திருந்தது. தனது சமாதான முயற்சியில் அவருக்கு மறுப்பிருக்காது என்று தெளிந்து கொண்டு "தம்பி! பொறுங்கள். இதையெல்லாம் தயவு செய்து பெரிது படுத்தாதீர்கள்" என்று மன்றாட்டம் சொல்லிலும் குரலிலும் சேர்ந்தொலிக்கப் பெருந்தகையை அணுகினான் கிழவன்.

'என்ன சொல்கிறீர்கள்?' என்னும் பாவனையில் அந்த முதியவனைப் புருவத்தை நெரித்துப் பார்த்தான் பெருந்தகை. "நடந்தது நடந்துவிட்டது. கைபிழைபாடாகச் செய்து விட்டான். நீங்கள் அதை மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று அவனது கைகளைத் தனது மரத்துச் சுருங்கிய கைகளால் பற்றினான் கிழவன்

"அதற்கென்ன பெரியவரே! நான் இவர்களிடம் நட்டஈடு கேட்கவில்லை. நட்டமடைந்த என் மனம் ஆறுவதற்காக இவர்கள் தங்கள் தவறையுணர வேண்டும் என்றுதான் எதிர்பார்த்தேன். தாம் செய்தது தவறு என்பதை உணரக்கூட ஒப்புக்கொள்ளக்கூட மறுத்தார்கள். இப்பொழுதுதான் உணரும் நிலையை அடைந்திருக்கிறார்கள். இதோ இங்கு நிற்கும் மேற்பார்வையாளர் மனிதரோடு மனிதனாகப் பேசத் தெரியாமல் "நீ! நான்" என்று பேசும் பண்பாளர்! தமது இலாபத்துக்காகத் தெருவால் போகும் வழிப்போக்கர்களை நட்டப்படுத்தவும், தொழிலாளிகளைச் சண்டைகளில் மாட்டிவிடவும் தயங்காத ஒருவர். உங்கள் குரலில் உங்கள் வாயால் இவர் மன்னிப்புக் கேட்டார் என்று வைத்துக் கொண்டு இந்த அளவில் விலகிப்போகிறேன்" எனக்கூறியவன் சண்டிக்கட்டை அவிழ்த்துத் தார்ப்புள்ளிகள் மறையும்படி நன்கு மடித்துக் கட்டினான். சட்டையை அந்தப்படியே தோளிற்போட்டுக் கொண்டான்.

மிதிவண்டியை எடுத்துத் தாவி ஏறிக்கொண்ட பெருந்தகை வேகமாக உந்தி மிதித்துக் கொண்டு செல்கையில் தெருவோரமாக நிறுத்தப்பட்டிருந்த கூடாரமற்ற ஒரு லொறியைத் திரும்பி நோக்கினான். "மேற்பார்வையாளர் உலகநாதபிள்ளை ஏழாலை" என்று ஆங்கிலத்தில் கிறாதியில் எழுதப்பட்டிருந்தது.

லொறியை அங்கு நிறுத்தி வைத்த உலகநாதபிள்ளை கொதிக்கின்ற மனத்தை அடக்கமுடியாமல் தொழிலாளிகள் மேல் எரிந்து விழுந்து வேலையைக் கவனிக்கும் படி கட்டளையிட்டு ஊக்கிக் கொண்டுநின்றார். "என்ன? நான் தன்னிடம் மன்னிப்புக் கேட்டதாகவே கருதுவதாக அவன் கூறியபோது அதை மறுக்கிற துணிவுகூட எனக்கு வராமற் போய்விட்டதே!. என்ன தந்திரமாக என்னைத் தன்னிடம் மன்னிப்புக் கேட்டவனாக்கி விட்டான்? இந்த அவமானத்தை எப்படி நான் தாங்குவது?, இவனைச் சரியான முறையில் பதப்படுத்த வேண்டும். இதற்கு என்ன வழி?" என்று எண்ணமிட்டு ஆராய்ந்தவருக்கு ஓர் உபாயம் தென்பட்டது.

அதாவது அவனை நீதி மன்றத்திற்கு இழுத்து, தன் பணத்தை அள்ளியிறைத்தாவது அவனைக் கம்பியெண்ண வைக்கவேண்டும். அப்படிச் செய்வதற்கும் ஒரு புறம் பயமாக இருந்தது. சாவதற்கும் அஞ்சாமல் தன்னைத் தாக்க முற்பட்டவன் சிறைக்கூண்டுக்குப் பயந்து பின்னர், தனக்குத் தீங்கு செய்யாமல் விட்டு விடுவானா? என எண்ணினார். "போனது போகட்டும் அவன் சைக்கிள் மணியை அடித்துக் கொண்டு ஆறுதலாக – நிதானமாகத்தான் வந்தான். இந்தச் செவிட்டுப் பயல் எனக்குப் பயந்து கண்களை மூடிக் கொண்டு ஓடினதால் தான் வந்தது இந்தச் சங்கடம். நானும், கண்டுங்காணாத மாதிரிப் பயமுறுத்தல் சத்தம் போட்டேன். காரியம் பலிக்காமல் போனதோடு சண்டையை வேறு அது இழுத்தும் விட்டுவிட்டது. பரவாயில்லை" என்று தமக்குத் தாமே சமாதானங்கூறி மனத்தைத் தேற்றிக் கொண்டார் உலகநாதபிள்ளை.

தன்னுடன் படித்த மாணவர்கள் தன்னை அந்தத் திருக்கோலத்தில் கண்டுவிடக்கூடாதே என்ற வெட்கத்தில் பெருந்தகை மக்கள் நடமாட்டமற்ற குச்சொழுங்கைகளின் வழியாக விரைவாக ஓடித் திருநெல்வேலியைக் கடந்து இராசவீதியால் போய்க்கொண்டிருந்தான். நேரம் நன்றாக இருட்டிவிட்டதாலும் தெரு விளக்குகள் அந்த வீதியில் இல்லாமையாலும் சற்று நிம்மதி அடைந்த அவன் அமைதியாக அந்தப் பாதையில் நீர்வேலியை நோக்கி விரைந்து கொண்டிருந்தான்.

அன்று சற்றும் எதிர்பாராமல் நடந்துவிட்ட நிகழ்ச்சி அவன் மனத்தை மெல்ல மெல்ல உலுக்கத் தொடங்கிற்று. "சண்டை தொடங்கியிருந்தால் இதுவரை அவர்களிலும் பலர் கொலை செய்யப்பட்டிருப்பார்கள். நானும் எமலோகத்தை எட்டிப்பார்த்திருப்பேன் அல்லது கைதிக்கூண்டில் தள்ளப்படும் நிலைமைக்காளாகியிருப்பேன். என்னை நீதிமன்றத் தண்டனையிலிருந்து காப்பாற்றும் முயற்சியில் வீடுவாசல் விலைபோக வேண்டியிருந்திருக்கும். இதை அறிந்தால் அம்மா அப்பா எப்படியெல்லாம் வருந்துவார்கள். நான் உழைத்து அவர்களை இந்த வறுமை நிலையில் காப்பாற்ற வேண்டியவன். அதைவிட்டு மேலும் ஒரு மகனைப் பறிகொடுத்த அல்லது நட்டப்படுகின்ற நிலைக்கு அவர்களை ஆளாக்க முயல்வதென்றால் அது எவ்வளவு கொடுமையான செயல்? கடவுள்தான் இந்த இக்கட்டிலிருந்து என்னைக் காப்பாற்றினார். அந்த மேற்பார்வையாளரும் சற்றுப் பயந்தாங் கொள்ளியாக இருந்தபடியால்தான் சண்டை வராமற்போயிற்று. பாவம் நான் விட்ட அறைகூவலை ஏற்காமல் நடுங்கிக் கொண்டல்லவா நின்றார் அவர்?

ஒரு வேளை அந்த மனிதர் என்னைச் சண்டையால் வெல்ல நினைக்காமல் பணத்தால் வெல்லத் திட்டம் போட்டிருப்பாரோ? என்மீது கொலை முயற்சி வழக்குத் தொடர்ந்து என்னைத் தண்டனைக் குள்ளாக்கி விட்டால்? ஐயையோ நான் படித்ததெல்லாம் வீண். பின்பு அரசாங்கத்தில் உத்தியோகம் தேடினபாடுமில்லை. ஊரில் இருக்கும் நல்ல பெயரும் போய்க்குழப்படிகாரன் என்ற பட்டமும் சூட்டப்பட்டுவிடும். ஆனால் ஒன்று, இவருக்கு என்னை யாரென்று எப்படித் தெரிந்திருக்கப் போகிறது? ஊரும் பெயரும் இவர் எப்படிக் கண்டுபிடிப்பார்?

கடவுளே! இதுவரை காப்பாற்றினாய். இன்னும் என்னைக் காப்பாற்றிவிடு.. என் அப்பா எனக்குப் பெருந்தகை என்று வைத்த பெயரை எனக்குப் பொருந்தாத பெயராகும் படி விட்டு விடாதே, என்னைக் கொலைக்கஞ்சாக் கொடியவன் என்ற பழிச்சொல்லுக்கு ஆளாக்கிவிடாதே.

சரி, இது போகட்டும்! நாளை எந்தெந்த அலுவலக வாசல்களில் போய்க் காத்துக்கிடந்து பார்க்கலாம்?" என்று சிந்தித்துக் கொண்டே மனித

நடமாட்டம் அடியோடு இல்லாமல் வெறிச்சோடிக் கிடந்த அந்த வீதியிலே இருமருங்கும் வெங்காயத் தோட்டங்களும் வாழைத் தோட்டங்களும் மாறி மாறி வந்து பின்னடைய, தூரத்துப் பனந்தோப்புகளில் காவோலைகள் சலசலத்துக் கோவென்றிரைய அவன் அவற்றில் மனம் ஈடுபடாமல் அபூர்வமாகத் தென்படும் குடிசைகளின் விளக்குகள் மின்மினி வெளிச்சம் காட்ட விரைந்து கொண்டிருந்தான். கடைசியில் 'கல்லுண்டாய் வெளியிலுள்ள உப்பளத்திற்கு நாளை போய்ப்பார்ப்போம்' என்று முடிவு கட்டினவனாய், "ஏனிந்தத் தொல்லைகள்! இந்தக் கமத் தொழிற்றிணைக்களம் நேர்முகப் பரீட்சைக்கும் அல்லவா கூப்பிட்டிருக்கிறது என்னை! நன்மையான முடிவு விரைவில் வந்தால்....?" என்று ஏங்கிவிட்டு "இன்னும் அதன் முடிவுகளை வெளியிடாமல் வைத்துக் கொண்டு இருக்கிறார்களே!" என்று நொந்து கொண்டு சோர்வோடும் களைப்புடனும் வீடு போய்ச் சேர்ந்தான் பெருந்தகை.

## 6. பெருந்தகை பெருந்தகையே!

கல்லுண்டாய் உப்பளத்தையும் தரிசித்து முடித்தாயிற்று. அங்கும் கைவிரிப்புத்தான் பெருந்தகையை வரவேற்றது. அவன் மனம் சலித்து வாழ்வே உலகமே கசந்து விட்ட நிலை. ''இந்தத் தொழிற்சாலைகள் அலுவலகங்களுக்கெல்லாம் மாறி மாறி உலைந்ததற்குப் பதில் யாழ்ப்பாணத்திலுள்ள ஒவ்வொரு கோயிலாகத் தினமும் போய் வேண்டியிருந்தாலும் பயன் கிடைத்திருக்குமே! போகட்டும். இனி நாற்காலி உத்தியோகமே தேடுவதில்லை. ஏதாவது கண்காணாத இடத்திற்குச் சென்று ஒரு கடைச் சிப்பந்தியாகவோ கமத்தொழிற் கூலியாகவோ வேலை செய்து மாதம் மாதம் பத்தை இருபதை வீட்டுக்கு அனுப்புவது தான் வழி!." என்று நொந்தபடி மிதிவண்டியில் இராச வீதியில் கோப்பாயைத் தாண்டி நீர்வேலிக்குள் புகுந்து நாலு மணி வெய்யில் முதுகிலடிக்கும் படி கிழக்கு நோக்கிச் செல்லும் ஓர் ஒழுங்கையில் திரும்பிய பெருந்தகை ஒழுங்கையின் இருமருங்கையும் பார்த்தவாறு சென்று கொண்டிருந்தான்.

அவனது ஊர்க்கமக்காரர்கள் நிம்மதியாகத் தங்கள் தங்கள் தோட்டங்களில் நின்று வேலை செய்வதைக் கண்டான். சிவப்பிலும் பச்சையிலும் சித்திர வேலைப்பாடமைந்த கம்பளங்கள் போலச் செம்பாட்டு நிலங்களில் அமைந்த பசிய வெங்காயத் தோட்டங்கள்; அந்தியிளம் வெய்யிலில் தம் பசுமைக்கு வெளிச்சம் பூட்டிக் கொண்டு மாலை ஊதலில் குழைந்து குழைந்து ஆடிக்

கொண்டிருந்த மிளகாய்க் கன்றுகள் நிறைந்த சில தோட்டங்கள்; ஒரே பச்சையாக ஐந்து அங்குல உயரத்துக்கு எழுந்து நின்று சிலு சிலுத்த தினைப் பயிரின் நடுவே ஊன்றப்பட்டிருந்த மரவள்ளிக் கட்டைகள் தலைகாட்டித் தளிர்காட்டிக் கொண்டு அசையாமல் நின்றாடும் தோட்டங்கள்!. சில தோட்டங்களில் இராச வள்ளிக் கிழக்குக் கொடிகள் கிளுவங்கதிகால்களில் சுற்றிப் படரும்படி பிடித்துவிடப்பட்டிருந்தன. அங்கங்கு இருள் மண்டிக்கிடந்த பெரும் வாழைத் தோட்டங்கள் ஏராளம் தென்பட்டன.

சென்ற ஆண்டு இதே நாட்களில் பெருந்தகையின் தகப்பன் முத்தையாவின் தோட்டத்திலும் வெங்காயப் பயிர் மதாளித்து நின்றது. ஒரு பகுதியில் மிளகாய்க் கன்றுகள் தம் கரும் பச்சைக் குழைகளுக்கிடையில் பால் வெள்ளைப் பூக்களை மலர்த்திச் சிரித்து நின்றன. சாமைப் பயிர் சதிராடிக் கொண்டிருந்தது. பயிற்றங் கொடிகளும், இராசவள்ளிக் கொடிகளும் தடிகளைச் சுற்றி வளர்ந்து நின்று காற்றில் கையசைத்து அந்த விவசாயியை அழைத்துக் கொண்டிருந்தன. ஆனால் இந்த ஆண்டு? சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாகத் தன் தந்தையின் கைகளும் தன் கைகளும் அணுவணுவாகத் தொட்டளைந்து பண்படுத்தி எருவிட்டுப் பயிர்நாட்டி, நீர்பாய்ச்சிப் பலன் எடுத்து மகிழ்ந்த தங்கள் பழைய தோட்டத்தின் பக்கமாக வந்ததும் மிதிவண்டியை நிற்பாட்டி, காலொன்றை நிலத்தில் ஊன்றிக் கொண்டு நின்று, தன்னை வளர்த்தெடுத்த தாயைச் சதாகாலச் சிறைக்குள் காணும் மகனின் மன நிலையோடு, பிறந்த மண்ணைவிட்டு அந்நியரால் நாடுகடத்தப்படும் தேச பக்தன் ஒருவனது மனப் பொருமலோடு தங்கள் குடும்பத்துக்குத் தன் சிறு வயதிலிருந்து உணவளித்து உடையளித்துத் தனக்குக் கல்வியளித்த நன்றியுணர்வுடன் அதைக் கண்ணீர் பாயும் கண்களால் நோக்கி விம்மிப் பொருமும் நெஞ்சால் தொழுது நின்றான்.

சில விநாடிகளில் மனம் ஆறித் தெளிவு பிறந்தது. "இன்றும் இது எங்களுக்கில்லா விட்டாலும் இன்னொருவன் வயிற்றுக்காவது கஞ்சி வார்த்துக் கொண்டுதானே இருக்கிறது. இதோ! சாமை, மிளகாய்க் கன்று, கத்தரி முதலிய எல்லாப் பயிர்களும் நாட்டப்பட்டிருக்கின்றன. பாவம் இவனும் எங்களைப் போன்ற ஒரு குத்தகைத் தோட்டப் பிழைப்பாளிதானே!" என்று முன்னுக்குப் பின் முரணாகத் தொடர்பறுந்து வந்த துண்டு துண்டான எண்ணங்களை மனதிலே சுமந்து கொண்டு வண்டியை உந்தி உன்னி மிதித்துப் பிரயாணத்தைத் தொடர்ந்தான்.

தோட்ட வெளியைத் தாண்டி வானளாவ வளர்ந்த பனங்கூடலினூடே வளைந்து வளைந்து கிழக்கு நோக்கிப் போய்க் கொண்டிருந்த பாதையில்

வண்டியைத் திருப்பினான். வடக்குத் தெற்காக ஓடும் கற்பாதையில் மிதிவண்டி போய் ஏறுகிற சமயம் வடக்கிலிருந்து ஒரு லொறி கல்லேற்றி வருவதைக் கண்ட பெருந்தகை அதைப் போகவிடுவதற்காகப் பனந்தோப்புக்குள் இறங்கி நின்றான்.

பாதைக்குக் கிழக்குப் புறமாக அமைந்து கிடந்த விளையாட்டிடத்தில் காளைப் பருவ இளைஞர் பலர் பெருந்தகையின் இனத்தவர், உதைபந்து விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்களில் பலர் பத்தாம் வகுப்புவரை படித்துவிட்டு இனி இந்த உலகில் படிப்பதற்கு ஒன்றுமில்லை. எல்லாம் படித்துவிட்டோம். அரசாங்கம் தான் தொழில்தரவில்லை என்ற மனப்பான்மை படைத்துத்திரிபவர்கள். பெற்றாருடன் சென்று தங்கள் தோட்டங்களில் பாடுபடுவது படித்தவர்களுக்கு அழகில்லை என்று சொல்லி அவர்கள் இந்த விளையாட்டிடத்தை வகுத்து மாலை நேரங்களைச் செலவிட்டு வருகிறார்கள். இப்பொழுது பார்த்தால் இவர்கள் தன்னை விடத்தம் பெற்றாருக்கு நன்மை செய்தவர்களாகவே காணப்பட்டார்கள் பெருந்தகைக்கு.!

“இவர்களும் தொழிலற்றுத் திரிகிறார்கள். பல ஆயிரம் ரூபாக்களை மேலதிகமாக அழித்துப் படித்த நானும் தொழிலற்றுத் தானே திரிகிறேன். என்படிப்பால் வீட்டுக்கு மேலதிகமாக நட்டந்தானே ஏற்பட்டிருக்கிறது?” இவ்வாறு எண்ணிக் கொண்டிருக்கையில் அந்தக் கல்லுலொறி அவன் நின்ற இடத்தைத் தாண்டிச் சென்று அந்தத் தெருவை மிதிவண்டியில் குறுக்கே கடந்த ஒரு சிறுவனைத் தட்டி வீழ்த்திவிட்டுப் போய்ச் சற்றுத் தூரத்தில் நின்றது.

திடுக்கிட்டு விழித்து நிலைமையைக் கிரகித்துக்கொண்டு பெருந்தகை லொறியைப் பார்த்தான். மேற்பார்வையாளர் உலகநாதபிள்ளையின் பெயர் இருந்தது. வீழ்ந்த சிறுவன் அவனது தாய்மாமன் மகன். லொறியில் சாரதியாக இருந்தவரோ உலகநாதபிள்ளை. இதென்னடா அற்புதம்! நேற்றும் இன்றும் அடுத்தடுத்து உலகநாதபிள்ளையின் சந்திப்பு! அதுவும் இப்படியான மோதல்கள் மூலமாக அல்லவா இரு தடவையும் அவரைச் சந்திக்கிறான் பெருந்தகை!.

லொறி மோதிய ஒலியைக் கேட்டு விளையாடிக் கொண்டிருந்த இளைஞர்கள் லொறியை நோக்கிப் பாய்ந்து வந்து மொய்த்துக் கொண்டனர். “இறங்கு காணும் கீழே”, “கண்ணெங்கே பிடரிக்குள்ளா”, “இது என்ன உங்கள் வீட்டு நிலா முற்றமென்ற நினைப்போ?” என்ற கூச்சல்கள் நெருக்குவாரமாக எழுந்து மோத ஒருவன் உலகநாத பிள்ளையை அலக்காக இழுத்துக்குலுக்கி நிலத்தில் தள்ளினான். எழுந்துநிற்கவும் அஞ்சியவராய் ஆனால் ஆத்திரம் முகம்காட்டிய குரலில் “என்னை மனித்துக் கொள்ளுங்கள்?” என்று உட்கார்ந்தபடியே தடுமாறினார் உலகநாதபிள்ளை. அவருக்குத் தெரியும்

இன்றைக்கு இந்த நொடு நொடுத்த இளந்தாரிகள் தம்மெலும்புகளை நொறுக்கி விடுவார்கள் என்று. எனவே தான் மரியாதையாக, தற்செயலாக, ஓரளவு தாமும் காரணமாக நடந்துவிட்ட அசம்பாவிதத்தை முழுக்க முழுக்கத் தாம்விட்ட பிழையாகவே ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கேட்கத் தலைப்பட்டார்.

ஆனால் அந்தக் கூட்டத்தில் நின்ற முரட்டு இளைஞன் ஒருவன் 'என்ன கண்டறியாத மன்னிப்பு' என்று கேட்டுக் கொண்டே அவரைச் சட்டையில் பிடித்துத் தூக்கி நிறுத்தினான். வேறும் பலரும் "இலகுவான வேலை மன்னிப்புக்கேட்பது உதட்டிலும் நோகாத வேலை. கொடுங்கடா நல்ல கும்மல் குத்து" என்று கத்தினார்கள். சைக்கிளைப் பனையில் சார்த்திவிட்டு இதை எல்லாம் வெகு அருகில் வந்து பார்த்துக் கொண்டு நின்ற பெருந்தகைக்கு உலகநாதபிள்ளையைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

நண்பர்களின் காட்டுமிராண்டிச் செயலைப் பார்க்க வெட்கமாக இருந்தது. எல்லாரையும் இடித்துத் தள்ளிக் கொண்டு கூட்டத்தில் புகுந்து "விடுங்கள் அந்த மனிதனை" என்று அவர்களின் இரும்புப் பிடிகளை இழுத்துப் பறித்து விட்ட பெருந்தகை "என்னப்பா, மன்னிப்புக் கேட்ட பின்னும் ஒரு மனிதனைத் துன்புறுத்துகிறீர்களே!. நாங்கள் எல்லாம் படித்தவர்கள் அல்லவா? படிப்புக்கேற்ற பண்பாடா இது? எனக்காக இவரை விட்டு விடுங்கள்" என்று அவர்களைப் பாதி கண்டிப்பாகவும் பாதி நட்புரிமையோடும் கேட்டுக் கொண்டான்.

கூட்டம் கலைந்தது. சிலர் அங்கங்கு ஏதோ முணுமுணுத்ததையும் பெருந்தகை காதில் வாங்கிக் கொள்ளவில்லை. உலகநாதபிள்ளையை மீண்டும் லொறியில் ஏற்றி வைத்து முகத்தைக் கூர்ந்து நோக்கினான். அவரது கண்கள் நன்றியுணர்ச்சியைக் கொப்பளித்து அவனை நோக்கின. லொறி உறுமிக் கொண்டு முக்கி முனகி இரைந்தபடி மீண்டும் ஓட ஆரம்பித்துப் புழுதி கிளப்பியது. பெருந்தகை என்றுமில்லாத பெருமித நினைவோடு மிதிவண்டியை எடுத்துக் கொண்டு சமீபத்திலிருந்த தன்வீடு நோக்கிப் புறப்பட்டவன் விபத்தில் சிக்கிய சிறுவனைப் பற்றிய ஞாபகம் வந்தவனாய்ச் சுற்று முற்றும் பதைப்போடு பார்த்தான்.

சிறு கும்பல் இளைஞர்கள் நடுவே "எனக்கொன்றும் அடிபடவில்லை" என்று சொல்லி உடம்பில் புழுதி தட்டித்துடைத்துக் கொண்டு நின்றான் அச்சிறுவன். மோதுப்பட்ட சைக்கிளை நிமிர்த்தி நிறுத்திச் சரிபார்த்துக் கொண்டிருந்தது இன்னோர் இளைஞர் குழு. நிம்மதிப் பெருமூச்சோடு பெருந்தகை தன்மிதி வண்டியில் ஏறிக்கொண்டு கிளம்பிவிட்டான்.

உலகநாதபிள்ளையின் நெஞ்சு அச்சத்தால் இன்னமும் அடித்துக் கொண்டுதான் இருந்தது. இதயத்துடிப்பின் ஓசை காது வரை கேட்டுக்கொண்டிருந்தது. "இன்று ஏதோ எமன் கையில் சிக்கித் தப்பின

மாதிரியல்லவா இருக்கிறது.? நேற்று அவன் ஒருவனோடு தானே சச்சரவு? அவனும் "மன்னித்துக் கொள்" என்றால் உடனே விட்டுவிடக்கூடியவன். மன்னித்தும் விட்டவன். இவர்கள் பட்டாளமாக இன்றைக்கு என்னுயிரையே குடித்துவிடும் இரத்த வெறியர்களாக அல்லவா நின்றார்கள்.? நல்லகாலம். அந்த அவன் வந்திராவிட்டால் அல்லது ஒரு கணம் பிந்தி வந்திருந்தால் என்னைச் சம்பல் போட்டிருப்பார்கள் அந்த முரட்டு வாலிபர்கள். அவன் வல்லவன் மட்டுமல்லன், நல்லவனுந்தான் என்பது இன்றுதான் எனக்குப் புரிகிறது. அந்தக்கழிசடைகளின் கரும்புள்ளி, செம்புள்ளிச் சாரங்கள், ஆட்டுக் கடா மீசைகள் முரட்டுப் பிடிவாதம் இவற்றைப் பார்த்தால் கீழ்ச்சாதிப் பயல்கள் போலத்தான் தெரிகிறது. அப்படியானால் அவர்களின் உறவினன் போலக் காணப்படும் அவனும் அவர்களின் சாதிக்காரன்தான்!." இப்படித் தமது ஆத்திரத்தை எண்ணங்களாலாவது தீர்த்துக் கொண்டார் உலகநாதர்.

# 7. நினையாத ஒன்று

அடுப்படிக் கொட்டிலுக்குள் பெருந்தகையின் கடைசித் தம்பிமார் மூவரினதும் குரல்கள் அழுகையோடும் இருமல் சிணுங்கல்களோடும் கலந்து கிளம்பிக்கொண்டிருந்தன. மூத்த தம்பி விண்ணவன் தலைவாசற் கொட்டிலுள் கைவிளக்கு எரியும் மேசையில் புத்தகத்தை விரித்து வைத்துக் கோக்காலியில் அமர்ந்து படித்துக் கொண்டு இருந்தான். அவன் கழுவித்துடைத்த நெற்றியில் திருநீறு பட்டையாகப் பளிச்சிட்டுத் தெரிந்தது. களைப்போடு அவனை அணுகிக் கவலை தோய்ந்த மனத்தோடு அவன் வலக்கையை எடுத்துத் தன் மூக்கருகில் பிடித்துப் பார்த்தான் பெருந்தகை. பனாட்டின் வாசனை இலேசாக வீசிற்று அடுக்களை வாசலைப் பார்த்தான். சாமைத் தவிடு புடைத்துக் கொட்டப்பட்டிருந்தது. மேசையருகிலே விண்ணவனுக்கு இருக்கையாகவும் மாறியிருந்த கோக்காலியில் கிடந்த சாமைமூடை தன்பலத்தில் குன்றியிருந்தது. அவனுக்கு தன் குடும்பத்தவரின் அன்றைய உணவும் என்னவென்று புரிந்துவிட்டது.

தன் இளைய தம்பிமார்கள் ஏழுவயது ஐந்து வயது, மூன்று வயதுப் பச்சிளஞ் சிறுவர்கள் என்ன தின்றார்களோ என்னும் ஏக்கத்தோடு அடுக்களைக்குள் புகுந்தான். அங்கே மூன்று நெளிந்த அலுமினியக் கிண்ணங்களில் கீரைக்கறியோடு குழைக்கப்பட்ட கூப்பன் வெள்ளைப் பச்சை அரிசிச் சோற்றை வைத்துத்தின்று கொண்டிருந்த சிறுவர்களுள் பெரியவன் "அம்மா இன்னும் சோறு போடுங்கோ!

இன்னும் போடுங்கோ'' என்று வெறுங்கிண்ணத்தை வைத்துச் சிணுங்கிக் கொண்டிருந்தான். ஐந்து வயதுத் தம்பி மூக்கில் சளி வழிய வழியச் சோற்றை இருகைகளாலும் பதைப்போடு வாரி வாரி வாயில் திணித்துக் கொண்டு மெல்லாமலே விழுங்கி முடித்தபடி இருந்தான்.

இளைய குழந்தைக்குச் சோறு தீற்றிய வண்ணமிருந்த தாயின் முகத்தை நெஞ்சுருகப் பார்த்தான் பெருந்தகை. அப்பொழுதுதான் அவன் வரவை உணர்ந்து கொண்ட அன்னை "வந்து விட்டாயா? கால் முகத்தைக் கழுவி விட்டுவா! சாப்பிடலாம்'' என்றாள். "ஆறிச் சாப்பிடுகிறேன்அம்மா!'' என்று கூறிய பெருந்தகை, சளி வழியும் தம்பி பக்கத்தில் குந்தி அவன் சளியைத் தன்கையில் சிந்துவித்து எடுத்து வெளியே எட்டி வீசிவிட்டு வேட்டித் தலைப்பில் கையைத் துடைத்த பின், தன் சட்டைப் பைக்குள் கிடந்த ஒரு பொட்டலத்தை எடுத்து அவிழ்த்துப் பிரித்தான்.

அதில் இருந்த சுண்டல் கடலையில் அரைவாசியைச் சோறு இன்னும் போடுங்கோ என்று கத்திக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்த தம்பியின் வெறுங்கிண்ணத்தில் கொட்டினான். மிகுதியைத் தாயிடம் கொடுத்து எல்லாருக்கும் பங்கிடும்படி சொல்லிவிட்டு அந்தத் தம்பியின் கண்ணீரைத்துடைத்து அந்தப் பிஞ்சுக் கன்னங்களைத் தடவிக் கொஞ்சியபோது கிண்ணத்துச் சுண்டலுக்குள் உதிர்ந்த இரண்டு துளிக் கண்ணீரைக் கண்ணுற்ற அன்னை மனிதக் கண்களுக்குப் புலப்பட முடியாத தெய்வீகக் கண்ணீரைத் தான் மட்டும் கண்டுவிட்ட சிலிர்ப்போ என்னவோ சோர்விலும் முகம் மலர்ந்தாள்.

பேச வேண்டிய வேளை அறிந்து பேச வேண்டிய சொற்கள் அறிந்து அவள் பேசலானாள். "தோட்டம் பறிக்கப்பட்டதும், உன் அப்பாவுக்கு வேறு தொழில் செய்யத் தொரியாதிருப்பதும், உனக்குத் தொழில் கிடைக்காமல் அலைப்பதும் இந்தக் குடும்பமே செய்த பாவத்தின் விளைவுதான். ஒரு மாதிரி அறிந்த எல்லாரிடமும் கடன்பட்டுப்பட்டு மூன்று மாதத்தை இழுத்துப் பறித்துத்தள்ளியாயிற்று. இனி உன் அப்பாவுக்கும் ஓர் உழைக்கும் வழி தென்பட்டுள்ளது. அநேகமாக அது சரிவரும் என்றுதான் நினைக்கிறேன்.''

"என்ன தொழிலம்மா அது?'' என்று வினவித் தாயின் விரைவான பதிலுக்குக் காத்துத் துடித்தான், உச்சி குளிர்ந்து விட்ட பெருந்தகை. "இங்கே பருத்தித்துறை வீதிக்குக் கிட்ட ஒரு கடை இருக்கிறதாம். அதை நடத்துகிற ஆள் வன்னிக்கு வயல் வாங்கிப் போகிறானாம். அவன் கடையை அப்பா அப்படியே பொறுப்பேற்று அதே கூலியாட்களை வைத்து நடத்தப் போகிறாராம். கடையின் முதலீடு ஐந்நூறு ரூபாவை என் தாலிக் கொடியை அடகு வைத்துக் கட்டப்போகிறாராம்.'' என்று தாய் முடிக்கவில்லை, பெருந்தகை "அம்மா! அதென்ன கடையம்மா?'' என்று இடைமறித்தான். "அது ...... அது ....

கள்ளுக்கடை" பெரும் பூகம்பம் ஒன்றை எதிர்நோக்கும் பீதி தாயின் குரலில் புதைந்து கிடந்தது. "என்ன? கள்ளுக்கடையா? போயும் போயும் கள்ளுக்கொட்டில் நடத்தியா வயிறு வளர்க்கவேண்டும்?'' தன் தலையில் அடித்துக்கொள்ளாக்குறையாகக் கதறினான் பெருந்தகை.

"பெருந்தகை தத்துவம் சோறு போடாது மகனே!. இந்தப் பிள்ளைகளின் முகங்களைப் பார்த்துச் சொல்லு. இதை எல்லாம் பசியால் வாடி வதங்கிச் சுருண்டு சாகவிட நீ தயாரா?

அன்னை அழுத்தமாக ஆணித்தரமாகக் கேட்டாள். சில விநாடிகள் பேய் அறைந்தவன் போல் தன் தம்பிமார்களின் முகங்களை மிரள மிரள விழித்துப் பார்த்திருந்த பெருந்தகை குனிந்து இல்லை என்று மௌனமாகத் தலை அசைத்தான்.

"அப்படியானால் இந்தப் பெற்றமனம் எப்படி இந்த பாலகன்களை பசியில் கருகிச் சாக விடத்துணியும் சொல் பார்க்கலாம்." பெருந்தகை மௌனம் கலையவில்லை. தாயே தொடர்ந்தும் பேசினாள்.

"தம்பீ இந்த ஊரில் முன்பு எத்தனைபேர் எங்கள் குலத்தவர் கள்ளுக்கொட்டில் நடத்தி இருக்கிறார்கள்.? அயல் ஊர்களில் இன்றும் எத்தனை வேளாளர் இந்த வழியில் உழைத்துக் காணி பூமி தேடிப் பணக்காரர்கள் ஆகிவிட்டார்கள்?. அதிகம் ஏன்? யாழ்ப்பாண நகரத்திலுள்ள சாராயத் தவறணைகள் எத்தனை? எல்லாம் வேளாளர் தாமே நடத்திப் பணம் சம்பாதிக்கிறார்கள்?

நாங்கள் இதைச் செய்வது அவர்களைப் போல் கோட்டை கொத்தளங்கள் கட்டவல்ல! அணி அலங்காரம் பூட்டவல்ல! காரில் படாடோபமாகப் பவனி வர அல்ல. வயிற்றுப்பிழைப்பு ஒன்றுக்காகவே. இந்த குழந்தைகள் பசிக்கிறது என்றால் ஓர் அகப்பை சோறு தர யார் இருக்கிறார்கள்.? யாரைக் கேட்குங்கள்"?

"உண்மை தான் அம்மா! நாம் வேளாள குலத்தவர் என்ற வெறும் பத்தாம் பசலிக் கொள்கைக்காக நான் கவலைப்படவில்லை. உலகத்தைக் கெடுத்து எங்கள் உலையில் அரிசி போட நினைப்பது தான் எனக்கு வேதனையாக இருக்கிறது"

"உலகத்தைக் கெடுத்து... என்றால்? எப்படி நாங்கள் உலகத்தைக் கெடுக்கப்போகிறோம் ? "

"வேறென்ன? ஏழைத்தொழிலாளிகள் தங்கள் வீடுகளில் மனைவி மக்கள் பசித்துக்கிடக்க, உழைக்கின்ற பணத்தைக் குடித்தழிக்கிறார்களே!. அவர்களை அந்த நடத்தையில் ஈடுபடுத்தும் தொழில்தானே கள்ளு வியாபாரம்.?"

அதை நாம் ஒரு சிலர் உணர்ந்து பயன் இல்லைப் பெருந்தகை!. குடிக்கிறவன் இந்தக் கொட்டிலில் இல்லாவிட்டால் இன்னொரு கொட்டிலில் குடித்தே தீருவான். எல்லாரும் இந்த வியாபாரத்தை ஒத்துக் கைவிட்டால் சிலவேளை குடியை அவன் நிறுத்தலாம். நாங்களும் அன்றே இந்த வேலையைக் கைவிடாது விட்டால்தான் நாங்கள் பழிகாரர்கள். அந்த நிலை வருவதற்கும் சட்டம் வரவேண்டும்.'' பட்டம் படிக்காத தாயின் அனுபவம் வாய்ந்த சிந்தனையின் முன்னால் அந்த பி.எஸ்.ஸி மூளையால் வாய் திறக்கமுடியவில்லை. ''நேற்றுக்காலையிலே சரவணச்சாமியார் வந்தவர் பெருந்தகை. அவர்கூட இப்போதைக்கு அப்பாவின் எண்ணப்படி நடக்கட்டும் என்று ஆமோதித்திருக்கிறாரே அப்பா!''

" அப்படியா? அந்தச் சாமியார் ஒரு விசித்திரச் சாமியார் தான் அம்மா? அது சரி நானும் ஏதாவது நல்ல வழியில் சம்பாதிக்கவேண்டும் என்று ஒன்றும் சொல்லவில்லையா?''

''சொன்னார்.''

" அப்படியானால்! ஏனம்மா? என்னிடம் உரம் வாய்ந்த கைகளும் உழைத்து வைரம் ஏறிய உடம்பும் இருக்கும்போது ஊரில் யாருக்காவது கூலி வேலை செய்து பிழைப்பது கள் வியாபாரத்திலும் மேலானதல்லவா.?''

''நல்லாய்த்தான் இருக்கும்! நீ படித்துப் பெரியவனாக வருவதையும் நல்ல நிலைக்கு உயருவதையும் விரும்பாமல் எரிச்சல்பட்ட ஊரவர்க்கே கூலி வேலை செய்வதற்கு நீ போனால் அவர்கள் எங்கள் கண் முன்னாலேயே கை கொட்டிச் சிரிக்கமாட்டார்களா.?''

''அந்தக் கைகளை முறித்து விடுவதுதான்'' பெருந்தகையின் முரட்டுச் சுபாவம் தலை நீட்டத் தொடங்கியது.

''மறைவாகப் பழிப்பவர்களை என்ன செய்வது? அது தான் போகட்டும்! நீ அப்படிக் கூலி வேலை செய்வதைப் பார்த்தால் பெற்று வளர்த்த எங்களின் நெஞ்சு வெடித்து விடாதா அப்பா?''

பதில் பேச வழியின்றி ஆழமாகப் பொறுமையாக ஊன்றிச் சிந்தித்தவன் திடீரென்று முகத்தில் களிப்பின் வெளிப்புத் தென்பட "ஆமம்மா! உள்ளூரில் கூலி வேலை செய்வது கௌரவக்குறைவுதான்'' என்றான். அவன் கூறியதில் தொக்கு மறைந்து நின்ற பொருளை அந்தப் பேதைப் பெற்றமனம் புரிந்து கொள்ளவில்லை.

ஆமாம் பெருந்தகை ஒரு புதிய தீர்மானத்திற்கு வந்துவிட்டான். அதை இனி இவன் மாற்றவோ மறுபரிசீலனை செய்யவோ வேண்டியதில்லை. "அப்பா அப்படிச் சம்பாதிக்கட்டும்.! நான் இப்படிச் சம்பாதிக்கிறேன்.! எங்களுக்கென்று தோட்ட நிலம் வாங்கும் வரை இந்த வழியை நான் விடப்போவதில்லை'' என்று நெஞ்சுக்குள் முழங்கிக் கொண்டான். "விடியட்டும்'' என்று மட்டும் அவன் வாய் முணுமுணுத்துக் கொண்டது.

# 8. விடிவெள்ளி தெரிகிறது.

பொழுது விடியும் நேரம்! இரவு கப்பியிருந்த இருள் தேய்ந்து, ஒளி துலங்கமுன் உலகத்துப் பொருட்களின் உருவங்கள் துலங்கத் தொடங்கும் அதிகாலை ஐந்து மணி வேளை! பெருந்தகை தாயைத் துயில் எழுப்பி எங்கோ ஒரு நண்பனிடம் போவதாகச் சொல்லி விட்டுப் புறப்பட்டான்.

அவன் ஏழாலையில் நிற்கும் போது ஞாயிறு உதயமாகிக் கொண்டிருந்தது. அந்த ஊரில் உள்ள சின்னத்தம்பி என்னும் சிறுபான்மை இனத்து ஓர் இளைஞன் வீட்டுக் கூடத்துக் கதிரைக்குள் அப்பொழுது சிந்தனையோடும், பரபரக்கும் மனத்துடனும் அவன் சோர்ந்திருந்தான். சின்னத்தம்பி பட்டினத்துக் கல்லூரி ஒன்றில் ஏழாம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பு வரை பெருந்தகையோடு ஒன்றாகப் படித்தவன். இப்பொழுது ஓர் ஆங்கில உதவி ஆசிரியனாக ஆவரங்காலிலுள்ள பாடசாலை ஒன்றில் கடமையாற்றுகிறான்.

பெருந்தகையை வரவேற்று அமர வைத்து விட்டுக் கிணற்றடிக்குச் சென்றவன் சில விநாடிகளில் முகத்தைத் துவாயால் துடைக்கொண்டே வந்து "சொல்லுங்கள்! எப்படிச் சௌக்கியங்கள் எல்லாம்?" என்று புன்முறுவலோடு எதிரே கிடந்த நாற்காலியில் அமர்ந்தான்.

"சௌக்கியத்திற்கு ஒரு குறையும் இல்லை நண்பரே" என்று விரக்தியோடு தொடங்கிய பெருந்தகை "நான் வந்திருப்பது ஒரு தொழில் விடயமாக" என்று நேரடியாகத் தான் பேச எண்ணி வந்த துறைக்குப் பேச்சைத் திருப்பினான்.

"யாருடைய தொழில் பற்றி"

"என்னுடைய தொழில் பற்றிச் சின்னத்தம்பி."

"அப்படியானாற் சொல்லுங்கள்! உங்களைப் போன்ற ஒரு பட்டதாரிக்குத் தொழில் தேடித்தரும் விடயத்தில் உதவ முடியுமானால், அந்த உதவியை மனப்பூர்வமான மகிழ்ச்சியோடு செய்யக் காத்திருக்கிறேன்."

"நீங்கள் ஒரு பட்டதாரிக்கு உதவ வேண்டும் என்று நான் கேட்கவில்லை தோட்டத்தில் உழைத்து உரம் ஏறிய இந்தக் கைகளுக்கு வேலை வாங்கித் தரவேண்டும்.! என்ன சொல்லுகிறீர்கள்.?"

சின்னத்தம்பி தன்னைப் பைத்தியக்காரனைப் பார்ப்பது போல் பார்த்துக் குழம்புவதைக்கண்டு வேதனையோடு சிரித்தான் பெருந்தகை.

"குழம்பாதீர்கள் சின்னத்தம்பி! பட்டதாரியான நான் இந்த ஊரின் தோட்டங்களில் கூலி வேலை பெற்றுத் தரும்படி கேட்பதையிட்டு, எனக்கு அது அகௌரவமாயிற்றே என்று சில சமயம் நீங்கள் குழம்பலாம்".

"ஆமாம் பெருந்தகை!"

"தேவைப்படின் கௌரவத்தைப் பறிபோக விட்டு மானத்தை காப்பது சரியா அல்லது மானத்தைக் காற்றில் பறக்கவிட்டுப் போலிக் கௌரவத்தைக் கட்டிப்பிடித்துக் கொள்வது சரியா?"

"முதலில் மானம் தான் பெரிது.!"

"ஆகவே தான் இந்த முடிவிற்கு வந்துள்ளேன். எங்கள் குடும்பம் வறுமையால் மானம் கெடும் நிலையை நெருங்கிக்கொண்டிருக்கிறது சின்னத்தம்பி. நான் தோட்ட வேலையில் 25 வருட அனுபவம் உள்ளவன், கமத்தொழிலில் எந்தப் பெரிய வேலையையும் எந்தச் சிறிய வேலையையும் என்னால் செய்யமுடியும்."

"இங்கே ஒரு கூலியாளைப் பிடிக்கக் காமக்காரர் படும்பாடு அப்பப்பா! நீங்கள் இந்த வேலைக்கு வருவதென்றால் கும்பிட்டு வரவேற்பார்கள். ஆனால் இந்த ஊரில் பத்தாம் வகுப்பு வரை படித்துவிட்டால் எங்கள் குலத்து இளைஞர்கள் கூடச் செய்ய வெட்கப்படும் கூலித்தொழிலை ஒரு பட்டதாரியான நீங்கள் செய்ய முன்வந்திருப்பதைக் கண்டு உங்கள் துணிச்சலை எண்ணி வியக்கிறேன் பெருந்தகை. நீங்கள் இந்தத் தொழிலைச் செய்யும் பொழுதுதான் நம் தமிழினத்தில் ஒரு பிரிவினர் ஒரு பெரும் பிரிவினரால் எவ்வளவு கேவலமாக நடத்தப்படுகிறார்கள் என்பதை அனுபவ பூர்வமாக உணர்ந்து கொள்வீர்கள்" என்று நொந்த மனத்தோடு கூறினான் சின்னத்தம்பி.

அவனது குற்றச்சாட்டு முழுக்க முழுக்க ஏற்றுக் கொள்ளவேண்டிய ஒன்றாகவே பெருந்தகைக்குப்பட்டது.

"உண்மைதான் சின்னத்தம்பி! இன்று உலகம் எவ்வளவோ முன்னேறியும் இலங்கைத் தமிழர் மட்டும் இந்த விதத்தில் முன்னேறவில்லைத்தான். இப்படியான வேற்றுமைகளைக் களைந்தெறியாத வரைக்கும் எங்கள் இனத்துக்குள் ஒற்றுமை ஏற்படப்போவதுமில்லை, விடிவு மலரப்போவதுமில்லை. அது சரி சின்னத்தம்பி! இந்த வேற்றுமைகளைச் சமூக ரீதியாக எப்படித் தகர்க்கலாம். இது வரை ஏதாவது வழியை ஆராய்ந்து கண்டுபிடித்திருக்கிறீர்களா.?"

சின்னத்தம்பி திடுக்கிட்டான். "ஆராய்ந்ததுண்டு. ஆனால் திட்டமான வழி கிடைக்கவுமில்லை. தென்பு உண்டாகவுமில்லை." அவன் குரலில் கழிவிரக்கத்தின் தொனி இழைந்திருந்தது.

சற்று நிதானித்த பெருந்தகை பேசத் தொடங்கினான். "இரண்டு சமூகங்களுக்குமிடையில், கல்வி, பொருளாதாரம், சீர்திருத்தம், பழக்கவழக்கம் என்பவற்றிலுள்ள ஏற்றத் தாழ்வுகளை இல்லாமல் செய்வதன் மூலமே சாதி வேறுபாடற்ற தமிழர் சமுதாயத்தைக் காலகதியில் உருவாக்கமுடியும். கல்வியிலே, பொருளாதாரத்திலே, வாழ்க்கை முறையிலே பின்தங்கிய நிலையில் வைக்கப்பட்டிருக்கும் இந்தச் சிறு பிரிவினரின் முன்னேற்றத்திற்காக இந்த மக்கள்

சமூகத்தினிடையே பெரும் விழிப்பு ஏற்பட்டு முதியோருக்கும் இலவசக் கல்வி தரும் இயக்கம், பொருளாதார முன்னேற்ற இயக்கம் போன்றவை தோன்றி அசாதாரண துணிச்சலுடனும் ஆழ்ந்த நிதானத்தோடும் தொழிற்படவேண்டும். இதற்கு வேண்டியளவு ஒத்துழைப்பினைப் பெரிய சமூகத்தவர்களிடமிருந்து பெற முயல்வதும் நம்மிடையே நல்லெண்ணமும் நட்புறவும் ஓங்க வழிவகுக்கும். இந்த வகையில் பெரும்பான்மைச் சமூகத்தவருள் நல்லவர்களின் ஊதியமற்ற ஒத்துழைப்புக்களையும் உதவிகளையும் பெற்று முதியோர் கல்வியைப் புகுத்தி அதனூடு கள்ளுண்ணாமை, தெய்வ வழிபாடு முதலிய பண்புகளைப் பயில்விக்கவேண்டும். பொருளாதாரத்திலும் பெரும் கூட்டத்தவர்களிடம் சிறுகூட்டத்தவர்கள் கூலி வேலை செய்யவோ, கையேந்தி நிற்கவோ, வேண்டியிருக்கும் நிலைமை மாறினால் அதன் மூலம் கூலி வேலை என்பது ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கு மட்டுமே உரிய தலையெழுத்து என்னும் நிலை மாறினால் சுதந்திரமாக உழைத்துச் சுதந்திரமாக வாழும் பொருளாதார சுதந்திரம் சிறுபான்மைக்கும் சாத்தியம் என்ற உண்மை பறைசாற்றப்பட்டுவிட்டால் சாதி வேற்றுமை குறைந்து சமத்துவமும் ஒற்றுமையும் மலர்ந்து மணம் வீசும். அப்பொழுது தேநீர்க் கடைகள், கோயில்கள், உணவு விடுதிகள், மற்றும் பொது இடங்கள், சிறு நடவடிக்கைகளுடனேயே சமத்துவ நிலையங்களாக மாறிவிடும். எனவே எல்லாவற்றிற்கும் அடிப்படையான கல்வியும் பொருளாதார சுதந்திரமும் பெறவேண்டியது மிக முக்கியம்.

"அதற்கு வழி?"

"இலவசக்கல்வி வாய்ப்பைக் கூடிய மட்டில் பயன்படுத்தவும் பெரிய சமூகத்தவருடன் போட்டி போட்டுக் கொண்டு படித்து முன்னேறவும் சிறுபான்மையினர் ஆயத்தமாக வேண்டும். நல்ல உத்தியோகங்களில் பெரும்பான்மையினருடன் சமமாக அமரவேண்டும். இது ஒரு வழி!

குடிப்பழக்கத்தில் மூழ்கிக் குடும்பங்களைச் சீரழிக்கும் மூத்த தலைமுறையினரை நயத்தாலும், பயத்தாலும் திருத்திவிடுவதால் செலவு குறைந்து பொருளாதார நிலை சீர்பட்டு வாழ்வு செம்மை பெறலாம். இதுவும் ஒருவழி! . ஆனால் பலன் அபூர்வமாகவே இருக்கும்.

வேறு ஒரு வழி பொதுவாக வாழ்க்கைச் செலவுகளைக் கட்டுப்படுத்திச் சிக்கனச் சீவியத்தின் மூலம் சிறு சிறு சேமிப்புக்கள் தேட்டங்கள் உண்டாக்கலாம். கலட்டு நிலங்களைக் குறைந்த விலையில் வாங்கிக் கல்லகற்றித் திருத்திச் சிறந்த கமக்காரர்கள் ஆகலாம். மேலும் அரசாங்கத்தின் குடியேற்றத் திட்டங்களில் பங்குகொண்டு நிலங்கள் இலவசமாகப் பெற்றுக் கமக்காரர்கள் ஆகலாம். வன்னிப் பக்கத்தில் குடியேறி விடாமுயற்சியுடைய உழைப்பினால் பெரும் பண்ணைக்காரர்களாகவே வளம்பெற்றுவிட்டனர் எத்தனை குடும்பத்தினர்.

எல்லா முன்னேற்றங்களுக்கும் வெற்றிகளுக்கும் அடிப்படையாக விளங்கும் தெய்வ பக்தியையும் சிக்கன வாழ்வையும் நம்மிடையே பரப்பவேண்டும். இந்த

இரு பண்புகளுக்கும் இடையூறாக நின்று நாட்டின் அமைதியையும் சிறப்பையும் செல்வீகத்தையும் ஒழிக்கும் மது வரக்கனை விரட்ட ஏனோ நம் நாட்டு அரசாங்கம் முன்வரவில்லை.''

பேசி வந்தவன் சற்றுத் தாமதித்து மீண்டும் தொடர்ந்தான். ''எங்களால் இப்படி ஓர் தோட்ட நிலமோ, வயல் நிலமோ ஏற்கனவே அரசாங்கத்திடமிருந்து பெற முடிந்திருந்தால் இன்றைய வறுமை நெருக்கடியே ஏற்பட்டிருக்காது என்று எண்ணி எண்ணி வருந்துகிறேன். இந்த மனக்குறை தீர இன்னொரு வழியில் முயற்சித்துப் பார்க்க இருக்கிறேன்.

எனது படிப்பும் சான்றிதழும் எனக்கு வெள்ளை வேட்டி உத்தியோகம் பெற்றுத் தரத் தவறலாம். ஆனால் அந்தப் படிப்பு என் மனதில் ஏற்படுத்தி வலுவூட்டி விட்டுள்ள சிந்தனை ஆற்றல் என்னை உயர்த்தி வைக்கத் தவறமாட்டாது. சிறந்த உழைப்பாளியாக, வசதி தன்னிறைவு கண்டவனாக வாழ்வித்தே தீரும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. என் முன்மாதிரி நிச்சயம் நாட்டிலுள்ள படித்து வேலையற்றிருக்கும் ஏராளம் வாலிபர்களுக்கு அதிலும் குறிப்பாகச் சமூகத்தின் போலிக் கௌரவத்திற்கு மதிப்பளித்துச் சிறு கைத்தொழில்களையோ விவசாயத்தையோ மேற்கொள்ளத்தயங்கி நடைப் பிணங்களாக வாழும் ஏராளம் தமிழ் இளைஞர்களுக்கு நல்ல வழியைக் காட்டி வைக்கும், அவர்களை முன்னேற்றப் பாதையிலே இட்டுச் செல்லும்.''

''அதாவது''

''வாய் வயிற்றைக்கட்டியென்றாலும் உழைக்கிற காசில் ஒரு பகுதியை மிச்சம் பிடித்துக் குறைந்தது ஒரு வருடத்திற்குள் என்றாலும் எங்காவது ஒரு பத்துப்பரப்புக் கலட்டு நிலம் விலைக்கு வாங்கி எங்கள் கைகளாலேயே ஓய்வு நேரங்களில் அந்த நிலத்தைச் செப்பனிட்டுத் தோட்டமாக்கப்போகிறேன். அந்த நிலத்தில் கிளறி எடுக்கும் கல்லையே விற்றுவிடலாம் அதனை அகற்றப் பாடுபட்ட கூலிக்கும் அதிக விலைக்கு!

இந்த வழியில் எந்தத் தமிழ் மகனும் ஈடுபட்டு உழைத்தால் நிச்சயமாகச் சுதந்திரவாழ்வு பெறலாம். அதன் பின் அவரைக் கண்டு தோளிற் சால்வையைக் கையில் எடுத்துக்கொண்டு ''ஐயா சாமி'' போட்டுப் பணிந்து நிற்கவும், இவரைக்கண்டு கூளைக் கும்பிடு போட்டு நிற்கவும் வராது!

சிறுபான்மையினர் இந்த நிமிர்ச்சியை அடையும் போது பெரும்பான்மையோர் தாமாகவே தங்கள் நாவை அடக்கிப் பேசவேண்டி நேர்ந்துவிடும்.

இப்படி எல்லோரும் சுதந்திர வாழ்வும் பொருண்மியச் சமத்துவமும் அடைந்து ஏற்றத்தாழ்வுகள் குறைவடையும் நிலையில், குறிப்பிட்ட ஒரு சில

சமூகங்கள்தாம் கூலிப் பிழைப்பிற்கு உரியன என்ற பரவலான பரம்பரையான மனப்பான்மை நம்மிடையே அருகத்தொடங்கும்.. அவரவரும் தத்தம் வேலைகளைத் தாமே வரிந்துகட்டிக் கொண்டு செய்து முடிக்கவேண்டி வரும். உழைத்து வாழும் பாட்டாளிகளாகப் பலர் மறுபிறவி எடுக்க நேரிடும். அப்பொழுது அவர்கள் தொழில் புரிந்து வாழும் பாட்டாளிகளின் துன்பங்களை உணர்ந்து மனிதர்களாக நடக்கவும் தொடங்கமுடியும். இலங்கையின் பயந்தாங்கொள்ளித் தமிழ்ச் சமூகம் வீரப் பரம்பரையாக நிமிர்ந்து நிற்பதற்குரிய முதலும் மூலாதாரமுமான அடிப்படை அந்நிலையில் தான் கருக்கொள்ள முடியும்.''

"நீங்கள் கூறுவது உண்மைதான். வழிகளும் சரியானவை தாம். ஆனால் இந்த முன்னேற்ற வழிகளில் நம்முள் ஒத்து வருபவர்கள் இந்தத் தலைமுறையில் கிடைப்பது கடினம். பெருந்தகை''

சின்னத்தம்பிக்குப் பாடசாலைக்குப் போக நேரமாவதை உணர்ந்து கொண்ட பெருந்தகை உரையாடலைக் குறுக்கே தறித்து "அதற்கும் ஆன்ம பலமும். அன்பு நெஞ்சமும், இதய சுத்தியுடன் பணியாற்றும் பொறுப்புணர்ச்சியுமுள்ள ஓரிருவர் முன்னின்றால் முடியாததல்ல சின்னத்தம்பி!. சரி! உங்களுக்கும் நேரம் ஆகிறது. என்னுடைய தொழில் பற்றி என்ன செய்யலாம்?'' என்று வினவி முடித்தான்.

"நாளைக் காலை ஐந்து மணிக்கே வாருங்கள். ஆடி வெங்காயம் நடுகிறவர்கள் எங்கள் ஊரில் அதிகம். நாளைக் காலை ஒரு தோட்டம் வெங்காயம் நடுகைக்காகக் கொத்தப்போகிறார் என் அப்பா. அவரோடு நீங்களும் சேர்ந்து போகலாம்.''

"ஆனால் ஒன்று சின்னத்தம்பி! என்னைப் பற்றி யார் கேட்டாலும் உங்கள் சமூகத்தவனாகத் தூரத்து உறவினனாகப் பட்டினத்தில் வசிப்பவனாகவே கூறிவிடுங்கள்.''

"அதிலென்ன சிரமம்! அப்படியே செய்கிறேன்!''

பெருந்தகை நன்றி கலந்த சிரிப்புடன் எழுந்து நின்று வணங்கி விடைபெற்றான்.

## 9. சொல்லடி பட்ட பெண் புலி

**வீ**ட்டுக் கூரையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த தோட்ட உடுப்பின் பொட்டலத்தினை ஓசைப் படாமல் எடுத்த பெருந்தகை அதனை மிதிவண்டியின் கரியரில் வைத்துக் கட்டிக் கொண்டிருந்த போது நேரம் அதிகாலை 4.30 மணி இருக்கும்.

வீட்டுக்குள் குனிந்து புகுந்து உறங்கிக் கொண்டிருக்கும் தாயின் கால்களைத் தெய்வத்தின் பாதங்களைக் கண்ணில் ஒற்றிக் கொள்ளத் தொடும்

பக்தனைப் போல – தான் செய்யப்போகும் தொழில் வெற்றிகரமாக நடைபெற்றுத் தன் இலட்சியங்கள் ஈடேறும் படி வாழ்த்தி ஆசீர்வதிக்கும்படி பெற்றெடுத்த பெரும் தெய்வத்தை வணங்குபவன் போல இரு கைகளாலும் தொட்டு “அம்மா! அம்மா!'' என்று மெல்ல அழைத்தான். பாதி பசிச்சோர்வும், பாதி எதிர்காலம் பற்றிய ஏக்கங்களும் அவநம்பிக்கைகளுமாக உறக்கங்குழம்பிக் கண்கள் மூடியபடி கிடந்த அன்னையோ அருண்டெழுந்து தடுமாறி உட்கார்ந்து கொண்டே “என்ன பெருந்தகை'' என்றாள்.

“ஏழாலையில் ஒரு நண்பனை விடிய முன் சந்திக்வேண்டும் அம்மா போய்வருகிறேன்!'' இருளினுள் உறங்கிக் கிடக்கும் தம்பிமாரின் கால்களை மிதித்துவிடக்கூடாதென்று மெல்ல மெல்லக் காலால் வழி தடவி முற்றத்திற்கு வந்துசேர்ந்தான் அவன்.

இரகசியமாக எடுத்துக்கொண்ட மண்வெட்டியைத் தோளில் வைத்துக் கொண்டு பெருந்தகை வண்டியை உன்னி உன்னி மிதித்துக் கொண்டிருந்தான். வண்டி அவனைச் சுமந்து கொண்டு விண் கூவி ஓடலாயிற்று.

நீண்டு கிடந்த பெருந்தெருவிலே தனிமை கலந்த வைகறை நிலாவொளியில் பனங்காட்டின் சலசலப்பையும் வாழைத் தோட்டங்களின் படபடப்பையும் சாமைத் தோட்டங்களின் சிலுசிலுப்பையும் ஆங்காங்கே தோட்ட வெளிகளில் நீர் இறைத்துக் கொண்டிருக்கும் இயந்திரங்களின் கட கட ஒலித் தாளத்தையும் தாண்டித் தாண்டிச் சென்று கொண்டிருந்தான் பெருந்தகை. பக்கத்து ஊர்க் கோவில் ஒன்றில் மேளச் சத்தத்தின் நடுவிலே வான் நோக்கிப் பாய்ந்து பாய்ந்தெழுந்த வாணங்களின் வண்ண ஒளி விளையாட்டுக்களைப் போல் பெருந்தகையின் மனதிலும் எதிர்காலக் கனவுகள் என்னும் வாணங்களும் பாய்ந்து பாய்ந்தெழுந்து இன்ப ஒளி பாய்ச்சிக் கொண்டிருந்தன.

ஆள் முகம் தெரியாத அதிகாலை ஐந்து மணி இருட்டு. சின்னத்தம்பி வீட்டுப் படலையைத் திறந்து கொண்டு இரண்டு உருவங்கள் தோள்களில் மண்வெட்டியுடன் தெருவில் இறங்கிக் கொண்டிருக்கின்றன. உற்றுப்பார்த்தால் ஒன்று சின்னத்தம்பியின் தந்தை மூத்தவி என்பதும் மற்றது பெருந்தகை என்பதும் புலப்படும்.

தலையில் மிடுக்காக அமரும் தலைப்பாகை! இடையில் செம்மண் காவி ஏறிய நீல நிறச்சாரம்! பெருந்தகையைப் பார்த்தால் படித்தவன் என்ற அடையாளமே இல்லை. முன்னால் மூத்தவியும் பின்னால் பெருந்தகையுமாக நடந்து சென்றவர்கள் கொஞ்சத் தூரம் தாண்டிப் போய் ஒரு இரும்புப் படலையின் முன் நிற்கிறார்கள். மூத்தவி “ஐயா! ஐயா!'' என்று குரல் கொடுத்து நிற்கிறான்.

அந்த மாளிகை வீட்டை அண்ணாந்து பார்க்கிறான் பெருந்தகை. அருமையான இரண்டு அடுக்கு மாடி வீடு. மேல் மாடியும் , கீழ் மாடி போல் அழகான விறாந்தையுடனும் போட்டிக்கோ வேலைப்பாடுடனும் திகழ்கிறது. மல்லாகம்

– அற்பை வீதியில் வடக்கு நோக்கி நிற்கும் அந்த மாளிகை வளவைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்த சுற்று மதில் சிவப்பிலும் வெள்ளையிலும் சித்திரிக்கப்பட்ட ஓவியச் சுவராகக் காட்சியளிக்கிறது. வீட்டு முற்றத்து நடுவே முல்லையும் மல்லிகையும் இணைந்து பிணைந்தமைந்த மலர்ப் பந்தல் வெண் மலர் உதிர்த்து நிற்கிறது, இரு மருங்கிலும் ஒளிச் சிதறல்களைச் சுமந்தாடிப் பளிச்சிடும் இலையழகுக் குறோட்டன்கள், தென்றலில் மிதந்து வரும் மல்லிகைப்பூ மணம் இவை எல்லாம் தன்னை மகிழ்ந்து வாழ்த்தி வரவேற்பது போன்ற மனப்பிரமை, இனம் தெரியாத இன்பப் பூரிப்புப் பெருந்தகைக்கு!

கிறக்கத்தின் நடுவிலும் படலை திறக்கப்படும் ஓசை கேட்கிறது. மூத்தவி அடியெடுத்து வளவுக்குள் இறங்குகிறான். பெருந்தகை பின் தொடர்கிறான். குனிந்த தலை குனிந்தபடியே நல்ல எதிர்காலத்தின் வாசற்படியைத் தாண்டிவரும் ஒரு வித மனநிறைவுடன் கடைக்கண்களால் முற்றத்துப் பூஞ்செடிகளின் அழகுக் கோலத்தை அளந்து அள்ளிப்பருகிக் கொண்டு மூத்தவியைப் பின்தொடர்ந்து வாழைகளுக்கூடாக நடக்கிறான்.

வாழைகளின் நடுவே மேற்குநோக்கி நீண்டு கிடந்த ஒரு வெட்டை வெளியில் இருவரும் மண்வெட்டிகளுடன் மேற்கே பார்த்து நின்று கொண்டிருந்தனர்.

மூத்தவி மடியிலிருந்து கடதாசிச் சரை ஒன்றை விரித்து வெற்றிலை பாக்கு எடுத்து வாய்க்குள் திணித்துக்கொண்டே பெருந்தகையைப் பார்த்து "வெற்றிலை போடுங்கோவென் தம்பி" என்றான்.

"வேண்டாம், பழக்கமில்லை." என்று சொல்லிக்கொண்டே சண்டிக் கட்டை அவிழ்த்துக் கொடுக்காகக் கட்டி முடித்த பெருந்தகை வாழை நார் ஒன்றை எடுத்து இடுப்பில் சாரத்தின் மேல் வரிந்து கட்டினான். மண் வெட்டிகள் மண்ணில் விளையாடத் தொடங்கின.

அந்த நிலம் விரைவாக இரத்தக்கோலம் பூண்டு உரு மாறிக்கொண்டிருந்தது. பொழுது பளிச்சென்று புலர்ந்துவிட்ட நேரம். அதற்குள் 200 கன்று நிலம் கொத்தி முடித்துவிட்டார்கள் இருவரும். பெருந்தகை வியர்வை வழிய வழியத் தொடர்ந்து களைக்காமல் கொத்திக் கொண்டு போனான்.

வயதில் ஐம்பதையும் தாண்டிய மூத்தவியால் பெருந்தகையோடு நின்று பிடிக்க முடியவில்லை. பெருந்தகை இடையிடையே தான் கொத்திச் சென்ற முன்னை இடையில் நிறுத்தி விட்டுத் திரும்பி வந்து மூத்தவிக்கும் உதவி செய்து அவனையும் தன்னுடன் பக்கத்தில் கொண்டு சென்றான்.

பலநாட்களாகக் கவலைப்பட்டுப் பட்டு நலிந்து களைத்து விட்ட உள்ளத்துக்கு ஓய்வை வழங்கி அத்தனை நாட்களும் சோம்பிப் புளிப்பேறிக் கிடந்த உடம்பிற்கு வேலை கொடுத்ததன் மூலம் இரண்டு வழிகளில் உற்சாகம்

பெற்றுவிட்ட பெருந்தகை தன் வாழ்நாளில் முதன்முதலாகத் தன்உழைப்பின் பலனாகக் கூலிப் பணம் பெறப்போவதையிட்டுப் பெருமைப்பட்டுக்கொண்டான். ஆர்வம் குன்றாமல் தொடர்ந்து கொத்திக்கொண்டு நின்றான். தன்னை மறந்து வேலையில் ஒன்றித்து நின்ற பெருந்தகை “அடே மூத்தவன்! மூத்தவன்” என்றவோர் கூப்பாடு கேட்டுத் திடுக்கிட்டான்.

“அப்பா உன்னை வந்துவிட்டுப் போகட்டாம்” என்று அந்தப் பெண் குரல் தொடர்ந்து வந்த பக்கம் பெருந்தகையும் மூத்தவியும் திரும்பிப் பார்த்தனர். பதினெட்டு வயதுக் கன்னியொருத்தி அரைப்பாவடையும் சட்டையுமாகப் பல் துலக்கிய வண்ணம் நின்றிருந்தாள்.

மூத்தவியின் முகத்தில் எவ்வித மாற்றமும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இந்த மரியாதையற்ற மூப்பிளமை பார்க்காத கூப்பாடுகளை அந்த வீட்டில் அம்மா அப்பா அவர்களின் ஏக புத்திரி ஆகியவர்களின் வாய்களிலிருந்து பல முறை கேட்டுப் பழக்கப்பட்டவன் அவன். ஆனால் பெருந்தகைக்கோ இக்கேவலமான நடத்தை ஆத்திரத்தையும் அதிர்ச்சியையும் தருவதாயிற்று, தீப்பந்தங்களாய்ச் சிவந்து விட்ட கண்களால் அந்தப் பெண்ணை உற்று உறுத்துப் பார்த்தபடியே நின்றவனின் நாவில் அவனது வழமையான முரட்டுச் சுபாவம் அவனையும் மீறி விளையாடி விட்டது. “ஏன் பிள்ளை! உங்களுக்கு எத்தனை வயது? இவருக்கு எத்தனை வயது.? ஒரு மட்டுமரியாதை வேண்டாமா? எந்தப் பள்ளிக்கூடத்தில் இப்படிக் கண்ணியமாகப் பேசப்பழக்கி விடுகிறார்கள்? நல்ல பண்பாடு தான்.!” என்று கண்டிக்கும் குரலில் பேசியவன் சட்டென்று திரும்பித் தன் வேலையில் தீவிரமாக ஈடுபட்டான். தனது வியர்வை வடியும் கொழுத்துத் திரண்ட மேனியின் ஒவ்வொரு தசைநாரும் குமைந்து குலுங்க விடாப்பிடியாகக் கொத்திக்கொண்டே போனான் அவன். அவமானத்தில் பிறந்த ஆத்திரத்தால் அந்தப் பெண்ணின் வட்டமான வெண்முகம் சுண்டிச் சிவந்ததையும் வண்டாய் அலைந்த வண்ண விழிகள் சிவந்து நின்றதையும் அவன் காணவில்லை. சற்றும் காத்திரா வகையில் அன்னியன் ஒருவன் வார்த்தைகளால் தான் சுடப்பட்ட அதிர்ச்சியில் திகைப்படைந்து நீண்ட நேரமாக ஆடாமல் அசையாமல் அவனையே வெறித்து வெறித்துப் பார்த்து நின்றாள் அந்த பணக்கார வீட்டுப் பசுங்கிளி. அவள் நெஞ்சம் பொருமிக் கொந்தளிக்கலாயிற்று. அந்தப் புதியவனும் மூத்தவியைப் போல் முன்பின் தெரிந்தவனாய் இருந்திருந்தால் “போடா மடையா! நான் அப்படிக் கூப்பிட்டால் உனக்கென்ன? நீ உன் வேலையைப் பார்” என்று சாடியிருப்பாள். இந்த அன்னியனும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன் தானே என்று அப்படியெல்லாம் அவனையும் ஏசியிருக்கலாம். ஆனால் அவன் பேச்சில் தொனித்த நிதானமும் பண்பாடும் அவளை ஊமையாக்கி விட்டன போலும்.

நிற்க நிற்க அழுகை வரும் போல் இருந்தது அவளுக்கு! மென்மையான சொற்களைக் கொண்டு என்ன லாவகமாக எத்துணைக் கடுமையாகத் தாக்கிவிட்டான் அவன்.? அப்படிப் பேசிவிட்டும் ஒன்றும் நடந்திராதது போல் நிம்மதியாகக் கொத்திக்

கொண்டு நிற்கிறானே. அவனது வல்லமை தனக்கு இல்லை என்பதை மனம் ஒப்புக்கொண்ட போதிலும் அவனை ஒரு தடவையாகிலும் ஏசாமல் திரும்பிப் போக அவளால் முடியவில்லை.

“எனக்குப் பண்பாடு படிப்பிக்கப் பார்க்கிறார். இவர் யார் இதையெல்லாம் கேட்க” என்று விம்மல் பொருமலுக்கு இடையில் பொரிந்து தள்ளினாள் அந்தக் கன்னி. அதை எல்லாம் பெருந்தகை இலட்சியம் பண்ணியதாகத் தெரியவில்லை.

இந்த அலட்சியப் பாவனை அவளது ஆத்திரத்தீயில் மேலும்எண்ணெய் வார்த்தாற் போல் இருந்தது. “ இன்றைக்கு இதை அப்பாவிடம் சொல்லிவிடுகிறேன்” என்று ஆத்திரத்தில் நடுங்கும் குரலில் கத்திவிட்டு வந்தவழியில் திரும்பிச் சென்று வாழைக்குள் மறைந்தாள் அந்தச் சொல்லடி பட்ட பெண்புலி.

## 10. உறைப்பும் இனிக்கிறதோ?

மூத்தவிக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. அந்தப் பெண்ணுக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும் என்று உள்ளூரச் சொல்லிக் கொண்டாலும் இதன் விளைவுகள் எத்துணைப்பாரதூரமாக இருக்குமோ என்ற அச்சமும் அவனுக்கொரு புறம் இருக்கத்தான் செய்தது. அவன் மெல்ல “எதற்கும் அவசரப்படக் கூடாது தம்பி. காலம் மெல்ல மெல்ல மாறி வருகிறது. ஆனால் ஒரு சிலர் இப்படியும் இருக்கத்தான் செய்கிறார்கள். இப்போது இவர்களுடன் மோதிக் கொள்வதில் நன்மை ஏற்படும் என்று நான் நம்பவில்லை.” என்று தன் அனுபவ உரையை அன்போடு வெளியிட்டான்.

பெருந்தகை சற்றும் கலங்காதவனாய் அந்தப் பெண் போய் வாழைக்குள் மறைந்த திசையை அலட்சியச் சிரிப்போடு திரும்பிப் பார்த்துவிட்டுத் தன் கவனத்தை வேலையில் செலுத்துவதில் முனைந்தான் “பணத்திமிர் பிடித்த பெற்றோர் பழக்கின பழக்கம் போலும்” என்று முணு முணுத்துக் கொண்டே!

“அப்பாவிடம் சொல்லி விடுகிறேன்” என்று சீறிக் கொண்டு போன அந்தக்கன்னி வாழைக்குள் சென்று மறைந்து நின்றாளேயொழிய உடனே ஓடோடிப் போய்த் தகப்பனாரிடம் முறையிடத் துணிவு கொள்ளவில்லை. “இதனால் எத்தனையோ நடக்கத்தகாதவைகள் நடந்து விடலாம். உடனே அப்பா ஆத்திரமடைந்து அவனைக் கூப்பிட்டு ஏசுவார். அவனும் சும்மா விட்டுவிடக் கூடிய ஆளாகத் தெரியவில்லை. பொல்லாத முரட்டுப் பயல் போல் இருக்கிறது. தானும் எதிர்த்துப் பேசுவான். கதை வளர்ந்து கை கலப்பில் முடிய, ஊர் ஒன்று கூட, என்ன நடந்ததென்று வந்தவர்கள் விசாரிக்க என்னை அவன் ஏசினான் என்ற உண்மையைக்

கூறியாக வேண்டிவரும். அப்பனே வேண்டாம் வீண் மானக்கேடுகள்! பயங்கரமான சச்சரவுகள்!" என்று எண்ணியவள் ஒரு தடவை வாழைகளுக்கூடாக அந்தக் கூலிக்காரனைத் தேடித் தன் பார்வையைச் செலுத்தினாள்.

"என்ன இருந்தாலும் ஒரு படிக்காதவனுக்கு நான் மூத்தவியை அழைத்த விதம் ஆத்திரத்தை மூட்டி இருக்காது. அவன் முகத்திலும் அறிவுக்களை சொட்டுவதோடு கண்கள் வேறு ஒளியூற்றுக்களாக மின்னுகின்றன. அவன் தோற்றம் சொகுசாக வளர்ந்த ஓர் உத்தியோகத்தனைப் பிடித்துத் தோட்டக்காரன் வேடம் போட்டுவிட்டாற் போலிருக்கிறது. ஆனால் உருண்டு திரண்டு கிடக்கும் தசை நார்களோ அவனது உடலுழைப்பினைப் பறைசாற்றுகின்றன. உண்மையில் இவன் ஒரு விசித்திரப்பிறவி தான்!." என்று எண்ணியவள் "நமக்கேன் வேண்டாத ஆராய்ச்சிகளை!" என்று மனத்தைக் கட்டுப்படுத்த முயன்ற போதிலும் "இவன் யார்? எந்த ஊரவன்?" என்று அறியவேண்டும் என்ற ஆவலே அந்தரங்கத்தில் அவள் மனதை அரித்துக் கொண்டிருந்தது.

அதுவரை கொத்திக் கொண்டுநின்ற மூத்தவி எசமானர் கூப்பிட்டனுப்பியதை நினைத்துக் கொண்டவனாய் மண்வெட்டியை ஒரு புறம் வைத்துவிட்டு வரம்பு வழியாக எசமானர் வீட்டை நோக்கி நடக்கலானான். அவன் வருவதை வாழைக்குள் நின்றபடி பார்த்துவிட்ட எசமானர் மகள் "வரட்டும் மூத்தவி! கேட்டுவிடுவோம்" என்று காத்துநின்றாள். அவன் அருகில் வந்ததும் "மூத்தவி, உவன் யார்?" என்று போலிக் கோபத்தோடு அதட்டிக் கேட்டாள்.

"சின்னத்தம்பியோடு படித்தவராம்... பப்.... பப் படித்தவனாம் பூங்கொடியம்மா!" என்று மூத்தவி தடுமாறியதில் பூங்கொடிக்கு உண்மை அரைவாசி புரிந்துவிட்டது.

"எந்த ஊரில் ஆள்?

"பட்டினப் பக்கமாம் அம்மா"

"பட்டினத்தானுக்குத் தோட்ட வேலை எப்படித் தெரியும்?" குறுக்கு விசாரணை தொடர்ந்து நடைபெற்றது.

"ஆ.... வந்து..........." என்று சாட்சிக் கூண்டின்றி நின்ற சாட்சி தடுமாறினான்.

"உண்மையைச் சொல் மூத்தவி! நான் யாருக்குஞ் சொல்லமாட்டேன். ஆள் யார்?"

"சின்னத்தம்பியோடு படித்தவர்தான்! ஆள் வேளாளகுலத்துப் பையன். சின்னத்தம்பியிடம் சொன்னவராம் தன்னை வேளாளன் என்று யாருக்குஞ் சொல்லவேண்டாம் என்று..... அது தான்......"

"ஏன் அப்படி?"

"கூலி வேலைக்குத் தான் போவதைத் தன் பெற்றார் அறியக்கூடாது. அறிந்தால் வருந்துவார்கள் என்பதாக இருக்கலாம்."

“ஆளைப் பார்த்தால் நன்கு படித்தவன் போல் இருக்கிறதே”

“ஆமம்மா பி.எஸ்.ஸி படித்தவராம். சோதினையும் பாசு பண்ணிப் போட்டாராம்.”

“பி.எஸ்.ஸி பாஸ் பண்ணினவனாக இருந்தால் ஏன் கூலி வேலைக்கு வந்திருக்கப் போகிறான். புளுகியிருக்கிறான் படிக்காத உங்களிடம்! நீங்களும் நம்பி விட்டீர்கள்” உள்ளூர ஏதோ ஓர் அக்கறை இருந்த போதிலும், வெளிப்படைக்கு அவனை வெறுப்பவளைப் போலப் பேசி அவன் பற்றிய உண்மைகளைத் திட்டவட்டமாக அறியத் தெண்டித்தாள் பூங்கொடி.

“இல்லையம்மா! தற்பெருமையோ தன்னைப் புகழும் குணமோ இல்லாத பிள்ளையாம். உண்மையில் பி.எஸ்.ஸி பாசு பண்ணிவிட்டார் என்று அவர்கூடப் படித்தவர்களே சின்னத்தம்பிக்குச் சொன்னார்களாம்.”

தானிப்படியெல்லாம் அவனைப்பற்றி அக்கறையோடு ஆராய்ந்தது தன்னுள்ளத்தின் இலேசான இன்ப அசைவுகளின் வெளிப்பாடே என்பதை அந்த ஐம்பத்தைந்து வயது அனுபவசாலி புரிந்து கொள்ளக்கூடாதே என்பதற்காக “இன்றைக்குப் பார் மூத்தவி! அப்பாவிடம் அவன் என்னை ஏசினதைச் சொல்லாமல் விடமாட்டேன். ஆளைத் தோட்டத்தை விட்டே விரட்டி விடுகிறேன் பார்!” என்று கோபித்துப் பேச எண்ணினாள். தான் அப்படிப் பேசுவதை அந்த.... அவனிடம் மூத்தவி சொல்லி விடுவானோ என்ற அச்சம் அப்படிப் பேசவும் முடியாமல் அவளைத் தடுக்கலாயிற்று. என்ன செய்யலாம் என்று தடுமாறி நின்றவளை மூத்தவியின் பணிவு கலந்த வினா ஒன்று எளிதாக மீட்டுவிட்டது.

“பிள்ளை! அப்பாவிடம் அவர் பேசினதைச் சொல்லி விட்டீர்களா?”

“இன்னும் சொல்ல இல்லை” – முகத்தைக் கடுகடுப்பாக வைத்துக் கொண்டே தொடர்ந்தாள். “இப்பொழுதே,”

“வேண்டாம் அம்மா! வீட்டில் வறுமை என்று கூலிப்பிழைப்புக்கு வந்தவர். அந்தக் கஞ்சியைத் தட்டி ஊற்றாதீர்கள் அம்மா!”

பூங்கொடிக்கு அந்தப் பெருமை வாய்ந்த ஒருவனுக்காக அவன் மன்றாடுவது வேதனையாகவும் இருந்தது,

“ஏன் இவ்வளவு படிப்புப் படித்துவிட்டுக் கூலிப் பிழைப்புக்குவர வெட்கம் இல்லையா?”

“இத்தனை காலமும் குத்தகை நிலத்தில் கமஞ்செய்து காலத்தை ஓட்டி வந்தவர்களாம். இவ்வாண்டு திடீரென்று நிலச் சொந்தக்காரன் நிலத்தைப் பறித்து வேறு ஒருவனுக்குக் கொடுத்து விட்டானாம்.!”

"காரணம்?"

"ஏழை வீட்டுப்பிள்ளை இவ்வளவு படிக்கவோ, பட்டம் பெறவோ என்ற எரிச்சல்தான்."

"அப்புறம்?"

"தகப்பனுக்கும் வேறு தொழில் தெரியாதாம். இவர்தானாம் குடும்பத்தில் மூத்த பிள்ளை! நாலு தம்பிமார்கள் இருக்கிறார்களாம்."

"எந்த ஊராம் ஆளுக்கு?"

"நீர்வேலி, பெயர் பெருந்தகையாம்"

"சரி! பாவம்! அந்தக் குழந்தைப்பிள்ளைகளுக்காக மன்னித்து விடுகிறேன். ஆள் இன்ன குலத்தவனென்றும் நான் அப்பாவுக்குச் சொல்ல மாட்டேன். நீயும் சொல்லாதே மூத்தவி!. தானே அதை மறைக்கும் போது நாங்கள் வெளிக்காட்டக்கூடாது. இல்லையா?"

"ஆமாம் அம்மா! உங்களுக்குக் கோடி புண்ணியம் உண்டு அம்மா. சரி நான் போகிறேன்." எசமானரின் வீடு கிடந்த திசையில் உற்சாகத்தோடு விரைந்தான் மூத்தவி.

நின்றது நின்றபடி பெருந்தகை நின்ற பக்கம் வியப்போடு திரும்பிப் பார்த்த பூங்கொடியின் இதயத்துள் இனந்தெரியாத ஏக்கம் ஒன்று வேர்விட்டுப் பரவியதை அவள் உணர்ந்தாளோ என்னவோ! அவள் விழிகளில் வாழ்நாளிலேயே முதல் தடவையாகக் கனவு மயக்கம் திரையிட்டு நிற்க மார்பகம் விம்மித் தணியலாயிற்று.

"என்ன துணிச்சற் காரனாயிருக்கிறார் இவர், நான் அப்பாவிடம் சொல்லிவிடுவதாகக் கத்தியபோது கூட அலட்சியமாகச் சிரித்துக் கொண்டு நின்றிருந்தாரே!. என்ன பண்பாடுள்ளவராகக் காணப்படுகிறார் இவர்! எல்லாரையும் மனிதராக மதித்துக் கண்ணியமாக நடத்தவேண்டும் என்னும் மனிதாபிமானம் எல்லாருக்கும் வருமா? நான் மரியாதை கெடப் பேசியதைக் கேட்டும் பொறுமையோடு நின்றாரே!. இவரைத்தானே 'முரட்டுப் பயல்' என்று மனதுள் வைதேன். பெண்புத்தி பின்புத்தி தான். தான் படித்தவன் என்று தலைக்கனங் கொள்ளாமல் சகோதரங்களுக்கு நேரக்கஞ்சி வார்ப்பதற்காகக் கூலி வேலைக்குப் புறப்பட எத்துணைப் பொறுப்புணர்ச்சி, எவ்வளவு சீர்திருத்த மனப்பான்மை வாய்த்திருக்க வேண்டும். சமூகத்தின் போலிக் கௌரவத்துக்கும் பாரம்பரியங்களுக்கும் மதிப்புக் கொடாமல் உழைத்து வாழும் தன்மான நடை எல்லார்க்கும் ஆகிற காரியமா? உழைத்து உண்பவனைத்தானே உண்மையான உத்தமனென்று காந்தியடிகளுங் கூறியுள்ளார். உழைத்துப் பெறும் உணவு மட்டுமே நன்மை தருவது என்று தானே என் மாமா சரவணனும் சொன்னவராம்.

தமது பெற்றோர் அறியா வண்ணமே அவர்களின் நிம்மதிக்காகவும் சகோதரங்களின் மகிழ்ச்சிக்காகவும் இப்படிப் பாடுபடுகிறாரே' என்று எண்ணிக் கொண்டு மீண்டும் ஒரு தடவை பெருந்தகை வேலை செய்து நின்ற திசையில் திரும்பிப் பார்த்தாள் பூங்கொடி. அவன் முழு மூச்சாகக் கொத்துவதும் நெற்றியில் ஊறி வடியும் வியர்வையை வழித்தெறிவதுமாக இயங்கிநின்றான்.

கல்லூரி செல்ல நேரமாவதை உணர்ந்த பொழுது கடைசி முறையாக அவனை உள்ளங்குளிரக் கண்கள் களிக்க உற்று நோக்கி விட்டு வீட்டை நோக்கி வரம்புகளிலே துள்ளி ஓடினாள் பூங்கொடி!

சிப்பியின் வாயில் விழுந்த மழைத்துளி முத்தாக மாறி உயர்ந்தது போல், அவள் மனதில் விழுந்த பெருந்தகை பற்றிய எண்ணம் அன்று பகலிரவெல்லாம் பள்ளிப் பாடங்கள் நடுவிலும், நெஞ்சின் மூலைமுடுக்கெல்லாம் பாய்ந்து நிரம்பி ஓர் அற்புத அன்புணர்வாக மலர்ந்து நின்றது. எப்பொழுது மறுநாள் விடியும் என்ற ஏக்கத்தோடு படுக்கையில் இரவு முழுவதுங்கிடந்து புரண்டாள் பூங்கொடி! அவள் மனம் பலதரப்பட்ட உணர்ச்சிகள் பலமுனைப்பட்ட கேள்விகள் மோதும் போர்க்களமாக மாறிக்கிடந்தது.

ஒருவன் பக்கமாவது இதுவரை என்மனம் சென்றது கிடையாதே! முதல்முறையாக என்னையும் மீறிக்கொண்டு இந்த மனம் ஒருவரிடம் செல்கின்றது. எவ்வளவு தடுத்தாலும் என்னதான் ஊர்பழிக்கும் என்று சிந்தித்தாலும் மனம் பணிய மறுத்துத் தன்போக்கில் முனைந்தே நிற்கிறது. நான் என்ன செய்வேன்? என்னையும் மீறி ஒரு சக்தி புதிதாக என் சிந்தனையையும் என் உணர்வுகளையும் இறுகப் பற்றி, என்னென்னவோ வழிகளிலெல்லாம் ஆட்டி வைக்கிறது. என்னைவிட்டு அவரிடஞ் சென்றுவிட்ட என்நெஞ்சை அவரிடமிருந்து சாதியென்ற கொடுவாள் வெட்டிப் பிரிக்காமல் காப்பாற்றிய ஆண்டவனே! என்னுணர்வுகளை, என் சிந்தனையை, மொத்தத்தில் என்னையே தன் நினைவென்னுந் தேனில் ஊறப்போட்டுள்ள அந்த உத்தமரை என்னிடமிருந்து வேறெந்தக் காரணமும் பிரித்தெடுக்க விட்டுவிடாதே! நேற்றுவரை என்நிலை வேறு!. இன்றிலிருந்து என்நிலை வேறு. இப்பொழுது என்மனம் அவர் மயம் ஆகிவிட்டபின் அவரைப்பிரிய நேர்ந்துவிடுமோ என்று நினைக்கவே என் நெஞ்சு நடுங்குகிறது.

தெய்வமே அவரை என் கண்முன்னால் நான் உள்ளவரை உலவவிட்டாலே போதும். அவரது அந்த அறிவு ஒளி சிந்துங் கண்களை, வஞ்சகமற்ற, இலட்சிய ஆர்வந்துள்ளும் வதனத்தைக் கண்குளிர மனங்குளிரக் கண்டு கொண்டே காலமெல்லாம் மனநிறைவோடு வாழ்ந்து முடித்துவிடுவேன்!."

ஏழாலைக் கிராமத்திலுள்ள அருள் நிறைந்த ஒரு சிவன் கோயிலின் மணி வழக்கம் போல் இரவு இரண்டு மணிக்கு ஒலிக்கப்படும் ஓசை கேட்கிறது. இதுவரை கவலைகளால் உலுக்கப்பட்டுக் கிடந்த பூங்கொடி "அப்பா கடவுளே!" என்று கைகூப்பித் தொழுது புரண்டு படுக்கிறாள். தூக்கம் அவளை அரவணைத்துத் தன் மறப்பில் ஆழ்த்துகிறது.

# 11. இடிமேல் இடி! அடி மேல் அடி!

பூங்கொடி மறுநாட் காலை விழிக்கும் பொழுதே கவலையோடு கண்விழித்தாள். தன்கனவு நனவாவதற்குக் குறுக்கே நிற்கக்கூடிய ஆயிரமாயிரம் தடைகளை ஒன்றொன்றாக எண்ணிப் பார்த்த அவள் இதயம் கணத்திற்குக் கணம் சோர்ந்து வாடிக் கருகலாயிற்று.

பெருந்தகை இன்றுடனோ நாளையுடனோ வேலையை முடித்துக் கொண்டு வேறு வீட்டிற்கோ வேறு ஊருக்கோ கூலி வேலைக்குப் போய்விட்டால் என்ன செய்வது? இப்படியான கம்பீரமும் ஆண்மையுமுள்ள ஆடவனை இதுவரை எந்தப் பெண்ணாவது தன்மேல் காதல் கொள்ளச் செய்திருந்தால் என் கதி என்ன ஆவது? ஆமாம் அவரை என் மனத்தில் இருத்தி மதித்த அந்தக் கணத்தில் இருந்து அவருக்கே உரியவளாக என்னை ஆக்கிக்கொண்டு விட்டிருக்கும் பொழுது அவர் என் அன்பை ஏற்றுக் கொள்ள மறுத்தால் என்ன செய்ய முடியும்? பெருந்தகையின் குடும்பம் வறுமைப்பட்ட குடும்பம். அவரைத் தருவதாகச் சொல்லி அவரின் தந்தை எந்தப் பெண்ணின் தகப்பனிடமாவது கடமைப்பட்டிருந்தால் என்னை அவர் ஏற்கமுடியுமா? எல்லாம் சரி வந்து என் அப்பா செல்வாக்கு, கௌரவம், செல்வீகம் என்ற வரட்டுத் தத்துவங்களைப் பேசி என் எண்ணத்தை வேரோடு சாய்க்க எண்ணினால் என்ன செய்வது? என் சொந்தத் தாய் மாமனாரையே தம் பணத்திமிரால் வீட்டை விட்டே விரட்டி நாடோடிச் சாமியாக்கி விட்டார் இந்த அப்பா என்று ஊரில் யார் யாரோ சொல்லக்கேட்டிருக்கிறேனே! அப்படியான நெஞ்சழுத்தங் கொண்டவர் பாவம் என் ஏழைப் பெருந்தகையைத் தம் ஒரே மருமகனாக ஏற்கச் சம்மதிப்பாரா?

'நான் என்ன செய்வேன்! நேற்றுவரை துன்பமே அறியாத சுதந்திரப் பறவையாக இருந்தேனே! இன்று ஒரு பொழுதுக்குள் எத்தனை கவலைகள்! காதலிப்பது போல் இன்பமில்லை என்பதை உணர வைத்த கடவுள் அதனைப் போல் துன்பமில்லை என்றுமல்லவா அறிவுறுத்துகின்றது' என்ற கலக்கத்தோடு எழுந்த பூங்கொடி சுவரில் மணிக்கூட்டைப் பார்த்தாள். நேரம் ஆறரையாகிக் கொண்டிருந்தது.

"பூங்கொடி விரைவாக முகங்கழுவி விட்டுத் தேநீர் கொண்டுபோய்த் தோட்டங்கொத்துகிறவர்களுக்குக் கொடுத்து விட்டுவா!" சொல்லிவிட்டு அவளப்பா சவர்க்காரத்தையும் எடுத்துக் கொண்டு கிணற்றண்டை சென்றார்.

பூங்கொடிக்கு எங்கிருந்துதான் அவ்வளவு உற்சாகம் வந்ததோ! ஓடி யோடி முகம் கழுவி விட்டு, நேற்றுப் பின்னிவிட்ட இரு பின்னல்களையும் சரி செய்ததையடுத்துக் கெண்டியில் தேநீரையும் ஊற்றிக் கொண்டு யாருக்குந் தெரியாமல் தான் தேநீர் அருந்துங் கிண்ணத்தைக் கையில் எடுத்து மறைத்துக் கொண்டு

தோட்டத்தை நோக்கி வாழைகளுக்கூடாக விரைந்தாள். அந்தக் கொத்தும் வெளியை அடைந்ததும் அவள் கண்கள் ஆவலோடும் ஏக்கத்தோடும் தேடிய பொருள் ஒவ்வொரு விநாடியையும் பயனுள்ளதாக்கிக் கொண்டு நின்றது.

பூங்கொடியை அந்த ஊரவர் ஓவசியர் வீட்டுக் கிளிப்பிள்ளை என்றே குறிப்பிடுவார்கள். அவளை மணக்க எந்த எஞ்சினியர் டொக்டர் கொடுத்து வைத்திருக்கிறானோ என்று அந்த ஊர் இளைஞர்கள் அவளைப் பற்றித் தங்களுக்குள் பேசிக்கொள்வர். பெரு மூச்சும் விட்டுக்கொள்வர். அத்தகு பேரழகி நெஞ்சில் கலக்கத்தையும் சஞ்சலத்தையும் கட்டிக்கொண்டிருந்தாள்.

ஒரு தடவை தன்னிதய மன்னன் பால் முகத்தை நேருக்கு நேர் பார்க்க வேண்டும். இரண்டொரு வார்த்தைகளில் தான் நேற்று நடந்து கொண்ட விதங்குறித்து அவனிடம் மன்னிப்புக் கோர வேண்டும் என்ற ஆவல் ஒருபுறம். நேற்று எப்படியெல்லாம் பேசிவிட்டு இன்று எந்த முகத்தோடு அவனைச் சந்திப்பது என்ற அச்சத்தால் எழுந்த தயக்கம் ஒரு புறமாகத் தீர்மானமற்ற தளர்ச்சி நகர்வோடு வரம்பில் ஏறியும் இறங்கியும் நடந்து கொண்டிருந்தாள் அவள்.

தூரத்தில் நின்றபடியே அவள் தேநீர் கொண்டுவருவதை அவதானித்து விட்டு மூத்தவி தான் காகம் எடுக்காமல் வாழையடியில் மறைத்து வைத்திருந்த சிரட்டையை எடுத்து வரப்போனான். பெருந்தகையோ குனிந்த தலை நிமிராமல் கொத்திக் கொண்டு நின்றான். இது தான் சமயம் என்று விரைந்து நடந்து அவனை நெருங்கினாள் பூங்கொடி! அவள் தனக்கு மிக அருகில் வந்ததையோ நின்றதையோ பெருந்தகை காணவில்லை. “என்னை மன்னிப்பீர்களா?” என்று துயரத்தாலும் பயத்தாலும் கம்மியிருந்த குரல் கேட்டுத் திடுக்கிட்டு நிமிர்ந்த பெருந்தகை பின்னால் திரும்பிப் பார்த்தான். தாயின் அன்பு கனிந்த கொஞ்சுதலுக்காகத் தவஞ்செய்து நிற்கும் குழந்தைபோல ஏக்கத்தை விழியில் தேக்கியவளாய் நின்றிருந்தாள் பூங்கொடி!.

ஒரு கணம் பெருந்தகை அதிர்ந்தே போய் விட்டான். மறு கணம் தன்னைச் சமாளித்துக் கொண்டு “எதற்காக?” என்றான் வைரம் பாய்ந்த தொனியிலே.

“நேற்று நான் உங்களோடு நாணயமற்று நடந்து கொண்டதற்காக!”

“நேற்று நான் தானே தவறு செய்தேன்! நீங்கள் ஏன் மன்னிப்புக் கேட்க வேண்டும்?” நிலத்தைப் பார்த்து மண்வெட்டியால் வெட்டிக்கொண்டே கேட்டான் பெருந்தகை.

“ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்?”

“வேறென்ன? உண்மையில் நான் கூலிக்கு வந்தவன். நான் யார் உங்களைத் திருத்துவதற்கு?”

“அப்படியெல்லாம் சொல்லாதீர்கள்”

“பின்னே” என்று பட்டென்று கேட்டுவிட்ட பெருந்தகை வியப்பின் மின்னற் தாக்குலுக்கு இலக்காகி மீண்டு நின்றான். தடம்புரண்டோடும் அவள் பேச்சைப் புரிந்தும் புரியாதவனாக “நீங்கள் எனக்கு எந்த விதத்திலும் தவறு செய்யவுமில்லை. நான் மன்னிக்க வேண்டிய அவசியமுமில்லை” என்று சொற்களால் அவளது மனமாற்றத்தின் மீது தாக்குதல் நடத்தினான். ஏதோ பேச வாயெடுத்த பூங்கொடியை இடைமறித்து “சரி அந்தப் பேச்சை அவ்வளவில் நிறுத்திக் கொள்ளுங்கள்” என்று கூறிக் கடமையில் கவனத்தை முழுமையாகக் குவிக்க முயன்று கொண்டிருந்தான் அவன். வெடு வெடென்ற பதிலைக் கேட்டு இடிந்து நின்ற பூங்கொடியின் முகம் கருகி இருண்டு விட்டது.

சிரட்டை எடுக்கப் போன மூத்தவியைத் திரும்பிப் பார்த்தான் பெருந்தகை. மூத்தவி சிரட்டையை எடுத்துக்கொண்டு, வாழை மடலில் வாடாமல் இருக்கும் படி தான் மறைத்து வைத்திருந்த வெற்றிலையைத் தேடிக் கொண்டிருந்தான். பூங்கொடி போய்விட்டாளா என்று திரும்பி மறுபுறம் பார்த்த பொழுது, இருண்ட முகத்திலும் கண்களிலும் துயரம் பொங்கி வழிய அவள் அங்கேயே அசையாமல் தன்னை ஏங்கி நோக்கி நிற்பதைக் கண்டான். “இதென்னடா தொந்தரவாகிவிட்டது. நாய் பார்க்கிற வேலையைக் கழுதை பார்த்து நேர்ந்த கதி எனக்கும் நேர்ந்துவிட்டதே!. மூத்தவி வேறு பிழையாக விளங்கிக் கொள்ளும்படி நேர்ந்து விடுமோ” என்று பதற்றத்தோடு எண்ணியவன் இதற்கொரு முடிவுகட்டி அவளை உடனே அனுப்பிவிட எண்ணி, “சரி ! மன்னித்தேன்! போதுந்தானே?” என்றான் எங்கோ பார்த்தபடி!

அவள் “ஆமாம் ரொம்பநன்றி” என்று ஆர்வங் குலுங்கக் கூறிச் சிரித்தாள். நிம்மதியாக ஒரு பெருமூச்சும் விட்டாள். “இவள் இன்னுமேன் இங்கு நின்று இளித்துத் தொலைக்கிறாள்” பெருந்தகையின் மனம் ஏமாற்றத்தோடு தவிக்கலாயிற்று.

கொத்தின மண்வெட்டியை அப்படியே விட்டு விட்டு மூத்தவி நின்ற இடத்திற்கு நழுவி நடக்கலானான் அவன். “இதெல்லாம் நான் யாரென்று இந்த மூத்தவி இவளுக்குச் சொன்னதால் வந்த வினை! நான் உண்மையில் தாழ்ந்த சாதிக்காரனாக இருந்திருந்தால் கிட்ட வந்திருப்பாளா? அன்றியும் நல்லவள் போலத் தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்கும் அளவில் நின்றிருந்தால்தான் இவள் உண்மையில் நல்லவள். அதற்கு அப்பாலும் குழைந்தால் இவள் மனதில் ஏதோ ஓர் ஆசையை வைத்துக் கொண்டுதான் அதற்காகத்தான் மன்னிப்புக் கேட்கிறாள் என்றே அர்த்தப்படும்” என அருவருத்துக் கொண்டது அவன் உள்ளம்.

தன்னை ஒரு தொல்லையாகக் கருதி விலகிச் செல்கிறான் என்பதை உணராதவளாகவோ உணர்ந்து விட்டால் தன்னிதயம் தாங்காது என்பதால் உணரவிரும்பாதவளாகவோ அவன் நிழலைப் பின்தொடர்ந்து நடந்தாள் அவளும்.

தன்னுயிர்க் கணவன் பின்னே நடக்கும் உத்தமியின் மனநிறைவுக்கு உதாரணமாக அவள் உளநிலை மாறிக்கொண்டே போயிற்று.

“சனியன் என்னை இங்கும் தொடர்ந்து விடுகிறதோ” என்று வாய் முணு முணுக்கப் பின்னே நோக்கியவன் உண்மையில் பூங்கொடி தன்னைப் பின்தொடர்வதைக் கண்ணுற்றான். அவளைக் கண்டிக்க ஆத்திரத்தோடு அவள் முகத்தை உற்றுப்பார்த்தவன் கண்கள் அவள் குறும்புப் பார்வையைக் கண்டு திகைத்து மயங்கித் தாழ்ந்து விடவும் நேர்ந்துவிட்டது. அவன் வேகமாக எட்டி எட்டி நடந்து மூத்தவிக்கு அருகில் நின்று திரும்பிப் பார்த்தான். கால்களில் ஏறிவிட்ட நெருஞ்சி முட்களைக் குனிந்து எடுத்துவிட்டு இருண்ட முகத்துடன் அப்பொழுதுதான் அந்தக் கொத்துச்சாட்டியைத் தாண்டி வந்து சேர்ந்தாள் பூங்கொடி.

என்றுமில்லாத மரியாதை அடக்கம் அன்று பூங்கொடியின் பேச்சில் கலந்திருப்பதைக் கண்டு வியந்தான் மூத்தவி! “தேநீரைக் குடியுங்கள்!” என்று அவள் கூறிய சொற்கள் காதில் தேனை வார்க்க, நெஞ்சில் கருணையை வார்க்க அவன் தன் வாயில் தேநீரை வார்த்தப்படி குந்தியிருந்தான்.

சற்று முன்னர் அவளது பார்வைக்கணைகளுக்கு இலக்காகிய இன்பக் கிளர்ச்சியை மறக்கும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பெருந்தகைக்கு அவளது மாறுதல் தன்னை மீறியும் அவள்பால் மனஞ்செல்ல வைத்துவிட்டது. இத்தனை புறக்கணிப்புகளுக்குப் பின்னும், தன் மீது அவள் ஆத்திரப்படாமல் தனது கருத்துக்கு மதிப்புக் கொடுத்துப் பணிவாகப் பேசுகிறாளே என்று எண்ணியது வரை நியாயமான சிந்தனையாகவே பட்டது. அதற்கப்பால் அவன் எண்ணத் துணியவில்லை.

தனது கவனத்தை என்ன திசையில் திருப்பலாம் என்று சிந்தித்துக் கொண்டிருந்த பொழுது வாழைகளுக்குள்ளிருந்த குப்பை மேட்டிலிருந்து ஒரு கடதாசி காற்றில் அள்ளுப்பட்டுப் பறந்து வருவதைக் கண்டு அதனை எட்டித் தடுத்துப்பிடித்து விரித்துப் பார்த்தான்.

பூங்கொடி மூத்தவி நீட்டிய சிரட்டைக்குள் தேநீரை ஊற்றிக் கொண்டே ஒரு நீண்ட பெருமூச்சைத் தன்னை மறந்து விட்டுவிட்டுப் பின்னர் தான் வருத்தப்பட்டாள் மூத்தவி அந்தப் பெருமூச்சைப் பற்றி ஏதாவது நினைப்பானோ என்று. இதில் ஒன்றுங் கவனஞ் செலுத்தாதவனாய் அந்தத் தாளில் இருந்த கணக்கில் மூழ்கிப் போயிருந்த பெருந்தகையின் இளமைப் பொலிவு பூத்த முகத்தையும் அதில் மின்னிப் பிரகாசித்த உறுதியையும் களவு களவாகக் கண்களால் அனுபவித்துக் கொண்டு இடுப்பில் கை வைத்து நின்ற பூங்கொடி மூத்தவி தன்வாயிலிருந்து சிரட்டையை எடுத்தது கடைக்கண்ணில் தெரியவே குனிந்து அந்தச் சிரட்டையில் மீண்டுந் தேநீரை நிரப்பி விட்டுத் தன் கையிலிருந்த கிண்ணத்தில் தேநீரை யூற்றிப் பெருந்தகையின் முன்னே நீட்டிக் கொண்டு “குடியுங்கள்?’ என்று மன்றாடுங் குரலில் வேண்டினாள். அவனோ அதை வாங்கிக் கொள்வதாயில்லை. அவளும் விடுவதாயில்லை. நீட்டிய கிண்ணத்தின் கைப்பிடியை

அவன் பிடிக்கத் திருப்பிவிட்டுக் கொதித்துக் கொண்டிருந்த கிண்ணத்தின் வண்டியைத் தன் கைகள் ஏந்தியிருக்கவிட்டாள். அது அவளது மென்மையான பூங்கரங்களைச் சுடத் தொடங்கவே "சுடுகிறது' பிடியுங்கள்!" என்று கள்ளங்கலந்து பெருந்தகையைப் பார்த்தாள்.

"நிலத்தில் வையுங்கள்! சிரட்டை வரட்டும்!" என்று அந்தத் தாளிலிருந்தும் தன் பார்வையை எடுக்காமல் பிடிவாதமாகக் கூறிவிட்டான் அவன். சூடு தாங்கமுடியாமல் கிண்ணத்தை நிலத்தில் வைத்துப் பூங்கொடி தன் கைகளிரண்டையும் வேதனையோடு சிறுபிள்ளை போல் மாறி மாறி ஊதிக் கொண்டிருந்தாள். அந்தக் கல்நெஞ்சன் தன் நெஞ்சை மேலுங் கருங்கல் நெஞ்சாக மாற்றிக் கொண்டு மூத்தவியை அழைத்துப் பேசலானான்.

"அப்பு! இந்தக் கணக்கை யாரோ பிழையாகச் செய்திருக்கிறார்கள்! இது ஒரு கேள்விப் பத்திரமாக இருந்து, இக்கணக்கின் படி செலவு உத்தேசம் போட்டு அது ஏற்கப்பட்டு, ஒரு பொருத்தக்காரர் கட்டட வேலையை ஒப்புக் கொண்டால் குறைந்த கணக்கு முப்பதினாயிரம் ரூபா நட்டமாவது அவருக்கு ஏற்படும்" என்றான்.

அவன் குரலைக் கேட்கும் போதெல்லாம் தனக்காகப் பிறந்த குரல் பேசுகிறதென்று நெஞ்சு குளிர நினைத்துக் கொள்ளும் பூங்கொடி, அவன் சொன்னதை உற்றுக் கேட்டுவிட்டுத் தன் அப்பா போட்டுப் பார்த்த கணக்காக இருக்குமோ என்று அறியும் ஆவலுடன் எழுந்து அந்தத்தாளை எட்டிப் பார்த்தாள். அவை அவள் அப்பாவின் எழுத்துக்களே தான்.

பூங்கொடிக்கு அதியற்புதமான யோசனை ஒன்று தோன்றிற்று. மூத்தவி நிலத்தில் வைத்திருந்த சிரட்டையுள் உடனே அவள் தேநீரை நிரப்பினாள். அதை அவதானித்த பெருந்தகை அவள் அடுத்து என்ன செய்யப் போகின்றாள் என்று அனுமானித்துக் கொண்டபடியே அவளும் அச்சிரட்டையைத் தன்னிரு கைகளாலும் எடுக்கப்போனாள். அவன் அவளை முந்திக் கொண்டு விட்டான்.

தனது அற்புதமான யோசனையைச் செயலாக்க முனைந்து பெருந்தகையின் கையிலிருந்த தாளை வெடுக்கெனப் பிடுங்கிக்கொண்டு "இது அப்பாவின் கையெழுத்துத்தான். அவர் தான் சித்தப்பாவின் பெயரில் வேலைகள் பொருத்தமெடுத்துச் செய்பவர். பிழையாகக் கணக்குப் போட்டுவிட்டார் போலும். வீணாக அவருக்கு நட்டம் வரவிடக் கூடாது" என்று சொல்லிக் கொண்டே வீடு நோக்கி வரம்புகளில் தாவி ஓடினாள் பூங்கொடி.

அவள் திரும்பி வந்தபோது பெருந்தகையும் மூத்தவியும் தொடர்ந்து சாறிக் கொண்டே நின்றனர். அவள் பெருந்தகைக்குப் பின்னால் வந்து நின்று கொண்டு "உங்களை அப்பா வந்து விட்டுப்போகட்டாம்!" என்று மெல்லக் கூறினாள்.

பெருந்தகை செவிடன் போல் தன் கடமையில் கலந்து நின்றான். மூத்தவி திரும்பி "யாரை அம்மா" என்றான்.

"அவரைத்தான்!" என்று சுட்டிக் காட்டினாள் அவள்.

"ஏன்? உங்கள் அப்பா இவ்விடம் வரக்கூடாதோ?" இது பெருந்தகையின் பிடிவாதமான கேள்வி.

தன் அன்புக்கு அடுத்தடுத்துக் கிடைக்கும் புறக்கணிப்பையும் சோதனைகளையும் எண்ணி மனம் நொந்தபடி அவள் மௌனமாக நின்றாள்.

## 12. கண்ணீரில் வரைந்த உடன்பாடு

மீண்டும் பெருந்தகையே வாய் திறந்தான். "இந்த நேரைச் சாறி முடித்து வருகிறேன். போய்ச் சொல்லுங்கள்!" அதற்கும் வாய்திறவாமலும் அசையாமலும் ஏக்கத்துடன் அவ்விடத்திலேயே நின்றாள் பூங்கொடி.

வாழையடியில் காகங்கள் கரைவதைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான் மூத்தவி. தேநீர்ச் சிரட்டையைக் காகம் ஒன்று தூக்க முயன்று உருட்டிக் கொண்டிருந்தது. சிரட்டையோ நழுவி நழுவி விழுந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்த பூங்கொடி தன் நிலைமையையும் அந்நிகழ்ச்சியோடு ஒப்பிட்டுப் பார்த்து வேதனையோடு சிரித்துக் கொண்டாள். அந்தச் சிரட்டையை எடுத்துப் பாதுகாப்பதற்காக வேலையை இடையில் நிறுத்திவிட்டு மூத்தவி போனான். கிடைத்த வாய்ப்பை விடாப்பிடியாகப் பயன்படுத்தும் முறையில் "வாருங்கள்.. வாருங்கள்." என்று கெஞ்சிச் சிணுங்கிய பூங்கொடியை, இரக்கத்தை அடக்க முடியாமல் திரும்பிப் பார்த்தான் பெருந்தகை. அவள் இன்னுஞ் சற்றுப் பொறுத்தால் அழுது விடுவாள் போலிருந்தது. ஒரு குழந்தைப் பெண்ணாக அவள் இருந்திருந்தால் அவளின் அந்த ஆழ்ந்த அன்பிற்காக அவளை வாரித்தூக்கிக் கொஞ்சு கொஞ்சென்று கொஞ்சியிருப்பான் அவன்.

ஆனால் பருவமடைந்து நிற்கும் அவளிடம் இரக்கங் காட்டப் போனால் எல்லாம் தொலைந்து விடுமே! தனக்கிருக்கும் நல்ல பெயர், தன் வீட்டிற்குச் செய்ய வேண்டிய கடமைகள், அவளின் நல்வாழ்வு, அவள் பெற்றாரின் ஆசைக் கனவுகள், தன் நிம்மதி, குடும்பமானம் எல்லாம் காற்றில் பறக்க ஒரு நொடியில் வழியேற்பட்டு விடுமே! அவனது குடும்பமே நிலை குலைந்து சரிந்து சீரழிந்து விடுமே! என்று எண்ணியவன் முகத்தைக் கடுகடுப்பாக வைத்துக் கொண்டு மண்வெட்டியை நிலத்தில் வீசி எறிந்துவிட்டுப் பூங்கொடி வீட்டைநோக்கி நடக்கலானான். புழுதிபடிந்து வியர்வையுடன் கலந்து வடியும் மேனியோடும் கட்டிய தலைப்பாகை, கொடுக்குடனும் நடந்தான்.

பூங்கொடியும் விடாமற் பின் தொடர்ந்தாள். இப்பொழுது இருவரும் இருண்ட வாழைகளுக்கூடாகச் சென்று கொண்டிருந்தனர். பூங்கொடி ஓட்டமும் நடையுமாக அவனை நெருங்கி "இந்தாருங்கள்!.... ஏன் இப்படி என்னோடு கோபமாய் நடந்து கொள்கிறீர்கள்? நான் நேற்றுத் தெரியாத்தனமாகச் செய்த தவறை மனதில் வைத்துக் கொண்டுதானே இப்படியெல்லாம் செய்கிறீர்கள்?" என்று மனம் நொந்து தேம்பினாள். அவள் பளிங்குக் கன்னங்களைக் கண்ணீர் நனைக்கலாயிற்று.

பெருந்தகை நின்று திரும்பியவன் பரிதாபத்தோடு அவளைப் பார்த்துச் "சத்தியமாகச் சொல்கிறேன். உங்கள் மேல் எனக்கொரு கோபமுமில்லை. இதை மட்டும் நம்புங்கள். தயவு செய்து பொறுப்புகளில் மனநலிவுகளில் மூழ்கி நிற்கும் என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள்! நீங்கள் இப்படிப் பொறுப்பில்லாமல் நடந்து கொண்டால் எனது குடும்பத்தை அழிக்கும் பாவத்துக்கும் எனது வாழ்வின் நோக்கத்தைப் பாழடித்த பழிக்கும் ஆளாவீர்கள்" என்று சொல்லிய பொழுது உண்மையிலேயே பெருந்தகை அழுதுவிட்டான்.

"ஐயோ எனக்கந்தப்பழியே ஏற்பட வேண்டாம்!" என்று முகத்தைப் பொத்திக் கொண்டு விம்மி விம்மி அழுது நின்றாள், பூங்கொடி! அவளது கைவிரல் இடுக்குகள் வழியே கண்ணீர் அருவியாகப் பெருகி வழிந்தது.

"ஏனிந்தத் தொல்லை இருவருக்கும்? இன்றுடன் வேலைக்கு வராமல் நான் நின்று விடுகிறேன்?" என்று கண்களைத் துடைத்துக் கொண்டு கம்மிய குரலில் தீர்மானமாகக் கூறினான் பெருந்தகை. "வேண்டாம்! நான் உங்களை இனி எந்த விதத்திலும் தொந்தரவு செய்யவில்லை. உங்கள் தெய்வ முகத்தைத் தினமும் தரிசிக்கின்ற இந்தப் பேற்றையாவது எனக்குத் தந்தருளுங்கள்!" என்று தனது முகத்தின் ஒவ்வோர் அணுவும் குரலின் ஒவ்வோர் அசைவும் கெஞ்ச அவள் கெஞ்சினாள்.

"சரி! நீங்கள் உங்கள் வாக்கைக் காப்பாற்றுங்கள்! நானும் உங்கள் வீட்டுத் தோட்டத்தில் வேலை இருக்கும் வரை அப்படியே செய்கின்றேன். நீங்கள் எல்லை மீறும் போது நான் நிச்சயமாக நிரந்தரமாக என் வாக்குறுதியை மீறிக் கொண்டு போய்விடுவேன்." என்று கூறியவன் விடு விடுடென்று தன் போக்கில் போய்ப் பூங்கொடி வீட்டு முன் பக்க விறாந்தையை அணுகி நின்றான். அப்பொழுதுதான் கண்ணாடி பார்த்துச் சவர்க்காரத்தை முகத்தில் பூசிச் சவரம் செய்து கொண்டிருந்த பூங்கொடியின் தந்தை திரும்பிப் பார்த்தார்.

அவர் முகத்தை முதல் முறையாகப் பார்த்தவுடன் பெருந்தகை அதிர்ந்து விட்டான். சில விநாடிகளில் அவரும் அந்த நிலைமைக்காளாகி வாய்பிளந்து நின்றார். அவர் வேறுயாருமல்லர்! மேற்பார்வையாளர் உலகநாதபிள்ளையேதான். அவரே மௌனத்தைக் கலைத்துக் கொண்டு "ஓ... தம்பி நீ... நீ... நீரா?" தடுமாறினார்.

''ஆமாம்!'' என்றான் பெருந்தகை. இருவர் முகங்களிலும் மகிழ்ச்சி குலாவியது. இருவரையும் மாறி மாறிப் பார்த்து நின்ற பூங்கொடி மனதில் ஆனந்தம் அலைமோத விளங்காத புதிரைத் தந்தையைக் கேட்டு விளங்கிக்கொள்ள வேண்டும் என்ற ஆவலுடன் காத்துநின்றாள்.

''அது சரி!'' என்று நிறுத்திய பிள்ளையவர்கள் ''நீர் எந்த வகுப்பு வரை படித்திருக்கிறீர்'' என்று விசாரித்தார். ''பௌதிக விஞ்ஞானத் துறையில் க.பொ.த உயர்தர வகுப்புப் பரீட்சை வரை தேறியுள்ளேன்'' என்று பதில் வந்தது.

''ஏனிந்தப் பொய்யை'' என்பவள் போல் பூங்கொடி தன்னைப் பார்ப்பதைப் பெருந்தகை கவனிக்கவில்லை.

''எங்கே பூங்கொடி அந்தக் கணக்குத்தாளை எடுத்து இந்த ஆளிடம் கொடு'' என்று சொல்லிய உலகநாதபிள்ளை ஷேவிங் கத்தியைக் கழற்றி முன்னால் இருந்த தண்ணீர் வாளிக்குள் வைத்து அலம்பினார். பூங்கொடி ஓடிச்சென்று விறாந்தை மேசை மேல் இருந்த கடதாசியை எடுத்து இருகைகளாலும் பெருந்தகையிடம் கொடுத்துவிட்டுத் தூணைப் பற்றி நின்றாள்.

முகத்தினை இன்னொரு வாளித் தண்ணீரில் கழுவிய உலகநாதபிள்ளை ''இந்தக் கணக்கில் என்ன பிழை என்று சொல்கிறீர்?'' என்று கேட்டுக்கொண்டே சால்வையால் முகத்தைத் துடைத்தார்.

முற்றத்தில் நின்றபடி பெருந்தகை தாளைப் பார்த்து நிற்பது பூங்கொடியின் மனத்தை உறுத்தியது. இருந்தும் என்ன செய்யலாம்?

''இந்தக் கணக்கில் முதலில் ஒரு 75 அடி நீள அகல சதுரக் கட்டடம் போடுவதற்குக் கேட்கப்பட்டிருந்த பொருத்தக்காரரான நீங்கள் அதன் பரப்பு 75X75 சதுரஅடி என்று கணித்தீர்கள். பின்பு அதனை 100 அடி நீள அகலமுள்ளதாகக் கட்டி முடிப்பதாகக் கொண்டு கேள்விப் பத்திரம் தயாரிக்கும் படி கேட்கப்பட்டபோது நீங்கள் மேலும் 25X25 சதுர அடியை முந்திய பரப்புடன் கூட்டியிருக்கிறீர்கள். இது பிழை 100X100 சதுர அடியிலும் (75X75)+ (25X25) சதுர அடிப் பரப்பு 3750 சதுர அடி குறைவானது. இதை நீங்களே கணித்துப் பார்க்கலாம். குறைந்த பரப்புக்குச் செலவு கணித்துவிட்டுக் கேள்விப் பத்திரத்தை மிகக் குறைந்த தொகையில் அனுப்பினால் கட்டாயம் உங்களுக்கே அந்தப் பொருத்தம் தரப்பட்டுவிடும். பின்பு 3750 சதுர அடி கட்டட வேலையை உங்கள் செலவிலேயே செய்து கொடுக்க நேரிடும்.'' என்று சொல்லித் தாளை அவர் கையில் கொடுத்தான்.

''ஆமாம் தம்பி! ஆமாம்! இப்பொழுது ஒரு முப்பதாயிரம் ரூபா துண்டு விழப்பார்த்ததே. 10,000 சதுர அடிக்குக் கணக்குப் பார்க்க வேண்டிய நான் 6250 சதுர அடி கட்ட எடுக்கும் செலவைத் தானே கணக்கிட்டிருக்கிறேன். கேள்விப் பத்திரம் எல்லாம் தயாரித்து விட்டேன். இன்று அனுப்புவதாகவும் இருந்தேன்.

இன்று என் நல்லகாலம் உமது கையில் இக் கடதாசியைச் சிக்க வைத்தது'' என்று சொன்னவர் ஏதோ நினைவுக்கு வந்தவராய் "உம்முடைய அப்பா என்ன தொழில் பார்க்கிறார் தம்பி?'' என்றார் அனுதாபம் அக்கறையுள்ளவர் போல. சற்றும் எதிர்பாராமல் போடப்பட்ட இந்த வினாவைக் கேட்டதும் பெருந்தகையின் முகம் சுருங்கிவிட்டது. ஆனால் மனத்தில் தோன்றிய தயக்கத்தை ஒருவாறு வெற்றி கொண்டு "கள்ளுக்கொட்டில் நடத்துகிறார்!'' என்று கூறிவிட்டு மேலும் அங்கு நிற்க முடியாமல் திரும்பித் தோட்டத்திற்குச் சென்றுவிட்டான்.

உலகநாதபிள்ளை தம் சந்தேகத்தை நிவர்த்தி செய்த நிறைவில் அவன் தாழ்த்தப்பட்டவன்தான் என்ற முடிவில் அமைதியடைந்து சில தினங்களுக்கு முன் நீர்வேலியில் தம்மை அவமதித்துத் துன்புறுத்த நின்ற வாலிபர்களைக் "கீழ்சாதிக் கழிசடைகள்'' என்று வாய்க்குள் திட்டிக்கொண்டார்.

மறு நாட்காலை தோட்டத்துள் பாத்திகட்டிக் கொண்டு நின்றார்கள், பெருந்தகையும் மூத்தவியும். என்றுமில்லாத மகிழ்ச்சித் துள்ளலோடு வாய்க்கால் வரம்புகளில் தாவிக் கொண்டே அங்கு வந்து சேர்ந்த பூங்கொடி பெருந்தகைக்கு அண்மையில் சென்று நின்று "உங்களை ஒரு தடவை வரமுடியுமா என்று அப்பா கேட்டுவரச் சொன்னார்'' என்று சொல்லிவிட்டு ஆர்வம் பொங்கும் கண்களால் அவன் முகத்தைப் பார்த்து நின்றாள்.

"ஏனாம்'' என்றான் பெருந்தகை அமைதியாக.

"வாருங்களேன்... வந்து கேளுங்களேன்'' பூங்கொடியின் உள்ளம் தலைகால் தெரியாமல் துள்ளியது என்பதைப் பெருந்தகை ஒரே ஒரு தடவை அவள் முகத்தைப் பார்த்தே அறிந்து கொண்டான்.

"அப்பு சற்று நீங்களும் ஆறுங்கள்! இதோ வந்துவிடுகிறேன்'' என்று கிளம்பியவனைப் பூங்கொடி பின் தொடர்ந்தாள். வாழைகளின் இருண்ட நிழலுள் வந்ததும் "இந்தாருங்கள்'' என்று கொஞ்சலாகத் தொடங்கியவள் "அப்பா உங்களைத் தமக்கு உதவி மேற்பார்வையாளராக நியமிக்கப் போகிறாராம்'' என்றாள்.

"நியமித்து?''

'மேற்பார்வை வேலையில் உதவியைப் பெறப் போகிறாராம்''

"பெற்று?''

"250 ரூபா சம்பளமும் தரப்போகிறாராம். மறுக்காமல் ஒப்புக் கொள்ளுங்கள். நான் உங்களை ஒரு போதும் தொந்தரவு பண்ணமாட்டேன். என்ன? சொல்லுங்களேன்''

"சரி'' என்ற பெருந்தகை மௌனமாகப் போய் உலகநாதபிள்ளையின் முன்னே நின்றான்.

"நான் உம்மை ஏன் அழைத்தேன் என்று தெரியுமா?" என்று கேட்டவர் அவனைப் பதில் சொல்லும் சங்கடத்திற்காளாக்காமல் தொடர்ந்து தாமே பேசினார். "நீர் விரும்பினால் எனக்கு உதவியாக வேலை செய்யலாம். இப்பொழுது ஒரு கட்டடம் கட்டி முடிக்கும் ஓர் ஒப்பந்தத்தையும் தாவடியிலிருந்து பண்ணைக் கடற்கரை வரையுள்ள வெள்ள வாய்க்காலைத் திருத்தியமைக்கும் பொருத்தம் ஒன்றை இன்னும் நான்கு மாதங்களுள்ளும் அதாவது இந்தக் கார்த்திகை மாதத்துள் முடித்து நிறைவேற்ற வேண்டும்.

அதோடு நீர் தானே நல்லாகப் படித்த பையனாயிற்றே! எங்கள் பிள்ளை பூங்கொடிக்குத் தினமும் பின்னேரங்களில் இவ்விரண்டு மணி நேரம் பாடஞ் சொல்லிக் கொடுக்க வேண்டும்" என்று அடுக்கிக் கொண்டே போனவரை இடைமறித்து "பாடஞ்சொல்லிக் கொடுப்பதுதான் கொஞ்சம்.. சிரமமானது. அதொன்றைத் தவிர மற்ற வேலைகள் செய்வதில் மறுப்பில்லை" என்று கூறி முடித்தான் பெருந்தகை.

"ஏன் பாடஞ் சொல்லிக் கொடுப்பதில் என்ன வில்லங்கம் இருக்கிறது?"

"ஒன்றுமல்ல! வீட்டில் தம்பிமாருக்கும் நான்தான் பாடஞ் சொல்லிக் கொடுக்க வேண்டும்" என்று ஒரு நொண்டிச் சாக்கைச் சொல்லித் தப்பித்துக் கொள்ளப் பார்த்தான் அவன். இதையெல்லாம் அறைக்குள் உற்றுக்கேட்டுக் கொண்டு நின்ற பூங்கொடிக்கு அவனது விடையிலிருந்து தனக்குப்பாடஞ் சொல்லிக் கொடுக்க அவனுக்கு விருப்பமில்லையென்ற உண்மை பளிச்சென விளங்கிவிட்டது. அழுகை அழுகையாக வந்தது அவளுக்கு. மனம் இரத்தக் கண்ணீர் வடிக்கலாயிற்று. என்றாவது ஒரு நாள் பெருந்தகையின் மனம் இரங்கும். அவன் அன்புப் பெருக்கோடு தன்னை அணைத்துக் கொள்வான் என்ற அவளது நம்பிக்கையும் அவளைக் கைவிட்டு விடுமோ? அப்படியானால் இந்த உலகிலுள்ள பாழ்ங்கிணறோ குளம் குட்டையோவாகிலும் தன்னை ஏற்கமாட்டாதா என்று கறுவிக் கொண்டு என்ன முடிவு வருகிறதென்று பார்ப்பபோம் என்று காத்து நின்றாள்.

"நீர் பூங்கொடிக்கு நாலு மணியிலிருந்து ஆறுமணிவரை சொல்லிக் கொடுத்து விட்டு வீடுபோய்த் தம்பிமாரை ஏழு மணியிலிருந்து கவனிக்கலாம் தானே? படிக்கிற பிள்ளைக்கு உதவுகிறபலன் என்றாலும் கிடைக்குமல்லவா? என்று பசையடித்த உலகநாதபிள்ளை வியாபார மனத்தின் அடித்தளத்திலே "இவனை முதலில் ஒப்புக்கொள்ள வைத்தால் போதும். பிறகு சொல்லாமலே ஓடி ஓடிப்பாடு படக் கூடியவன்" என்று எண்ணினார். காரணம், தோட்டங் கொத்துவதில் அவன் நேற்று வரை நிலை நாட்டிய சாதனையை மூத்தவி கூறக் கேட்டும் தமது கண்களாலேயே நேரிற்கண்டும் அறிந்து வியப்புற்றமையேதான்.

"சரி அதற்கென்ன பார்த்துக் கொள்ளலாம்." இது சிந்தனை மயமாக விழிகளை உருட்டிக் கொண்டு நின்ற பெருந்தகையின் பதில், பூங்கொடிக்கு மணநாள் மகிழ்வை வழங்கிய பதில்! உலகநாதபிள்ளையைத் தொடர்ந்து

உற்சாகமாகப் பேச வைத்த பதில். “மாதா மாதம் 250/– சம்பளம். ஓராம் திகதி சம்பளம் கைக்கு வரும்” என்று கூறியவரின் மனதுள்ளே எழுந்து நின்று “நீங்கள் ரூபா 250/– சம்பளம் தர நான் உங்களுக்கு 2500/– வருமானம் ஏற்படுத்தி நிற்பேன்!” என்று கம்பீரமாகக் கூறி நின்றான் பெருந்தகை.

“சரி நான் போகலாமா?” இது உண்மையான பெருந்தகையின் குரல்.

“நீர் போகலாம் நாளை மறுதினத்திலிருந்து வேலையை ஏற்பதோடு பூங்கொடியின் டியூசனையும் தொடங்கிவிடும். நாளை மாலை நாலரை மணிக்குப் பாடம் தொடங்கலாம்!” என்று கூறி அனுப்பி வைத்தார் உலகநாதன்.

“சரி” என்று தலையசைத்து விட்டு, “ஆண்டவனே! நீதான் காப்பாற்ற வேண்டும்” என்று நலிந்த மனத்தோடு தோட்டம் நோக்கிப் புறப்பட்டான் பெருந்தகை. அறைக்குள் துன்பமும் இன்பமும் பின்னிப் பிணங்கும் உள்ளத்தோடு பார்த்து நின்ற பூங்கொடியைத் தன் மனதுள் நினைத்துப் பயந்து கொண்டே வழி நடத்தான் அவன்.

## 13. நெஞ்சில் வீசிய நெருப்பு

அந்தப் பெரிய மாளிகையயைப் பொறுத்த மட்டில் அதோடு தொடர்பாக அதன் பின்புறத்தில் அமைக்கப்பட்டுக் கிடந்த அந்தக் கூடம் ஒரு மாட்டுத் தொழுவத்திற்குச் சமானம் எனலாம். ஆள்மறையும் உயரத்திற்குப் பலகை அறைந்து அமைக்கப்பட்டிருந்த அந்தக் கூடம் பெரும்பாலும் புழக்கமற்று மூடிக்கிடந்ததால் தும்பும் தூசியும் மண்டி, ஒட்டடையும் சிலந்தி வலையும் மலிந்து கிடந்தது.

மூன்றாம் நாள் மாலை கல்லூரிவிட்டு வந்ததும் முதல் வேலையாகத் தந்தையின் கட்டளைப்படி அந்த அறையைத் திறந்து தூசி தட்டி, ஒட்டடை சிலந்தி வலைகளைத் துடைத்துக் கூட்டிப் பெருக்கி நீர் தெளித்துக் கொண்டிருந்த பூங்கொடி கோயில் திருப்பணியில் தெய்வத் தொண்டில் ஈடுபட்டிருக்கும் அடியவளாக மாறி நின்றாள். அந்தக் குப்பைக்கூடங் கோயில் மண்டபமாக உருமாறிக் கொண்டிருந்தது.

அந்த மண்டபத்தின் நடுவில் வைக்கப்பட வேண்டிய முருகன் சிலை போல அவ்வறையில் வீட்டின் பின் புறத்தால் வந்து அடக்கமாக நின்ற பெருந்தகையைப் பூங்கொடி கண்டாளோ இல்லையோ? மகிழ்ச்சியோடு உள்ளே ஓடினாள். கையில் ஒரு நாற்காலியுடன் நொடிப் பொழுதில் மீண்டவள் ஏற்கனவே அவ்வறைக்குள் இடப்பட்டிருந்த மேசைக்கு முன் வைத்தாள். திரும்பவும் உள்ளே ஓடிக் கையில் ஓர் அழகிய மேசை விரிப்புடன் மீண்டு வந்து மேசை மீது

அதனை விரித்து "அமருங்கள்!" என்று அன்பாக வேண்டி அவனை அமர வைத்தாள்.

சிலுப்பிக் காகக் கூடாக்கப்பட்டதலை, கசங்கிய நீர்காவிச்சட்டை வேட்டி, எண்ணெய் படிந்த கன்னங்கள் என்றிந்தக் கோலத்தில் தன்னை வேண்டுமென்றே அலங்கோலப்படுத்தி வந்திருந்தான் அவன். அந்தப் பேதைக் கன்னியின் பருவ உள்ளத்தைத் தனது நடத்தையோ, தோற்றமோ, எந்தவிதத்திலும் அசைக்கவோ நெகிழ்க்கவோ விடுவதில்லை என்ற தீர்மான முடிவோடு மட்டுமல்லாது தன்மேல் இருக்கும் அற்ப சொற்ப நம்பிக்கையையும் அவள் நெஞ்சிலிருந்து கிள்ளி எறிந்து விடவேண்டும் என்ற உறுதிப் பாட்டோடுந்தான் அவன் அங்கு வந்திருந்தான்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகச் சான்றோர்களாலேயே புகழப்பட்டும் கவிதை பாடப்பட்டும் வருங் காதல் விவகாரம் – இலக்கியத்தில் வரும் பொழுதுதான் "ஆகா! ஊ கூ!" என்று புகழப்படுமே அல்லாமல் உண்மை வாழ்வில் இடம்பெறும் போது அது ஒழுக்கக் கேடாக அவமதிக்கப்பட்டுச் சமூகத்தால் வெறுக்கப்படும் முரண்பட்ட நிலை இருக்கிறது என்பதால் முட்டாள் தனமாக காதல் மயக்கில் மாட்டுப்பட்டுத் தானும் வீண்கெட்ட பெயர் கேட்கப்படாது என்ற அவனது முடிவும் இதற்கு ஒரு காரணம்.

இன்னும் ஒன்று அவன் குடும்பநிலை. அவனைப் பெற்றெடுத்துப் பேணி வளர்க்கப் படாதபாடெல்லாம் பட்ட பெற்றோர் அவன் பிறந்த அதே இரத்தத்தில் பிறந்த தம்பிமார் அரை வயிற்றுக் கஞ்சிக்கே அல்லல்பட்டு அழுகிறார்கள். அவளோ காதலுக்காக அழுகிறாள். பெயரளவில் இரண்டும் அழுகையாக இருந்தாலும் இரு அழுகைகளுக்குமிடையில், அவற்றின் காரணங்களுக்கிடையில் தரங்களின் அடிப்படையில் எத்துணை வேறுபாடு? அவன் இவளுக்காக இரங்கினால் ஏழு சீவன்கள் சாகும். அந்த ஏழு பேரையும் சாகவிடாமல் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக இவளை ஏற்றுக்கொள்ள அவன் மறுத்தால் இவள் செத்தா விடப்போகிறாள்? இவள் வேறொரு திருமணம் செய்யாமலா இருந்துவிடப் போகிறாள்?

அவன் பல்கலைக்கழக வாழ்க்கையிலும் வெளியுலகத்திலும் கண்ட கேட்ட அனுபவத்தின்படி இளமையில் முகிழ்க்கும் காதல்கள் உண்மை அன்பென்ற கனியைத்தர உதவாத பொய்ப்பூக்கள் என்பதைப் புரிந்து வைத்திருந்தான்.

வெறும் அறியாப் பருவத்தில் ஆழ நீளச் சிந்தித்துக் கட்டாத முடிவாக இந்தப் பேதைப் பூங்கொடி மனத்திலும் ஆசைகள் மலர்ந்திருக்கலாம். இன்று அவனைக் காதலிக்க வருந்துபவள் பின்னொரு காலம் அவனைக் காதலித்ததற்காக – காதலித்ததாலேயே வருந்தும் நிலைமையும் வந்து சேரும் – ஒரு காதலன் போனால் இன்னொரு காதலன்! இப்படியும் வாழ ஒரு பெண்ணால் முடியும். ஆனால் ஒரு தாய் போனால் இன்னொரு தாய், ஒரு தந்தை போனால் இன்னொரு தந்தை கிடைக்க முடியுமா அவளுக்கு? பெருந்தகையை மணந்து கொண்டால்

இந்த உண்மையை அவளாகவே அவனுக்கு ஒரு காலம் கண்ணீரிடையில் கூறலாம். ஆம் அவள் பெருந்தகையைக் கைப்பிடித்தால் கடைசிவரை உலகநாதபிள்ளையோ மனைவியோ அவள் முகத்தில் விழிக்கமாட்டார்கள்.

தான் ஒரு தாழ்த்தப்பட்டவனாகவே உலகநாதபிள்ளை மனத்தில் பதிந்து விட்டானாகையால் இனித்தான் வேறு குலத்தவன் என்பதை அவருக்கு வெளியிடுவதையோ அவர் அறிந்து கொள்ள வேண்டும் என்பதையோ அவனது அறிவு, மானம் என்பன அனுமதிக்கமாட்டா! அவர் மனதில் இருக்கும் அவன் பற்றிய தாழ்வான கருத்து அகலப்போவதுமில்லை. "என்னை மணந்து கொண்டு பெற்றோரின் அன்பையும் அவர்கள் ஓடிஓடித் தேடும் சொத்துச் சுகங்களையும் ஒரு சேர இழந்து அவள் நலிய வேண்டாம்."

சிந்தனையில் மூழ்கி விழித்து நிமிர்ந்த பெருந்தகை தன் எதிரே அடக்கமாக அமர்ந்திருந்து தன் சிந்தனையோட்டத்தைத் தன் முகத்தின் மூலம் அவள் ஆராய்ந்து கொண்டிருப்பதை உணர்ந்தான், "என்ன படிக்கப் போகிறீர்கள்?" என்று கேட்டுக் கொண்டே அவள் கைகளுக்குக் கீழ்க் கிடந்த புத்தகங்களை இழுத்து மெல்ல எடுத்தான். கைகள் அவற்றைப் புரட்டிக் கொண்டிருந்தன.

"இரசாயனம்" என்று கூறியவள் அவன் கையிலிருந்த இரசாயன நூலை இரு கைகளும் நீட்டி வாங்கி விரித்துத் "தாக்க ஊக்கி" என்ற பகுதி உள்ள பக்கத்தை எடுத்து அவன் முன்னே வைத்தாள்.

பெருந்தகை "தாக்க ஊக்கிகள்" என்றால் என்ன என்று தெரியுமா?" என்றான். "தெரியும்" என்றவள் ஒரு சில விநாடிகள் அவன் முகத்தை உற்று நோக்கினாள். கண்கள் தாமாகவே சுடுநீர் பாயும் அருவிகளாக மாறிக் கரையலாயின.

பெருந்தகை சீற்றத்தோடு கேட்டான். "ஏன் அழுகிறீர்கள்" அந்தக் குரலில் தொனித்தமிரட்டலில் எதையோ நினைத்துக் கொண்டவள் போல் அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

எங்கே "தாக்க ஊக்கிகள் என்றால் என்ன என்று சொல்லுங்கள் பார்க்கலாம்!" ஆசிரியருக்கிருக்க வேண்டிய கம்பீரம் அவன் குரலில் பல மடங்காக ஒலித்தது.

"இரு இரசாயனப் பொருள்களிடையே தாக்கம் விரைவுபடக் காரணமாக இருந்து கொண்டு தான் மட்டும் எந்தத் தாக்கத்திற்கும் உள்ளாகாமல் தனித்து நிற்கும் ஒரு மூன்றாவது பொருளே தாக்க ஊக்கி எனப்படும்.

உதாரணம் : ஒன்று மாங்கனீஸ் ஈரொட்சைட்டு....."

"இன்னொன்று"

"உள்ளங்களும் அன்பு எண்ணங்களும் வேகமாகப் போராடக் காரணமாகிக் கொண்டு தாம் மட்டும் கல்லாகி நிற்கும் கருணையற்ற மனங்கள்."

"பூங்கொடி தேவையற்ற விளக்கங்கள்! வாக்குறுதியை மீறுகிறீர்கள்! நினைவிருக்கட்டும்."

"ஆமாம் நீங்கள் மட்டும் மீறவில்லை" பூங்கொடி விம்மி விம்மி அழத்தொடங்கிவிட்டாள்.

"நான் எப்படி மீறினேன்?"

"அப்பா உங்களை எனக்குப் பாடஞ்சொல்லித்தரும்படி கேட்டபோது மறுத்தீர்களே!. அது நியாயமா? மேற்பார்வை வேலையோடு மட்டும் நீங்கள் நின்றுவிட்டால் பல நாட்கள் உங்களைக் காண முடியாத துன்ப நாட்களாகக் கழிய நேர்ந்துவிடாதா?" கிடைத்திருந்த உரிமையை வெற்றிகரமாகப் பயன்படுத்தினாள் பூங்கொடி!.

"சரி! சரி!" என்று சினத்தோடு அலுத்துக் கொண்டவன் திடீரெனச் சீற்றங்கொண்டவன் போல் "இன்று முதல் நாளே சொல்லி வைக்கிறேன். உங்களுக்கு என்மனதில் எள்ளிருக்கும் இடங்கூடத்தரமுடியாது. இன்றில்லாவிட்டாலும் என்றாவது கிடைக்கும் என்று நம்பி ஏமாறவும் வேண்டாம். நீங்கள் நிற்கும் உயரம் இமயமலையின் உச்சி! நான் நிற்கும் பள்ளம் பசுபிக்சமுத்திரத்தின் அடித்தளம். நீங்கள் இறங்கி வருவதும் நான் மிதந்து உயர்வதும் நடக்காத காரியங்கள். அல்லாமலும் என்னை நம்பி நடக்கும் உங்கள் பெற்றாருக்கு நம்பிக்கைத் துரோகம் செய்யவே மாட்டேன்.

இனிமேல் பாடம் தவிர்ந்த எந்த உலகத்துப் பேச்சும் என்னுடன் வைத்துக்கொள்ளக்கூடாது. விபரீதமான ஆசைகளால் எங்கள் இரு குடும்பங்களும் அவமானப்பட்டு வீணாக அழியக்கூடாது" என்று ஒவ்வொரு சொல்லும் அவளது எண்ணக் கோட்டைகளை நோக்கி வீசப்பட்ட எறிகுண்டுகளாகப் பேசிக்கொண்டே போய் இறுதியில் சொன்னான். "நான் இங்கு வேலைக்கமர்ந்திருப்பது எனக்குக் கிடைக்கும் ஊதியம் கருதியே ஒழிய வேறுயாருக்காகவுமல்ல, என்ற உண்மையை இப்பொழுதே சொல்லி வைக்கிறேன். நீங்கள் என் குடும்பம் அழியாமல் காத்த கருணைக்கு நான் துரோகஞ் செய்யக்கூடாது. தொல்லைகள் தொடர்ந்தால் சிலவேளை நாளையிலிருந்தே வராமல் நின்றாலும் நின்றுவிடுவேன்!"

தன் மனம் அவள் மீதான காதல் உணர்ச்சிக்கு நெகிழ்ந்து இடங்கொடுத்து விடுமோ என்று அஞ்சியவன் இரசாயனப் புத்தகத்தை எடுத்துப் பார்வையினூடு தன் கவனத்தை அதில் திணிக்க முயன்று கொண்டிருந்தான்.

"நான் இனிமேல் நிதானமாக நடந்துகொள்கிறேன்" என்றவள் அதன் பின் வாய் திறக்கவில்லை. அவன் படிப்பிக்கத் தொடங்கிய பாடத்தை ஒழுங்காகக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

அவன் பாடம் முடிந்து வீட்டை விட்டுக்கிளம்பியபோது நேரம் இரவு ஏழு மணி. பாடம் முடிந்ததுதான் தாமதம் ஒரு வார்த்தையும் சொல்லாமல் அவன் எழுந்து போய்விட்டான்.

"உங்களுக்கு என்மனதில் எள்ளிருக்கும் இடம் கூடத் தரமுடியாது" என்ற பெருந்தகையின் கடூரமான வார்த்தைகள் அவள் இதயச் செவிகளில் கிண்கிண் என்று சுழன்றொலித்துக் கொண்டிருந்தன. அவள் தன் படிப் பறையில் பெருந்தகை சென்ற பின்னும் நீண்ட நேரமாக இடிந்து போய் உட்கார்ந்து விட்டாள். அடித்துப் போட்டுக் குற்றுயிராய்க் கிடந்த பாம்பு போல மனம் நெளிந்து நலிந்து கொண்டிருந்தது. "இந்தப்பிறவி ஏன் எனக்குக் கிடைத்தது? இந்த உலகில் எனக்கு இனியென்ன வேலை? இந்த இதயம் ஏனின்னும் வெடித்துச் சிதறாமல் கிடக்கிறது. எனது இந்தப் பாழும் விதி பிரமனால் எழுதப்பட்ட பாவ மண்டை ஏன் இன்னும் பிளந்து இந்தப் பழியுடம்பைச் சாய்க்காமல் இருக்கிறது" என்று எண்ணி மேசை மேல் தலை வைத்து விம்மி விம்மிக் குமுறிக் குமுறி அழுதாள் பூங்கொடி.

## 14. கண்ணீர்த் துணையிலே

**அ**வள் தள்ளாடிக் கொண்டெழுந்த பொழுது நேரம் எட்டு மணியொலித்தது. குனிந்து தனது பாவாடையால் முகத்தையும் கண்களையும் துடைத்து விட்டவளுக்கு உண்ணவேண்டும் என்ற எண்ணமே எழவில்லை. கால்கள் பின்னிக் கொள்ளக் காற்றிலாடும் கப்பல் போலத் தடுமாறிச் சென்ற பூங்கொடி "அம்மா! தலைவலிக்கிறது. படுக்கப் போகிறேன்!" என்று சொல்லிக் கொண்டு தனது படுக்கையறைக்குள் புகுந்தாள். "நீங்கள் நிற்பது இமயமலையின் உச்சி! நான் நிற்பது பசுபிக் சமுத்திரத்தின் அடித்தளம்!" என்று பெருந்தகை கூறினாரே! ஆமாம் பெற்றாரின் அன்புக்கும் பாசத்திற்கும் இலக்காகி நிற்கும் நான் அதே பெற்றோரின் பணப்பெருக்கால் உயர்ந்த அந்தஸ்தால் என் வாழ்வையே பறிகொடுத்து வாழ்வெல்லாம் வேதனையில் புழுவாக நெளிய வேண்டி வந்துவிட்டது. என் மாமனார் எப்பொழுதும் "பழிப்பணம் குடியைக் கெடுக்கும்" என்று சொல்லு வாராமே என்று கலங்கிக் கொண்டு போகையில் சமயலறையிலிருந்து "இராசவள்ளிக் கிழங்கு பால்விட்டுக் கடைகிறேன். இரண்டு கரண்டி சாப்பிட்டுவிட்டுப்படு!" என்ற அம்மாவின் குரல் கேட்டுச் "சொன்னால் கேளுங்கள்! என்னைப்படுக்க விடுங்கள்" என்று கத்திவிட்டுச் சென்று கட்டிலின் மேல் பிணம் போல் விழுந்து கிடந்தாள், பூங்கொடி. முகத்தைத் தலையணையில் புதைத்துக் கிடந்தவளுக்கு உண்மையாகவே தலை வலித்தது. ஆமாம் அவள் மூளை சூளையாகி அவளையே சுட்டுக்கருக்கும் எண்ணச் சுடர்களை ஈன்றுகொண்டே இருந்தது.

தன் இதயத்தில் எள்ளிருக்கும் இடமும் எனக்குக் கிடைக்காது என்றதோடு நின்றாரா அவர்? நான் இங்கு வேலைக்கமர்ந்திருப்பது கிடைக்கும் ஊதியம் கருதியே ஒழிய வேறு யாருக்காகவுமல்ல என்றும் அல்லவா சற்றும் இரக்கமின்றிப் பேசிவிட்டார். ஊதியம் கருதி இங்கு வேலை பார்ப்பவர் இங்கு கிடைப்பதிலும் அதிக ஊதியம் தரும் இன்னோர் இடம் வந்தால் என்னை – இல்லை எங்கள் வீட்டைத் தயங்காமல் விட்டுப்போகவும் தவறமாட்டார். அவர் போனால் அவரைக் கண்டு பெறுகின்ற குறைந்தபட்ச நிம்மதியும் கிடைக்காமல் போய்விடுமே.! அப்படிக் கூடுதலான வருவாய் தரும் தொழில் அவருக்கு அகப்படக்கூடாது என்று பிரார்த்திப்பதும் தவறு. பாவம் அவர் ஏழையாம்.! அவர் போகட்டும்!. எங்காவது போகட்டும். போய் நல்லபடி வாழட்டும்'' அவள் குமுறிக் குமுறிக் அழுது ஓயச் சிந்தனை தொடர்ந்தது.

"அவர்தான் எனக்குரியவராக மாட்டேன் என்று சொல்லிவிட்டார். அப்படியானால் என் கதி? நானோ என் உடல் உயிர், வாழ்வு எல்லாவற்றையும் அவருக்கே காணிக்கையாக்கி விட்டேன். அவரை மறக்க முயலும் போதெல்லாம் மேலும் அவர் மீது பாசமே வளர்கிறது. அவர் இங்கு இருக்கும் வரை என்னுயிரும் இந்த உடலில் இருக்கும். கடவுளே அவர் அன்பைப் பெற்றுத்தரத்தான் மறுத்தாய். அவர் இங்கு இருக்கும் பொழுதே என்னுயிரைப் போக்கிவிடும் கருணையை என்றாலும் எனக்குப் புரிந்தருள மாட்டாயா? அப்பாவின் பாவத் தேட்டத்தில் உயிர் வாழ்ந்து கணம் தோறும் பழி தேடாமல் செத்து விட்டாலே எவ்வளவு புண்ணியம். நான் இனிமேல் இயன்ற வரை பசி கிடப்பேன். காலையும் மாலையும் அம்மா அப்பா அறியாமல் என் உணவை நாய்க்கு இரையாக்குவேன். இவர் என் நெஞ்சைச் சுடப் பயன்படுத்திய வார்த்தைகளைத் திரும்பத் திரும்ப நினைவிற்குக் கொண்டுவந்து உள்ளம் வருந்துவேன்.

இதனால் இன்னும் மூன்று மாதங்களிலாவது எனக்குக் கசநோய் பிடிக்கும். நான் இரவும் பகலும் இருமுவேன். என் நெஞ்சில் இருந்து இரத்தக்கட்டிகள் சளியோடு வந்துவிழும்'' என்று எண்ணி அவள் நெஞ்சை இறுக்கும் துயரத்தோடு குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

அழுகையிலும் ஓர் இன்பம் இருக்கிறதோ? யாருக்கும் வெளியிடமுடியாமல் நெஞ்சோடு வைத்துக் குமையும் துன்பச் சுமையைக் கண்ணீராகக் கரைப்பதில் ஓர் ஆறுதல், அமைதி, பிறக்கிறதென்பதைத் தற்செயலாகப் பூங்கொடி கண்டுள்ளாள். இந்த அனுபவம் தொடர்ந்தும் தன்னைப் பற்றிய இரக்கமான சிந்தனையில் அவளை ஆழ்த்தியது.

"நான் அம்மா, அப்பாவுக்குந் தெரியாமல் வரும் இரத்தத்தை மறைப்பேன். நோய் முற்றிய பின் மருத்துவர்கள் என் நோயைக் கண்டறிய நேரிடும். நான் காங்கேசன்துறைக் கசநோய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுவேன். ஆஸ்பத்திரிக்கு

அருகில் கிடந்து இரவும் பகலும் ஓயாமல் ஓங்காரமிட்டு ஓலமிடும் கடலோடு என் நெஞ்சமும் இரவும் பகலும் எந்த நேரமும் போட்டி போட்டுக் குமுறிக் குலைந்து கலங்கும். மருத்துவத்தாதி தரும் மருந்தையும் வரும் உணவையும் அவர்கள் அறியாமல் வீசிவிடுவேன். எனது நோய் மிகக் கடுமையாகும்.! அப்பா தன் நெஞ்சைப் பற்றிக்கொண்டு வேதனையால் நொந்து நொந்து அழுவார். அம்மா மார்பில் அடித்துக்கொள்ளாக்குறையாக அழுவாள்''– பூங்கொடியால் மூன்றாவது தடவையாகவும் அழாமல் இருக்கமுடியவில்லை.

எழுந்து அறையின் மின் வெளிச்சத்தை அணைத்துவிட்டுப் போய்ப் படுக்கையில் விழுந்தாள். புரண்டு புரண்டு அழுது தீர்த்துவிட்டு மீண்டும் சிந்திக்கத் தொடங்கினாள், தனது இறுதி அத்தியாயத்தைப் பற்றியும்! "அம்மாவும் அப்பாவும் வீட்டுக்கு வந்து விட்ட சமயம் என் வார்ட்டில் கிடக்கும் எல்லா நோயாளிகளும் உறக்கத்தில் ஆழ்ந்து விட்ட பயங்கரமான நள்ளிரவு. என்னைத் தேடிப் பெருந்தகை வந்து நிற்பது போன்ற மனப்பிரமை உண்டாகும். நான் நோயையும் மறந்து நெஞ்சின் வலியையும் மீறிக்கொண்டு படுக்கையில் இருந்து துள்ளி எழுந்து அவரை நோக்கி ஓடுவேன். நான் ஆர்வம் முன்னே தள்ள ஆர்ப்பரிக்கும் கடல் அலைகள் பின்னே தள்ளுவதையும் மதியாமல் கடலில் இறங்கி அவரை நோக்கி ஓடுவேன்.

பாறைகளில் ஏறியும், நீரில் அலையால் வீழ்த்தப்பட்டும் புரண்டு உருண்டு மேலும் மேலும் முன்னேறுவேன். திடீரென்று எட்டாத நீரில் சிக்குண்டு சுழியால் இழுத்துச் செல்லப்படும் போது "என் பெருந்தகை!" என்ற தெய்வத்திருநாமத்தைக் கடலின் பேரிரைச்சலையும் விழுங்கி எழும்படி கூவிக் கத்துவேன்.! கத்துவேன். திக்குமுக்காடித் துடிப்பேன். கடலின் உப்பு நீர் வாய், மூக்கு எங்கும் நுழைந்து மூச்சுப் பையில் புகுந்து நிறைந்து மூச்சுத் திணறி நான்.... நான் உயிர் துறப்பேன்! சாவேன்.! செத்தேபோவேன். கடவுளே நான் செத்தே போகவேண்டும். நான் கடலில் மூழ்கி இறந்த செய்தி பத்திரிகையில் வரும். அதைப் பார்த்தாவது பெருந்தகை எனக்காக இரண்டு சொட்டுக் கண்ணீர் விடமாட்டாரா?'' என்று எண்ணி மூச்சடங்கும்படி விம்மி விம்மி அழுதாள். வீட்டில் பெற்றார் உறங்கி ஊரே உறங்கிவிட்ட நள்ளிரவின் அமைதியினூடு எல்லாம், ஓயாமல் விக்கி விக்கி அழுதாள். கண்ணீர் வற்றிவிட்டது போலும், மனமும் முன்பு போல் கனக்கவில்லை. "மிக விரைவில் செத்துத் தொலையப்போகும் நான் அது வரைக்கும் கவனமாகப் படித்து மிகச் சிறந்த புள்ளிகள் பெற்றுத் தேர்வில் தேறி எனது பெருந்தகை இல்லை என்னைத் தனதாக்கிய பெருந்தகை என் பெற்றாரின் பாராட்டையும் ஊரார் புகழ்ச்சியையும் பெறச் செய்வேன். வறுமை கொடுக்கும் கவலைகளைத் தமது முயற்சியில் பெறும் வெற்றியால் சில நிமிட நேரமாவது அவர் மறந்து மகிழ வைக்கவேண்டும். என்அன்பு உண்மையானதாயின் தெய்வீகமானதாயின் அவர் இன்பத்துக்கானவற்றையே நான் செய்யவும் எண்ணவும் வேண்டும்'' என்ற புதிய முடிவிற்கு வந்து முற்றும் புதிய பெண்ணாகி உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டாள் பூங்கொடி.

முதுவேனிற் காலத்து முற்பகுதி முடிவடைந்து பிற்பகுதியிலும் ஆடி மாதம் முடிந்துகொண்டிருந்தது. காலை ஒன்பது மணி தொடங்கிப் பிற்பகல் நாலு மணி வரை மேற்பார்வை செய்தலும் 5 மணியிலிருந்து இரவு 7 மணி வரை பூங்கொடிக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதும்தான் பெருந்தகைக்குத் தரப்பட்ட வேலை. அப்பொழுது யாழ்ப்பாணத்திலிருந்து வசாவிளான் சந்தி வரையிலுள்ள தார் வீதியைத் திருத்தும் வேலை மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. பெருந்தகையும் உலகநாதபிள்ளையும் முதன்முதலாகச் சந்தித்துச் சச்சரவுப்பட்டுக் கொண்ட இடமாகிய ஆரிய குளத்தடியில் ஆரம்பமாகியிருந்த தார் ஊற்றல் வேலை இப்பொழுது இந்த எட்டு நாட்களுள் கொடித் தூக்கிச் சந்திவரை முன்னேறி நின்றது. பெருந்தகை முதல் நாள் வேலை யேற்ற இடம் கொடித்தூக்கிச் சந்திதான்.

அன்று காலை நீர்வேலியில் தாய் தந்தையரிடமிருந்து விடைபெற்று வந்த போது அவர்களின் மகிழ்வு முகங்களைக் காணப் பெருந்தகைக்கு மகிழ்ச்சியாகத் தான் இருந்தது. ஆனால் தனதும் அவர்களதும் மகிழ்ச்சிக்குக் காரணமாகிப் படாதபாடுபட்டவளை ஏமாற்றத்தால் சோர்ந்துகிடந்த குழந்தை வதனத்தை நினைத்துக் கொண்டபோது அவன் நெஞ்சம் இரத்தக்கண்ணீர் விடலாயிற்று. ஆனால் தான் பிழைவிட்டு நடந்தால் தன் பெற்றோர் அறிந்தால் அவர்கள் நெஞ்சு வெடித்துச் செத்தே விடுவார்கள் என்றும் அவனுக்குத் தெரியும். பெருந்தகை இராசவீதியில் தெற்கு நோக்கி மிதிவண்டியில் வந்துகொண்டிருந்தபோது மனித நடமாட்டம் குறைந்த அந்தத் தனி வெளிப்பாதையில் அவனது கண்களிலிருந்து ஊறிய கண்ணீர்த்துளிகள் அவனை எதிர்த்து வீசிய சோழகக்காற்றினால் சிதறிய வண்ணம் இருந்தன. வெகு நேரமான பின்தான் முன்பு "அவளுக்கு இரங்குவதில்லை" என்று தான் எடுத்த தீர்மானத்தையும் மீறித் தான் அவளுக்காக அழுது விட்டதை உணர்ந்தான். வேறு எதைத்தான் செய்யமுடியும்?" அவள் பெற்றாரின் உயிர் இலட்சியம் பூங்கொடியை டொக்ரராக, எஞ்சினியராக ஆக்கி ஒரு டொக்ரருக்கோ, எஞ்சினியருக்கோ கட்டி வைத்து அவள் உல்லாச உப்பரிகை வாழ்வைக் கண்டு ஆனந்தமாகக் கண்களை மூடவேண்டும் என்பதாகவே இருக்கும். அதற்காகவே என்னை நம்பி என் நேர்மையை நம்பி அவளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க ஒழுங்கு செய்து தாராளமாகச் சம்பளமும் தருகிறார்கள். அவர்கள் நெஞ்சுகளில், தலைகளில் இடிவிழும் வகையில், முக்கிய கனவில் மண்விழும் வகையில் அவளை ஏழையான எனதாக்க நினைப்பது எவ்வளவு பெரிய நம்பிக்கைத் துரோகம். அதிலும் என் குடும்பத்தை உயிர் வாழ வைத்துக் கொண்டிருக்கும் அந்தக் குடும்பத்திற்குத் துரோகம் நினைத்தால் என் குடும்பத்தையும் என் ஏழேழு சந்ததிகளையும் அந்தப்பழி ஆற்றலைய வைத்துவிடும்.

ஆனால் ..... குறைந்த பட்சம் தன் வாழ் நாள் எல்லாம் என் முகத்தைப் பார்த்து மனமாறும் வரத்தையாவது தரும்படி நெஞ்சழிந்து கண்ணீர் வடிக்கும்

பூங்கொடி வேறு ஆடவன் சொத்தாகிட நான் அனுமதித்தால் அது அவளைத் தற்கொலை செய்ய அனுமதித்து என்னைச் சண்டாளன் ஆக்கி அவளைத் தொடர்ந்து அவள் பெற்றாரைச் சாகடிக்கும் சண்டாளன் ஆக்கி, தருமமும் உலகமும் சேர்ந்து என் சந்ததியையே சுட்டெரிக்க வைத்துவிடுமே'' என்று இருதலைக்கொள்ளி எறும்பாக நெஞ்சதிர்ந்து குமுறிய பெருந்தகைக்குக் கத்திக்கதறி அழாவிட்டால் தன் நெஞ்சே துயரச் சுமையால் வெடித்துச் சிதறிவிடும் போல் இருந்தது. முன்னே ஒரு பனங்காட்டைத் தான் அணுகிக் கொண்டிருப்பதைக் கண்டான். முன்னும் பின்னும் ஒரு தடவைபார்த்தவன் அப்பனங்காட்டிற்கருகில் வண்டியிலிருந்து இறங்கி ஒரு பனையோடு அதைச் சார்த்தினான். வெறி பிடித்தவன் போல உள்ளே ஓடினான்.

# 15. விழுது வேராகி.......

தன் தலையை இரு கைகளாலும் குழப்பிக் கொண்டே உள்ளே வெகுதூரம் ஓடிய பெருந்தகை யாரும் நிற்கிறார்களா என்று பார்வையைச் சுற்றிச் சுழற்றினான். நெஞ்சை உலுக்கும் தனிமையில் உறங்கிக் கிடந்த அந்த நெடும் பனஞ்சோலையில் ஆங்காங்கே காவோலைகள் மடிந்து வட்டுகளுடன் உரோஞ்சி எழுப்பிய சில்லறைச் சலசலப்புக்கள் மட்டுமே கேட்டுக்கொண்டிருந்தன. யாருமே அங்கு காணப்படவில்லை. முகத்தை இரு கைகளாலும் பொத்திக் கொண்ட பெருந்தகை கோ என்றுகதறி அழத்தொடங்கினான்.

“நான் என்ன செய்வேன்?'' என்று கலங்கிய பெருந்தகையின் சிந்தனை தன் குடும்பத்தின் பக்கமும் சுழன்று பார்த்தது. “நான் இன்றே அவளை அழைத்துக் கொண்டு வீட்டிற்கு வருகிறேன் என்று வைத்துக் கொள்வோம். வறுமைப்புயலில் சிக்கிச் சுழலும் கப்பலின் உயிர் நம்பிக்கையாக–பாய்மரமாக நிற்கும் என்னைத்தழுவிக்கொண்டு ஒரு தீயாக அவள் வந்துவிட்டாளே என்று எண்ணிய அன்னையின் நெஞ்சில் இடி விழ நம்பிக்கை சுக்கல் சுக்கலாக மனம் அதிர்ந்து குமைந்து குமுறி அவள் புலியாகப் பாய்கிறாள் என் மீதும் பூங்கொடிமீதும்.

என்னை நம்பித் தம் உடல்களில் வயிறுகள் என்று ஒவ்வொன்றையும் நெஞ்சங்களில் ஏராளம் ஏராளம் ஆவல்களையும் கனவுகளையும்தாங்கி நிற்கும் என் தம்பிமார்கள் வாய் விட்டுக் கத்தியழுகிறார்கள், அம்மா என்னை ஏசுவதால் நான் ஏதோ கொடுமை தங்களுக்குச் செய்துவிட்டேன் என்ற கற்பனைகளில்! கள்ளுக் கொட்டில் நடத்தி வயிறு வளர்க்க நேர்ந்ததே என்று எங்கள் சுற்றத்தவர் வீடுகளுக்கே எங்களைப் போகவிடாமல் தடுத்து, தானும் அவர்கள் முகங்களில் விழிக்கவும் வெட்கப்பட்டு அவமானத்தால் நாளடைவில் நலிந்து நடைப்பிணமாகத் திரியும் என் தந்தை நான் ஒரு காலம் தன்னை வறுமையிலிருந்து மீட்பேன் என்று நம்பி என் படிப்புக்காகச் சதம் சதமாகவே தான் உழைத்துச் சம்பாதித்த

காசையெல்லாம் தயங்காமல் செலவிட்டவர். இன்று தன் குடும்பம் நடுத்தெருவில் நிற்கும் நிலை வந்தும் என்னால் எந்தவித உதவியும் கிடைக்காமல் இருந்தும் என் மனம் நோகப் பேசாத மனிததெய்வம். இன்றும் நம்பிக்கையோடு என்னை ஒரு செல்வமாக மதித்துத் திரிபவர். அந்தக் கருணை வள்ளல் எனது செய்கையைக்கண்டு பித்துப்பிடித்தவனாகிறார். ஊரார் எல்லாம் என் கதை அறிந்து அவரைக்காணும்போது சிரிக்கிறார்கள். சந்தி தெருவெல்லாம் அவரைப்பற்றிய ஏளனப் பேச்சாக இருக்கிறது. என்னை நம்பி அப்பாவுக்குக் கடன்கொடுத்தவர்கள் அவரைச் சுற்றிச் சூழ்ந்து கழுத்தைப்பிடிக்கிறார்கள். அப்பாவுக்கு எதுவுமே செய்யத் தெரியவில்லை.

நின்றவர் திடீரென்று பேய் பிடித்தவர் போல் ஓடத்தொடங்குகிறார். கடன்காரர் துரத்துகிறார்கள். அம்மாவும் என் தம்பிமார்களும் அவர் பின்னால் கத்திக் கதறிக்கொண்டே ஓடுகிறார்கள். அப்பா பனைகளுக்கூடாக ஓடி ஒரு வடலி அடைப்புக்குள் துலாஇல்லாத பாழ்ங்கிணற்றுள் குதிக்கிறார். கடன்காரர் தலையில் கைவைக்கின்றனர், தங்கள் காசு போயிற்றே என்று! அம்மாவும் தம்பிமாரும் கதறித்துடிக்கிறார்கள், அப்பாவைப்பிரிந்த துயரத்தால்! அம்மா நின்றாற்போல் பத்திரகாளியாக மாறி என் தம்பிமார்களைப் பட பட என்று தூக்கி அந்தச் செடிக்கிணற்றுக்குள் வீசித் தானும் அதற்குள் பாய்ந்து விடுகிறாள். நானும் சாக எண்ணி அவர்களைத்தொடர்ந்து ஓடி அந்தப் பாழ்ங்கிணற்றில் வீழ்கிறேன். பூங்கொடியும் பின்னால் குதிக்கிறாள்....." என்று கனவு கண்டு நின்றவன் வேண்டாம். என்னால் என் குடும்பமும் அழிந்து அந்த அப்பாவிப்பெண்ணும் சாக வேண்டாம். கடவுளே அந்தப் பேதைப்பூங்கொடிக்கு என்மீதுள்ள பாசத்தை, மயக்கத்தை முற்றாகத்துடைத்தெறிந்து இந்த இரண்டு குடும்பங்களையும் அழிவிலிருந்து காத்தருளையா என்று மனமாரப் பிரார்த்தித்தபடி வீதிக்கு வந்து பயணத்தைத் தொடர்ந்தான்.

தாரூற்றும் வேலையை முதல்நாள் கூலியாட்கள் நிறுத்திச் சென்ற இடத்தை அவன் அணுகி நின்று சில நிமிடங்களில் வெற்றிலை பாக்கு வாய்களில் கமகமக்க நெற்றியில் திருநீறுபட்டையாகப் பளிச்சென்று துலங்கச் சும்மாடு வைத்த தலைகளுடன் வந்துசேர்ந்தனர் கூலிகள். பெருந்தகையைப் பார்த்துவிட்டதும் அவர்கள் விழிகள் பயத்தால் பிதுங்கலாயின. அவர்கள் தூர நின்று தம்முள் ஏதேதோ குசுகுசுத்தனர். இவன் யாரைத்தேடி வந்துநிற்கிறான்.? எட்டு நாட்களுக்கு முன் ஆரிய குளத்தடியில் நடத்தின அமர்க்களத்தின் விட்டகுறை தொட்டகுறையோ?

அவன் இன்றும் கொளுவலுக்குத்தான் வந்திருப்பானா? அவன் ஏனடா கொளுவப்போகிறான். அன்று நாங்கள் பிழையையும் விட்டுவிட்டுச் சண்டித்தனமும் விடப்பார்த்தால் அவன் சும்மா விடுவானா? எங்கள் திமிரும் மிரட்டலும் எல்லாரிடமும் பலிக்குமா?

ஆமாம் தவறை உணர்த்திமுடிந்ததும் மன்னித்துச் சென்ற பெருந்தகையான ஆள் அவன். வேறு ஏதும் அலுவலாக வந்திருப்பான்.

கொடித்தூக்கிச் சந்தியில்தானே மட்டைவண்டி, கிடுகுவண்டிகள் வியாபாரத்திற்கு வந்து நிற்பது வழக்கம். வீடு வேய வேலியடைக்கக் கிடுகு பார்த்து விலை பேசி அழைத்துப் போக வந்திருப்பான். இப்படியே தம்முள் பெருந்தகையின் வருகை பற்றித் தொழிலாளிகள் ஓர் அலசு அலசிக் கொண்டிருக்கையில் உலகநாதபிள்ளையின் லொறியும் அங்கு வந்து அவர்கள் முன்னால் நின்றது. ஓவசியர் உலகநாதபிள்ளை லொறியில் இருந்தபடியே ஆணை பிறப்பிக்கத்தொடங்கி,

"அதோ அந்த ஆளை ஒருத்தன் கூட்டிவா" என்று பெருந்தகையைச் சுட்டிக் காண்பித்தார்.

"என்ன ஆபத்துக்கோ இதெல்லாம்? இவர் இங்கிருந்தபடி அழைக்க அதைக் கேள்விப்பட்டு ஓடோடி வந்து விட அவன் என்ன இவர் வைத்த ஆளா? அல்லது சும்மா ஆளா? நாங்கள் போய்ச் சொன்னால் எங்களுக்கும் என்ன உபசாரம் நடக்குமோ" என்று எல்லாரும் எண்ணினர். போகத்தயங்கினர்.

"என்ன யோசிக்கிறீர்கள்? நீ போ சிவக்கொழுந்து, போய் வரச்சொல்" என்று கண்டிப்பான குரலில் கூறினார் ஓவசியர், ஆரிய குளத்தடியில் சமாதானப்பறவையாகப் பணியாற்றிய கிழவனிடம். கிழவன் பாதி வழி போக தான் பாதிவழிக்கு வந்துவிட்ட பெருந்தகையிடம் "ஐயா உங்களை வந்துவிட்டுப் போகமுடியுமா என்று கேட்கிறாருங்க" என்று மரியாதை வார்த்தைகளை இடைச்சொருகல் செய்து பேசினான் அவன்.

கிழவனின் மனதில் பரவி நின்ற பயம், பேச்சில் பரவி நின்ற பணிவு கண்டு கருகிய முகத்தோடு அவனைப் பின் தொடர்ந்து பெருந்தகை நடக்கலானான். அவன் வருவதையும் அவனது கம்பீரத்தையும் அச்சத்தையும் அஞ்ச வைக்கும் அலட்சிய நடையையும் மதயானை போன்ற தோற்றத்தையும் கண்ணாடிக்கூடாகக் கண்டு வியந்து கொண்டிருந்த உலகநாதபிள்ளை பழைய கசப்பான சம்பவங்கள் நினைவூட்டப்பட்டுப்போலும் பெருமூச்சொன்றை விட்டுக் கொண்டார்.

"கூப்பிட்டீர்களா?" என்று கேட்டுக்கொண்டு வந்து நின்றான் பெருந்தகை. "ஆம் தம்பி! இவர்கள் வழமையாகத் தாம் செய்யும் வேலைகளைச் செய்யட்டும். நீர் நின்று ஆட்களை ஊக்கப்படுத்தி விட்டாற் போதும். நான் மூன்று பாரம் கல் ஏற்றிக் கொண்டு வந்து இந்தத் தெருவிற்குக் கொட்ட வேண்டும். மூன்றரை மணிக்கு வந்து உம்மை விடுவேன். அப்புறம் டியூசனுக்குப் போகலாம்." என்று சொல்லி முடித்து "இந்தா சிவக்கொழுந்து இன்னும் பதினைந்து நாட்களுக்குள் வசாவிளான் சந்திக்குப் போய்விடவேண்டும். எல்லாரும் தன் தன் வேலையைச் சரிவரச் செய்தால்தான் அது ஒப்பேற முடியும்." என்றவர் "இளையவன்! லொறியில் ஏறிக் கடகம் மண்வெட்டிகளை எடேன்! பார்த்துக் கொண்டு நிற்கிறாயே! உனக்குக் காதும் கேளாது. என்பாடு கத்திக் கத்தி வயிறும் புண்ணாகிவிட்டது!" என்ற போது பெருந்தகை திடுக்கிட்டான்.

# 16. எல்லாம் நன்மைக்கே.

"அன்று என்னுடன் மோதுப்பட்டு என் உடைகளைப் பாழாக்கிய இளையவனுக்குக் காது செவிடா? அதனால்தான் நான் கிலுக்கிய மணி ஒலி காதில் விழாமல் என் மிதிவண்டியில் மோதிக்கொண்டானோ? பாவம் வலிமை குறைந்தவன், செவிடன் என்று அப்பொழுதே அறிந்திருந்தால் அந்த நிமிடத்திலேயே மன்னித்து விட்டிருப்பேனே!" என்று எண்ணிக் கொண்டிருந்தபோது இளையவனும் இன்னொருவனும் லொறிக்குள் ஏறி மண்வெட்டி கடகங்களை எடுத்துப் பசும் புற்தெருக்கரையில் போட்டுவிட்டுக் குதித்தனர். லொறி நகர்ந் தோடத் தொடங்கியது. அந்தச் சூடேறிய வெய்யிலில் தெருக்கரை ஆல், அரசு வாகை மரங்களின் கருநிழல்களை ஏந்தி ஏந்தி வழுக விட்டுக் கொண்டே லொறி ஓடிய திசையைப் பார்த்துக் கொண்டு நின்றான் பெருந்தகை.

வேலையாட்கள் அவன் எந்தவித அதிகாரங்கள் காட்டாதிருக்கவும், அவனைக் களவாய்ப் பார்த்து விழிப்பதும் வேலை செய்வதுமாக இருந்தனர். அவர்களின் பேதைமையையும் அச்சத்தையும் காணப்பரிதாபமாக இருந்தது பெருந்தகைக்கு! அவற்றை அந்த நொடியிலேயே நீக்கிவிட விரும்பினான் அவன். ஆனால் இவர்களை எடுத்த எடுப்பில் நம்பி இத்தகைய நடவடிக்கையில் இறங்குவதும் விவேகமில்லை. முதலாளியினதோ, பொறுப்பாளியினதோ இரக்க நெஞ்சினையும் மனிதத் தன்மையினையும் பலவீனங்களாகக் கருதி வேலையில் சோம்பி நின்று, முதலாளியையும் குட்டிச்சுவராக்கி, தங்கள் தொழில் வசதிகளையும் பாழடித்துக் கொள்ளும் தொழிலாளர்களும் உலகில் இருக்கிறார்கள். மனச்சான்றிற்கு மாறில்லாமல் ஒழுங்காக வேலை செய்து நியாயமெனக் கண்டால் கடமையைச் சரியாகச் செய்து கொண்டே உரிமைகளைக் கேட்பவர்களும் இருக்கிறார்கள். இந்த இரண்டு வகையில் இந்தத் தொழிலாளர்கள் எதைச் சேர்ந்தவர்கள் என்று கண்டு கொள்ளும் வரை அனுதாபத்தை அடக்கி வைத்திருப்போம் என்று தீர்மானித்துக் கொண்டு அவர்கள் போக்கை அன்று முழுவதும் உற்றுக் கவனித்தான். பெரும் பாலானோர் விசுவாசத்தோடு பாடுபட்டார்கள். தேவையற்ற விதத்தில் பெருந்தகைக்குப் பயந்துங் காணப்பட்டனர். நண்பகற் பொழுதைத் தாண்டிய நேரம் சிவக்கொழுந்துக் கிழவன் அவனிடம் வந்து "ஐயா 12 மணிக்குச் சாப்பாட்டுக்காக ஓய்வு தருகிறவர் பெரிய ஐயா" என்று பணிவாகச் சொன்ன சமயம் நேரம் ஒரு மணிக்கு மேலாகியிருந்தது. பெருந்தகை பதைத்துப் போனான்.

அதே தினம் இன்னொரு நிகழ்ச்சி! ஒரு தடவை தார் வண்டியைத் தள்ளிச் செல்ல வேண்டியிருந்தது. தாமெல்லோரும் முயன்று முயன்று தள்ளிப்பார்த்தும் அது அசையாமை கண்டு சலித்தார்களே ஒழிய அவனையும்

ஒரு கைகொடுக்கும்படி கடைசிவரை அவர்கள் கேட்கவேயில்லை. அதைக் கண்டு அவன் தானாகப் போய் வண்டியை அவர்களுடன் சேர்ந்து தள்ளி நகர வைத்து ஓடச் செய்தான். வழக்கத்தில் பத்தரை மணிக்குத் தேநீர் பருகவோ, விரும்பினால் கள்ளருந்திவரவோ, வெற்றிலை பாக்குப் போடவோ அரைமணி நேர ஓய்வு எடுப்பவர்கள். அதைப் பற்றிய பேச்சே எடுக்காமல் வெய்யிலில் புலுண்டிப் புலுண்டி நின்று வேலை செய்து விட்டார்கள். இதை அன்று பிற்பகல் அறிந்த போது பெருந்தகை மிகவும் பதறிப்போய் விட்டான்.

ஐயோ! அத்துணைப் பயங்கரவாதியா நான்? கொலைகாரனைக் கண்டதுபோல் என்னைக் கண்டஞ்சுகிறார்களே இந்த மனிதர்கள்? நான் என் மனமறிய எந்தப் படுபாதகத்தையும் செய்தது கிடையாதே!.

அந்தச் செவிட்டு இளையவனிடம் – இரக்கம் காட்டப்படவேண்டிய ஒரு நோயாளியிடம் ஈனஇரக்கமின்றி நடக்க முயன்ற இராட்சதன் என்று எண்ணி வெறுக்கிறார்களோ? அவன் செவிடன் என்பது எனக்கு அப்பொழுது தெரியாது என்பதை இவர்கள் அறிவார்களா? ஆமாம் எனது முரட்டுத்தனம் செய்த வேலைதான் இதெல்லாம்!

இனி எப்படி, நான் பழிக்கு அஞ்சுபவன் என்ற மறுக்க முடியாத உண்மையை அவர்களுக்கு நான் புலப்படுத்துவேன்.? நீ கெட்டவன் என்று பிறர் சொல்லவரும் பொழுது உண்டாகும் ஆத்திரம் மற்றவர்கள் அப்படி நம்மைப்பற்றி மனதுள் நினைப்பதாக நமக்கு அஞ்சுவதாக உணரும் பொழுது ஏற்படுவதில்லை. ஆத்திரத்துக்குப் பதிலாகத் தாங்கமுடியாத துயரமும், அடக்க முடியாத குமுறலும் தான் நம்முள்ளத்தை ஆட்கொள்கின்றன.

"ஆரிய குளத்தடிச் சம்பவத்தில் நான் ஆத்திரங் கொண்டதற்குக் காரணம் நானில்லை. உலகநாதபிள்ளை ஒரு புறமும், எனது வறுமை ஒரு புறமும் காரணமாகி என் பொறுமையைத் தகர்த்துவிட்டதால் அப்படி நடந்து கொண்டேன்!'' என்று விளக்கிக்கூற ஆசைப்பட்டான் பெருந்தகை.

ஆனால் இதையெல்லாம் கிளறிப்பேசப் போனால் மீண்டும் சில புதுக்குற்றங்களைப் புரிந்துவிட நேரும். உலகநாதபிள்ளையையும் வெளிப்படையாகக் குற்றஞ்சாட்ட வேண்டிவரும். அதனால் நல்லபயன் அதிகம் கிடைக்கப்போவதுமில்லை என்பதால் அதைத் தொட்டுப் பேசுவதைக் கடினமான ஒன்றாகக் கருதி அவன் அடங்கவேண்டியதாயிற்று.

ஒருவன் தன்னைப்பற்றிய சங்கதிகளில் அனேகமானவற்றைப் பிறரின் தன்மதிப்பீட்டுக்கு விடுவதே நல்லது. தன்னைப் பற்றிய தீயவற்றைச் சரி நல்லவற்றைச்சரி பேசப்புகுவது அவனது மதிப்பைச் சமூகத்தில் குறைத்துவிடுமாகையால் காலம் உண்மையை உணர்த்தும் வரை காத்திருக்கத் தயாரானான் பெருந்தகை.

சுவாமி விவேகானந்தர் இறைவனிடம் கேட்டு நின்ற வரங்களில், தாம் அவ்வப்பொழுது செய்யும் வேலைகளிலேதான் அவ்வவ்வேளை நூற்றுக்கு நூறுவீதம் தாம் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பதும் ஒன்று. அதனை ஞாபகத்தில் கொண்டு அன்று முழுவதும் பெருந்தகை தனது மேற்பார்வைக் கடமையில் ஒன்றிக் கலந்து நின்றான்; வேலைக்காரரின் வேலைத் திறனை வேலை விரைவை, அளவை, அதன்மேல் காட்டும் அக்கறையை அவற்றிற்கான காரணங்களை மதிப்பிட்டுப் பழகியவண்ணம் நின்றான்.

அப்பொழுது நேரம் கிட்டத்தட்ட மூன்று மணியிருக்கும் என்பதை அவனது பசித்த வயிறு நினைவூட்டவும் கிழக்கில் நீண்டு கிடந்த தன்னிழலைக் கண்டும் உணர்ந்து கொண்டான் அவன். காலையில் அவன் தாய் கட்டித்தந்த உணவுப் பொட்டலமும் கையுமாகக் கிட்டடியில் இருந்த ஒரு உணவுக் கடைக்குள் நுழைந்த பொழுது அன்று காலை போட்டு வைத்த பத்துச்சத நாணயம் சட்டைப்பைக்குள் இருக்கிறதா என்று கையால் பிடித்துப் பார்த்துக் கொண்டான். ஒரு வெறும் தேநீருக்குச் சொல்லிவிட்டு உணவுப் பொட்டலத்தைப் பிரித்துச் சாப்பிடத் தொடங்கினான்.

சற்றைக் கெல்லாம் கடைக்குள் நுழைந்த இரண்டு முதியவர்கள் பெருந்தகைக்கு எதிரில் அமர்ந்து கொண்டே இரண்டு பால் தேநீருக்கு மனுச் செய்தார்கள். அவர்களில் ஒருவர் தொண்டையைக் கனைத்துவிட்டுக் கொண்டே தொடர்கதை ஒன்றின் இடையில் வரும் ஓர் அத்தியாயத்தினைத் தொடர்வது போல் பேசத் தொடங்கினார்.

“இந்தப் பையனைப் பாருங்கள். இவன் அந்தக் குடும்பத்தில் சம்பந்தம் செய்வதால் வேறு எங்காவது கௌரவத்தோடு மிடுக்கோடு நல்ல சீதனம் வாங்கிக் கல்யாணங் கட்டக்கூடியதாக இருக்கும் வாய்ப்பினை இழக்கிறான். இதுவுமல்லாமல் பெண்வீட்டாரும் “இவன் தானாக வந்து புகுந்தவன்தானே! என்று இவனை இளக்காரமாய் மதிப்பில்லாமல் நடத்தப்பார்ப்பார்கள். ஊரிலும் “தன் எண்ணத்திற்குப் பெண் எடுத்தவன்! பெற்று வளர்த்தவர்களுக்குத் துரோகம் செய்தவன்” என்று எல்லாராலும் அலட்சியம் பண்ணப்படவும் போகிறான். திருமணத்திற்குப் பின் இவனுக்கும் அந்தப் பெண்ணுக்குமிடையில் தகராறு ஏதும் வரும்போது மனக்கசப்புகள் உண்டாகும் போது, பணமுடை ஏற்படும் போது, நோய் நொடி வந்து பிறரின் உதவி தேவைப்படும்போது யாரின் உதவியையும் நாடவும் மனம் துணியாமல் நிலைமையைச் சமாளிக்கவும் முடியாமல் திண்டாடவும் நேரிடும். இவனுக்கு உதவுவதற்குப் பிறந்த இடமும் பின்வாங்கும் புகுந்த இடமும் முன்வர மாட்டாது. ஊருலகம் ஒப்பாத வரவேற்காத ஒரு திருமணம் தற்கொலைக்குச் சமம்! என்ன செய்யப் போகிறானோ முட்டாள் பயல்!”

அவர்கள் முதியவர்கள் நாலு அனுபவமும் தெரிந்தவர்கள்! அந்தப் பெரியவர் என்ன அழகாக எவ்வளவு சுருக்கமாகக் கூறிவிட்டார் காதல் மணம் புரியும் ஒருவன் நிலைமைபற்றி! அவர் சொன்னதை விடவேறெப்படி நடக்க முடியும்? காதல் உணர்விற்கு உள்ளம் நெகிழ்ந்து தன்னைவிட்டுக் கொடுத்தால் பெருந்தகையின் நிலைமையும் நாளை இப்படித்தானே! தனக்கு நடக்கக் கூடிய அவமானங்களை அதனால் தான் அனுபவிக்க வேண்டிய மீளா நகர வேதனைகளைக் கற்பனையில் தெளிவாகக் கண்ட பொழுது...... அவனது காதல் தவிர்ப்பு நிலைப்பாடு மேலும் வலுவடைந்தது.

சாப்பாட்டு இலையையும் கடதாசியையும் கசக்கிச் சுருட்டிக் கொண்டு எழுந்து இலைத் தொட்டியில் வீசி, வாய் கைகளைக் கழுவிக் கொண்டு திரும்பித் தேநீரை அருந்தி, சட்டைப்பைக்குள் கைவிட்டுத் துழாவிப் பத்துச் சத நாணயத்தை எடுத்துக் கடை முதலாளியிடம் கொடுத்து மிகுதி ஐந்து சதத்தை வாங்கிச் சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டான்.

அவன் எதிர்பார்க்காமலே நான்கு மணியும் பிள்ளையவர்களின் லொறியும் சேர்ந்து வந்துவிட்டன. “நீர் போகலாம்” என்று உலகநாதபிள்ளை சொன்னது காதில் விழுந்து பல நிமிடங்களான பின்பும் குழம்பிக் கொண்டு முகங்கறுத்து நின்ற பெருந்தகை பெருமூச்சோடு போய் மிதி வண்டியை எடுத்துக் கொண்டு கிளம்பினான்

பெருந்தகை பின் கதவுவழியாகப் படிப்பறையுள் நுழைந்த பொழுது ஆவல் ததும்பி வழியும் விழிகளை வாயிற்பக்கம் நிறுத்திக் காத்துக் கிடந்த பூங்கொடி அடக்கமாக எழுந்து தலைகுனிந்து நின்று கைகூப்பினாள். பெருந்தகை பதிலுக்குக் கைகூப்பியதை அவள் பொருட்படுத்தவில்லை.அவள் பொருட்படுத்தாததைப் பொருட்படுத்தி அவன் வியப்படைந்தான். தன் இன்றைய பிரார்த்தனை பலித்ததோ என்று நிம்மதியுற்றான். பெருந்தகையின் முகத்தை அவன் பார்க்காத நேரங்களில் பார்த்து மனம் நிறைவது பார்க்கக் கூடும் என்றுபடும் நேரங்களில் தனது நெஞ்சில் நிறைந்தவனின் புகழுக்காகவே தான் அக்கறையோடு படித்து வெற்றிபெறுவது போன்ற கட்டங்களில் தலை நின்றாள் பூங்கொடி. படிப்பித்தல், படித்தல் என்பன மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. இடையில் இடையில் வந்து எட்டிப் பார்த்த பூங்கொடி அன்னையும் அப்பனும் கற்றலின் அற்புதநிலைகளை மனதுள் வியந்து சென்றனர். பூங்கொடி அவர்கள் வந்து நுழைவதில் அருவருப்படைந்தாலும் தன்னை அடக்கி நடந்துகொள்ள அவள் எடுத்த தீர்மானம் தன்னை இத்தகைய சந்தர்ப்பங்களில் பிடிபடாமல் காப்பதையறிந்து கடவுளை வியந்தாள். இதனால் தானோ “எல்லாம் நன்மைக்கே” என்று சொல்வார்கள் என்று எண்ணிக் கொண்டாள்.

"கடவுள் இந்த நிம்மதியை நிரந்தரமாகத் தருவார் போலும்'' என்று நம்பி அவள் ஆறுதலடைந்து கொண்டிருக்கையில் பூங்கொடி தன் பெற்றார்களின் கண்களில் நல்லபிள்ளையாகவே பட்டுவிட்டது பற்றிய நிம்மதியோடு காணப்பட்டான் பெருந்தகை.

## 17. மனக்குரல்கள் மாறவில்லை.

**மா**ரி காலத்து வானம் போல் பூங்கொடியின் முகம் இருண்டு கண்கள் சோர்ந்து கிடந்ததை வந்த முதலிலேயே கவனித்தவன் அவளையும் மீறிக்கொண்டு அவள் முகத்தில், அடைமழை நாட்களிலும் சில நிமிடங்களாவது வானம் வெளித்துச் சிரிப்பது போலப் பாசம் முகங்காட்டி மறைந்து கொண்டிருந்ததையும் அவதானிக்கத் தவறவில்லை. ஒளிக்கதிர் போன்ற உண்மை மனநிலை எத்தனை தடை முயற்சிகளிடையிலும் வெளிப்பட்டே தீரும் என்ற உண்மைக்கு இலக்கணமாகப் பூங்கொடி தன்னையடக்கித் தன் ஆர்வத்தை மறைக்க முயன்று முழுக்க முழுக்கத் தோற்றுக் கொண்டிருக்கிறாள் என்றறிந்த அவன் மனதுக்குப் பெரும் ஏமாற்றமாக இருந்தது.

அன்று அதுவரை இரசாயனம் பௌதிகவியல், கணிதம் உயிரியல் முதலிய நான்கு பாடங்களிலும் ஏராளமான விடயங்கள் படித்து முடிக்கப்பட்டிருந்தன. நேரமும் ஏழரையைத் தாண்டிவிடவே படிப்பை நிறுத்திப் புத்தகத்தை மூடிக் கொண்ட பெருந்தகை எழுந்த போது தானும் எழுந்து நின்ற பூங்கொடியின் துயரம் தோய்ந்த முகத்தை அவன் ஏறிட்டு நோக்கினான். அவள் கடை விழியில் இந்தக் காட்சி தெரிந்தது போலும். வாட்டத்தினிடையிலும் தன் செம்பட்டுக் கன்னங்களில் நாணச் சிவப்பேற அவனது காலடிகளைப் பார்த்தபடி தலை தாழ்த்தி நின்றாள் அவள்.

தெருத்திருத்துதல் வேலை மும்முரமாக நடந்துகொண்டிருந்தது. தானோர் உதவி மேற்பார்வையாளன் என்பதையும் மறந்து தொழிலாளிகளோடு தொழிலாளியாக அந்தப் பகிரங்க வீதியில் மண்வெட்டி பிடித்து, கடகமேந்தி, மொங்கான் குத்தி, தண்ணீர் இழுத்துப்பாடுபட்டான் பெருந்தகை. அவன் பெறும் சம்பளக்கணக்குப்படி தினம் பாடஞ்சொல்லிக் கொடுப்பதோடு தெருவிலும் வேலை செய்யப்படவேண்டும் என்று அவன் தீர்மானித்துக் கொண்டு அதற்கிணங்கப் பாடுபட்டான்.

தொழிலாளிகள் நாளாக நாளாக அவனைச் சரியாகப் புரிந்து கொண்டனர். ஒரு முரட்டு உருவத்துக்குள் ஒரு மலர் போன்ற உள்ளமும் பல மணம் கமழும் பண்புகளும் நிறைந்து கிடப்பதைக்கண்டு வியப்படைந்தனர். பதினைந்து நாட்களில் செய்து முடிக்க வேண்டிய அந்த வேலை பதின்மூன்று நாட்களில் திறம்பட நிறைவேற்றப்பட்டதையிட்டு உலகநாதபிள்ளைக்கு மட்டற்ற மகிழ்ச்சி! தொழிலாளர்களுக்குப் பெருமிதம்; பெருந்தகைக்கு மனநிறைவு.

ஐந்து நாள் ஓய்வின் பின் வெள்ளவாய்க்கால் திருத்தும் வேலைத் தொடர் ஆரம்பமாகவிருந்தது. கேள்விப் பத்திரப் பொருத்தப்படி தாவடிச் சந்தியிலிருந்து பண்ணைக் கடற்கரை வரைக்குமுள்ள பிரதான வெள்ள வாய்க்காலில் மண்டிக் கிடக்கும் புதர்களை வெட்டி, கற்கள் பொறுக்கிக் குவிக்கப்பட்டு லொறிகள் மூலம் அப்புறப்படுத்தப்பட்டு, கஞ்சல் குப்பை அகற்றித் துப்புரவாக்கப்பட்டு வெள்ளம் தங்கு தடையின்றி வாய்க்காலில் தேக்கமின்றி ஓடிக்கடலில் விழுமாறு அது ஒப்புரவு செய்யப்படவேண்டும். இதற்கென்று ஒரு நாள் செலவிட்டு அந்த வெள்ள வாய்க்காலை முழு நீளமாக அடிநின்று தலைபோகப் பார்வையிட்டான் பெருந்தகை.

அரைமணி நேரம் அந்தரங்கமாக அவனும் உலகநாதரும் அன்று பிற்பகல் சந்தித்து இவ்வேலை பற்றி ஆலோசனை நடத்தினர். ஆடி நிறைந்து ஆவணி பிறந்ததோ இல்லையோ வானமெங்கும் மழை மேகங்கள் கவியத்தொடங்கிவிட்டன. அரசியல் கூட்டங்கள் கூடுவதும் அடிதடியில் முடிந்து கூட்டங்கலைவதும் போலக கருமுகில்கள் கூடித்திரண்டு மூட்டமிடுவதும், காற்றுச் சுழன்று வீசி அவற்றைக் கலையச் செய்வதுமாக இருந்தன.

வெள்ள வாய்க்கால் வெட்டும் வேலையைத் திறம்படத் திட்டமிட்டு வெற்றிகரமாகச் செய்து முடிக்கப்பெருந்தகை பெரிதும் விரும்பினான். வேலை தொடங்கிய அன்று காலை முதல் வேலையாகக் கூலியாட்களைப் பண்ணைக் கடற்கரையிலுள்ள ஒரு பூவரச மரநிழலுக்கழைத்துச் சென்று தாங்கள் அன்று தொடங்கவிருக்கும் பெரிய வேலையைப் பற்றி அவர்களுக்குச் சுருக்கமாக விளக்கினான்.

“இந்த வெள்ள வாய்க்காலின் முழு நீளம் நான்கு மைல், இந்தத் தூரத்தைத் தொண்ணூறு நாட்களில் லீவு தள்ளி எழுபத்தைந்து நாட்களில் திருத்தி முடிக்க வேண்டும். தினமும் குறைந்தது நூறு நூறு யாராவது வெட்டப்பட வேண்டும். எனவே நாம் தினமும் நூறு யார் வேலையைத் திருத்தமாய்ச் செய்து முடித்தால் சரி! அத்துடன் பகல் மழைக்காலங்களில் வேலையைச் செய்யமுடியாத நிலை ஏற்படலாம். அந்த நாட்களின் பங்கை முன் கூட்டியே முடித்து வைக்க, இரா மழை பெய்த நாட்களிலும் பகல் மழை பெய்து அடுத்துவரும் நாட்களிலும் இரண்டு நாள் வேலையை ஒரு நாளில் செய்து வைத்து விடவேண்டும். இதனால் எங்களுக்குத் தான் நன்மை. நிலம் ஈரமாக இருக்கும் பொழுதும் வானம் மப்பும் மந்தாரமுமாக இருக்கும் பொழுதும் கூடுதலான வேலை செய்யலாம். அப்படிச் செய்வதால் கடும் மழை நாட்களில் மட்டுமன்றி நெருப்பு வெய்யில் நாட்களிலும் போதிய ஓய்வெடுத்து ஆடிப் பாடிக் களைப்பில்லாமல் வேலை செய்ய வழி ஏற்படும்” என்று சொல்லி நிறுத்தினான். எல்லார் முகங்களிலும் அவனது கருத்தை வரவேற்கும் குறி தெரிந்தது. இது

வரையும் தான் வெளியிடாமல் வைத்திருந்த ஒரு செய்தியைக் கடைசியாக விளக்கிப் பேசத் தொடங்கினான் பெருந்தகை.

“இப்பொழுது மாரிகாலம் ஆரம்பமாகிறது. இதனால் இனி அடிக்கடி சிறு மழை பெய்யத் தவறாது. இலேசான மழையும் மப்பும் மந்தாரமும் எங்கள் இந்த வேலைக்கு மிக்க உதவியாக இருக்கும் என்பது உங்களுக்கு தெரியும் கடும் மழைமட்டும் இப்படியான வேலைக்குப் பெரிதும் இடைஞ்சல் விளைக்கக் கூடிய ஒன்று, ஆனால் கார்த்திகை வரும் முன்னரே நாங்கள் விளையாடி விளையாடி முடித்து விடலாம் இந்த வேலையை. ஆகவே மூன்று மாதங்களில் அநேகமாக அறுபது நாட்களிலேயே வேலை முடிந்தும் விடலாம். நிச்சயமாக முடிக்க முடியும்.

ஆனால் எங்கள் எசமானரிடம் இவ்வேலையை எத்தனை நாட்களில் செய்து முடிக்கிறோம் என்று பார்க்காமல் எழுபத்தைந்து நாட்களுக்குரிய சம்பளத்தை உங்களுக்குத் தந்துவிடவேண்டும் என்று நான் கேட்டு இணங்க வைத்துள்ளேன். இந்த முடிவில் உங்களுக்கு திருப்தி இல்லையானால் நீங்கள் விரும்புகிறபடியே செய்யலாம் என்று கேட்டு எல்லார் முகங்களையும் ஒரு தடவை நோட்டம்விட்டான் பெருந்தகை. எல்லாக் கூலியாட்களும் தங்களுக்குள் காதோடு காதாக ஏதோ பேசிக்கொண்டதும் ஒரு கிழவன் தாழ்ந்த குரலில் “நாங்கள் மனம் வைத்துப் பாடுபட்டால் அறுபது நாளிலே முடித்து விடலாம். மிகுதி பதினைந்து நாட்களும் ஓய்வெடுக்கலாம் அல்லது வேறு தொழிலுக்குப் போகலாம். ஐயா! உங்கள் திட்டத்தை முழுமனதோடு வரவேற்கிறோம்” என்று பணிவுடன் கூறினான்.

வேலை மங்களகரமான குதூகலத்துடன் ஆரம்பமாகிற்று. இந்த வேலைத் தொடரில் பெருந்தகை உழைத்த உழைப்பு அந்தத் தொழிலாளிகளின் வேலைப்பளுவில் பெரும் பகுதியைக் குறைத்துக் கொண்டிருந்தது. அவன் உழைப்பில் காட்டிய ஆர்வம் என்னும் நல்ல உணர்வானது உடன் தொழிலாளிகளின் மனங்களிலும் பரபரவென்று தொற்றிக்கொண்டு உள்ளம் நிறைந்த ஆவலுடன் மகிழ்வுடன் உழைக்க அவர்களையும் தூண்டி நின்றது.

பண்ணைக்கடற்கரையிலிருந்து தொடங்கும் அந்த வாய்க்கால் புத்தம் புதிய வாய்க்காலாக மாறி முன்னேறிக் கொண்டிருந்தமை தொழிலாளிகளின் மனதில் உற்சாகம் வேகப் படவைக்கலாயிற்று. இடையிடையே பெய்த இரவு மழைகள், முகிலிட்ட பகல் மந்தாரங்கள் வேறு, அந்த வேலையை வேலையாக்காமல் இன்பம் தரும் விளையாட்டாக்கிக் கொண்டிருந்தன. “பெருந்தகை ஐயா தொட்டது துலங்கும் கைராசிக் காரர்தான்!.. இந்த மழைக்காலம் மற்ற ஆண்டுகளைப் போன்று பொய்க்காமல் மாதம் மும்மாரி பெய்கிறது என்று அந்தத் தொழிலாளர்களே வேலையின் பொழுது ஒரு நாள் சும்மா பார்த்துவிட்டுப் போக வந்த உலகநாதபிள்ளையிடம் கூறினார்கள் என்றால் பார்க்க வேண்டியதுதானே!

பெருந்தகை தன்மனத்தை நிறைத்து மாடாக உழைப்பது போல் முன்பெல்லாம் எதிரிகளாக இருந்த தொழிலாளிகளும் நெஞ்சுருக நடக்கிறானே

என்று எண்ணி வியந்தார் உலகநாதபிள்ளை. இவன் போன்ற பாலங்களால்தான் உண்மையில் முதலாளி தொழிலாளி இணைப்பு நல்லுறவு ஏற்பட முடியும் என்று கொள்வதற்குப் பதிலாக இவன் முழுக்க முழுக்க முதலாளியான எனக்காகவே உழைப்பவனாகிவிட்டல் எவ்வளவு இலாபமாகி விடும்'' என்று ஏங்கலானார்.

பெருந்தகை மேற்பார்வைத் தொழிலில் எவ்வளவு அக்கறை செலுத்தினானோ அவ்வளவுக்குப் பூங்கொடிக்குப் பாடஞ் சொல்லிக் கொடுப்பதிலும் அக்கறை காட்டலானான். பாதி தான் வாங்கும் பணத்திற்கு வேலை செய்ய வேண்டும் என்ற மனச் சான்றின் கோரிக்கையால், கால்வாசி உலகநாதபிள்ளை அன்பு நம்பிக்கை என்பவற்றால். மிகுதி கால்வாசி தன் மனப்புண்ணாறப் பூங்கொடி பரீட்சையில் திறம்படச் சித்தி எய்திட வேண்டும் என்ற ஆர்வத்தால் அவன் அப்படி நடந்து கொண்டான்.

## 18. சாம்பரிலும் உயிர் மூச்சு

ஒரு நாள் உலகநாதபிள்ளை ஓட்டி வந்த லொறியில் அவருக்குப் பக்கத்தில் அமர்ந்து வந்த பெருந்தகையிடம் "எப்படித் தம்பி பிள்ளை படிப்பிலே? இம்முறை விசேட புள்ளிகளோடு பரீட்சையில் சித்தி பெறுவாளோ?'' என்ற வினாக்களைப் போட்டார் அவர்.

"ஆமாம் நன்றாகப் படிக்கி'து! நிச்சயம் எல்லாப் பாடங்களிலும் விசேட புள்ளிகளோடு சிலவேளை 1ஆம் பிரிவிலும் சித்தி எய்தலாம்.''

"அது தான் கேட்டேன் தம்பி! எனக்கு அடுத்து அடுத்து ஆறுபிள்ளைகள் பிறக்கப் பிறக்க அவற்றை ஒவ்வொன்றாகப் பறித்துக் கொண்டு என்னை ஏழையாக்கி வந்த கொடிய காலன் ஏழாவது பிள்ளையைத்தான் விட்டு வைத்துள்ளான். அந்த ஒன்றையே வைத்துக் கொண்டு ஏழு பிள்ளைகளாற் பெற்றிருக்கக்கூடிய பேறுகள் அவ்வளவையும் பெற்றுவிட ஆசைப்படுகிறேன். அந்த நான்கு ஆண் பிள்ளைகளும் உயிரோடிருந்திருந்தால் அவர்கள் அத்தனை பேரையும் டொக்ரர்களாகவும், எஞ்சினியர்களாகவும் ஆக்கிவிட்டுப் பெருமை கண்டிருப்பேன். இரண்டு பெண்பிள்ளைகளும் இறவாமல் இருந்திருந்தால் நல்ல நல்ல குடும்பங்களில் நல்ல நல்ல பதவிகளில் அரசசேவை உத்தியோகத்தில் இருப்பவர்களுக்குக் கட்டிக் கொடுத்திருப்பேன்.

அதற்காகக் கிடைத்த ஒரு பூங்கொடியையே டொக்ரருக்குப் படிக்க வைத்து C.A.S. உத்தியோகத்திலுள்ள செல்வந்தன் ஒருவனுக்கு, நல்ல குடும்பத்தில் பிறந்த கண்நிறைந்த ஒருவனுக்குக் கோலாகலமாகத் திருமணம் செய்து வைத்துப் பார்க்க வேண்டும் என்ற ஒரே ஆவல்தான் எனக்கும் அவள் தாய்க்கும்'' என்று

அவர் கலக்கத்தோடு சொன்னபோது புழுதியில் குளித்த உருவம், தாடி அடர்ந்த முகம், நாய்பிடுங்கிய பனம்பழம் போன்றதலை இப்படியிருந்த ஏழைப் பெருந்தகை பூங்கொடியின் விருப்பத்துக்கு மசிவதில்லை என்று தான் எடுத்திருந்த முடிவு எவ்வளவு சரியானது என்று நினைத்து நிம்மதிப் பெருமூச்சுவிட்டுக் கொண்டான்.

லொறியைக் கிடங்கு முடங்குகளில் விழாமல் எதிரே வரும் போகும் வண்டிகளுடன் மோதாமல் ஓட்டுவதிலேயே கண்களைப்பதிய விட்டிருந்த உலகநாதபிள்ளை "இப்பொழுது காணி, பூமி, நகை, நட்டு வீடுவாசல் எல்லாமாக மூன்று லட்சத்திற்கு மேலாக இருக்கிறது. இவ்வளவு சொத்தும் போதாதா தம்பி என்கனவு நிறைவேற?" என்று கேட்டபோது இடைமறித்துத் "தாராளமாகப் போதும்" என்று மகிழ்ந்தான் பெருந்தகை.

பெருந்தகை தானும் தம் தம்பியர் நால்வரும் இறக்க நேர்ந்தால் தனது பெற்றார் எவ்வளவு பதைப்புப் பதைப்பார்கள் என்று எண்ணிப் பார்த்ததன் விளைவாகப் பூங்கொடியின் ஆசைக்கனவு தகர்ந்தாலும் உலகநாதபிள்ளை தம்பதிகளின் நீண்டகாலக்கனவு கட்டாயம் நிறைவேற்றப்பட வேண்டும். அவர்கள் ஏமாற்றப்படுவது போன்ற கொடிய பாவம் உலகிலேயே இல்லையென்று எண்ணி அனுதாபத்தோடு அவர் முகத்தைத் திரும்பிப் பார்த்தான்.

அந்தக் குடும்பத்தவரோடுள்ள சாதாரண தொடர்புகளுக்கும் அன்றே முழுக்குப் போட்டிருப்பான், தன் குடும்பத்தைக் காப்பாற்றும் கடமை, காணி வாங்கும் ஆசை இது வரை நிறைவேறியிருந்தால். ஆனால் இந்த இரண்டு மாதத்தேட்டமாக ஐந்நூறு ரூபா அவன் கையில் இருந்தது. தகப்பனும் நானூறு அளவில் வியாபாரத்தில் சம்பாதித்து வைத்திருந்தார்.

"உலகநாதர் வீட்டில் நானும், கள்ளுக் கடையில் அப்பாவும் இன்னும் மூவாயிரம் ரூபா உழைத்திட இன்னும் ஏழு மாதங்கள் செல்லும். நான் உலகநாதர் வீட்டு வேலையை உதறித்தள்ளினால் எனக்கு உடனே வேலை கிடைக்குமோ என்பது முதற் பிரச்சினை. கிடைத்தாலும் இந்தப் பெரிய சம்பளம் கிடைக்குமோ என்றது அடுத்த பிரச்சினை. அவ்வளவுதான் கிடைத்தாலும் இப்பொழுது போல் முழுவதையும் மிச்சம் பிடிக்கமுடியுமா என்பது மிக முக்கியமான இன்னொரு பிரச்சினை. ஆகவே காணி வாங்கித் திருத்தப் போதுமான பணம் சேரும்வரை நடப்பது நடக்கட்டும் என்று பொறுமையோடு நடந்து கொண்டுவிட்டுத் தேவை முடிந்ததும் விலகி விடுவது என்று எண்ணியிருந்தான் அவன்.

பூங்கொடியோ பெருந்தகை பிரிந்து செல்வதற்குள் தான் இறந்து விடுவதாகப் போட்ட திட்டத்தை எவ்வளவோ சோதனைகளுக்கிடையே தனது உறுதியைத் துருவிப் பார்க்கும் பசியோடு போராடிப் போராடிச் செயற்படுத்தியே வந்தாள். உடல் தளர்ச்சி, களைப்பு விரக்தி என்பவற்றுடன் எதிர்த்து நின்று நின்று வெற்றி பெற்றுப் பெற்று வழுகாது செயற்படுத்தி வந்தாள். அதாவது

வழமையான உணவில் மூன்றில் ஒரு பங்கு கூட உண்பதில்லை. அதனால் முன்பிருந்த குளுமையான தோற்றமும், மினுமினுப்பான வதன எழிலும் மூன்றில் ஒன்றாகச் சுருங்கி இளைத்துக் கருகிய மலராகி விட்டாள். ஆயினும் உள்மனத்துள் ஒருவித சாந்தி நிலவிற்று. பாவச் சொத்தின் பாவனை குறைந்ததன் பலன் அது என்பது பூங்கொடியின் யூகம். அவள் உருவில் ஏற்படும் கவலைக்குரிய மாற்றங்களைப் பார்த்துப் பெருந்தகை உருகுவதில்லை. ஆனால் பூங்கொடி வீட்டில் அடுத்தடுத்து நடந்த சம்பவங்கள் அவனது மனச்சாம்பரைக் கொண்டு உயிருள்ள உணர்வுள்ள மனத்தை மீண்டும் படைத்துவிடும் மந்திர வித்தையைச் செய்து காட்டி வந்தன.

உலகநாதபிள்ளையின் பேராவலை அறிந்து கொண்ட நாளிலிருந்து பெருந்தகை வரண்ட நெஞ்சுடன் குறைந்த பேச்சுடன், சிரிப்பே எட்டியும் பார்க்காத முகத்துடன் பாடஞ்சொல்லிக் கொடுத்து வந்தான். பூங்கொடி படிப்பில் கவனம் செலுத்த வேண்டும் என்ற இலட்சியவெறி ஒரு பக்கம் உழைத்தே வாழும் உத்தமனான அவன் பெறும் ஊதியத்திற்கு யோக்கியதை உள்ளவனாக அவன் போதிய அளவு பாடுபட உதவ வேண்டும் என்ற கருணை ஒரு புறம் தூண்ட முடிந்தவரையும் ஒவ்வொரு நிமிடமும் விழிப்புடன் நடந்து வந்தாள். ஆயினும் பாடம் நடக்கும் வேளைகளில் பல சமயம் இருந்திருந்தாற் போலத் தன்னை மீறி எழுந்து எழுந்து வெளியே ஓடுவாள். மீண்டு வரும் போது கண்கள் வீங்கிச் சிவந்திருக்கும்.

ஒருநாள் பெருந்தகை பூங்கொடிக்குப் பாடஞ் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கையில் அறைவாசலில் வந்து நின்ற பூங்கொடியின் அம்மா "தம்பி இந்தப்பிள்ளைக்கு நீர் என்றாலும் சொல்லிப்பாரும். இவள் வர வர எங்கள் சொல்லைக் கேட்கவே மாட்டேன் என்கிறாள். தகப்பன் ஆசையோடு வாங்கிக் கொடுக்கிற நகை ஒன்றையும் போட்டுக் கொள்ளமாட்டேன் என்கிறாள். கழுத்து நிறைகிற சங்கிலி நான்கு சோடி காப்பு சிமிக்கித்தோடு, அட்டியல், ஒட்டியாணம் என்று எத்தனையோ நகைகள் பெட்டிக்குள் காத்துக்கிடக்கின்றன. காதுக்குச்சியோடும் வெறுங் கழுத்தோடும் திரிகிறாள். பாரும்" என்று சொல்விட்டுப் "படிப்பைக் குழப்பக்கூடாது" என்று எண்ணிப் போலும் திரும்பி உள்ளே போய் விட்டாள்.

"பூங்கொடி" பெருந்தகை பாலை வனக் காற்றுப் போன்ற குரலில் அழைத்தான். குனிந்த தலை நிமிராமல் "சொல்லுங்கள்" என்று தெளிவான குரலில் பதிலளித்தாள் பூங்கொடி!.

"நீங்கள் நகைகள் போட்டுக் கொண்டால் என்ன?"
"நகைகள் எதற்கு?,"
"அழகுக்கு"
"அழகு எதற்கு?"

பெருந்தகை ஒரு முனையில் தோல்வியை ஒப்புக்கொண்டு நெஞ்சம் நெகிழ்ந்தவனாய் மறு முனையால் தாக்கத்தலைப்பட்டான். "இப்படியெல்லாம் நீங்கள் பெற்றோரின் இதயத்தை வேதனைப் படுத்தும் காரியங்களில் இறங்கவே கூடாது. நீங்கள் ஆசைக்கு ஒரு பிள்ளை அவர்களுக்கு, அவர்கள் இருவரதும் உயிர்களும் உங்கள் உயிரில் கலந்துதான் இருக்கின்றன பூங்கொடி. அவர்கள் மன மகிழ்ச்சிக்காக என்றாலும் நகைகளை அணிந்து கொள்ளக்கூடாதா?" என்று கெஞ்சுவது போலக் கேட்டான். "பெற்றோரின் விருப்பத்திற்கிணங்கவும் அவர்கள் மகிழ்ச்சிக்காகவும் நான் வாழ்ந்த காலம் முடிவடைந்து இரண்டு மாதங்களாகிவிட்டன?"

"அப்படியானால் இப்பொழுது நீங்கள் உங்கள் விருப்பத்திற்காகவே வாழும் வெறும் தன்னலக்காரியாக மாறிவிட்டீர்கள். அப்படிச் சொல்லுங்கள். பெற்றவர்களுக்கு ஒரே பிள்ளையான நீங்கள் என்றென்றும் பெற்றோருக்காகவும் ஒரு பகுதி வாழவேண்டிய நீங்கள் இப்படித் தன்னலக்காரியாகி விட்டது கொஞ்சம்கூட நன்றாயில்லை."

"அப்படி நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டால் அதற்கு நான் பொறுப்பில்லை. நான் என் மனத்திருப்திகாக எனது தன்னலத்திற்காக நகைகளை அணியாமல் விடவில்லை."

"அப்படியானால் யாருக்காக? யார் மனத்திருப்திக்காக?"

"அதை இங்கு சொல்வதால் எந்தவித நன்மையும் இல்லை. என்றாலும் சொல்கிறேன். என் கொழுநனின் மனத்திருப்திக்காக. அந்தச் சீவன் ஏழ்மையால் நலிந்து தடுமாறித் துயர்பட்டுத்திரிய நான் மட்டும் நகை அணிந்து சந்தோசமாக உலாவர எனக்கு விருப்பமில்லை."

## 19 அந்தரங்கப் போராட்டம்

"நீங்கள் அணிமணிகள் பூட்டி அழகு தேவதையாகப் பெற்றோரின் ஆசீர்வாதத்தோடு சந்தோசமாக இருப்பதே நிச்சயம் அந்தப் பாவியின் விருப்பமாக இருக்கும்" என்று தொண்டை கரகரக்கக் கூறிவிட்டு ஆத்திரத்தோடு "போங்கள் பூங்கொடி! போய் அணிந்து கொள்ளுங்கள். அம்மா,அப்பாவை சந்தோசப்படுத்துங்கள்! போங்கள்! போங்கள்" என்று கத்திவிட்டுக் களைத்தவனாய்ச் சோர்வோடு மேசைமேற் சாய்ந்து விட்டான் பெருந்தகை.

அவன் சொல்லைத் தட்டக்கூடாது! என்னும் பேதைப் பண்பு பலவந்தப்படுத்த அழுது கொண்டே எழுந்து உள்ளே சென்றாள் பூங்கொடி! போய் வீட்டறையில் பெட்டகத்தைத் திறந்து பொன் காய்த்த மரமாகத் தன்னை அலங்கரித்துத் தாயின் உள்ளங்குளிர, உச்சி குளிரத் தன்னைக் காட்டி, அவளது

அன்பு முத்தத்தைப் பெற்றுக் கன்னத்தைத் துடைத்து விட்டுக்கொண்டே வந்து அவற்றைக் கழற்றி நகைப் பெட்டிக்குள் விரக்தியோடு போட்டுவிட்டு மீண்டும் பூவுதிர்ந்த மரமாகப் பொலிவிழந்து பெருந்தகை முன்னால் வந்து நின்றாள்.

தலை நிமிர்ந்தவன் "எங்கே நகைகள்?" என்று தன்னை மறந்து கேட்டுவிட்டு அதற்காக வருத்தப்பட்டுக் கொண்டான். நாவைக் கடித்துக் கொண்டான். ஆனால் பதில் வராமல் நின்றுவிடவில்லை.

"பெற்றோரை மகிழ்வித்தால் போதும் உங்கள் விருப்பப்படி" என்று உணர்ச்சியற்ற வரட்டுத் தொனியில் பதிலை எதிர்பார்க்காத பாணியில் பேசி நிறுத்திவிட்டாள் அவள்.

இன்னொருநாள்! பூங்கொடியின் தாய் படிப்பறைக்குள் நுழைந்தாள். "பூங்கொடி! படித்து முடித்ததும் கால் முகங்கழுவி விட்டு வந்து சட்டையைப் போடு! உள்ளூர்க் கோயிலில் நடக்கிற திருவிழாவையும் பார்க்காமல் விட்டுவிட்டு வண்டி கட்டியா வேறு கோயில்களுக்குப் போகப் போகிறோம்?" என்று கெஞ்சிக் கேட்டாள்.

"என்னைத் தொந்தரவு பண்ண வேண்டாம் என்று இதோடு பத்தாவது தடவையாகச் சொல்லிவிட்டேன் அம்மா"

"பாருங்கள் தம்பி இந்தப் பிள்ளை வரவர மிச்சங் கெட்டுப் போகிறாள். இவ்வளவு நாளும்தான் கோயில் கும்பிட வா என்றால் "எனக்குக் கடவுள் நான் வீட்டில் இருக்கவே காட்சி தருகிறது. நான் இங்கிருந்தே கும்பிடுகிறேன். நீங்கள் போய் வாருங்கள்" என்று எங்களைப் பாட்டிக்கிழவி மாதிரி வழியனுப்பி வைத்தாள். இன்று திருவிழாவைப் பார்க்கக்கூடவரக் கூடாதா?" என்று பாசம் வெறி காட்டக் கேட்டாள் அம்மா. எனக்கு கடவுள் வீட்டில் இருக்கக் காட்சி தருகிறது. என்று சொல்லிப் பெற்றோருடன் வாதாடுகிறாளே.

"பூங்கொடி! போய் வரவேண்டியதுதான்" என்று தளர்ந்தும் விழித்துக் கொண்டு பெருந்தகை கண்டிப்பான குரலில் கூறியதற்கு மதிப்புக் கொடுப்பவள் போல் மௌனத்தால் சம்மதம் தெரிவித்தாள். அவள் தாய் தன் மனத்தில் மகிழ்வை நிரப்பிக் கொண்டவளாய் அகன்று விட்டாள்.

வேறொரு நாள் பெருந்தகை புத்தகத்தை எடுத்துப்புரட்டிக் கொண்டிருந்த பொழுது அவன் கைவிரலில் கத்தி வெட்டிய ஒரு பச்சைக் காயம் இருப்பதைக் கண்டு தன்னை மறந்து மனம் பதைத்தாள் பூங்கொடி. அவளுக்கு அவனது தற்பாதுகாப்புணர்ச்சியற்ற போக்கைக் காணக் கவலையாகவும் விளைவாக ஆத்திரமாகவும் இருந்தது தன்னையும் மீறிப் பேசத் தலைப்பட்டாள்.

"உங்களைத்தான்" ஒரு நாளுமில்லாத இறுக்கம் அவள் குரலில் தொனித்துப் பெருந்தகையை மிரட்டித் திடுக்கிட்டு விழிக்க வைத்தது. பெருந்தகை

வியப்போடு தலை நிமிர்ந்து விழிகள் அகலப் பூங்கொடியைப் பார்த்தான். அவள் கண்களில் உறுதியும் நிதானமும் மின்னிக் கிடந்தன.

"நீங்கள் உதவி மேற்பார்வையாளராகக் கடமையாற்றவும் எனக்குப் பாடஞ் சொல்லித் தரவும் நியமிக்கப்பட்டீர்களே ஒழியக்கூலி வேலை செய்ய அல்ல!''

"ஏன் உதவி மேற்பார்வையாளர் வேலை மட்டும் கூலி வேலையில்லையோ?'' எத்தனையோ நாட்களுக்கு, எத்தனையோ வாரங்களுக்குப்பின் முதல் தடவையாகப் பூங்கொடிக்கு முன்னால் சிரிக்கத் தொடங்கி அதையும் இடையில் முறித்து விழித்துக் கொண்டான் பெருந்தகை. பூங்கொடி இதைப் பார்த்தாவது சிரித்திருக்க வேண்டுமே! அவள் சற்றும் சிரிக்காமல் மேலும் வைரம் பாய்ந்து நின்ற குரலில் பேசினாள். "இங்கு பிரச்சினை கூலி வேலையா? சொந்த வேலையா என்பதல்ல? வாங்கும் சம்பளத்திற்குரிய வேலை செய்யலாமே ஒழிய வாங்காத கூலிக்கும் சேர்த்து வேலை செய்து எங்கள் அப்பாவை மேலும் பழிக்காரன் ஆக்கவேண்டாம்.''

இவள் இப்படிக் கோபித்துப் பாய்வது தகப்பனின் பழி பாவக்கணக்கையிட்டுக் கவலைப்பட்டல்ல என்பதை அறிந்து கொள்ளப் பெருந்தகைக்கு அதிகநேரம் தேவைப்படவில்லை. அவனுக்காக அவனோடே வாதாடும் அளவிற்கு அவள் அன்பு வளர்ந்து போய் கொண்டிருக்கிறது. அவனால் எட்டிப்பிடித்து வளைத்து முறித்துவிட முடியாத கைக்கெட்டாத உயரத்திற்கு உயர்ந்து போய்க்கொண்டிருகிறது.

''நான் அப்படியெல்லாம் செய்வதில்லையே!'' பொய்யை மிக்க உண்மைபோலச் சொல்லி நிறுவப்பார்த்த பெருந்தகையை இடைமறித்து,

''நானே என் கண்களாலேயே கண்டேன் கந்தர் மடத்தில் ஒரு தெருவோரத்தில்'' என்றாள் அந்த அன்னை நெஞ்சம்

''அப்படியானால்?''

"செய்யக்கூடாது! இதை யார்மீதும் உருகி நான் சொல்கிறேன் என்று தப்பாக நினைத்துச் சண்டைக்கு வரவேண்டாம். என் குடும்ப நன்மை கருதியே சொல்கிறேன்!.''

"உங்கள் குடும்ப நன்மை என்பது உண்மையில் நீங்களும் பெற்றோரும் சேர்ந்த குடும்பத்தின் நன்மையைத் தானா?'' என்று கேட்கத் துடித்தவன் அந்தப் பிழையிலிருந்து தவறி இன்னொரு குற்றத்தை அவரசத்தால் செய்துவிட்டான். அதாவது "இனி மேலும் தொடர்ந்தும் அப்படித்தான் செய்வேன். வேண்டுமானால் என்னை வேலையிலிருந்து விலக்கிவிடுங்கள்'' என்று அவன் கூறியது அவன் தன்னுடன் வேண்டுமென்று பகை சாதிப்பதாக அவளுக்குப் பட்டிருக்க வேண்டும். அவள் கலங்கும் கண்களால் அவனைப் பார்த்துவிட்டு எழுந்த விம்மலை அடக்கிக்கொண்டு அறையை விட்டு வெளியேறி வாழைத் தோட்டப்பக்கமாக ஓடிச்சில நிமிடங்கள் கழித்துத் திரும்பி வந்த பொழுது தனது கண்களையும்

மிஞ்சிப் பெருந்தகையின் கண்கள் சிவந்து வீங்கிக் கிடந்ததைக் கவனித்தாளோ என்னவோ! ஆனால் தன் தன் முகத்தில் எவ்வித வேறுபாடும் காணப்படாமல் மறைக்க மட்டும் இருவரும் முயன்று கொண்டிருந்தனர்.

## 20. பூங்கொடி வென்று விட்டாளா?

இப்பொழுது பெருந்தகை தன் ஊரின் எல்லைப்புறத்தில் தோட்ட வெளியை அண்டியிருந்த ஒரு கலட்டுக் காணியில் பத்துப்பரப்பு வாங்கிவிட்டான். அதன் கல்கிளறும் வேலையும், கிணறு தோண்டும் வேலையும் இரவுபகலாக நடைபெற்று வந்தன. வெள்ள வாய்க்கால் வேலையும் அறுபது நாட்களில் நிறைவேற்றப்பட்டதனால் உலகநாதபிள்ளைக்குப் பெருந்தகை மேலிருந்த மதிப்புப் பன்மடங்காக அதிகரித்திருந்தது.

அதன் பின்னர் பெருந்தகைக்குப் பாடஞ் சொல்லிக் கொடுக்கும் வேலையும் தோட்ட மேற்பார்வை வேலையும் தவிர வேறு வேலை இருக்கவில்லை. பூங்கொடி மார்கழி மாதம் நடைபெற்ற க.பொ.த பரீட்சை எழுதிவிட்டு முடிவுக்காகக் காத்திருந்தாள். ஆனால் ஏச். எஸ். ஸி. க்கு உரிய பாடங்களைப் பெருந்தகையிடம் பயின்று வந்ததோடு தொடர்ந்து கல்லூரி சென்று வகுப்பில் படித்தும் வரலானாள். அந்த நாட்களுக்கும் பெருந்தகைக்குச் சம்பளம் தரப்பட்டது. இவ்விதமாக மொத்தத்தில் பத்து மாதங்கள் கழிந்த பின் யாழ்ப்பாணத்தில் ஒரு கல்லூரி மண்டபம் புதிதாகக் கட்டப்படும் பொருத்தம் வழங்கப்பட்டு உடனடியாக வேலை மேற்கொள்ளப்பட்டது. அதற்குரிய கேள்விப்பத்திரத்தைத் தயாரிப்பதில் தான் உலகநாதபிள்ளைக்கு அன்றொருநாள் தோட்டம் கொத்த வந்திருந்த பொழுது பெரிதும் உதவியிருந்தான் பெருந்தகை.

உலகநாதபிள்ளை தமது முதற் சந்திப்பில் நடந்த சச்சரவை மறந்து அவன் தன்னை மறுநாள் கொலை வெறி பிடித்த இளைஞர்களிடமிருந்து காப்பாற்றியதையும் இப்பொழுது தொடங்கியுள்ள வேலைக்குக் கேள்விப் பத்திரம் அனுப்பும் பொழுது ஏற்பட இருந்த ரூபா முப்பத்தையாயிரம் நட்டத்தை வராமல் தடுத்ததையும் மறவாமல், அவனைத் தன் உதவியாள் என்று எண்ணுவதை விட்டுத் தம் தோழனாகவே நடத்தி வரலானார்.

அன்று வழக்கத்திற்குச் சற்று முந்தியே பாடம் சொல்லிக் கொடுக்க வந்திருந்தான் பெருந்தகை. தந்தையார் கார் தாமதித்ததால் பூங்கொடிக்கு வழமையான நேரத்திற்குக் கல்லூரியிலிருந்து திரும்ப முடியாமற் போய்விட்டது. மறுநாள் எஸ். எஸ். ஸி. பரீட்சை முடிவுகள் வெளிவருதாக இருந்தது. பூங்கொடி 1ஆம் பிரிவில் சித்தியெய்த மாட்டாளா அதையிட்டுப் பெற்ற மனங்கள் குளிராதா தனக்குப் பெருமை ஏற்படமாட்டாதா? என்று ஏங்கிக் கொண்டு கதிரைக்குள் அமர்ந்திருந்த பெருந்தகை காலடி அரவம் கேட்டு நிமிர்ந்து பார்த்தான்.

கையொன்றில் தோற் பெட்டியும் முழங்காலோடாடிய அரை வெள்ளைச்சட்டையுமாக வந்த பூங்கொடி புத்தகப்பெட்டியை மேசைமீது வைத்து விட்டு வெளியேறத் திரும்பிய பொழுது மயக்கம் வருவது போல உணர்ந்தாள். உணர்ந்த கணத்திலேயே ஒருவிதக் கேரல் ஒலியோடு சுவர்மேற் சாய்ந்தாள். பெருந்தகை அச்சத்தோடு எழுந்தான்.

ஒரு மின் வெட்டும் நேரத்தில் நிலைமையைக் கிரகித்து ஆபத்துக்குப் பாவமில்லை என்ற எண்ணத்தோடு பாய்ந்து சென்று அவளைத் தன் ஒரு கையால் அணைத்துக்கொண்டு மறுகையால் கெண்டைக் காற்கீழ்ப் பிடித்து நிலத்தில் மெள்ளச் சாய்த்துக் கிடத்தி விட்டபின் பரபரப்போடு அவளின் பெற்றாரைக் கூப்பிட வாயெடுத்தான். “ஐயா!” என்று கூப்பிட அந்த நெருக்கடியிலும் வாய் எழவில்லை. ஆ... ஆ..... இந்தாருங்கள்! ஓடி வாருங்கள்! என்று அவன் கத்தினான். தாயும் தகப்பனும் போட்டி போட்டுக் கொண்டு ஓடி வந்தனர்.

“பூங்கொடி உள்ளே மயங்கி...!” என்பதற்குள் இருவரும் படிப்பறைக்குள் நின்று கொண்டிருந்தனர். தாய் “ஐயோ தம்பி என்பிள்ளைக்கு என்ன நேர்ந்தது” என்று வயிற்றைப் பிடிப்பதும் தலையைப் பற்றுவதுமாகத் துடித்தாள். “ஒன்றுமில்லை அம்மா மயக்கம் தான்” என்றவன் கலங்கிச் சிலையாகி நின்ற உலகநாதபிள்ளையிடம் “கிட்டடியில் வைத்தியர் இல்லையா? போய்க் கூட்டிக்கொண்டு வாருங்கள்.” கார் நிற்கிறது தானே. ஒன்றுக்கும் பயப்பட வேண்டியதில்லை. களைப்பிருந்தால் யாருக்கும் மயக்கம் வரும்தானே! சரி சுறுக்காய்ப் போங்கள்!” என்று துணிவு கூறித் துரிதப்படுத்தி அனுப்பினான். தாயாரிடம் “தண்ணீர் கொண்டு வாருங்கள்! முகத்துக்குத் தெளித்தால் மயக்கம் தெளிந்துவிடும்” என்றான். அந்தத்தாயோ “தம்பி எனக்கொன்றும் தெரியாது. நீதான் மகனே பார்.. என் தெய்வமே” என்று அசைய முடியாமல் ஒரு மூலையில் அமர்ந்து விட்டாள்.

பெருந்தகை உள்ளே ஓடிச் சில நொடிகளில் தண்ணீர்ச் செம்பும் கையுமாக மீண்டான். பூங்கொடியின் விழி மூடிக்கிடந்த முகத்தில் நீரைத் தெளித்தான். மீண்டும் உள்ளே ஓடினான். சுளகொன்றுடன் திரும்பிவந்து அவள் முகத்திற்கு நேராக விட்டு விட்டு வீசினான். அவள் மெல்லக் கண் திறந்து பார்த்தாள். பெருந்தகையின் முகம் என்றுமில்லாதபடி கவலையால் இருண்டு கிடப்பதைக் கண்டு ஒரு புதிய உற்சாகத்தில் அவனை உற்று உற்றுப்பார்த்தாள் பூங்கொடி.

பெருந்தகை தன் முகம் மலர்ந்து பூங்கொடியின் அம்மாவைப் பார்த்து “மகள் விழித்து விட்டுது! இப்பொழுது நல்ல சுகம் வந்து பாருங்கள்” என்றான். அம்மா எழுந்து ஓடி வந்து பார்த்து ஆனந்தத்தால் மகளைக் கட்டிக்கொஞ்சினாள். “பார்த்தீர்களா? பயப்படாமல் ஓடிப்போய்க் கோப்பி போட்டு வாருங்கள்” என்று பணித்தான் பெருந்தகை. “ஆம் தம்பி பார்த்துக்கொள்ளுங்கள். கடவுள் மாதிரி நீர் இல்லாவிட்டால் என் பிள்ளையின் கதி என்னவாயிருக்குமோ” என்று பேதலித்த

மனத்தைப் பறைசாற்றும் வார்த்தைகளுடன் உள்ளே சென்றாள் அம்மா. பெருந்தகை தன் நினைவாலேயே அவள் அந்த நிலைமைக்காளானாள் என்று எண்ணிக்கொண்டு பூங்கொடி அருகில் பரிவோடு மண்டியிட்டு அமர்ந்து ஏதோ நினைத்துக்கொண்டவனாய் "பூங்கொடி உண்மையைச் சொல்லுங்கள். இந்த வயதில் ஏன் உங்களுக்கு மயக்கம் வரவேண்டும்?" என்று கண்டிப்பான குரலில் கேட்டான்.

அவள் மௌனமாகத் துயர் நிறைந்த கண்களால் அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

"சொல்லுங்கள் இல்லையென்றால் இன்றுடன் நான் ......" என்று கூறி முடிப்பதற்குள் "வேண்டாம் சொல்கிறேன்" என்று பதறித் தேம்பி மூச்சு வாங்கப் பேச்சைத் தொடர்ந்தாள்; "இத்தனை நாளும் என் உணவை யாரும் காணாமல் கொட்டி வந்தேன்" தயங்கித் தயங்கி அவன் முகத்தை அச்சத்தோடு பார்த்தாள் பூங்கொடி.

"எதற்காக?"

என்று அதிர்ந்து நடுங்கும் குரலில் பெருந்தகை வினாவ அவள் "நீங்கள் இந்த வீட்டை விட்டுப் போகும் நாள் வரும் முன் நான் நோய் வந்து செத்துவிடவேண்டும் என்பதற்காக" என்று கூறிக்கலங்கினாள். அவனது முகத்தில் எங்கிருந்துதான் அவ்வளவு கவலை அவ்வளவு பயம் வந்து கவிந்தனவோ? அவன் கண்கள் எப்படி அத்தகைய மிரட்சியினதும் கலக்கத்தினதும் பிடிகளுக்குள்ளாயினவோ? அவனது மனவுறுதி எப்படித் தகர்த்தெறியப்பட்டதோ? அவன் இரக்கம் எப்படி அணையுடைத்த வெள்ளமானதோ? அவனுக்கே தெரியாமல் நடந்த பிரளயம் அது.

அவன் அழப்போகிறான்! தனக்காக அழப்போகிறான் என்பதைப் புரிந்து கொண்டவள் அதைத் திறந்திருக்கும் தன் விழிகளால் காண அவன் எப்படியும் அனுமதிக்கமாட்டான் என்று எண்ணி மூடிய விழிகளால் காணும் ஆவலுடன் மயக்கம் மீண்டும் வந்து விட்டது போன்ற பொய்ப்பாவனையில் கண்களை மூடினாள். சில வினாடிகளில் பெருந்தகை அவளுக்கு மயக்கம்தானே!அறியமாட்டாள் தானே என்ற துணிவுடன் சூடான நீரைத் தன் கண்களால் அவள் கண்கள் மேல் பொலு பொலு வென்றுதிர்க்கலானான். ஊறும் வெள்ளமும் உதிரும் வெள்ளமும் சேர்ந்து பூங்கொடியின் கடைக்கண்களால் வழிந் தோடிற்று. அவனும் அழுதான். அவனறியாமல் அவளும் அழுதாள். பெருந்தகை பார்த்தான். பூங்கொடியின் மேனியெங்கும் வியர்த்திருந்தது. எழுந்து மறுபடியும் உள்ளே ஓடிச்சென்று ஒரு சாய்வு நாற்காலியைச் சுமந்து வந்து காற்றோட்டமுள்ள வாசற்பக்கமாகப் போட்டான்.

பூங்கொடியை அணுகி அவளை உறங்கும் குழந்தையைத் தூக்குவது போல் தூக்கி, அவளுக்கு மயக்கம் தானே என்ற துணிவில் மார் போடணைத்துத்

தன் தோளில் அவளைப் போட்டுக் கொண்ட பொழுது அவன் விம்மி விம்மி அழுதுகொண்டிருந்தான். அவனது கன்னத்தோடு பூங்கொடியின் மலர்ச்சொக்கை ஒட்டிச்சேர்ந்து கிடந்தது. ஒரு கை அவளைத் தாங்கிச் சுமக்க மறுகை அவளது முதுகில் ஒட்டிக்கிடந்த புழுதியைப்பரிவோடு தடவித்துடைத்துக் கொண்டிருந்தது.

பொய் மயக்கத்தில் கிடந்த பூங்கொடிக்கு இதை நம்ப முடியவில்லை. ஆனால் அவள் உள்ளம் உடல் எங்கும் ஆனந்த நடுக்கம். அவளைச் சுமந்தபடி சாய்வு நாற்காலியை அணுகினவன் அங்கு கிடந்தவள் துணிந்து எழுந்து அவ்வளவு தூரம் எப்படி நடந்து வந்தாள் என்று யாராவது சந்தேகப்பட்டால் பிரச்சினையாகுமென்று அஞ்சி அவளை ஒரு கையால் தூக்கிச் சுமந்தபடி மறுகையால் முன்னர் அவள் கிடந்த இடத்திற்கே நாற்காலியை இழுத்துக்கொண்டு மெல்ல நகர்ந்து அவளைச் சில வினாடிகளில் நாற்காலிக்குள் படுக்க வைத்து விட்டான். பூங்கொடிக்கு உடலெல்லாம் உள்ளமாக உள்ளமெல்லாம் உடலாகச் சிலிர்த்துப் புல்லரிக்கலாயின.

பெருந்தகை தான் உடுத்திருந்த வேட்டித்தலைப்பினால் அவளது வியர்க்கும் முகத்தை ஒற்றி விட்டு, இரட்டைப்பின்னல்களிலிருந்து நழுவி முகத்தில் புரண்ட கூந்தலைத் தன் கையால் நீவித் தலையில் சேர்த்து அவள் முகத்தைப் பார்த்தான். அவன் நெஞ்சம் பரிவால் நெகிழ்ந்து உருகிக்கொள்ள கண்கள் மீண்டும் கலங்கத்தொடங்குவதற்குள் பூங்கொடி கண்களை விழித்துப் பார்க்கலானாள்.

அவள்தாயும் கையில் கோப்பிக்கிண்ணத்துடன் பறந்து வந்தாள். “தம்பி எனக்குக் கைநடுங்குகிறது நீங்கள்தான் பக்குவமாகப் பருக்கிவிடுங்கள்! உங்கள் மனதிற்கு நீங்கள் நல்லாக இருப்பீர்கள்.” என்று மனம் நெகிழ்ந்து கூறினாள் பொன்மணி. மெதுவாக அதை வாங்கிக் கவனமாகக் கொஞ்சம் கொஞ்சமாகப் பூங்கொடியின் வாயில் கோப்பியை விட்டுக்கொண்டிருந்த பெருந்தகையின் செல்லமாக கவனத்தின் அறிகுறியாகக் கோலியிருந்த அழகிய வாயினைப்பார்த்துக் கொண்டே அவள் “என்மீது வைத்திருக்கும் இவ்வளவு அன்பையும் இத்தனை காலமும் எப்படி மூடிமறைத்து வைத்திருந்தார்?” என்று வியந்து மகிழ்ந்தாள்.

தனக்கு வந்த மயக்கம் தன் வாழ்க்கையில் இருந்த ஒரு மயக்கத்தைத் தெளிவித்து, புயல் வீசிய நெஞ்சில் இன்ப வாடையை இனித்துலவவிட்டு, பாலையின் வெம்மை வாட்டியெடுத்த இதயத்தைக் குளிர்மலர்ப் பொய்கையின் தண்மையால் சிலிர்த்துத் துளும்ப வைத்துச் சாகவேண்டும் என்று துடித்தவளை வாழவேண்டும் என்ற ஆவல் கொள்ளச்செய்ததற்காக அந்த மயக்கத்தை மனதார வாழ்த்திக் கிடந்து சிலிர்த்தாள் பூங்கொடி.

“இன்றிலிருந்தே நம்பிக்கை ஒளியூற்றுக் கண்திறந்த இந்த நொடியிலிருந்து எனக்கு வாழ்வு கிடைத்து விட்டது. வாழ்நாள் எல்லாம் இனித்திருநாட்கள்–தேயாது இரவும் பகலும் வளரும் பெருநிலவு என் வாழ்வு!” என்று கோடி கோடி கனவுகளுக்கு வித்திட்டுக்கொண்டிருந்தாள், நம்பிக்கை ஈரம் கசிந்து குளிர்ந்த நெஞ்சப் பண்ணையிலே!

வெகு நேரத்தின் பின் ஒரு நாட்டு வைத்தியருடன் பரக்கப் பரக்க ஓடிவந்து சேர்ந்தார் உலகநாதபிள்ளை. கைநாடி பிடித்துப்பார்த்த வைத்தியர் "பலவீனம் தான் காரணம். நல்ல ஓய்வும் சத்துள்ள உணவும் கொடுங்கள்" என்று சொல்லிச் சென்றார்.

## 21 அறுவடை ஓட்டங்கள்

உலகநாதபிள்ளை இதுவரை மனங் கலங்காமல் ஓடித்திரிந்தார். என்றாலும் இப்பொழுது பேயறையப்பட்டவர் போலக் கண்களில் மிரட்சியுடன் உடலில் நடுக்கத்துடன் காணப்பட்டார். நிற்க முடியாமல் முகம் வியர்வையில் குளித்துக்கிடக்கத் தள்ளாடியவராய் நாற்காலியில் குந்தி விட்டார்.

அவருக்கு ஏக்கக் காய்ச்சல் பிடித்து விட்டது என்பதைப் புரிந்து கொண்டு, "இவள் மயக்கம் போட்டு விழுந்ததற்கு இவ்வளவு என்றால், உயிருக்கு ஏதாவது வந்தால், தன்னால் வருமானால் இருவரும் பிணமாக அதிக நேரம் செல்லாதென்பதை உய்த்துணர்ந்து கொண்டான் பெருந்தகை. அப்படியானால் அவர் கனவுகளை நனவாக்க வேண்டும் என்பதற்காக அவளைக் கைவிட்டு அவளையும் தாயையும் அவரையும் சேர்த்துச் சாகடிப்பதா? அல்லது வைராக்கிய தேவதையான அவள் வாழ்வைத் தன்னன்பின் அரவணைப்பால் மலர வைத்து உயிர்களைக்காத்து அவர் கனவுகளைப் பொய்யாக்குவதா என்ற கேள்விகளுக்கு எளிதாக விடை அந்த நிமிடத்தில் கிடைத்துவிட்டதென்றாலும், நான் நினைத்து ஆவது ஒன்றுமில்லை. அவள் அன்பின் வலிமை கடவுளை நினைக்க வைக்க வேண்டும். அதுவரை என்றும் போல் வெறுப்புடனேயே அவள் முன்னால் நான் நடந்து கொள்வேன். ஆண்டவன் அதற்குள்ளாகிலும் பூங்கொடியின் மனதை மாற்றிவிட்டால் எவ்வளவு நன்மை. அவள் எனக்குக் கிடைப்பதுதான் நியதி என்றால் அவளைக் காப்பாற்றுவதற்குரிய தகுதி அப்பொழுது என்னிடம் இருக்க வேண்டும். எனவே ஊரில் வாங்கிய கலட்டுக்காணியைத் திருத்திக் கல்கிளறிச் செப்பனிட்டுப் பயிரிட்டு வைத்துக்கொள்ள வேண்டும் இந்த ஒரு மாதத்தில்.

இனிப் பகல் இங்கு போக இரவில் பெரும் பகுதி விளக்குப் பிடித்துக் கலடு திருத்துவதில், கல்கிளப்புவதில் கழியும். கூலியாட்கள் பகலிலும் நானும் அப்பா தம்பிமாரும் இரவிலும் பாடுபட்டால் ஒரு மாதம் தாராளம்" .என்று எண்ணியவன் நாற்காலியில் அமர்ந்திருந்த பிள்ளையவர்களை அணுகி "நாளை வருகிறேன்" என்று கூறி அங்கிருந்து புறப்பட்டான்.

பூங்கொடிக்கு ஏன் கிறுதி வந்தது என்ற ஆராய்ச்சியை நெடுநேரமாக நடத்திக்கொண்டு பைத்தியக்காரக் கோலத்தில் அமர்ந்திருந்த பிள்ளையவர்கள் இக்கேள்விக்குரிய விடையைத் தம்மால் கண்டுகொள்ள முடியாமல் கடைசியில் 'ஹார்லிக்ஸ்' கரைத்துக்கொண்டிருந்த மனைவி முன்னால் வந்து குந்தி "மெய்யேபாரும்! ஏனிவளுக்கு மயக்கம் வந்தது.?"என்று கேட்டார்.

“இப்பொழுது அதிகம் சாப்பிடுகிறாளில்லை. எந்த நேரமும் படிப்புப் படிப்பு என்று புத்தகமும் கையுமாகவே இருக்கிறாள். நானில்லாத நேரம் தானாக வந்து சாப்பாடு எடுத்துச் சாப்பிடுகிறாள். சாப்பாட்டிலும் அதிக நேரம் செலவிடுவதில்லை. படிப்புப் படிப்பு என்று பறப்பதாலும் நேரவழிக்குப் பொறுத்திருந்து சாப்பிடாததாலும் வந்த நோய் இது.”

தான் படுத்திருந்த அறையை விட்டு அப்பா போனாரோ இல்லையோ. பூங்கொடி எழுந்து தள்ளாடிக்கொண்டு சென்று தன் புத்தகத் தோற்பெட்டியைத் திறந்து அங்கு கிடந்த கைக்கடிகாரப் பெட்டியை எடுத்துக் கொண்டு மெல்ல வெளியேறி உள்ளறைக்குள் புகுந்து தனது உடைப்பெட்டியில் சட்டைகளுக்கு அடியில் அதை வைத்து விட்டுக் களைக்கக் களைக்க நடந்து வந்து பழையபடி சாய்வு நாற்காலியில் படுத்துக்கொண்டாள்.

பூங்கொடிக்கு அன்று முழுதும் அரசமரியாதை. தோடம் பழம் பிழிந்த சாறு, ஓவல் கலந்த நெஸ்பிறே, நெய்யும் பருப்பும் சேர்ந்த அறுசுவையுணவு, அரையவியல் முட்டை என்று ஓயாமல் அம்மா தந்து தந்து “தின் தின், குடி குடி” என்று ஊட்டிநின்றாள். மனதில் ‘வாழவேண்டும்’ என்ற ஆசை புத்துயிர் பெற்றுவிட்டதால் மறுக்காமல் தானும் ஆவலோடு வாங்கி வாங்கி வயிற்றை நிரப்பிய பூங்கொடிக்கு மூச்சே விடமுடியவில்லை.

மறுநாள் அவள் கல்லூரிக்குப் போகவில்லை. மூக்குமுட்ட உண்டது தான் வேலை. மூன்று மணிபோல் வீட்டுக்கு லொறியில் வந்து இறங்கிய உலகநாதபிள்ளை மகளிடம் ஓடோடி வந்தார்.

“பூங்கொடி! பூங்கொடி நீ பரீட்சை பாஸ்.அதுவும் முதற் பிரிவில் நான்கு டிஸ்ரிங்ஷன்ஸ் மூன்று கிறடிற்ஸ் ஒரு சாதாரண பாஸ்.” என்ற பொழுது குழந்தை போல மகள் துள்ளிக் குதித்தாள். தன் கனவுகள் நனவாகுதல் கண்டு நேற்று முதல் தனியறையில் நின்று துள்ளாமல் துள்ளிப் படுக்கையில் புரளாமல் புரண்டு மகிழ்ந்த பூங்கொடி இப்பொழுது பகிரங்கமாகத் துள்ளிக் குதித்தாள்.

என்றாலும் தான் இவ்வளவு சிறப்பாக வெற்றியடையக்காரணம் பெருந்தகை எடுத்த சிரத்தையே என்று சொல்லிப் பெருமைப்படத்தான் அவள் நினைத்தாள். ஆனால் நாணமும் அச்சமும் இரு இதழ்களையும் பூட்டிவிட்டன. கடைசி அம்மா அப்பாவாவது அதைச் சொல்வார்கள் என்று எதிர்பார்த்துக் காத்திருந்து பூங்கொடி ஏமாந்தாள்.

கடைசியாகச் “சென்றமுறை மூன்று பாடம். அதிலும் சாதாரணமாகத்தான் பாஸ்பண்ணினேன். இம்முறை எட்டுப்பாடத்திலும் வெற்றி. அதிலும் நாலு டிஸ்ரிங்ஷன்ஸ் மூன்று கிறடிற்சுடன் ....!” என்பது வரை சொல்லிய பின்னாவது அப்பா அவரைப் புகழுவார் என்று எண்ணியது வீண் போகவில்லை. “ஆமாம்

அந்தப் பொடியனின் திறமையான முயற்சிதான்காரணம்..'' என்று அப்பா சொல்லியது கேட்டுஇதயம் பூரித்தாள் பூங்கொடி. உணர்ச்சிகள் உள்ளத்தில் காந்தமேற்ற நின்ற பூங்கொடி இனந்தெரியாத மனக்கிளர்ச்சியால் உந்தப்பட்டவளாய்த் தன்னிடத்தில் புதிதாக இருந்த முழுச்சட்டையை முதல் முதலாக எடுத்துப்போட்டுக் கொண்டாள். அந்தக் கிராமத்தையே இன்பமணத்தில் மூழ்கடித்து அதனைக் கந்தர்வலோகமாக மாற்றிவிடக்கூடிய பூசல்மாப் பேணியை எடுத்துத் திறந்து தன் உடல் எங்கும் மணமயமாக அப்பொடியைப் பூசிக் கொண்டாள். தான் ஆறு மாதங்களாக மூடிய மூடி திறக்காமல் வைத்த சாந்துப் பொட்டுப் புட்டியைத் திறந்து கமகமக்கும் செந்நிறப் பொட்டொன்றையும் நெற்றியில் இட்டுக் கொண்டாள். ஆனந்தத் துள்ளலுடன் அம்மாவைத் தேடி ஓடி "எப்படியம்மா சட்டை?'' என்று இடுப்பில் கை வைத்து ஒயிலாக நிமிர்ந்து நின்றாள். பார்த்த தாயோ கண்கள் அகல விரிய முகம் ஆனந்தத்தால் மலர்ச்சி பொங்கக் கைகளை முன்னே நீட்டியபடி ஓடிவந்து குழந்தையைத் தழுவுவது போல் தழுவிக்கொண்டாள்.

"பெரிய மனுசி மாதிரியல்லவா இருக்கிறாய்'' என்று கூறித் தன் தோளில் சாய்ந்த பூங்கொடியின் தலையை அன்போடு கோதிவிட்டாள். நிமிடங்கள் இப்படியே கழிந்து கொண்டிருக்கப் பூங்கொடி மெல்ல "அம்மா'' என்றாள். 'என்ன பூங்கொடி'என்று தாய்மையின் பரிவையே குரலாக்கிக் கேட்டாள் அன்னை.

"இந்தச் சட்டை அழகாய் இருக்கிறதா அம்மா?''

"வேறென்னடியம்மா! நானே உன்னைக் கண்ணூறுபடுத்திவிடுவேனோ?'' என்று மூன்று முறை துப்பிக் கழுவாய் தேடிக்கொண்டது தாய்மையுள்ளம்.

அந்த மகிழ்ச்சி மயக்கத்தின் மத்தியிலும் சுவர்மணிக்கூடு ஐந்து தடவை அடித்ததை அவதானித்த பூங்கொடி அம்மாவின் அரவணைப்பிலிருந்து மெல்லவிடுபட்டு மாடிப்படிகளில் துள்ளியேறி மொட்டை மாடியிலே சுவரோரமாக வந்து நின்று ஆவல் வழிந்தோடும் விழிகளைக் கிழக்கே நீண்டு கிடந்த வீதியில் படிந்தலைய விட்டு நின்றாள்.

தூரத்தில் ஒரு மிதிவண்டி எறும்பளவில் வரும். 'அது அவர் வண்டி தான். அவர் தான் வருகிறார்' என்று துள்ளிக்குதிக்காத குறையாக ஆனந்தமடைந்து கைகளைப் பிசைந்து நின்று தவிப்பாள். கடைசியில் பார்த்தால் வேறு யாரோவாக இருக்கும். நெஞ்சில் தவிப்பும் ஆவலும் அலை மோத அரைமணி நேரம் அவள் செய்த ஒற்றைக் கால் தவம் வீண்போகவில்லை.. இறுதியில் பெருந்தகை நிச்சயமாகவே அவளை நோக்கி வந்துகொண்டிருந்தான்.

# 22. என்றாயினும் ஒரு நாள்

பெருந்தகை வந்துகொண்டிருந்தான். காய்ந்து வாடிய முகத்துடன் புழுதிபடிந்து வியர்த்து நனைந்த சட்டையுடன் அவன் தன் மிதிவண்டியில் உலகநாதபிள்ளை வீட்டை நெருங்கி வந்து கொண்டிருந்தான். வீட்டு மாடியில் நின்றபடி பார்த்து நின்ற தன்னைக் காணாதவன் போல் குனிந்த தலை நிமிராமல் வந்தவன் ஒரு கால் மாடியை அண்ணாந்து பார்க்க மாட்டானா? என்று ஏங்கினாள் பூங்கொடி! ஏக்கம் ஏக்கமாகவே போய்விடும் நிலை வருவது கண்டு செருமிக்காட்டியும் பார்த்தாள். ஆனால் அவன் நிமிர்ந்தால்தானே? வந்தவன் படலையில் நுழைய மாடியில் நின்றவள் தடதட வென்று மாடிப்படிகளில் இறங்கி ஓடிப் படிப்பறையில் கீழ் மூச்சு மேல் மூச்சு வாங்க மார்பு விம்மித்தணிய வந்து சேர்ந்த காட்சியைப் பெருந்தகை காணவில்லை.

படிப்பறைக்குள் அவன் வரவிற்காக மிகுந்த ஆவலுடன் காத்து நின்றாள் பூங்கொடி. தான் பரீட்சையில் தேறின செய்தியைத் தற்செயலாகவேனும் தாய் அவனிடம் சொல்லி விட முன்னம் தானே அவனுக்குக் கூறி அவனை மகிழ வைத்துப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் அவளுக்கு! பெருந்தகை அறை வாசலை அடைந்தானோ இல்லையோ "நான் சோதனையில் பாஸ், நாலு பாடங்களில் டிஸ்ரிங்ஷன்ஸ், மூன்று பாடங்களில் கிறெடிற்ஸ் எட்டுப்பாடமும் பாஸ். இன்று நான் கல்லூரிக்குப் போகவில்லை. அப்பா அறிந்து வந்து சொன்னார்." என்று மூச்சு விடாமல் அடுக்கிக் கொண்டு போனவள் அவன் முகத்தில் அவன் உள்ளத்தைக் காண, உள்ளத்தில் உணர்ச்சிமாற்றங்களை அவதானிக்க முயலவும் தவறவில்லை. ஆனால் அவள் கண்டறிந்த உண்மையோ மனத்தைக் கசப்பில் கவலையில் மூழ்கடித்து அப்பாலும் பேசமுடியாமல் தடுத்துவிட்டது. தன் வெற்றி கேட்டு மகிழ்ச்சி கண்டு அவனும் மகிழ்வான் என்று அவள் எதிர்பார்த்தது நடக்கவில்லை. அவன் முகத்தில் மலர்ச்சியோ விழிகளில் வியப்போ எள்ளளவும் ஏற்படவில்லை. "சரி நல்லது" என்று அவன் அவள் முகத்தையே பார்க்காமல் கூறிவிட்டு, "சரி புத்தகத்தை எடுங்கள்" என்று வழமைக்கும் அதிகமான கண்டிப்போடுதொடங்கினான்.

பூங்கொடிக்குத் தான் நேற்றிரவு தொடக்கம் –இல்லை நேற்று மயக்கம் வந்து தெளிந்த அந்த நொடியிலிருந்து, அணுஅணுவாய் எண்ணிக்கட்டியெழுப்பிய மனக்கோட்டை ஆட்டங்கண்டு சரிந்து விட்ட நிலைமைக்கிலக்காகி விட்டதை நினைக்க நெஞ்சே வெடித்து விட்டது போன்ற வேதனைக் குமுறல். அவளால் நிற்க முடியவில்லை. அருகிலிருந்த மேசையைப் பலமாகப்பிடித்துக் கொண்டாள். அவள். திடீரென அதிஷ்டத்தில் ஆண்டவன் அள்ளிக் கொடுத்த பெருநிதியை நெடுந்தூரம் வீட்டை நோக்கிச் சுமந்து வந்தவனிடமிருந்து வீட்டு வாசலில் அது மாயமாய் மறைந்து விட்டதோ? ஆண்டு பலவாகத் தவமிருந்து முதுமையை

அண்டிவரும் பருவத்தில் பெற்றுப் பெயரிட்டுப்பாலூட்டிச் சீராட்டிய குழந்தை திங்களொன்றில் கண்களை மூடிக்கொண்டதோ? நேற்றிலிருந்து அவள் கண்கள் குருடாகிவிட்டனவோ?

"நேற்று இவர் எனக்காக அழுததும் என்னைத் தூக்கிவைத்துக் கொண்டு குலுங்கி அழுததும் மயக்கத்தில் என் உள்ளம் கற்பனை பண்ணிக் கொண்ட வெறும் பொய் நிகழ்ச்சிகள் தாமோ? சேச்சே அப்படி இருக்காது. என் கண்களையும் என் மூளையையும் நெஞ்சையும் இந்த இடத்தில் நான் நம்பத்தவறினால் உண்மையில் நான் பைத்தியக்காரியாகவே இருக்க வேண்டும். நேற்று நடந்ததெல்லாம், – நடந்தவை என்று நான் நம்புபவை எல்லாம் உண்மையில் நடந்தவையே! இவர் அவையெல்லாம் நிகழ்ந்திராதவையாக மூடிமறைக்கப் பார்க்கிறார். இவருடைய நடிப்புக்கு இனி நான் மசியப் போவதில்லை." என்று தீர்மானித்துக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்தவள் சில பெட்டிகள் திறந்து பூட்டப்படும் ஓசை கிளம்பியதைத் தொடர்ந்து வெளியில் வந்தாள். ஒரு கையை வீசிக்கொண்டும் மறுகையைத் தன் பின்புறத்தில் மறைத்துப் பிடித்துக் கொண்டும் பெருந்தகை முன்னால் வந்து நின்றவள் "நான் பாஸ் பண்ணியதற்கு என்ன தரப்போகிறீர்கள்?"என்று சிரித்துக் கொண்டு துணிச்சலாகக் கேட்டாள் கள்ளம் விழியிலும் முறுவல் இதழ்களிலுமாக..

"உங்களுக்குப் பரிசு தரும் தகுதி இந்த ஏழைக்கேது?"என்ற பெருந்தகையின் விடையில் வெறுப்புப் பொங்கி வழிந்தது.

"உங்களிடம் இல்லாத ஒன்றைத் தரும்படி நான் எதிர்பார்க்கவில்லை. இருப்பவற்றில் ஒன்றைத்தான் கேட்கிறேன். தருகிறீர்களா?"

"எதைச் சொல்லுகிறீர்கள்?"ஆபத்து நெருங்குவது போன்ற உணர்வு தலைப்படத் தடுமாறினான் அவன். "உங்கள் இதயத்தை நிரந்தரமாக எனக்கே தந்துவிடுங்கள். அந்த ஒரு சொல்லுக்காக எனது உயிரை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள்!!" வழமையாக இருக்கும் கவலை கலந்த ஏக்கத்துக்குப் பதில் இன்பமான குழைவுஅவள் குரலில் நிரம்பி வழியலாயிற்று.

"பூங்கொடி! நீங்கள் தந்த வாக்குறுதி ஞாபகமிருக்கட்டும்.!என்னைத் தொந்தரவு செய்தால்....." என்று சீறிப்பாய்ந்தவனைத் தடுத்து நிறுத்தியது கைவளையல்கள் கிலுங்கியதாய்க் கலகலத்தெழுந்த அவள் சிரிப்பு! ஒரு நாளுமில்லாத அலட்சியமாக, துணிவாக அவள் சிரிப்பதையும் பேசுவதையுமிட்டு வியந்தான் பெருந்தகை.

அவளே மிடுக்கோடு கிண்டலாகத் தொடங்கினாள் "சரி சரி! நான் உங்கள் இதயத்தைத் தரும்படி கேட்பது தவறுதான். என்னிடம் ஏற்கனவே நீங்கள் தந்து விட்ட ஒன்றை மறுபடியும் தரும்படி உங்களைக் கேட்டால் கோபம் வரத்தானே செய்யும்.?"

"பூங்கொடி! வீண்கனவு! நேற்று வந்த மயக்கத்தில் வேடிக்கையான நகைப்புக்கிடமான கனவுகளையெல்லாம் கண்டு முடித்திருக்கிறீர்கள்.........

ஆபத்துக்குப் பாவமில்லையென்று ஏதோ வருந்துபவர்களுக்கு உதவும் பழக்கத்தில் நேற்றுத் தண்ணீர் பருக்கியிருந்தால் விழவிடாமல் தாங்கிப்பிடித்திருந்தால் இப்படியெல்லாம் நீங்கள் அதை மாற்றிக் கணக்கிடுவதா?" என்ற பொழுது அவளுக்கே அவன் தனக்காக அழுதது முதலானவைகளெல்லாம் வெறும் கனவுகள் தாமோ? என்று உண்மையில் ஐயம் எழுந்து விட்டது. ஐயம் எழுந்தாலும் அந்த நிகழ்வுகளைக் கனவுகளே என்று தீர்ப்புக்கட்டவும் முடியாமல் உண்மை நிகழ்ச்சிகள் என்று முழுமையாக நம்பவும் மேலும் இன்புறவும் முடியாமல் தடுமாறும் நெஞ்சோடு—ஆனால் அப்போதும் அவன் மீது இருந்த வாஞ்சை தூண்ட, தான் பின்னே மறைத்து வைத்திருந்த கடிகாரப்பெட்டியை மேலும் மறைத்துக் கொண்டு "சரி இந்த ஏழைக்குத்தான் உங்கள் கையால் பரிசுபெறும் தகுதி தவம் இல்லை. நீங்கள் என்னைக் கல்வியில் மேம்படுத்திய நன்றிக்காக நான் இரு கைகளாலும் தரும் சிறிய பரிசையாவது ஏற்றுக்கொள்வீர்களா?" என்று கேட்டாள்.

"என்ன பரிசு?" என்றவன் "எனக்கு வேண்டியதில்லை!" என்று சொல்ல வாயெடுப்பதற்குள் பெட்டியை முன்னே நீட்டி அதைத்திறந்து தங்கச் செயின் போட்ட புத்தம் புதியதோர் றோமர் கடிகாரத்தை எடுத்துக்காட்டி "இடக்கையை நீட்டுங்களேன்" என்றாள்.

"கடைசி வரைக்கும் நடக்காது பூங்கொடி!" என்று விட்டு "சரி! நானிங்கிருந்தால் வீண்சிரமம் உங்களுக்கு" என்று எழுந்தவன் வலக் காலை மண்டியிட்டமர்ந்து இறுகக் கட்டிப்பிடித்துக் கொண்டு விம்மி விம்மி அழுதாள் பூங்கொடி. அவளைக் கால்களினாலும் உதறித் தள்ளுமளவிற்குப் பாறைத் தன்மையை மனதில் பாய்ச்சிக் கொள்ள அவனால் முடியவில்லை.

"சரி! நான் போகவில்லை! காலை விடுங்கள்" என்ற பொழுது அவள் அந்த உரோமம் படர்ந்த கால்களை அழுகையும் சிரிப்புமாக மாறி மாறிக் கன்னங்களால் ஒற்றிப் பிடியைத்தளர்த்திக் கண்களைத் துடைத்த படி எழுந்து நின்று சொன்னாள்.

"என்றாவது ஒரு நாள் உங்கள் கை இக்கடிகாரத்திற்காக உரிமையோடு என் முன்னால் நீளும். என் கைகள் மகிழ்ச்சி நடுக்கத்துடன் உங்கள் கையில் இதை அணிந்து விடும் நிச்சயமாக."

அன்றைய பாடமும் தொடர்ந்து உணர்ச்சியை மௌனமாக்கி நடந்து முடிந்தது. தன்னைப் போல் அவளும் அவளைப் போல் தானும் வருந்தி வருந்திச் செத்தாலும் தங்கள் இரு குடும்பங்களும் அழியும்படி சமூகம் வெறுக்கும் எந்த வழிகளிலும் தங்கள் தேவைகளைப் பூர்த்தியாக விடுவதில்லை என்று தீர்மானித்துக் கொண்டான் பெருந்தகை; ஆகையால் அன்றும் தன் காதல் தவிர்ப்பு முயற்சியில் வெற்றிக் கொடி நாட்டிவிட்டு வீடு சென்று கொண்டிருந்தான்.

# 23. நடிப்பும் துடிப்பும்

மறு நாள் மாலை ஐந்து மணியளவில் பெருந்தகை ஏழாலை நோக்கி வந்துகொண்டிருந்த பொழுது வானம் மப்பும் மந்தாரமுமாகி இருள் மூடி வையமே அரையிருள் மயமாகிக்கிடந்தது. மெல்லிய குளிர் காற்று ஊதிக்கொண்டிருந்ததால் பகலின் வெம்மை போய் இலேசான விறைப்பு அவனது கல்லுடலிலும் கூதல் முள்ளைப்பரப்பிக் கொண்டிருந்தது. 'இதோ மழை வந்து விட்டது!' என்று அபாயச் சங்கு கூவுவது போல் மழையின் இரைச்சல் கேட்டு அவன் அற்பைச் சந்தியால் திரும்பி மேற்கு நோக்கி விரைவாக முன்னேறிக் கொண்டிருக்கையில் சடசட என்ற துளிகள் வந்து அவனைச் சூழ்ந்து பொழியத் தொடங்கின. வழியோரத்தில் தங்கி நிற்க வசதியான கோயில் மண்டபமோ வாசிகசாலையோ வீட்டுப்படலைக் கொட்டிலோ இல்லை. அறிந்தவர்களின் வீடுகளும் அந்த வீதியில் கிடையாது. வேறுவழியின்றி ஓட்டத்தை விரைவுபடுத்தி உன்னி உன்னி வண்டியை மிதித்தவன் உலகநாதபிள்ளையின் வீட்டுப்படலையை அடைந்த போது உடல் தெப்பமாக நனைந்து விட்டிருந்தது. அந்தப் பதினைந்து நிமிட மழையில் வார்ந்தோடிய வெள்ளத்தில் சளுக் சளுக்கென்று மிதித்துக் கொண்டு, மிதிவண்டியை உருட்டிக் கொண்டு போய் வாழைக்குள் வழக்கம் போல் விட்டு விட்டுப் படிப்பறையை நோக்கி நடந்தவன் படிகளில் ஏறிநின்ற பொழுது அவனது தலை தண்ணீர்த் துளிகளைச் சொட்டிக் கொண்டிருந்தது.போட்டிருந்த சட்டையின் முதுகுப்பக்கம் தவிர்ந்த பகுதிகளெல்லாம் முற்றாக நனைந்து விட்டிருந்தன.

பழையபடி கீழே நிலத்தில் இறங்கி நின்று குனிந்து அவன் வேட்டியை முறுக்கிப் பிழிந்து விட்டுத் தலையைச் சிலுப்பி உதறினான். தண்ணீர் சிதறிப் பறந்தது. சட்டையையும் கழற்றிஒரு நொடியில் முறுக்கிப் பிழிந்து விட்டு மறுபடியும் போட்டுக் கொண்ட போது உள் வீட்டிலிருந்து வந்து எட்டிப்பார்த்த பூங்கொடி "நல்லாக நனைந்து விட்டீர்களே?" என்று பதைப்போடு சொல்லிவிட்டு உள்ளே ஓடிப் போய் வெளுத்து மடித்து வைத்திருந்த துவாய்த்துண்டொன்றைக் கொண்டு வந்து உதறி விரித்து அவனிடம் நீட்டி "உள்ளே வாருங்கள். தலையைத் துடைத்துக் கொள்ளுங்கள். ஈரம் சுவறித் தடிமன் உண்டாகிவிடப் போகிறது." என்று தவிப்புடன் மன்றாடினாள். தனக்கு மிக அருகில் நின்ற பூங்கொடியைத் திரும்பிப் பார்க்காமல் "தேவையில்லை" என்று கூறியவனாய்க் கால்களை அடித்து உதறிவிட்டு விறு விறு என்று படிப்பறையுள் புகுந்து "புத்தகத்தை எடுங்கள்" என்றான். தனது காதல் தவிர்ப்பு நடிப்பைத் தீவிரமாக நடத்தத் தொடங்கி விட்டான் அவன்.

அவளோ! "இங்கே பாருங்கள்! தடிமன் வந்து விடப்போகிறது. துடைத்துக் கொள்ளுங்கள்." என்று மன்றாடியபடி தயங்கி நின்றாள். கண்கள் குளமாகித்

துளும்பின. எங்கோ பார்ப்பது போல் பார்த்து அதை அவதானித்துக் கொண்டவன் “இது பெரிய தொந்தரவு” என்று அலுத்துக் கொண்டு துவாயைக் கைநீட்டி வாங்கிக் கொண்டான்.

அவன் அலுத்துக் கொண்டதையும் பொருட்படுத்தாமல் பூங்கொடி மகிழ்ந்து குழந்தை போலச் சிரித்துக் கொண்டே கண்களில் வழிந்த கண்ணீரைச் சுட்டு விரலால் வழித்துச் சுண்டினாள்

“பூங்கொடி! நான் பெண் சகோதரமில்லாத பாவி! எனக்குத் தங்கை இருந்தால் இப்படித் தானே செய்வாள். என் தங்கை எனக்குச் செய்த அன்பாகவே ஏற்றுக் கொள்வேன் இதை”

“அப்படியானால் ......?”

“என் தங்கையாகிய பூங்கொடி செய்த அன்பு தான் இது.” என்று அவள் முகத்தைக் களவாயப் பார்த்தவன் அவள்நெருப்பில் விழுந்த புழுப்போல் நிலத்தில் விழுந்த மீன் போல் பதறித் துடிப்பதைக் கண்டான்.

“இன்னொரு தடவை இப்படிச் சொல்லாதீர்கள்”

“ஏன்”

“உலகிலுள்ள கோடானு கோடி இளைஞர்களுக்குத் தங்கையாகவே இருக்கிறேன். ஆனால் உங்களுக்கும் சகோதரியாகும் அந்தச் சாதாரண உறவை மட்டும் உடையவளாக இருக்க என்னால் முடியாது.”

“உங்களால் முடியாவிட்டால் நானா பொறுப்பு? நான் உங்களைத் தங்கை என்று தான் நினைப்பேன். தங்கை என்று தான் அழைப்பேன். நீங்கள் என் தங்கை” என்று முரட்டுத்தனமாக அவன் பேசிமுடிப்பதற்குள் வெளியில் கொட்டும் மழையின் பேரிரைச்சலின் நடுவில் டம் டம் என்று கேட்கும்படி அந்த அறைச் சுவரில் பாய்ந்து பாய்ந்து தலையை மோதினாள் புலியாகி நின்ற பூங்கொடி.

இந்தப்புரட்சியை அவள் போக்கில் சற்றும் எதிர்பார்க்காத பெருந்தகை எட்டி அவள் கையைப் பிடித்தான். அவள் பேய் போல அந்தப் பிடியை உதறித் தள்ளிவிட்டு மீண்டும் ஒருமுறை மோதிய போது பெருந்தகையின் முரட்டுக் கைகளில் ஒன்று அவளிடையைச்சுற்றி வளைத்து அவளை இழுத்து வந்து நாற்காலியில் இருத்தியது. பெருந்தகை பயத்துடன் “வீட்டில் அம்மா அப்பா இல்லையா?” என்று கேட்ட கேள்விக்கு இல்லையென்று தலையசைத்தபடி விக்கி விக்கி அழுதாள் அவள்.

பூங்கொடி என்று பரிவாக அழைக்க எழுந்த வாயை “இதோ பூங்கொடி” என்று நெருப்பாக அழைக்கச் செய்த பெருந்தகை “நான் இனிமேல் தங்கை என்று அழைக்கவில்லை. சும்மா சும்மா என் முன்னால் அழுகிற பழக்கத்தை இனிமேலும் வைத்துக் கொள்ளவேண்டாம்.” என்று விரக்திச் சோர்வோடு சினந்து கூறினான்.

முற்பாதிப்பேச்சைக் கேட்டுமனம் நிறைந்தவள் பிற்பாதிப் பேச்சை காதில் விழுத்தியதாகத் தெரியவில்லை. சிரித்துக் கொண்டே மீண்டும் வீட்டிற்குள் ஓடினாள். ஒரு பளபளக்கும் நீலச் சாரமும் வெள்ளைத்துவாயும் மடித்த மடிப்பை நெஞ்சோடு இறுக அணைத்துப் பிடித்தபடி அவன் முன்னால் வந்து ஏதோ சொல்லும் ஆவலுடனும் தடுக்கும் அச்சத்துடனும் அவள் தயங்கி நிற்பதைக் கண்ட அவன் தன் தலை துடைத்துக் கொண்டிருந்த துவாயைத் தாழ்வாரத்துப் பலகைத் தட்டியில் போட்டுவிட்டுத் திரும்பிவந்து "என்ன"? என்று உருட்டி விழிக்கும் கண்களோடு கேட்டான்.

"ஈர உடுப்போடு இருக்கிறீர்கள்................!"

"அதற்கு உங்களுக்கு என்ன?"

பூங்கொடிக்கு நெஞ்சில் இடித்த மாதிரி இருந்தது. எழுந்த விம்மலை அடக்கிக் கொண்டு "இதைக் கட்டிக் கொள்ளுங்கள்" இதை கட்டிக்கொள்ளுங்கள்" என்று விட்டு விட்டுக் குரலால் சிணுங்கிக் கொண்டு நிற்பவளின் அன்பு அவன் நெஞ்சைப் பாகாய் உருக்கி எடுக்க, இரும்பாய் இறுகிய வார்த்தைகளை இடர்ப்பட்டுப் பேசினான்.

"மற்றவர்கள் கட்டிக் கொண்ட ஆடைகளை வாங்கி உடுக்கிற அளவுக்கு நான் ஏழையானாலும் மானங்கெட்டவன் இல்லை."

"இது வேறுயாருடையதோவாக இருந்தால் நானே உங்களைக் கேட்டிருக்கமாட்டேன். இவை உங்கள் ஆடைகளே தான்" அவற்றை அவள் விரித்து உதறிக் காண்பித்த போதுதான் பெருந்தகைக்கு அழுக்கேறி வியர்வையூறிப் புளித்த தனது சாரத்தையும் துவாயையும் பூங்கொடி வீட்டுத் தோட்டத்தில் உள்ள கீற்றுக் கொட்டிலுள் தோட்டங்கொத்த வந்த காலத்தில் தான் போட்டு விட்டுச் சென்றது ஞாபகத்துக்கு வந்தது. ஆனால் அவற்றைப் போட்டபோது "புளிமண்டி" என்பார்களே அப்படியல்லவா இருந்தன? "யார் உங்களிடம் இப்படிச் சலவை செய்து தந்தார்கள்?" என்றான் குழம்பிய சிந்தனையோடு!.

அவள் ஆனந்த மயக்கத்தோடும் பெருமிதத்தோடும் பேசினாள். "உங்களைத் தெய்வமாகப்போற்றி இரவு பகலாக வழிபட்டுவரும் உங்கள் 'அவள்' தான்."

# 24. புயல் புகுந்த தென்றல்

"பூங்கொடி" என்று ஆத்திரத்தோடு கத்திவிட்டுத் "தந்து விடுங்கள் அதை. இன்றைக்குத் தும்பு தும்பாகக் கிழித்தெறிந்து விடுகிறேன்" என்று கையை நீட்டினான் பெருந்தகை. அவளோ கலகலவென்று சிரித்துக் கொண்டே ஒற்றை நொடியில் அந்தச் சாரத்தைத் தாவணிபோல் விரித்துத் தன்னுடலில் போட்டுக்கொண்டு பின்னே இரண்டடி எடுத்து வைத்து நின்றாள்.

"ஒருவரை வீணாகக் கண்டபடி தொல்லைப்படுத்துவது நாகரிகமற்ற செயல் என்பதை அறியாத பட்டிக்காட்டுச்சனம்" என்று சினந்து கொண்டே சாரத்தை வாங்கிச் சென்று ஆடைகளை மாற்றிக் களைந்த சட்டை வேட்டியை முறுக்கிப் பிழிந்து அறைக்கிறாதியில் போட்டு விட்டுத் துவாயால் உடம்பு மறையப் போர்த்திக் கொண்டு திரும்பி வந்தபொழுது பூங்கொடி விம்மி விம்மி அழுது கொண்டு நின்றாள்.

அவனது "பட்டிக்காடு" பட்டமளிப்பு அவள் நெஞ்சை பாரதூரமாகப் புண்படுத்தி விட்டது என்பது அவனுக்கும் தெரியும். தெரிந்தும் சீற்றங் கொண்டவன் போல் "தனியாக இருக்கும் உங்களுடன் நான் இங்கு நிற்பது அழகல்ல! நாளை வருகிறேன்" என்று சொல்லியபடி கிறாதியில் போட்ட ஈர உடைகளை எடுத்துக் கொண்டு கொட்டும் மழையில் இறங்கப் போனவனைப் பின் தொடர்ந்தவள் அவன் படியில் இறங்கும் சமயம் அவன் கையை உரிமையோடு எட்டிப் பிடித்தாள்.

பிடித்த மறுகணம் கையைப் பெருந்தகை உதறிவிடுவித்துக் கொண்டபோது அவள் சுழன்று போய்ச் சுவருடன் மோதுண்டு தரையில் விழுந்தாள். "நாளை வருகிறேன் என்று சொன்னால் கேட்டுக் கொள்ள வேண்டியதுதான்" என்ற வார்த்தை அரைகுறையாகக் காதில் விழுந்து வாசலை வெறித்துப் பார்த்தாள். அங்கு அவன் இல்லை. கிறாதியில் போட்ட ஈர வேட்டியும் இல்லை.

வெகுநேரம் வரை அழுது கொண்டிருந்தவள் அம்மா அப்பா இன்னும் நண்பர்கள் வீடுகளிலிருந்து திரும்பியிராததால் இருள் திணிந்து கொண்டிருந்த வீட்டின் மின் விளக்குகளை எல்லாம் ஏற்றினாள். இருண்ட வீட்டிற்கு இத்துணை எளிதாக ஒளியூட்ட முடிந்தாலும் துயரஇருள் மண்டிக் கிடந்த இதயத்தின் இருளை நீக்க முடியாமல் அது ஏற்படுத்திய சஞ்சலத்திலிருந்து மீளமுடியாமல் வெந்து கொண்டிருந்தாள்.

வெளியில் மழை சோவென்று இரைந்து அடித்துப் பெய்து கொண்டிருந்தது. அத்தோடு இப்படிக் கடுமையாகப் பெய்யும் மழையில் இறங்கிப் போய் விட்டாரே! மழையில் இதுவரை நனைந்து விறைத்துக் குளிரில் நடுங்கத்தொடங்கியிருப்பார். தடிமன் காய்ச்சல் பிடித்து உடம்பைப் படுக்கையில் போட்டு வருத்தப்போகிறதே. பாவம் என்னால் தானே நனைந்து வரவும் நனைந்து செல்லவும் வேண்டி நேர்ந்தது. நான் பாவி! என் தலைவிதி என் வெறி என்னை வாட்டுவதோடு நின்றாற் போதாதா? என் மூலம் அவரையும் அல்லவா தொந்தரவுக்கும், வேதனைக்கும் சோதனைக்கும் நோய் பிணிக்கும் ஆளாக்கிக் கொண்டிருக்கின்றன. நான் மழைக்குள் போகவேண்டாம் என்று தடுத்த போது என்னையும் உதறி எறிந்து விட்டுப் போய் விட்டாரே! என்னுடன் அன்பாக நடந்து கொள்வார் என்று நான் நம்பி எதிர்பார்த்த இடங்களில் எல்லாம் என்னுடன் பகைவன் போல் நடந்து கொள்கிறாரே! இவருக்கு என்மீது துளி அன்பும் இல்லைப் போல் இருக்கிறதே.

நேற்று முன்தினம் நான் மயங்கி விழுந்த போது இவர் செய்தவையாக நான் நம்பும் செயல்கள் உண்மையில் கனவாகவே இருக்குமோ? எது உண்மை எது பொய்! எப்படியும் இதை இன்று தீர்க்கமாகத் தெளிவாக அறிந்து விட வேண்டும் என்னும் சபதம் பூண்டவளாய்ப் படிப்பறைக்கு மீண்டும் சென்று நேற்று முன் தினம் கடைசியாகப் படுத்துக் கிடந்த நாற்காலி இருந்த இடத்தைப் பார்த்தாள்.

வாசலிலிருந்து அங்கு வரை அந்த நாற்காலி இழுத்து வரப்பட்டதா லேற்பட்ட அடையாளம் நிலத்தில் நீளமான கோடுகளாகத் துலக்கமாகத் தெரிந்தது. ஆம்! அவளைத் தோளில் போட்டுக் கொண்டு வாசல் வரை சென்றவன் அங்கிருந்த நாற்காலியை, அவளைத் தோளில் வைத்துக் கொண்டே நெடுந்தூரம் உள்ளே இழுத்துச் சென்றான். இப்படி நடந்திருக்க அவன் தூக்கிச் சென்றது மட்டும் எப்படிப் பொய்யாக இருக்க முடியும்? ஒரே நேரத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் இரண்டில் ஒன்று மெய்யாக இருக்கும் போது மற்றது எப்படிப் பொய்யாக இருக்க முடியும்? என்ற ஆராய்ச்சி தியங்கி நலிந்த அவள் நம்பிக்கைக்குப் புத்துயிரளித்தது. அந்த உற்சாகத்தில் பூங்கொடி ஓடிப்போய்த் தான் முந்தா நாள் மயங்கி விழுந்த போது அணிந்திருந்த பள்ளிச் சட்டையை எடுத்து ஆராய்ந்து பார்த்தாள். அந்த வெள்ளைச் சட்டையின் நெஞ்சுப்புறத்தில் செம்பாட்டுப் புழுதி கலந்த வியர்வை ஊறிக் காய்ந்து கிடந்தது.

மனக் கவலை பஞ்சாய்ப் பறந்து உள்ளம் எல்லாம் உடலெல்லாம் இன்பப் புல்லரிப்புப் பாய்ந்து பரவ அந்தச் சட்டையைக் கண்களில் ஒற்றிக் கொண்டாள் பூங்கொடி!

"பாதி வறுமை தந்த தாழ்வுணர்ச்சியாலும் மனவிரக்தியாலும் பாதி அவமானம், நம்பிக்கைத்துரோகம், பழிபாவம் என்ற கற்பனைக்கு அஞ்சியதாலுமே உள்ளத்தில் என்மீது நிறைந்த அன்பு இருக்கவும் அவற்றிற்குப் பதில் வெறுப்பிருப்பது போல் காண்பிக்கத் தெண்டிக்கிறார். பாவம் அவர் மட்டும் மனிதரில்லையா? அவர் மட்டும் வாலிப எண்ணங்களற்றவரா? ஏழை என்பதற்காக அவர் போன்றவர்களுக்குக் காதல் உணர்ச்சி இருக்கக் கூடாதா? இயற்கையாக எந்த உயிருக்கும் இருக்கின்ற ஓர் உணர்ச்சியை மனிதர்களுக்கு அதிலும் ஏழைகளுக்கு மட்டும் இருக்கக் கூடாது என்று இந்த உலகம் எதிர்பார்ப்பது எத்துணைக் கொடுமை.? அவர் என்னை வெறுப்பது போல் நடந்து விட்டு வெளியில் அன்புணர்ச்சி குத்தக் குத்த எனக்காக என்னைக் கலங்க வைப்பதற்காக எவ்வளவு தூரம் வேதனைப்படுவாரோ? கடவுளே! இப்படி ஒரு நல்லவரை எப்படி உன்னால் இவ்வளவு தூரம் சித்திரவதை செய்ய முடிகின்றது?" என்று எண்ணிய போது பூங்கொடி அழுது விட்டாள். அவன் தன்னை வெறுத்து நடந்து கொள்வதால் ஏற்பட்ட மன வேதனையை மறந்து அவன் படும் துன்பத்திற்காக அவனுக்கு மன ஆறுதலைக் கொடுக்கும் படி கடவுளை மன்றாடியும் அழுது அழுது படுக்கையில் கிடந்து நீண்ட நேரம் புரண்டாள் பூங்கொடி.

“என் குடும்பத்தில் எவ்வளவு பணமிருந்தென்ன? சொத்திருந்தென்ன? எல்லாவசதிகளும் நிறைந்திருந்தும் என் மனதில் ஒரு நிமிடமாவது நிம்மதியில்லையே! எங்கள் வீட்டு மாட்டுத்தொழுவத்தில் வீடு மெழுகச் சாணி அள்ள வரும் தோட்ட வெளிப் பொன்னி அவள் குடிசை வாசி என்றாலும் ஒவ்வொரு கணமும் எவ்வளவு குதூகலமாக இருக்கிறாள். அப்பாவின் வேலையாட்களில் ஒருவனான செவிட்டு இளையவனின் மகள் வள்ளி அவள் தீனுக்குக் கஷ்டப்பட்டாலும் சிறிதும் சிந்தைக் கலக்கமின்றி எப்படியெல்லாம் சிரித்து மகிழ்ந்து ஆடிப்பாடித் திரிகிறாள்? எனக்கு மட்டும் எத்தனை மனப்போராட்டங்கள், எத்தனை சலனங்கள்? ஏனிந்தக் கதி எனக்கு? ஏராளமான ஏழையானவர்களே மனநிறைவோடு வாழ ஒரு சிலரான எல்லாமிருப்பவர்கள் சஞ்லத்தோடு வாழ்வதேன்? எல்லாமிருப்பது தான ஆபத்தோ? ஆமாம் அப்பா அநியாய வழிகளில் ஆயிரமாயிரமாகச் சம்பாதித்திருக்கும் நஞ்சுப் பணம்தான் நம்மை அறுக்கிறது. நம்மோடு சேர்ந்த அந்த நல்லவரையும் என் பெருந்தகையையும் வாட்டித் தொலைக்கிறது. இப்பாவச் சொத்தைவிட்டு நீங்கும் வரை எனக்கும் அவருக்கும் வாழ்க்கை நரகம்தான்.” என்ற எண்ணத்துடன் உறங்கிவிட்டாள் அவள்.

# 25.இதயங்கள் எரிமலைகள்

ஒளி பொங்கும் முழு நிலவு வானத்தில் நின்று பாலைப் பொழிந்து கொண்டிருந்தது. இரவின் அமைதியிலே அந்தப் பனங்கூடலெல்லாம் எதிரொலிக்கும் கல் கல்லென்ற ஒலி. அந்தப் பனங்காட்டிற்குள் இந்து சமுத்திரத்துள் அரேபியத் தீப கற்பம் போல் தலை நீட்டிக்கிடந்த தோட்டத் தொங்கலின் மூலையொன்றில் ஒரு மக்கிக் கிடங்கிற்குள் பெருந்தகை களைக்கக் களைக்கப் பாரமான சம்மட்டி ஒன்றைத் தூக்கித் தூக்கி ஒரு பாறாங்கல்லை அடித்துக் கொண்டு நின்றான். மேட்டுநிலத்தில் வைக்கப்பட்டிருந்த ஹரிக்கேன் விளக்கு ஒவ்வொரு சம்மட்டி அடிக்கும் அதிர்ந்து கொடுத்துக் கொண்டிருந்தது. அந்தத்துண்டுக் காணியின் அடியில் வெட்டப்பட்டு அழகாகக் கட்டப்பட்டுத் துலாப் போடப்பட்டிருந்த புதுக்கிணற்றிற்கு அருகில் ஒரு சிறு சனக் கும்பல்! அதன் நடுவே ஒரு பொங்கல் அடுப்பு எரிந்து கொண்டிருந்தது. அந்தக் கும்பலில் பெருந்தகையின் தந்தை முத்தையாவின் நம்பிக்கை ஒளி பொலிந்த முகம், அன்னையின் அடக்கமான வதனம் கடைசிப் பிள்ளைகள் நால்வரதும் பிஞ்சு முகங்கள் காற்றில் விளாசிடும் பொங்கலடுப்புத் தீக் கொழுந்தின் வெளிச்சத்தில் ஆனந்தத் தேக்கங்களாக மின்னுகின்றன. உடுப்பிட்டி என்ற ஊரில் இருந்து வந்து அந்தக் காணிக்குள் கொட்டில் கட்டிக் குடியிருந்துகொண்டு அக் கிணற்றை வெட்டி முடித்த கிணறு

வெட்டிகள் கடவுள் அருளால் விபத்துக்களில் அகப்படாமல் ஒருவாறு தப்பிவிட்ட மகிழ்ச்சியோடு அங்கே காணப்பட்டனர். அவர்கள் பொங்கற் பானையைச் சூழ்ந்து நின்று அடுப்பை விறு விறுப்பாக எரித்துக்கொண்டு நின்றனர். கள்ளுக் கொட்டில் வியாபாரத்திற்கு முழுக்குப் போட்டு ஒரு கொடிய பாவப் பிழைப்பை நிறுத்திக் கொண்டதை நினைத்துப் போலும் முத்தையா– காமாட்சி இருவரும் அடிக்கடி நிம்மதிப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தனர். பெருந்தகை காணியின் மறு மூலையில் ஹோ என்றிரைச்சல் போடும் பனைகளுக்கருகில் நெஞ்சத்தில் பாரம் மிகுந்த கற்பனைகளைச் சுமந்து கொண்டு அன்று முழுவதும் உணவு கொள்ளாத வயிற்றோடு சம்மட்டியால் அந்தப் பாறாங் கல்லையும் பூங்கொடிக்கு அன்று வரை தான் புரிந்து வந்த கொடுமைகள் பற்றிய ஞாபகங்களால் தன்மண்டையையும் ஒரே நேரத்தில் தாக்கித் தாக்கி உடைத்துக் கொண்டு நின்றான்.

“எனக்கு நோய் பிணி வந்து விடக்கூடாது என்பதற்காக என்னை மழையில் செல்ல விடாமல் தடுக்க வந்தவளைத் தள்ளி விழுத்தினேனே! அவள் மனம் உடைந்து தற்கொலை செய்து கொண்டால்? தெய்வமே அவள் நன்மைக்காக அவள் அவப் பெயர் எடுக்கக் கூடாதென்றுதானே அப்படிச் செய்தேன். அவள் பெற்றார், அவள், மற்றும் எல்லாரின் நன்மைக்காகவும்தான் என் ஆசைகளைச் சுட்டெரித்து அவளோடு பாரா முகமாக நடக்கிறேன் என்ற உண்மையை அவள் தெளிய வைத்து விடு தெய்வமே! உன்னருளால் அவள் சாக எண்ணாமல் இருக்க வேண்டும். தவங்கிடந்து பெற்று உயிருக்குயிராக வளர்க்கும் அந்தப் பெற்றோர் பாவங்கள். தாங்கமாட்டார்கள்.

கட்டக் கந்தைக்கும், குந்தக் குடிசைக்கும் வழியற்றுக் கலங்க வேண்டிய அல்லது காலம் முழுவதும் கள்விற்கும் பாதகத்தைச் செய்து செய்து குட்டிச்சுவராகிக் கெட்ட குடியாகவேண்டிய எங்கள் குடும்பத்தை, எனக்கு வேலை தந்து சொந்தத்தில் கமம் வாங்க வைத்து, கௌரவமாக வாழவும், தம்பிமாரைப் படிப்பிக்கவும் வழியமைத்துத் தந்த எங்கள் குலவிளக்கல்லவா அவள்? அவள் தான் தன் தந்தையாரிடம் என்னைப் பாடம் சொல்லித் தரும்படி கேட்கச் சொல்லியிருப்பாள். பாடம் சொல்லித் தரும் சாட்டால்தானே மேற்பார்வையாளருக்கு உதவியாளனாகவும் பணியாற்றி இருநூற்றைம்பது ரூபா மாதச் சம்பளமும் பெற முடிந்தது.? நான் காரணமாக அவளுக்கு ஒன்று நேர்ந்தால் அது செய்ந்நன்றி கொன்ற செயலாகிவிடாதா? கடவுளே அவளை இந்த ஒரு பொழுது காப்பாற்றி நாளை என்கையில் தந்து விட்டால் பின்னர் அவளை நான் சாக விடமாட்டேன். புத்திசொல்லி, கெஞ்சிமன்றாடி, அவள் மனதை மாற்றி விடுவேன் எனது அழுக்கு உடையைத் தானாக விரும்பிச் சலவை செய்தாளே!

உன் அன்பின் ஆழத்தைஉணர்ந்த அளவில் என்றாலும் மதித்து நடக்க முற்பட்டால் எல்லாருக்குமே உயிராபத்தாகிவிடுமே அம்மா? உன்னை இழப்பது என்றால் அது இந்தப் பாவிக்குத் தகுந்த தண்டனையாக இருந்தாலும் உன்னைப் பெற்ற தாய் தகப்பனால் அதைத் தாங்க முடியாதம்மா! என்னை அவ்வளவு

பாரதூரமாக, பழிகாரனாக்கித் தண்டிக்க எண்ணி விடாதே!'' என்று எண்ணியபோது சம்மட்டி அவன் கையிலிருந்து தானாக நழுவி விழ அவன் முகத்தைப் பொத்திக் கொண்டு சீறிச் சீறி அழுதான். தகப்பனார் ஏதோ அலுவலாகக் கிணற்றடியிலிருந்து புறப்பட்டு வருவது அந்தப் பால் வெண்ணிலா வொளியில் தெளிவாகத் தெரிந்தது. எல்லாத் துயரங்களையும் இரண்டு மூடைகளாகக் கட்டி ஒன்றை மூளையிலும் மற்றொன்றை இதயத்திலும் அடக்கிக் கொண்டு சம்மட்டியைக் கையில் தூக்கினான்.

இரவு ஒரு மணிவரை தோட்டத்தில் நின்று கல் கிளறிக் களைத்த பின் வீடு சென்ற பெருந்தகைக்கு அளவுக்கு மிஞ்சிய உழைப்பால் ஏற்பட்ட உடல் வலியாலும் வெறுமையாகக்கிடக்க விடப்பட்ட வயிற்றைப் பசி குடைந்த குடைச்சலாலும் தூக்கம் வர மறுக்கலாயிற்று. பூங்கொடி தற்கொலை முயற்சியில் இறங்கி விடுவாளோ என்ற அச்சம் வேறு அவனை உலுக்கி எடுத்துக் கொண்டிருந்தது. பாயிற் கிடந்து அழுவதும் புரள்வதுமாக விடிய விடிய உறக்கமின்றித் தவித்தவன் விடிந்தும் உணவுகொள்ளாமலே யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த கல்லூரி மண்டபக் கட்டட வேலையைக் கண்காணிக்கச் சென்றுவிட்டான். காலை எட்டரை மணியளவில் அந்த இடத்திற்கு உலகநாதபிள்ளையின் 'மொறிஸ்கார்' வந்து சேர்ந்தது. காருக்குள் இருந்து பூரிப்பான தோற்றத்துடன் பூங்கொடி தன்னை ஒளி தெறிக்கும் விழிகளால் விழுங்கி விடுபவள் போலப் பார்த்திருப்பது பெருந்தகைக்குத் தெரிந்தது. அவளை உயிரோடு கண்ட நிம்மதியில் அப்பாடா! என்று மனதுள் நினைத்துப் பெருமூச்சு விட்டான். நேற்றுக் காலை உணவுக்குப் பின் நிரந்தரமாகக் காய்ந்து கிடந்த வயிற்றுக்கு இந்த நிம்மதி பசியை உணர்த்திற்று. 'இந்தப் பிரச்சினைக்கு இனியாவது ஒரு நல்ல முடிவைக் கடவுள் காட்டும் வரை நான் பசி கிடந்தே தீருவேன்என்று நெஞ்சில் சூளுரைத்துக் கொண்டு என் குடும்பத்திற்காக நான் இனி எதுவும் செய்ய வேண்டியதில்லை. வாழ் நாள் எல்லாம் கஞ்சி வார்க்க மூவாயிரம் கன்றுத் தோட்டம் வாங்கி விட்டாயிற்று. இனி "என் ஒருமனமான பிரார்த்தனையும் உண்ணா நோன்பும் அந்தப் பெற்றோரும் மகள் பூங்கொடியும் மனம் நிறைந்து மகிழும் விதத்தில் இந்தப் பிரச்சினையை விரைந்து தீர்த்தருளும் படி மன்றாடுவதாகவே அமையும்; இனி என் வாழ்வும் சாவும் இதற்காகவே!'' என்று சபதமெடுத்திருந்தான்.

ஆயினும் இந்தச் சந்தர்ப்பத்தில் என்றாலும் பூங்கொடியைப் பார்த்து ஒரு முறை புன்னகைக்க அவன் எண்ணவில்லை துணியவில்லை. பூங்கொடியோ தகப்பனார் வந்து காரை மறுபடியும் செலுத்தத் தொடங்கிக் கார் ஓடிக்கொண்டிருந்த போது மனதை மிகவும் வேதனைக்குள்ளாக்கும் சிந்தனையில் மூழ்கி அமர்ந்திருந்தாள். "வீட்டுக்குளில்லா விட்டாலும் வெளியிடங்களில் கண்டாலாவது அவர் ஒரு முறை சிரிக்கவோ தலையசைக்கவோ கூடாதா?'' என்று கேட்டுக் கேட்டுக் கண்கலங்குவதும் கண்ணீரை அடக்குவதுமாக இருந்தாள்.

அன்று தான் மயங்கி விழுந்ததிலிருந்து தன் போக்கிலேயே ஒரு புரட்சி, திடீர் மாற்றம் ஏற்பட்டிருப்பதை அவள் அவதானித்து வைத்திருந்தாள். அதற்கு முன்பு அடக்கமாகக் கண்ணீர் வடித்தவை போன்ற சந்தர்ப்பங்களில் இப்பொழுதெல்லாம் புலி போல் சீறுகின்ற வழக்கம் ஏற்பட்டுள்ளது. நம்பிக்கையோடு முன்பெல்லாம் தாங்கிக்கொண்ட துன்பங்களைக்கண்டு இப்பொழுதெல்லாம் செத்துவிட்டால் என்ன என்று எண்ணத்தொடங்கி விட்டமை அவளுக்குப் புரிகிறது. ஒரு வித அலுப்பும் வெறுப்பும் கசப்பும் படிப்பில் தினக்கடமைகளில் உண்ணும் உணவில் எல்லாம் ஊடு கலந்து நின்றதையும் அவள் அவதானிக்கத் தவறவில்லை. பருவ உணர்ச்சியிருந்து, அந்த உணர்ச்சியைக் கட்டுப்படுத்துவதில் தான் ஒருவனுக்கோ ஒருத்திக்கோ சிறப்பு இருக்கிறது. எந்த வித உணர்ச்சியும் இல்லாதவன் உணர்ச்சிகளால் உந்தப்படுவதில்லையாகையால் அவன் நெறி தவற வேண்டிய அவசியம் ஏற்படுவதில்லை. உணர்ச்சிகள் உள்ளவர்கள் வேண்டிய இடத்தில் கட்டுப்படுத்துவதும், கட்டுப்படுத்த முடியாத மட்டில் தற்காக்கும் நோக்கமாக உயிரை விடுவதும்தான் சரியான இரண்டு வழிகள். தன்னுணர்ச்சிகள் பெருந்தகையைக் காணும் பொழுது கட்டுப்பாட்டை மீறும் எனக்கண்டதால் அவனைத் தொல்லைப்படுத்தித் தனக்கும் இழுக்கைத் தேடவேண்டி நேர்ந்து விடுமெனப்பயந்து பழையபடி உணவுக் குறைப்புத்திட்டத்தை அமுல் நடத்தக் காருக்குள் இருந்த படியே தீர்மானித்து விட்டாள் பூங்கொடி. அந்த நிமிடத்திலிருந்து அன்று வீடுதிரும்பி வகுப்பறைக்குப் போயிருந்தது வரை அவள் வயிறும் தேநீரன்றி வேறெதுவும் கண்டதில்லை.

பெருந்தகை தன் மிதி வண்டியில் மல்லாகம் சந்தியால் திரும்பி ஏழாலை வீதியில் வந்து கொண்டிருந்த பொழுது நேரம் நாலரைமணி, எத்துணை வலிமை மிக்க கட்டுடல் ஆயினும் இரண்டு நாள் பசி கிடந்தால் களைப்பால் உடலே நடுங்கித் தள்ளாடும் நிலை வந்து விடுவதை முதன் முதலாக அனுபவித்துக் கொண்டு சென்றுகொண்டிருந்தான். உடலில் மித மிஞ்சிய களைப்பு ஆட்சி செய்தமையால் உள்ளத்தில் இரவில் இருந்த பதைப்பில்லை. மிகுந்த தெளிவு இருந்தது. பூங்கொடி இன்று இன்னும் அதி உக்கிரமாகப் போராடினாலும் அவள் எண்ணத்திற்கு விட்டுக் கொடுத்து ஊர்ப்பேச்சுக்கும் பெற்றோரின் ஏச்சுக்கும் அவளும் தானும் ஆளாகக்கூடாது என்ற தீர்மானம் அவன் மனதில் விழுந்திருந்தது.

## 26. மண்டியிட்டது மாமலை

அந்த வீதியில் ஓர் ஆலமர நிழலில் தலைமுறை தலைமுறையாகப் போவோர் வருவோர் அமர்ந்து அமர்ந்து அழுத்தம் பெற்றுக்கிடந்த ஒரு பெருங்கல்லின் மேல் ஒரு முதியவர் மூக்குக்கண்ணாடியுடனும் கனத்துத் தொங்கும்சட்டைப் பையுடனும் உட்கார்ந்து உரத்த குரலில் பத்திரிகை ஒன்றை வாசிக்கப் பல முதியவர்கள் அவர் முன்னே நிலத்தில் அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்தனர்.

“இந்தக் காலத்தில் பெண்ணைப்பெற்றவர்கள் வாய் வயிற்றைக்கட்டி இரவு பகல் பாடுபட்டு எத்தனையோ வழிகளில் பணம் சம்பாதிக்கிறார்கள், அந்தப் பெண் பிள்ளைகளை வாழவைப்பதற்காக. அப் பெண்களைக் காதலிப்பதாகக் கூறிக் கொண்டு வரும் வேலைவெட்டி இல்லாத இளைஞர்களோ அவர்களை எப்படியோ தம் சொத்தாக்கிக் கொண்டு அவர்களின் பொருள் பண்டத்தைத் தின்றழித்த பின் அவர்களைத் தெருவில் விட்டுத் விடுகிறார்கள். இவ்வாறு மேற்படி ஜீவனாம்ச வழக்கில் தீர்ப்பு வழங்கிய போது நீதிபதி குறிப்பிட்டார்.” என்ற வார்த்தைகள் அவர்களைத் தாண்டிச் சென்று கொண்டிருந்த பெருந்தகையின் காதில் விழுந்தன.

“நானும் இன்றைய நிலையில் பூங்கொடியையும் கூட்டிகொண்டு என் வீட்டுக்குப் போனால் வேலையை இழந்து விடப்போகும் என்னையும் அவளையும் என் அம்மா அப்பா தற்செயலாக வீட்டில் ஏற்றுக் கொள்ள மறுத்தால் எங்கே அவளுடன் குடியிருப்பது? எப்படி இருவர் வயிற்றுக்கும் கஞ்சி வார்ப்பது. இதனால் பூங்கொடி சில சமயம் நடுத்தெருவில் அநாதையாகக் கைவிடப்படவும் கூடும்.

நேற்று ஐந்து மணியளவில் எந்த மன நோக்குடன் அவன் இருந்தானோ அந்த மன நோக்கின் வலையிலே இப்பொழுதும் தன்னைச் சிக்க வைத்துக் கொண்டு பூங்கொடியின் வகுப்பறைக்குள் நுழைந்தான் பெருந்தகை. இவ்வளவில் இந்தக் குடும்பத்தில் இருந்து விலகிக் கொண்டால் தொந்தரவு இல்லை என்றும் வலுவாக எண்ணத்தொடங்கி விட்டான் அவன். எனவே என்றும் இல்லாத ஒருதீர்மானமும்அவன் மனதில் அவசரக் கோலத்தில் பூத்துக் காய்த்துக் கனிந்து வார்த்தைகளாக உதிரவும் தயாராகி விட்டது.

அவன் வரவுக்காகக் காத்திருந்த பூங்கொடி எழுந்து வழமைபோல் வணக்கம் தெரிவித்து நாற்காலியை இழுத்துப் போட்டுவிட்டு அவன் முகத்தைஉற்றுப் பார்த்தாள். அம்முகத்தில் பார்வையில் என்றுமில்லாத வெறியுணர்வும் உறுதியும் தென்பட்டன. நின்றது நின்ற படி நிதானமாகப் பேசினான் பெருந்கை “பூங்கொடி இன்றிலிருந்து வேலையிலிருந்து விலகிக் கொள்கிறேன். இதை அப்பாவிடம் சொல்லி விடுங்கள்”

பூங்கொடி தனது சமீப கால மாற்றத்தைப் பிரதிபலிக்கும் வகையில் “போனால் போகட்டும் இன்று வீட்டில் எவரும் இல்லை. அப்பா அம்மா வருவதற்குள் வளவுக் கிணற்றில்.........” என்று கருதி அதற்கப்பால் எண்ண முடியாதவளாய் “ஏன் நான் என்ன தவறு செய்தேன்.?” என்று கலங்கிய படி சற்றுக் கோபமாகவே கேட்டாள்.

“நீங்கள் ஒன்றும் தவறு செய்யவில்லை. நான் செய்து வரும் தவறுக்கு ஒரு முடிவு கட்டுவதற்காகவே விலகுகிறேன்” என்ற வார்த்தைகளைக் கேட்டு ஒன்றும் புரியாதவளாக புரிய முயலும் மனவலிமைகுன்றியவளாகக் கிர் என்று

சுற்றத்தொடங்கிய தலையைப்பிடித்துக் கொண்டு தரையில் குந்தினாள். உடம்பு தானாகச் சுவருடன் சோர்ந்து சாய்ந்தது. இடிந்து போயிருந்தவள் முகமெல்லாம் கண்ணாகக் கண்ணெல்லாம் நீராக மருண்டு மருண்டு விழித்து அழுவதைப்பார்க்க விறைத்து நின்றவன் மனம் கரைய ஆரம்பித்தது.

தன் மனதைப்பிடுங்கி எடுத்துக் கொண்டு அவன் திரும்பினான். போவதற்கு இரண்டு அடியெடுத்து வைத்தவன் அவளது முகத்தை இறுதித்தடவையாகக் காணும் ஆசையில் நின்று பரிதாபமாக ஒரு தடவை பார்த்து விட்டுத் திரும்பும் வரை பார்த்திருந்த பூங்கொடிக்கு எங்கிருந்து தான் அந்த வேகம் வந்ததோ? சட்டென்று எழுந்து நின்றாள். அழுதபடியே "இந்தாருங்கள் நான் கடைசியாகக் கேட்கும் ஒரு சின்ன வரம் தருவீர்களா?" என்று அமைதியாக நிதானமாக வினாவினாள்.அவளைத் திரும்பிப் பார்த்து என்ன? என்னும் பாவனையில் தலையசைத்தான் பெருந்தகை.

"நான் இறந்து விட்டேன் என்று கேள்விப்பட்டால் எனக்காக இரண்டு சொட்டுக் கண்ணீர் விடுவீர்களா?" கேள்வியில் அடுத்த சில வினாடிகளில் அவள் நடத்த இருக்கும் காரியம் பளிச்செனத் தெரிந்தது. வீட்டில் யாரும் இல்லை. வளவில் எட்டாத் தண்ணீர்க்கிணறு. பெருந்தகைக்குத் தலை சுழன்றது.

அவன் நெஞ்சுக்குள் எழுந்துகொண்டிருந்த ஒரு பயங்கரக்குரல் அவனை விழி பிதுங்கி நடு நடுங்க வைத்துக்கொண்டிருந்தது. "உலகநாதனுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்யாத யோக்கியனாக நடக்கும் நப்பாசையால் பேதைப் பூங்கொடி தந்தை, தாய் மூவரையுமே சாகடிக்கப் போகிறாய்! உன் யோக்கியம் யாரைத்தான் காப்பாற்றப் போகிறது? பூங்கொடியின் மனதை உன்னாலென்ன கடவுளாலும் மாற்ற முடியாதென்பதை இன்னுமா நீ விளங்கிக் கொள்ளவில்லை? அவள் துயரமயமாகி ஆவேசத்தின் உச்சியில் நிற்கிறாள். நீ பார்த்திருக்க இந்தக் கணமே அவள் தன்னுயிரை மாய்த்துக் கொள்ளக்கூடும். உன்னுடலில் ஆண்மை இருந்தென்ன? உன் நெஞ்சில் இரக்கம் இல்லாததால் உன் நெஞ்சில் ஆண்மை இல்லையே. உன் அசட்டுத்தனத்தால் இன்று மூன்று அப்பாவிகள் உயிரை மாய்க்கப் போகிறார்கள். நீ இவளைக் காப்பாற்றுவதே மூவரையும் காப்பாற்ற வழி. இவள் நம்பி நிம்மதிப்படவும் உன் புத்தியை நன்நெறியில் நீயே கட்டிப்போடவும் வேண்டுமானால் இக்கணமே இவளுக்குச் சத்திய வாக்குக் கொடுத்து விடு." என்ற மனச் சான்றின் உதைப்பினால் உள்ளத்தில் ஏற்பட்ட மோசமான தளர்ச்சியும் பசியால் ஏற்பட்ட உடற் சோர்வும் பெருந்தகையைச் சுருண்டுபோய்ப் பூங்கொடி முன்னால் அமர வைத்துவிட்டன.

மருண்டு விழித்துக் கொண்டு நின்ற பூங்கொடியின் வலது கரத்தைத் தன் நடுங்குங் கைகளால் பற்றிய பெருந்தகை தன் கையை அதன் மேல் வைத்து "என் தாய் தந்தைத் தெய்வங்கள், என் தம்பிகள் மேலாணையாக என்

பூங்கொடி இந்தக் கணமே என் உயிர் மனைவியாக மனமார உன்னை ஏற்றுக் கொண்டுவிட்டேன்.'' என்று அழுத்தமான குரலில் உணர்ச்சி பொங்கச் சத்தியம் செய்து குலுங்கிக் குமுறியழுதான். பூங்கொடி தன்னை மறந்த ஆனந்தக் கொந்தளிப்பில் பெருந்தகையின் மடியில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு “நான் கொடுத்து வைத்தவள். நான் பாக்கிய சாலி! நான் இனிச் செத்தாலும் பரவாயில்லை! என் தவம் பலித்து விட்டது. என் தெய்வங்களே நான் எப்படி நன்றி சொல்வேன்.'' என்றுபரவசமாகப் புலம்பினாள். பெருந்தகையின் கைகள் அவளது தலையைப் பரிவோடு தடவிவிட்டுக் கொண்டிருக்கையில் திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டவளாய் எழுந்து நின்ற பூங்கொடி ஆனந்தத்துள்ளலோடு உள்ளறைக்கு ஓடிக் கடிகாரம் ஒன்றும் கையுமாகத் திரும்பினாள்

அந்தக் கடிகாரத்திற்காகப் பூங்கொடிக்கு முன்னால் உரிமையோடு அவனது கை நீண்டது.

“என்றாவது ஒரு நாள் உங்கள் கை இந்தக் கடிகாரத்திற்காக உரிமையோடு என் முன்னால் நீளும். என் கைகள் மகிழ்ச்சி நடுக்கத்தோடு இதை உங்கள் கையில் அணிந்து விடும்'' என அவள் அன்று கூறியது அவன் செவிகளில் இன்று கூறியது போலச் சொல்லுக்குச் சொல் எதிரொலித்தது. அவன் சிரித்தான்.

பூங்கொடி நடுங்குங் கைகளால் அதைக் கட்டிக் கொண்டே “ஏன் சிரிக்கிறீர்கள்'' என்றாள்.

“பூங்கொடி! நீ பெரிய கெட்டிக்காரி! சொன்னதைச் செய்த பெரியவள்.” “போங்கள் நீங்கள் தான் பொல்லாத வீரன்! நீங்கள் காட்டி வந்த புறக்கணிப்புத்தான் இவ்வளவுக்கு என்னன்பை வேகப்படுத்தியது...'' என்றவள் “அதற்காக இனியும் அப்படிச் செய்து என்னை வதைக்க எண்ணிவிடாதீர்கள்'' என்ற போது இருவரும் சிரித்தனர்.

“எனக்கு வாழ் நாளிலேயே எதிர்பார்க்காமல் கிடைத்த இந்த வெற்றியைக் கொண்டாட இமயமலையின் உச்சியில் நின்று “ நான் வென்று விட்டேன்! நான் வென்று விட்டேன்! என்று இந்த அகில உலகமும் கேட்கும்படி கூவ வேண்டும் போல் இருக்கிறது.

இந்தப் பூமியெல்லாம் படுத்துருள வேண்டும் போல் இருக்கிறது'' என்றவள் பயித்தியக்காரி போல் எழுந்து அந்தப் படிப்பறையில் விழுந்து இங்கிருந்து அங்கும் அங்கிருந்து இங்குமாகப் புரண்டு மகிழ்ந்த காட்சி பெருந்தகையின்

நெஞ்சை உருக்கிக் கண்களில் நீரை வரவழைத்து விட்டது. அவள் நெடு நேரமாகப் புரள் புரள் என்று புரண்டு களைத்து எழுந்து நின்ற பொழுது பேயும் இரங்கும் பரிதாபக் கோலத்தில் காட்சியளித்தாள்.

# 27 நெஞ்சங்கள் பேசின

**பூ**ங்கொடியின் கையைப் பிடித்துத் தன்னருகே அமர வைத்த பெருந்தகை “என்னை மன்னித்து விடு. உன்னை எவ்வளவு தூரம் பைத்தியமாக அடித்துவிட்டேனம்மா!” என்ற போது இருவரும் சேர்ந்து அழத்தொடங்கிக் கண்களைத்துடைத்துக் கொண்டு பெருமூச்சு விட்டனர். “சட்டையெல்லாம் புழுதி!அம்மா அப்பா கண்டால் என்ன என்று கேட்கமாட்டார்களா?” என்றான் பெருந்தகை. அவளும் “ஆமாம்” என்று பதைத்துக் கொண்டு பாவாடை மேற் சட்டைப்புழுதி துடைக்கத்தொடங்க பெருந்தகை எழுந்து அவளது குழம்பிய கூந்தலைத் தட்டித் துடைத்துக் கோதிவிட்டான். இருவரும் நாற்காலிகளில் அமர்ந்து கொண்டனர்.

“உங்கள் வீட்டிற்கு எப்படிப் போக வேண்டும்” எதிர்காலப் பிரச்சினைகளைத் தொட்டுக் கேள்வியெழுப்பினாள் பூங்கொடி. “தெற்குப்புன்னாலைக்கட்டுவன் சந்தி தெரியுமா? அதிலிருந்து கிழக்கே புத்தூர் நோக்கிப் போகும் வீதியால் போகத் தென்கிழக்காக நீர்வேலிக்கு ஒரு தெருப்போகிறது தெரியுமா?”

“ஆமாம் அந்த வழியால்தான் நாங்கள் பல முறை எங்கள் காரில் நல்லூர்க்கந்தசாமி கோயிலுக்குப் போயிருக்கிறோமே.”

“அந்தத் தெருவால் வந்து இராசவீதியில் ஏறி மேலும் சற்றுக் கிழக்கே போய் அங்கு தோட்டங்களில் நிற்பவர்களிடம் ‘முத்தையாவின் மகன் பெருந்தகை வீடு எது’ என்றால் காட்டுவார்கள்.”

“நீங்கள் என்னை ஏற்று வாழ வைத்தால் நல்லூர்க் கந்தசாமிகோயில், செல்வச்சந்நிதி, நயினாதீவு, மருதடி, வற்றாப்பளை இத்தனை கோயில்களுக்கும் வந்து அடியழிப்பேன். என்று நேர்ந்து விட்டிருக்கிறேன். இந்த நேர்த்திக்கடனைச் செய்து வணங்க என்னை அங்கெல்லாம் அழைத்துச் செல்வீர்களா?”

“ஆமாம் பாட்டிக் கிழவி! தாராளமாக!” என்று அவன் கூற இருவரும் சிரித்தனர். விழித்துக்கொண்ட பெருந்தகை எழுந்து நின்றான்.

“பூங்கொடி நாளை வருகிறேன் உன் அப்பாவிடம் எங்கள் அன்பு நிலையையும் நான் ஒரு விஞ்ஞானப் பட்டதாரி என்ற உண்மையையும் நான்

யார் என்பதையும் வெளியிட்டு விடுவேன். வருவது வரட்டும். ஆனால் உன்னை இனிக் கைவிடுவது என்பது நடக்காது பூங்கொடி''

தானும் எழுந்து நின்ற பூங்கொடி "அவசரப்பட்டு இப்பொழுதொன்றும் பேசாதீர்கள். எத்தனையோ காலங்கள் பட்ட துன்பத்தின் பலனாகத் தங்கள் இன்பமயமான அன்பை இப்பொழுதுதான் பெற்றுள்ளேன். அந்த இன்பத்தை என் மன வேட்கை தீர அனுபவித்து வெற்றியைக் கொண்டாடி முடிக்க இன்னும் தொடர்ந்து சில நாட்களாவது உங்கள் அருகில் நான் தினமும் சில வினாடிகளாவது இருக்கும் வாய்ப்புக்கிடைக்க வேண்டும். அதன் பின் எது நடந்தாலும் சரிதான். உங்களுடன் வாழும் வாழ்வு. இல்லையேல் மனநிறைவான நிம்மதியான சாவு.! ஒரு கிழமையாவது இன்னும் பொறுங்கள்.''

"சரி பூங்கொடி! எதுவும் நன்றாக எண்ணித் துணிய வேண்டும். நாளை வரும்பொழுது ஒரு நல்ல முடிவுடன் வருகிறேன். சரி போய்வரட்டுமா?'' என்று கேட்டு விடை பெற்றான்.

மறு நாள் மாலை பெருந்தகை பூங்கொடியின் வகுப்பறையில் நுழைந்த பொழுது இன்பப்பூரிப்போடு நற்செய்தியொன்றை வெளியிடும் ஆவற் கிளர்ச்சியோடு காணப்பட்டான். படிப்பறையில் உலகநாதபிள்ளை பொன்மணியம்மை பூங்கொடி எல்லாரும் இருந்தனர். ஒரு நாளுமில்லாத திருநாளாக ஏனிப்படி எல்லாரும் பிரசன்னமாகியுள்ளார்கள். படிப்பறையில்? என்று சற்று மனம் துணுக்குற்றான். குற்றமுள்ளவன் போலத் தடுமாறினான். பூங்கொடியிடம் எந்த நிமிடம் தன்னை முற்றாக இழந்தானோ அந்த நிமிடமே தான் மாபெரும் துரோகத்தை யாருக்கோ செய்து விட்டவன் போல அடிமனத்திலே கவலைப்பட்டுக் கொண்டே இருந்தான். தன்னைப்பற்றி உலகநாதபிள்ளை அறியாமலிருந்தாலும் தன் தடுமாற்றம் அறிவித்துவிடுமோ என்று அஞ்சியவனாகத் தன்னைச் சமாளித்துக் கொண்டு குரலைக் கனைத்துக் கொண்டான். அப்பொழுதுதான் அவனைக் கவனிக்க நேர்ந்த உலகநாதபிள்ளை "வாரும் தம்பி உள்ளே'' என்று வரவேற்ற போது பெருந்தகையின் மனதில் ஏதோபோல் இருந்தது.

"என்னை நம்பி வரவேற்று வீட்டுக்குள் இடம் தந்த ஒரு மனிதனுக்குத் துரோகமாக நான் நடக்க நேர்ந்ததே! நடக்கின்றேனே!!'' என்று மனச்சாட்சி அவன் மனதைக் கசக்கிப்பிழியலாயிற்று. தலை குனிந்த படி உள்ளே சென்றவனுக்குப் பூங்கொடி தானிருந்த நாற்காலியைப் பணிவோடு எடுத்து வைத்தாள். அமர்ந்து கொண்டே முகத்தை மலர்த்த முயன்று கொண்டு "என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும். நான் உங்களிடமிருந்து சில உண்மைகளை மறைத்து வந்து விட்டேன். அவற்றை இப்பொழுது உங்களிடம் சொல்லிவிடப் போகிறேன்.''என்று சொல்லிக்கொண்டே எங்கோ பார்ப்பது போலப் பூங்கொடியை ஒரு முறை பார்த்தான் பெருந்தகை. அவள் சொல்ல வேண்டாம் என்று அஞ்சி மிரளும்விழிகளால் கெஞ்சிப் பதறினாள்.

"நான் ஒரு விஞ்ஞானப் பட்டதாரி! எனக்குக் கமத்தொழில் இலாகாவில் உத்தியோகம் கிடைத்துள்ளது. இன்று தான் வேலைக்கு வரும்படி அறிவித்தல் வந்துள்ளது." என்று மெல்லக் கூறினான் பெருந்தகை . இதைப் பூங்கொடி இரண்டு நாட்களுக்கு முன் கேட்டிருந்தால் எப்படிப் பதறியிருப்பாளோ அப்படிப் பதறினார் உலகநாதபிள்ளை.

"நல்லது" என்று வாய் ஒப்பாசாரத்திற்குச் சொல்லிக்கொண்டாலும் உள்ளுக்குள் தனது வலக்கையை இழப்பது போன்ற துயரம். ஏமாற்றம். அவருக்கு. அவர் வியாபாரப்புத்தி உள்ளூர அவனுக்கு உத்தியோகம் கிடைத்ததற்காகக் கடவுளைச் சபித்துக் கொண்டது. "அவனை நான் அதிக சம்பளம் கொடுத்து வைத்துக் கொள்ளலாமென்றால் மாதம் ஐந்நூறு ரூபாவுக்கு மேல் கொடுக்க வேண்டும்! அல்லாமலும் அரசாங்கத்தில் கௌரவமாகச் சிறப்போடும் மதிப்போடும் தொழில் உத்தரவாதத்தோடும் ஓய்வுதிய வசதிகளுடனும் வேலைபார்ப்பதை விட்டு என்னுடன் நிற்க இவன் சம்மதப்படுவானா? போகட்டும். இவன் போனால் இன்னொருவன் இவன் போல் கிடைப்பது மிக அரிது. அத்துணை வல்லவன், நல்லவன் காரியமில்லை. அவன் எங்காவது நல்லாய் இருக்கட்டும். போகும் பொழுது அவனுக்குச் சந்தோசமாக விடை கொடுக்க வேண்டும். விருந்து வைத்து மகிழ்வித்து அனுப்ப வேண்டும். எதற்கும் பொன்மணியுடன் ஆலோசனை நடத்தி முடிவுக்கு வரலாம்" என்று எண்ணிக் கொண்டார்.

"பொன்மணி! வா! நாங்கள் போகலாம் பிள்ளைபடிக்கட்டும்" என்று சொல்லி மனைவியை அழைத்துக்கொண்டு வீட்டினுள் பிள்ளையவர்கள் நுழைந்து நிழல்கள் மறைய முன் எப்பொழுது அம்மா அப்பா அந்த அறையை விட்டுப் போகப் போகிறார்கள் என்று காத்து நின்ற பூங்கொடி ஆர்வத்தோடு ஓடி வந்து பெருந்தகையின் கைகளை மகிழ்ந்து மகிழ்ந்து சிரித்துக் குலுக்கிக் கொண்டே "வாழ்த்துக்கள்" என்றாள்.

"நான் நேற்றுத் தொடக்கம் என் ஒருவனை மட்டும் வாழ்த்தும் வாழ்த்துக்களை ஏற்றுக் கொள்வதில்லை." என்று பெருந்தகை சிரித்த பொழுது பூங்கொடி பெருமிதத்தால் பூரித்து மகிழ்ந்தாள்.

பெருந்தகைக்கு விருந்து வைப்பதா இல்லையா என்ற தலைப்பில் வெகு நேரம் மனைவியுடன் உரையாடி இன்றே அவனுக்கு இனிய விருந்தொன்று வைப்போம் என்ற ஒரே மனதான தீர்மானத்தைஇருவரும் எடுத்துக் கொண்டபின் பூங்கொடியின் வகுப்பறையை நோக்கி வந்த பிள்ளையவர்கள் வாசலை அடைவதற்கிடையில் படிப்பறையில் அதிர்ச்சி தரும் உரையாடல் நிகழ்வதைக் கேட்டுத் திகைத்துப் பதறி நின்று விட்டார்.

"இரவும் பகலும் மாறி மாறி வருவது போல் இன்பமும் துன்பமும் மாறி மாறி வருமென்றுஒரு பாட்டுப் படித்திருக்கிறேன். அப்படியானால் நான் பட்ட துன்பத்தை அடுத்து உங்கள் கிடைத்தற்கரிய அன்பினால் கிடைத்த இன்பத்தால் திணறித் திக்கு முக்காடுகிறேன். அளவுக்கு மிஞ்சிய இன்பம் கிடைத்த பின்னால்அது துன்பத்தைத் தருகின்ற நிகழ்ச்சி எதையும் கொண்டு வந்தால் என்ன செய்வது?"

"பூங்கொடி! சிறுபிள்ளை போலக் கற்பனை பண்ணாதே! இனிக் யாராலும் உன்னை என்னிடமிருந்து பிரிக்க முடியாது. நான் ஆண்பிள்ளையடி என் செல்வமே."

உலகநாதபிள்ளைக்கு மேற்கொண்டு நடந்த உரையாடல் ஒன்றும் கேட்கவில்லை. வானமே இடிந்து தம் தலையில் விழுந்து விட்டது போலத் தலையே பிளந்தது மூளை சிதறியது போல் அவர் பதைத்து நடுங்கினார். கால்களில் நிற்பதற்கு வலுவில்லை. அப்படியே அதிர்ந்து சோர்ந்து அந்த ஆறுமணி இருட்டில் தரையில் இருந்து விட்டார். அவர் செத்து விட்டு இப்பொழுதுதான் பிழைக்க விரும்பாமல் பிழைக்கத்தொடங்கினார். அவர் கட்டுப்பாட்டின் படியன்றி மூளை போன போக்கில் சிந்தனைக் கொள்ளிகளால் நெஞ்சைச் சுட்டுச் சுட்டுப் பொசுக்கத் தொடங்கினார்.

"பாதகா! எனது விபரம் தெரியாத பிள்ளையை, உலகம் தெரியாத ஒரு குழந்தையை உன்னுடன் நம்பி விட்டேனே! சில்லறை சில்லறையாக நன்மை செய்து என் வாழ்வையே மொத்தமாகச் சாய்க்கின்ற தீமையைச் செய்து விட்டாயே. என் மகளா இப்படி ஒரு கறையான் புற்றில் முளைத்த காளானுடன் கொஞ்சுகிறாள். சண்டாளா? நானேன் இப்படியெல்லாம் நேரவழிக்குண்ணாமல் நிம்மதியறியாமல் பறந்து பறந்து பணம் தேடினேன். கீழ்ச்சாதிக்காரன் என்று மடைத்தனமாக நம்பியல்லவா பாடங் கொடுக்க அமர்த்திக் கண்காணிக்காமலும் விட்டேன். செத்தாலும் முடியாது. என் தலைதான் தரையில் உருண்டாலும் அற்பக் கூலிக்கு ஒரு கீழ்ச்சாதிக்கு என் மகளைக் கொடுக்க மாட்டேன். இதற்குள் யார் யார் இதை அறிந்து எப்படி எப்படியெல்லாம் ஊரெங்கும் பரபரப்பியிருப்பார்களோ! இப்படி ஒரு அவமானம் ஏற்படும் என்று எண்ணியிருந்தால் பிள்ளைவரம் வேண்டும் என்று பொன்மணி தவமிருக்க அனுமதித்திருக்க மாட்டேனே. எனக்கு இனிஇந்த உலகில் எந்த நம்பிக்கையும் இல்லை. இவனுக்குப் போய் விருந்து வைக்க எண்ணினேன். எண்ண வைத்தது அவனது நல்ல பிள்ளை நடிப்பல்லவா? என் நெஞ்சு, தலை, வயிறு, உடல் எல்லாமே பற்றி எரிகின்றனவே. நான் சாகத்துணிந்து விட்டேன். ஒன்று நீ இல்லை அல்லது நானில்லை. எல்லாமே அழிந்தொழிந்தன." என்று எழுந்தவர் பைத்தியக்காரன் போலத் தமது அறையை நோக்கி விரைந்தார். மனைவி சமையற் கட்டில் இருந்ததால். அவர் போனதை அவள் காணவில்லை. அங்கு தினமும் வாழைக்குலை வெட்டும் கொடுவாய்க்கத்தியை மேசையிலிருந்து எடுத்துக் கொண்டார்.

# 28 கத்தி முனையில் காதலன்

ஒரு தடவை தமது தீர்மானத்தை மறு பரிசீலனை செய்தார், கத்தியை எடுத்துக் கொண்ட பிள்ளையவர்கள், தான் அவனை எப்படியும் கொன்று விடலாம். தன்னைப் பொலிஸ்காரன் பிடித்துச் சிறையில் தள்ளலாம். இதெல்லாம் ஏன் நடந்தது? என்ற கேள்வி ஊராரின் வாய்களில் அடிபட்டு அவர் பிள்ளையைப் பற்றியும் மனைவியைப் பற்றியும் பிழையாகப் பேச வழி ஏற்படுத்தி விடலாம். அல்லாமலும் இதுவரை வேறு யார்க்கும் இவ்விவகாரம் தெரியாமலும் இருக்கலாம் என்பதை உணர்ந்த பிள்ளையவர்கள் "நானே அவசரப்பட்டு இதை உலகறியச் செய்யும் மடமைக்காளாகலாம். அப்படியானால் எதையும் அவசரப்பட்டுச் செய்வதில் புண்ணியமில்லை. நிதானமாகவும் முன்யோசனையோடும் நடந்து கொள்ளாமல் என் குடும்பத்தில் ஒரு நம்பிக்கைத்துரோகிக்கு இடங்கொடுத்து என்னை இன்று தூக்கு மேடைக்குச் செல்லும் நிலைக்கு ஆளாக்கிக் கொண்டேன். என் சாதிக் குலம் ஊர் எல்லாவற்றின் மானத்தையும் மண்ணில் குழிதோண்டிப் புதைக்கவும் என் அவசரம் காலாகி விடக்கூடாது. இன்றைப் பொழுது விடிவதற்குள் நான் பிடிபடாமல் அவன் கழுத்தை அறுத்துவிடுகிறேன்" என்று சபதம் எடுத்துக் கொண்டவர் அறைக்குள் புகுந்து சில நிமிடம் வரை அடிபட்டுச்சிறைப்பட்ட புலிபோல பெருமூச்சின் உறுமலோடுஅங்குமிங்குமாக நடமாடினார். அவரது மூளை அவரது சூழ்ச்சித் திட்டத்தின் நிகழ்ச்சி நிரலை ஒழுங்குபட முடித்து அந்த நடமாட்டம் முற்றுப் பெற்றது.

பூங்கொடியும் தன்னால் சில மணி நேரத்தில் படுகொலை செய்யப்படவிருக்கும் பெருந்தகையும் கொஞ்சிக் குலாவியிருக்கும் படிப்பறையை "பூங்கொடீ" யென்று தன் வரவிற்கான எச்சரிக்கையைப் புலப்படுத்திக் கொண்டு அடைந்தார் உலகநாதபிள்ளை.

"பெருந்தகை உமக்கு எனது நல்வாழ்த்துக்கள். நீர் என்னுடன் இத்தனை மாதமும் விசுவாசமாகக் கடமையாற்றி இன்று என்னைப் பிரிவதையிட்டு மிக வருந்துகிறேன். எங்கேயாவது நீர் நல்லபடியாக இருக்க வேண்டுமென்று நான் கடவுளை வேண்டுகிறேன். உம்மை இத்தனை காலமும் தெரியாத் தனமாய் மதிப்புடன் சமத்துவந் தந்து நடத்தாமைக்கு மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். நீர் மன்னித்தமைக்கு அறிகுறியாக இன்று இன்னுஞ் சிலமணிநேரத்தில் நாங்கள் பரிமாற இருக்கும் விருந்தை நீர் ஏற்றுக் கொள்ள வேண்டும். எங்களை இன்று விட்டுப்பிரியும் நீர் சந்தோசமாகப் பிரிய வேண்டும்" என்று பட பட என்று கூறிவிட்டுப் பெருந்தகை ஏதோ பேச வாய் எடுத்ததையும் பொருட்படுத்தாமல் உள்ளே சமயற்கட்டை நோக்கி ஓடிவிட்டார்.

"பொன்மணீ பையன் உடன்பட்டுள்ளான். விருந்து தடல் புடலாக இருக்க வேண்டும். இரவுக்கு நல்ல பலகாரம் செய்ய நேரம் போதாது. நான் யாழ் நகரிற் போய்வாங்கி வருகிறேன். ஆளை மறித்து வைத்திரும். நான் ஓடி வந்து விடுகிறேன். ஒரு மணித்தியாலம் மெத்த" என்றவர் சில வினாடிகளில் அவசரமாக அரைகுறை அலங்காரத்தோடு தமது மொறிஸ் காரில் அற்பைச் சந்தியால் திரும்பிப் பலாலி வீதியில் தெற்கு நோக்கிப் பறந்து தெற்குப் புன்னாலைக் கட்டுவன் சந்தியைத் தாண்டி ஒரு குச்சொழுங்கையால்கிழக்கு நோக்கி முன்னேறி ஒரு வீட்டுப் படலைக்கு முன்னால் காரை நிறுத்துகிறார். அந்தப் படலையைத் திறந்து கொண்டு அந்த இருட்டிலும் "வீரசிங்கம்" என்று மெல்ல அழைத்துக் கொண்டு வீட்டுமுற்றத்தை அணுகி நிற்கிறார்..... கொடுவாய்க் கத்திபோன்று வளைந்து முறுகிய மீசையும் சப்பறம் போலக் கெம்பிக் கொண்டு நிற்கும் கரும் பற்றைச் சடையுமாக வந்து குறுகுறுக்கும் தீப்பந்தம் போன்ற கண்களுடன் "யார் ஐயா?" என்ற சிங்கக் குரல் வினாவுடன் அவரை அணுகுகிறான் வீரசிங்கம்.

"மெல்லப் பேசு வீரா! நான்தான்! உலகநாதபிள்ளைதான்" என்றவர் "வீரா! உன்னால் எனக்கு ஒரு பெரிய உதவி ஆகா வேண்டும்" என்று சொல்லிக் கொண்டே பத்து ரூபா நோட்டுக் கட்டு ஐந்தை அவனது இரு கைகளிலும் திணித்தார். அவன் தலையைத் தன் கைகளாற் பிடித்துக் கொண்டு காற் பெருவிரலில் எழுந்து நின்று எட்டி அவன் காதோடு காதாக ஏதோ அவர் சொல்கிறார். அவன் "ஆமாம் இவ்வளவு தானா? நீங்கள் போய் வாருங்கள். அதெல்லாம் முடித்து விடுகிறேன். புத்தூர் சுன்னாகம் வீதியில் வைத்துத்தானே?" என்று அவன் மெல்லக் கேட்க "ஆம் கவனம் யாரும் பிடிபடக்கூடாது." என்று சொல்லிக் கொண்டு படலையை நோக்கி அவர் ஓடுகிறார். "ஒரு மனிதக் கொலையைச் செய்யவோ செய்விக்கவோ நான் விரும்பவில்லை. ஆனால் அதற்காக என் குடும்பம் முழுமையாகவே அழிக்கப்படுவதையும் அனுமதிக்க முடியாது. அவன் ஒருவன் அழிந்தால் தான் என் குடும்பம் நிம்மதியாக வாழ முடியும்." என்று முடிவுகட்டினார் உலகநாதபிள்ளை. "ஆயிரம் தடைகளைத் தாண்டிக் குறுக்கு வழியில் ஓடித் தலையெடுத்து இப்பொழுதுதான் நல்லகதிக்கு எட்டி நிம்மதியான நிலையில் காலெடுத்து வைத்துள்ள என் குடும்பம் திடீரென்று அழிந்து விடாமல் காத்து அந்த நம்பிக்கைத் துரோகியைக் கொல்வதில் தவறென்ன?" என்று எண்ணித் தன் படுகொலை முயற்சிக்குத் தன்மனச்சான்றின் ஆதரவைக் கணம் தோறும் பெற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தார் உலகநாதபிள்ளை.

இருந்தாலும் தன் மைத்துனன் சரவணன் அன்று சொன்னது போல் தன் குடும்பத்தைச் சந்ததியை அழித்தோ சீரழித்தோ விடலாம் தன் பாவங்கள், பாவத்தேட்டங்கள் என்று அவர் அடிமனம் அவரை எச்சரித்துக் கொண்டிருந்தது. அவர் கார் புன்னாலைக் கட்டுவன் சந்திக்கு வந்து கிழக்கு நோக்கித் திரும்பி

நீரிவேலிக்குத் திரும்பும் பாதையையும் தாண்டிப் புத்தூர் நோக்கிச் செல்லும் வீதியில் சென்று ஒரு தனி வெளியின் நடுவில் இருக்கும் ஒரு பெரிய கல் வீட்டருகே நின்றது. உலகநாதபிள்ளை அவசரம் அவசரமாக இறங்கிப் படலையில் நின்று "பரமு பரமு" என்று அழைக்க இவரின் ஒத்த வயதுடைய ஒருவர் படலையைத் திறந்து வந்து ஆளை உள்ளே அழைத்துச் சென்றார். இருவரும் விறாந்தை இருட்டிலிருந்து பதினைந்து நிமிடம் வரை எதை எதையோ குசு குசுவென்று பேசுகின்றனர். சில சந்தர்ப்பங்களில் "அதெல்லாம் சரியில்லை. நானும் பிள்ளை குட்டிக்காரன். நான் இதில் சம்பந்தப் பட்டால் வேலை போய் உயிருக்கே ஆபத்து வரலாம். என்னால் முடியாது." என்று அந்த வீட்டுக்காரன் மெல்ல எதிர்ப்பு வார்த்தைகள் பேசுவது கேட்கிறது. மேலும் சில நிமிடங்களில் அந்தமனிதர் உலகநாதபிள்ளையின் வலையில் முழுமையாக விழுந்து விட்டமைக்கு அறிகுறியாக அவர் "என்னவோ என்னைக் காப்பது உன்னைப் பொறுத்தது மச்சான்" என்றார். உலகநாதபிள்ளை கொடுத்த ஒரு கொப்பித்தாளில் கீழ்க் கண்டவாறு எழுதி உலகநாதபிள்ளையின் கையில் நடுங்குங்கைகளால் கொடுத்தார் அவர்.

ஈவினை தெற்கு
சுன்னாகம்
01–05–60

*அன்பு நண்பர் உலகநாதபிள்ளைக்கு!*

*நான் இப்பொழுதும் யாழ்ப்பாணம் கச்சேரியில் தான் வேலை செய்கிறேன். எப்போது இடமாற்றக் கடிதம் வந்து என்னைத் தெற்கு நோக்கித் துரத்தப் போகிறதோ. அதற்குள் எனக்கு இங்கிருக்கும் ஒரு கலட்டுக் காணியில் கல்லைக் கிளறிக் கிணறு வெட்டி வைத்து விட்டால் நான் மாறிப் போனாலும் வீட்டில் இருக்கும் பிள்ளைகள் கொத்தி வெட்டிப் பார்ப்பார்கள். இப்பொழுது காசு அவசரம் தேவை. அதற்கு வரப் போக நேரமும் இல்லை. இந்த வாரத்தில் எப்படியும் எனக்குத் தருமதியான மூவாயிரம் ரூபாவை வீட்டில் கொணர்ந்து கொடுக்கவும்.*

இப்படிக்கு
நண்பன்
S. பரமலிங்கம்

பரமலிங்கத்திடம் அந்தக் கடிதத்தை வாங்கி வாசித்துப் பார்த்து விட்டு மடித்துச் சட்டைப் பையிற்குள் பத்திரப் படுத்திக் கொண்டு "ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம்" என்று உற்சாகப்படுத்தி விட்டு, இன்றைக்குத் திகதி எட்டாகிறது என்று முணுமுணுத்துக் கொண்டு புறப்பட்டார் உலகநாதபிள்ளை.

"நேரம் ஒன்பது மணியாகிறதே. வீட்டில் தேடப் போகிறார்கள். பூங்கொடி உன் அப்பா என்றுமில்லாதபடி நண்பன் போல் என்னுடன் நடந்துகொள்கிறார். நினைக்க மகிழ்ச்சியாகவும் வியப்பாகவும் இருக்கிறது."

"மாமா உங்களுடன் மாமன் போல நடந்து கொண்டார் என்று மகிழுங்கள். மருமகனுக்கு விருந்து போடுவதற்குத் தன்கையாலேயே பலகாரம் வாங்கிவர அல்லவா உங்கள் மாமா போயிருக்கிறார்." பெருந்தகை நீளமான பெருமூச்சொன்றை விட்டுக் கொண்டான். அவனது மனம் இனம் தெரியாத ஒரு வித கலக்க உணர்ச்சியால் குறுகுறுத்துக் கொண்டதை அவனே உணரவில்லை. வாசலில் நின்றபடியே "வாரும் பெருந்தகை மிகவும் சுணங்கி விட்டது. குறைநினைப்பீரா?" என்று குழைபவர் போலக் கேட்டார் உலகநாதபிள்ளை.

"இதில் குறைநினைக்க என்ன இருக்கிறது பாருங்கள்? நீங்கள் இவ்வளவு தூரம் என்னை மகிழ்விக்கப் பாடுபடும் பொழுது நான் அதைக் கண்டு மனமுருகாமல் குறைநினைப்பேனா?" என்றான் கள்ளம் அறியாத பெருந்தகை.

"நல்லது! ஏதோ போகும் பொழுதென்றாலும் நாங்கள் கௌரவம் செய்ய வேண்டாமா? என்று தான்......" இப்படி இழுத்த உலகநாதபிள்ளை 'பார் இவன் போடும் பத்தினி வேசத்தை' என்று மனதில் முறுகிக் கொண்டார். "வாரும் தம்பி வாய் கை கழுவ. பூங்கொடி போய்த் தண்ணீர் கொண்டு வா! சாப்பாட்டு மேசையும் சரிப்படுத்தியாயிற்றா?" என்று சொல்லிக் கொண்டு குற்ற உணர்வு தந்த அச்சத்தால் எழுந்த பரபரப்பைச் சுறுசுறுப்பென்ற போர்வையில் மறைத்துக் கொண்டு வீட்டறையுள் புகுந்த உலகநாதபிள்ளை பணப்பெட்டியைத் திறந்து மூவாயிரம் ரூபாவைக் கட்டுக் கட்டாக எடுத்துக் கொண்டு ஓடிப்போய் உணவுமண்டபத்தில் ஒரு மூலையில் கிடந்த மேசையுள் வைத்துச் சார்த்தினார்.

சில நிமிடங்களில் பெருந்தகையும் உலகநாதபிள்ளையும் புதிய அழகிய தையல் வேலைப்பாடமைந்த மேசை விரிப்பு அலங்கரிக்கும் உணவுமேசையில் போடப்பட்ட வாழை இலையில் குவிக்கப்பட்டிருந்த போளி, போண்டா, வடை மோதகம், சூசியம் போன்ற உணவுகளைச் சுவைத்துச் சுவைத்து உண்டு கொண்டிருந்தனர். பூங்கொடி உணவுவகைகள் கொண்டோடிவரும் போகும் வேலைக்குத் தந்திரமாகத் தாயை நியமித்து விட்டு உணவுபரிமாறும் பணியை மன நிறைவோடு நடத்திக்கொண்டு நின்றாள். பெருந்தகை அடக்கமாக இருந்து உண்பதை அழகுகளுக்கெல்லாம் அழகென்று பார்த்து மகிழ்வதும் இன்னும் கொஞ்சம் போடுகிறேன் என்று தந்தையைக் கேட்கும் சாட்டில் பெருந்தகையை வலியுறுத்தி வயிறுபுடைக்க உண்ணச்செய்வதுமாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தாள். பிள்ளையவர்கள் தமது சூழ்ச்சித்திட்டத்தின் அடுத்த படியில் மெல்ல அடியெடுத்து வைத்தார்.

"தம்பி எனக்கொரு உதவி செய்வீரா?" என்று கேட்டுத் தொடர்ந்தவர் போகும் பொழுது புன்னாலைக்கட்டுவன் சந்தி கண்டு போவீரா?" என்று கேட்டார். "ஆமாம் என்ன செய்ய வேண்டும்."

“தெற்குப்புன்னாலைக்கட்டுவன் சந்தியால் கிழக்கு நோக்கிப் போகும் புத்தூர் வீதியில் உள்ள ஈவினை தெற்கில் வீதியோரமாக ஒரு பழைய கல்வீடு இருக்கிறது தெரியுமா?”

“ஆம் வீதிக்குத் தென்புறத்தில்”

“அந்த வீட்டுக்காரனுக்குக் காசு மூவாயிரம் ரூபா கொடுக்குமதி. இன்று அவர் தந்த கடுந்தவணை. விடியமுன் கொடுத்தாக வேண்டும். மறந்திருந்து விட்டேன். நீர் போகிற வழிதானே மெல்ல எட்டிக் கொடுத்துவிட்டுப் போவீரா?”

“தாராளமாக!” உலகநாதபிள்ளையிடம் மூவாயிரம் ரூபா நோட்டுக் கற்றைகளை வாங்கிக் கடதாசியில் பொதிந்து கொண்டு “உங்கள் அன்புக்கு உதவிகளுக்கு எப்படி நன்றி கூறுவது என்று தெரியவில்லை. என் பாட்டன் நாராயண உடையார் தமக்கு ஊர்க் கோயில் ஒன்றில் தேர்த்திருவிழா உபயம் தரப்படவில்லை என்ற கோபத்தில் போட்டிக் கோயில் ஒன்றைக் கட்டுவதற்காகத் தம் நில புலம் அனைத்தையும் விற்றதால் என் அப்பாவும் சகோதர்களும் ஆண்டிகளாக நேர்ந்தது. அகந்தையினால் கோயில் கட்டிக் கெட்ட புதுமையான அந்தக் குடியில் அப்பா கள்ளுக் கடை நடத்தியும் நான் கூலிவேலை செய்தும் மீண்டும் மிடுக்கோடு நிமிர்ந்த புரட்சிக்குப் பேருதவி புரிந்த உங்கள் குடும்பத்தை என்பரம்பரை என்றும் மறக்காது” என்ற போது அவன் குரல் தழதழத்ததை அவதானித்து உருகிய பிள்ளையவர்கள் “எல்லாம் கொஞ்சக் காலம் தம்பி” என்று கூறியதன் உட்பொருள்அவனுக்கு விளங்க நியாயமில்லை. அவர் கருகல் நெஞ்சோடும் பொன்மணி முழுமனதோடும் பெருந்தகைக்கு விடைகொடுத்தனுப்பினர்.

பெருந்தகை புறப்பட்டு அவர்களிடம் விடைபெற்ற பொழுது இரவு பத்து மணி. பூங்கொடியின் வாழ்வில் இந்த இரண்டு நாட்களில்தான் எத்தனை நன்மைகள் விளைந்து விட்டன. எத்தனை ஒளியை நோக்கிய திருப்பங்கள். இன்பத்திற்கடிகோலும் மாற்றங்கள். எத்தகு பொன்னான நாட்களிவை. காலங் காலமாகப் புரிந்த தவம் கடைசியில் காதலன் கண்களைத் திறந்தது. தெருவில் மண்ணைப் போடும் அவள் அப்பா தன் நினைவிலும் மண்ணைப்போட்டு விடுவாரோ? என்ற அச்சத்தையும் இன்றுடன் இல்லாமற் பண்ணிவிட்டது.

“என் பேசும் தெய்வம் என்னைக்கைப் பிடித்து வாழ்விக்கும் தெய்வமாகவும் மாறும். அப்பொழுதெல்லாம் அவரது அப்பழுக்கற்ற இதயத்தின் அன்பூற்றில் நான் ஆடி மகிழ்வேன். எங்கிருந்தோ அன்று வந்தவர் இன்று என் சொத்தாகி விட்டாரே. இதெல்லாம் நம் முற்பிறவித் தொடர்போ? கடவுள் செயலோ? என்று வியந்த பூங்கொடி கடவுளின் திருக்கூத்துத்தான் எத்தனை புதுமைகளையும் அற்புதங்களையும் புரட்சிகளையும் உள்ளடக்கி நடந்து கொண்டிருக்கிறது.” என்று தத்துவ உலகிலும் சஞ்சரித்து மீண்டாள்.

காதல் உள்ளம் கனவுகளில் கிடந்து புரள, பூந்தளிர் உடலால் பஞ்சணை மெத்தையில் தணியாத உணர்ச்சிகளுடன் கிடந்து புரண்ட பூங்கொடி "இது வரை அவர் எவ்வளவு தூரம் போயிருப்பார். பாவம் இரவு பத்துமணிக்குப் பின் தனியாகப் போகிறாரே. ஐயோ இந்தச் சாமத்தில் காசுமல்லவா கொண்டுபோகிறார்.? யாராவது திருடர் வழிமறித்தால்? இவர் ஒருவர். பத்துப் பேர் சேர்ந்து விட்டால் எத்துணைப் பெரும் பலசாலியாக இருந்தாலும் எவ்வளவு நேரம் இவரால் தனித்துப் போராடமுடியும்.?" என்று திடீரென ஏங்கத்தொடங்கினாள்.

"சேச்சே கடவுள் என் குங்குமத்தை அழிக்க மாட்டார். என் கூந்தலைக் குலைக்கமாட்டார். இதெல்லாம் வீண் பயம்" என்று மேற்கொண்டு சிந்திக்க அஞ்சியவளாய் உறக்கத்தில் ஒருவாறு முயன்று மூழ்கிவிட்டாள்.

சில நிமிடங்களில் எந்தெந்த நினைவுகளை மனதிலிருந்து விரட்டுவதற்காக உறக்கத்திடம் சரண் புகுந்தாளோ அந்த நினைவுகளே கனவுகளாக மாறு வேடம் தாங்கி அவள் உள்மனதிலும் புகுந்து அவள் நிம்மதியை உறக்கத்திலும் உருக்குலைக்கலாயின. அவள் அந்தப் பயங்கரக் கனவிலிருந்து கதறவும் முடியாமல் மீளவும் முடியாமல் வெந்து கொண்டிருந்தாள்.

## 29. இது வரையில் எமலோகம்

**உ**லகமே உறக்கத்தில் ஆழ்ந்து விட்ட அந்த நள்ளிரவில் பெருந்தகை தனிமை வெறியாடும் அந்த வீதியிலே தெற்குப் புன்னாலைக்கட்டுவன் சந்தியிலிருந்து கிழக்கு நோக்கித் திரும்பித் தெரு விளக்கின்றி, தன் மிதிவண்டியின் ஒரு விளக்கு மட்டும் மின்னி மின்னி வெளிச்சங்காட்டப் போய்க்கொண்டிருக்கிறான். அது ஒரு கலட்டுவெளி, எங்குந்தனிமை, பாழ் வெளியின் ஓங்காரப் புயல்வீச்சு, அந்தக் கலட்டு வெளியின் புதர்களுக்குள் பதுங்கியிருந்த குண்டர்கள் பெருந்தகை மீது ஒரே பாய்ச்சலாகப் பாய்கிறார்கள். அவன் நிலைமையைக் கிரகித்து மின்னல் வேகத்தில் மிதி வண்டியிலிருந்து கீழே பாய்ந்து துணிச்சலுடன் இருந்தெழும்பியும் போக்குக் காட்டியும் அவர்கள் தாக்குதல்களிலிருந்து தவறி வெறி கொண்ட வேங்கைபோல் அவர்கள் மீது பாய்ந்து பாய்ந்து தாக்குகிறான். அகப்பட்டவர்களைச் சுருட்டித்தூக்கிச் சுழற்றி வீசுகிறான். எல்லாரும் களைத்துவிட்டனர் பெருந்தகை உட்பட!, ஆயினும் சண்டை தொடர்ந்தும் பயங்கரமாக நடந்துகொண்டே இருக்கையில் குண்டன் ஒருவன் மெல்ல மெல்லத் தவழ்ந்து வருகிறான் புதிரொன்றிலிருந்து. அவனது கையில் இருட்டிலும் பளபளக்கிறது ஒரு நீண்டவாள்.

பதுங்கியவாறே பெருந்தகையை அணுகியவன் ஐயோ, குபீரென்றெழுந்த எழுச்சியோடே பெருந்தகையின் தலையை நோக்கி வாளை வீசுகிறான். வாள் பெருந்தகையின் தலையை நிலத்தில் உருட்டி விடுகிறது.

நிலத்தில் சீறியடிக்கும் இரத்த வெள்ளத்துடன் விழுந்து துடிதுடித்து அடங்குகிறது அவனது தலையற்ற முண்டம். அவன் சட்டைப்பைக்குள் கிடந்த காசுக்கட்டை எடுத்துக் கொண்டு அந்தக் குண்டர்கள் புதர்களினூடு ஓடி மறைகிறார்கள். மறு நாட்காலை பொலிஸ் விசாரணையின் பின் பெருந்தகையின் உடல் அவன் பெற்றோர் இனஞ்சனத்தின் கூக்குரலின் நடுவில் கண்ணீர் வெள்ளத்தினிடையே நீர்வேலிக்கு - வீட்டிற்குக் கொண்டு செல்லப்படுகிறது.

பூங்கொடி அம்மா அப்பா உறங்கும் வரை காத்துக் கிடந்து நடுச்சாமத்தில் யாருக்கும் தெரியாமல் வீட்டைவிட்டுப் புறப்பட்டுப் பேய் பிடித்தவள் போல ஓடுகிறாள், களைக்கக் களைக்க மூச்சு வாங்க வாங்க. கடைசியாக நீர்வேலியின் ஊர் எல்லையை அடைந்து விட்டாள். பனங்காட்டின் நடுவில் ஊரிலுள்ள ஆடு வளர்ப்பவர்களால் இலை குழைகள் வெட்டப்பட்டு மொட்டையாக நின்ற வெள்ளுடம்பு ஆலமரங்கள் மத்தியில் ஓங்கி ஓங்கி அனல்வீசி நெருப்பெரியும் சுடலையைக் காண்கிறாள். துன்பத்தின் நடுவிலும் சுடலையைக் கண்டு பிடித்து விட்ட மகிழ்ச்சியுடன் விரைகிறாள். தோட்டவெளியில் மாட்டுப்பட்டிகளையும் ஆட்டுப்பட்டிகளையும், தாண்டிக் கொண்டு சிணுங்கிக் கலங்கிக் கொண்டு அவள் சாமத்தில் ஓடியஓட்டம் பட்டிக்காவலுக்குப் பட்டிகளுக்குள் கிடந்த கமக்காரருக்குப் பேயைக் கண்ட அச்சத்தில் ஏக்கக்காய்ச்சலை உண்டாக்கி விட அவர்கள் பட்டி அடைப்புக்களினுள் கிடந்து விடிய விடியப் பதறுகிறார்கள். கல்லும் முள்ளும் குத்தக் குத்த கால்களின் இரத்தம் கசிந்து சொட்டக் களைப்பையும் உணராதவளாய் பனைக் கூடலுக்குள் புகுந்து சுடலையை நோக்கி விழுந்து விழுந்து எழும்பி எழும்பி ஓடுகிறாள். ஒருவாறு சுடலையிலாடும் தீக்கொழுந்துகளை அணுகிவிட்டாள். எரிகின்ற பிணத்தின் அருகில் மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும் காலின் விரல் நனைக்கும் கண்ணீருமாக நின்று பார்க்கிறாள். "ஐயோ! என் தெய்வமே" என்று பயங்கரக்குரல் எடுத்துக் கத்தியவள் சிதையில் நெருப்பின் மேல் விழுகிறாள். அந்த எரியும் நெருப்பில் சடசட வென்று வெடித்துக் கொண்டிருந்த பெருந்தகையின் எலும்புக் கூட்டைத் தழுவுகிறாள் பூங்கொடி, அந்த எலும்புக்கூடு நெஞ்சாங்கட்டை விலகியதால் எரியும் பிணங்களுக்குரிய இயல்போடு எழுந்து குந்துகிறது. பூங்கொடி அந்த எலும்புக்கூட்டைத் தழுவியபடி எரிந்து எலும்புக்கூடாகிறாள். இருவர் எலும்புக்கூடுகளும் ஒன்றை ஒன்று தழுவிக் கொண்டும் எரிந்து கொண்டும் இருக்கின்றன.

பூங்கொடி திக்திக்திணறித் துடித்துப் பதைத்துப் படுக்கையிலிருந்து துள்ளியெழும்பி உட்கார்கிறாள். வாய் திறக்க முடியாமலும் துக்கத்தை அடக்க முடியாமலும் தணிக்க முடியாமலும் வாய்க்குள் "ஐயோ!... ஐயோ" என்று கத்துகிறாள். திடீரென்று பக்கத்து அறையில் தாயும் தந்தையும் குசுகுசுப்பது கேட்கிறது. அந்த அமுங்கிய பேச்சிலும் பூங்கொடியின் பெயர் மீண்டும் மீண்டும் அடிபடவே, ஒற்றுக்கேட்கும் பழக்கம் தீயது என்பதையும் மறந்து காதுகளைக் கூர்மையாக்கி உற்றுக்கேட்கிறாள்.

"இந்தப்பயல் இப்படிச் செய்வான் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. பூங்கொடி குழந்தைப்பிள்ளை. அவளுக்கு உலகம் தெரியாது பாருங்கள்" இது அம்மாவின் நடுங்குங்குரல்.

"அன்றைக்கு அவள் மயங்கி விழுந்தது கூட ஏதோ விபரீதம் நடந்து விட்டதற்கறிகுறிதான்." அப்பாவின் குமுறல்.

"ஐயோ மானங்கெடப் போகிறோமே! என்ன செய்யலாம்?"

"யாருக்கும் இது தெரியுமுன் கருச்சிதைக்கிற வழியைப் பார்க்கிறதுதான். அந்தக் கொடியவனை இதுவரை துண்டாடியிருப்பர்கள். அவன் எமலோகம் போயிருப்பான். இருந்தும் என் மனம் இன்னும் ஆறவில்லை. இந்த வடு ஏற்படுத்திய மனக்கொதிப்பு என்றுமே ஆறாது"

"ஐயோ அவரைக் கொன்றுதான் விட்டார்களா? நான் கண்ட கனவு உண்மை தானா? ஐயோ என் தெய்வமே ஐயோ என்னால் அந்த மனித தெய்வம் படுகொலைக்காளாகி விட்டதா? ஒரு பாவமும் அறியாத அவரை நானல்லவா கெடுத்தேன்.? ஆண்டவா என்னைக் கொன்ற பின்னல்லவா அவரை அவரை......." மேலும் எண்ண முடியாமல் அதிர்ச்சி மிகுந்து அறிவு மயங்கிப் படுக்கையிலேயே பிணம் போலச் சாய்ந்து விட்டாள் பூங்கொடி.

அவள் மயக்கம் தெளிந்து எழுந்த பொழுது குருவிகளின் கீச்சு மூச்சுச் சத்தம், பக்கத்து வீட்டுக் குழந்தைகளின் பேச்சுப் பாட்டு ஒலிகள், கிளைகளிலிருந்து தரையில் குதித்தவுடன் சேவல்கள் எழுப்பும் கூவல் கொக்கரிப்பு, வீட்டின் பின்புறத்துப் பனைகளின் கூடுகளிலிருந்து காகங்கள் கரைகின்ற சப்தம் என்பன 'விடிந்தது' என்ற ஒரே கருத்தையே பல மொழிகளில் பறையறைந்து கொண்டிருந்தன.

பூங்கொடி கண்விழிக்கும் முன் அவள் உள்ளத்தில் மறைந்து கிடந்த ஆற்றொணாத் துயரம் விழித்துக் கொண்டுவிட்டது. சில வினாடிகள் "ஐயோ! ஐயோ நான் என்ன செய்வேன்? எனக்கிந்த உலகத்தில் இனி என்ன வேலை! நான் கொலைகாரி. என்னைப் பெற்ற மிருகங்களே! நீங்கள் கொடிய கொலைகாரர்" என்று திரும்பத்திரும்ப இரகசியமாக, வாய் புலம்பிக்கலங்கிக் கொண்டிருந்த பூங்கொடி "என் உயிர்த்தெய்வமே உன் அன்பு கிடைத்த சந்தோசத்திற்காக இந்தப் பேரிடி எனக்கு விழுந்ததா? இப்படியானால் உங்கள் அன்பு வேண்டாம் என்றெண்ணி உங்களை உயிருள்ள வரைக்கும் பார்த்துக்கொண்டே இருந்துவிட்டுச் செத்திருப்பேனே. உங்கள் அன்பு கிடைத்ததற்காக மகிழ்ந்ததற்குப்பதில் நான் அழுதிருக்க வேண்டும் என்று இப்பொழுதுதான் உணர்கிறேன். ஆண்டவனே! அவர் உயிருக்கேதும் நடந்தது உண்மையானால் அதனால் நானும் இறந்துவிட வேண்டும். இந்த உலகில் ஒவ்வொரு நொடியும் இனித் துன்பம் தான். நான் சாவைத் தழுவி என்னுயிர் அவர் இருக்கும் இடத்தைத் தேடிப்பறந்து அவருயிருடன் கலக்கும் வரை எனக்கு ஆறுதலில்லை"

என்று எண்ணிக் கொண்டவள் தந்தையின் பணத்திமிரையும் கொலைக்கஞ்சாப்பேய் மனத்தையும் கொடூர மனப்பான்மையையும் நினைத்துப் பார்த்தபோது "சண்டாளா! உன்னைப்போலக் கொடியவனும் உலகத்தில் இருக்கிறானா?" என்று கண்ணீரால் நெஞ்சால் மண்ணள்ளித் திட்டினாள் அந்த அரக்கனை!

அம்மா கதவில் தட்டும் சத்தங்கேட்டுக் கண்ணீரைத் துடைத்துக் கொள்ளவும் எண்ணாத பூங்கொடியின் மனம் "என்னைத் துன்பமறியாத பிஞ்சாகப் பெற்றெடுத்துப் பெரியவளாக வளர்த்துப் பதைக்கப் பதைக்க அணு அணுவாகக் கொல்லத் தொடங்கி விட்டீர்களே, நீயும் எமனைச் சம்பல் போடத்தக்க உன் சண்டாளக் கணவனும்? உங்கள் ஆசைகளை மட்டும் நிறைவேற்ற என்னைப் பயன்படுத்துகிறீர்களே ஒழிய உலகை அறிந்த என்னை என் எண்ணப்படி, என் வாழ்வை என் வாழ்வாக வாழவிடாமல் தடுத்துச் சதி செய்து விட்டீர்களே. ஒரு பாவமும் அறியாத பெருந்தகை அப்பாவியைப் பலிவாங்கி விட்டீர்களே! நீங்கள் என் பெற்றோரல்ல, என் நல்லெதிர்காலத்தின் பகைவர்கள். என் மகிழ்ச்சியில் நல்வாழ்வில் நல்லெதிர்காலத்தில் உண்மையில் உங்களுக்கு அக்கறை இருந்திருந்தால் உங்கள் படுகொலைத் திட்டத்தைப்பற்றி ஒரு வார்த்தை என்னிடம் பேசியே இருப்பீர்கள். உங்கள் வரட்டுக் கௌரவத்திற்கும், அந்தஸ்திற்கும் என் நிம்மதியைப் பலிகொடுக்க என் வாழ்வை இரையாக்கத் துணிந்த நீங்களா என்மீது பாசமுள்ளவர்கள்? நீங்கள் உங்கள் பாவத்தேட்டங்களால் வந்த வரட்டுத் திமிர்களுக்குத்தான் பெற்றோரேயொழிய, மனச்சாட்சிக்கெதிரிகளான வெறிகளுக்குத்தான் பெற்றோரே ஒழிய எனக்கில்லை. உங்கள் கொடிய முகங்களில் விழிக்காமல், கண்களைப் பொத்திக் கொண்டு இந்த நிமிடமே இந்தப் பாழுங்குகை போன்ற வீட்டைவிட்டு ஓடிவிடவேண்டும்" என்று உள்ளூர வெந்து கதறலாயிற்று.

ஆனால் இந்த உணர்ச்சி வெளிப்பாட்டினால் ஆவது ஒன்றுமில்லை. எதிலும் ஆர்ப்பாட்டமற்ற ஆழ்ந்த நீரோட்டம் போன்ற மன உணர்ச்சி மூலமே பல இறுக்கமான ஆணித்தரமான செயல்களை நிறை வேற்றலாம். எந்தப் போலி அன்பைக் கருவியாக்கி என்னையும் என் வாழ்வையும் ஒரு இரவுக்குள் நிரந்தரமாகப் பூண்டோடொழித்து என்னை அபலையாக்கினீர்களோ அதே போலி அன்பால் நடிப்பால் உங்களைப் பதறித்தவிக்க வைக்கவில்லையென்றால் நான் உங்கள் மகளில்லை" என்று எண்ணிய பூங்கொடி "சற்றுப் பொறுத்து வருகிறேன் அம்மா! தேநீர் போடுங்கள்!" என்று உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு கூறினாள். பூங்கொடி தேநீர் பருகுவது போல் பாசாங்கு பண்ணிக் கொண்டே "அம்மா! அப்பா எங்கே? காணோம்" என்றாள்.

"அப்பா காரில் எங்கோ போய்விட்டார். உன்னை இன்று நேரத்திற்குப் புறப்பட்டுப் பஸ்ஸில் பள்ளிக்கூடத்திற்குப் போகச் சொன்னார்." பூங்கொடியின் மூளையில் இந்த விடை அப்போதைக்கு ஒரு நல்ல யோசனையைத் தோற்றுவித்தது. கணவனை

இழந்த நிலையில் கணவனோடு தானும் உடன்கட்டை ஏறுவது தான் அவளுக்கு நிம்மதி தரக்கூடிய ஒன்றாகப்பட்டது. இன்று பஸ்ஸில் புறப்பட்டு நேரே பெருந்தகையின் வீட்டிற்குப் போய் அவனுயிர்க்கொன்று நடந்திருந்தால் தானும் அவன் செல்லும் உலகத்திற்குச் சென்றுவிடுவது என்று தீர்மானித்துக்கொண்டாள்.

குப்பிளானிலிருந்து சுன்னாகமூடாக யாழ்ப்பாணம் செல்லும் பஸ்ஸில் புத்தகப் பெட்டியும் அரைவெள்ளைச் சட்டையுமாக ஏறிக்கொண்ட பூங்கொடி பெருந்தகை கொலை செய்யப்பட்டிருந்தால் பஸ்ஸிற்குள் பிரயாணிகள் அப்படுகொலை பற்றி ஏதாவது கதைப்பார்கள் என்று பஸ் யாழ் நகர் சேரும்வரை எதிர்பார்த்தாள். யாரும் அவ்விதம் பேசிக்கொள்ளாதது மனத்துக்குச் சற்று நம்பிக்கையூட்டுவதாயிருந்தது. பஸ் யாழ் நகர பஸ் நிலையத்தில் நிறுத்தப்பட்டதோ இல்லையோ குதித்திறங்கி ஓடிச்சென்று பருத்தித்துறை போகும் பஸ்ஸில் ஏறிக்கொண்டாள்.

## 30. கடைசிக் கண்ணீர்

பூங்கொடி கோப்பாய்ச் சந்தியில் பஸ்ஸிலிருந்து இறங்கி மேற்கு நோக்கி ஓட்டமும் நடையுமாக வந்தாள். இராசவீதிச்சந்தி வந்ததும் அதைக் கண்டு மனத்தில் நெருப்பாகக்குமையும் துயரத்தோடு, வடக்கு நோக்கிக் கையிற் புத்தகப்பையுடன் அந்தத் தனிமையான பாதையில் ஓடியபோதும் அவளுக்கு அச்சமே உண்டாகவில்லை. பதிலாக ஒரு பேய்வேறி மனத்தில் தாண்டவமாடிக் கொண்டிருந்தது.

தோட்டங்களுக்கூடாகப் பரபரக்குங் கால்களோடும் தவிக்கின்ற நெஞ்சோடும் விரைந்துகொண்டிருந்த பூங்கொடி தன் கழுத்துப்பட்டியைக் கழற்றிச் சட்டைப்பைக்குள் மறைத்துக் கொண்டாள். சற்றுத்தூரம் கடந்திருப்பாள் தோட்டங்களில் நின்ற கமக்காரர் இருவர் “சவர்க்காரம் விற்கிற பிள்ளைபோல் இருக்கிறது. வயிற்றுப் பிழைப்புக்காகக் குமர்ப் பிள்ளைகளும் வீடுவீடாகத் திரிகிற அளவுக்கு நாட்டில் வறுமை வந்துவிட்டதே” என்று பேசிக் கொண்டதைக் கேட்டு “அதுவும் நல்லதுதான், நானும் அப்படியாகச் சனங்களால் கணிக்கப்படும் வரை ஆபத்தில்லாமல் தடையில்லாமல் பெருந்தகை வீட்டிற்குப் போய்ச்சேர்ந்து விடலாம்” என்று எண்ணிக்கொண்டே ஓடிக் கொண்டிருந்தாள் அவள்.

கால்கள் களைத்துச் சோர்வதையும் பொருட்படுத்தாமல் ஏக்கம் எற்றிய எற்றுதலில், துயரம் சுழித்த சுழிப்பிலே வீசப்பட்டு “என்னுயிரைத் தன்னுயிரோடு காணும்பேறு கிடைக்கவேண்டும் கடவுளே!” என்று பிரார்த்தித்துக்கொண்டு

உணர்ச்சிகள் கூர்மை அடைய அடையக் குமுறிக் குமுறி அந்தத் தனிப்பாதையிலே அழுது கொண்டு கிழக்கு நோக்கித் திரும்பி முன்னேறிக் கொண்டிருந்தாள்.

தோட்டவெளி கழிந்து பனைவெளி வந்தது. அதற்கப்பால்தானே அவள் தேடி ஓடும் தெய்வத்தின் கோயில் இருக்கிறது. ஆமாம் தெய்வம் இல்லாத கோயிலாக அக் கோயில் இருந்து விடக்கூடாதே.

அந்தப் பாதையில் எதிர்த்திசையிலிருந்து வந்து பலர் அவளைத் தாண்டிக் கொண்டுபோயிருந்தும் அவர்களைப் "பெருந்தகை உயிரோடு இருக்கிறானா?" என்று எப்படிக் கேட்பது என்ற தயக்கத்தால், கேட்டாவது மனமாற முடியாமல் ஓங்கியுயர்ந்த அந்தப்பனைகளினூடு பனங்காட்டின் சலசலப்பின் நடுவில் கெக்கலி கொட்டும் செண்பகங்களின் கதறலின் மத்தியில் ஆங்காங்கே பனைகளில் புல் மேயக் கட்டப்பட்டிருந்த பசுக்கள் தங்கள் கன்றுகளை மடிசுரந்து அகவி நிற்க விரையும் வேகத்தில் வடக்குத் தெற்காக ஓடும் தெருவில் போய் ஏறினாள்.

நின்று ஒரு முறை அழுகுரலோ, சாவீட்டு மேளமோ கேட்கிறதா என்று உற்றுக் கவனித்தாள். அப்படி ஒன்றும் கேட்கவில்லை. மனம் அம்மாடி என்று நெடியதோர் நிம்மதிப் பெருமூச்சு விட்டுப் பாரத்தில் பாதியைக் குறைத்துக் கொண்டது.

முன்பு உலகநாதபிள்ளை பெருந்தகையினால் முரட்டு இளைஞர்களிடமிருந்து காப்பாற்றப்பட்ட அதே இடத்தில் நின்றிருந்தாள் பூங்கொடி, மீன் கடகத்தைத் தலையிற் சுமந்தபடி வந்த ஒரு மீன்காரியிடம் "இங்கே முத்தையாவின் மகன் பெருந்தகையின் வீடு எங்கே இருக்கிறது?" என்று கேட்டாள். மீன்காரி தான் வந்த திசையைக் காட்டி "இந்தத் தெருவிற்கு மேற்கு ஓரத்தில் அதோ தெரிகிறதே பச்சைப் படலை மூன்றாவது படலை. அந்த வளவு தான்" என்று கூறிவிட்டுக் குடுகுடென்று ஓடிவிட்டாள்.

அந்த வீட்டுப் பக்கம் அமைதியில் ஆழ்ந்து கிடந்தது.

அவள் மனம் தொண்ணூறு வீதம் நம்பிக்கை பெற்றுவிட்டது. அவளது தெய்வம் உண்மையில் காப்பாற்றப்பட்டு விட்டதுதானா? அவள் கடவுளின் திருவருளை வியந்து கண்ணீர் பெருக்கிவிட்டு இந்த அளவில் திரும்பிக் கல்லூரிக்கே சென்று விடுவோமா என்று சிந்தித்தாள். ஆனால் தந்தை அவனைப் படுகொலை செய்ய வகுத்த முதல் திட்டம் பிழைத்து விட்ட தென்பதற்காக அவனுக்கு நேரவிருந்த ஆபத்து முழுமையாக நீங்கிவிட்டது என்று நம்பமுடியுமா? ஒரு முறை தோற்றவர் அடுத்த தடவையில் தன் திட்டத்தை வேறு ஒரு வழியில் வெற்றிகரமாகச் செயற்படுத்தி விட்டால்? அவளது ஈரற்குலை திரும்பவும் நடுங்க அவள் பதறத் தொடங்கிவிட்டாள்.

பெருந்தகையை அவன் முகத்தை ஒரு தடவை மனமாறப் பார்த்து அவனிடம் அப்பாவின் திட்டங்களைச் சொல்லி எச்சரிக்கையோடு நடந்து கொள்ளும்படி மன்றாடி வேண்டவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டாள். ஆனால் இத்தனை ஆயிரக்கணக்கான யார்களை எண்ணாமல் தயங்காமல் தாண்டி வந்துவிட்ட அவள் பெருந்தகை வீட்டிற்கும் தான் நிற்குமிடத்திற்கும் இடையிலுள்ள ஒரு நூறு யார் தூரத்தை மட்டும் கடப்பதற்கு எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி அஞ்சாத அச்சமெல்லாம் அஞ்சித் தயங்கவேண்டி இருந்தது.

“தற்செயலாக அவர் வீட்டில் இல்லாவிட்டால் வீட்டவர்களுக்கு என்ன காரணத்தைச் சொல்லிப் படலைக்குள் அடியெடுத்து வைப்பது? அவர்தான் நின்றாலும் எப்படி அவருக்கு எல்லாவற்றையும் சொல்வது? எந்த முகத்தோடு அவரை ஏறெடுத்துப் பார்ப்பது? என் பெற்றோர் உங்களைப் படுகொலை செய்யத்திட்டம் வகுத்துள்ளார்கள் என்று எப்படி வாய்கூசாமற் சொல்வது? அந்தக் கொடிய மிருகங்களை அப்பா அம்மா என்று குறிப்பிடவே மனங் கூசுகிறதே. வியர்வையிற் பிசுபிசுத்து, எண்ணெய் கசிந்து சோர்ந்து கிடந்த அவள் முகம், தந்தையின் கொலைவெறியை இரத்தப்பசியை நினைத்த போது சீற்றத்தாற் சிவந்தது.

“ஆமாம் உள்ளதை உள்ளபடி பெருந்தகைக்குச் சொல்லி விட வேண்டியது தான். இனிமேலும் இச்சதியில் ஈடுபட்டு அப்பா வெற்றி பெற்றுவிட்டால் இவரின் முடிவு என்ன என்நிலை என்ன? அந்தப் பாதக நெஞ்சரின் ஆன்மா மீளா நரகத்திற்கல்லவா தள்ளப்படநேரும். கட்டாயம் அவருக்குச் சொல்லி எச்சரிக்கையாக நடந்து கொள்ளும் படிகோரவேண்டும்” என்று எண்ணிக் கொண்டு அந்த ஓலைக் குடிசைகளின் முன்னால் முற்றத்தில் வந்து தயங்கித் தயங்கி நின்றாள் அவள். பெண் • பெறாத மனக்குறையால் பெண் பிள்ளைகளைக் கண்டால் ஆர்வத்தோடு பார்க்கும் பெருந்தகையின் தாய் காமாட்சி ஒரு பெண் பிள்ளையைத் தன் வீட்டு முற்றத்தில் கண்ட வியப்பில் அடுப்படிக் கொட்டிலிலிருந்து வெளியே ஓடிவந்து “என்ன பிள்ளை வேண்டும்? யாரைத் தேடுகிறீர்கள்” என்று பரிவோடு கேட்டு நின்றாள்.

“அம்மா! பெருந்தகை சேர் வீடுதானே இது?”

“ஆமாம்”

“அவரைப் பார்க்க வேண்டும்”

“சரி உள்ளே வாருங்கள்! அப்படி இருங்கள்”

பூங்கொடி காமாட்சியைத் தொடர்ந்து வீட்டில் நுழைந்து அவள் கோரிக்கைப்படி கட்டிலில் அமர்ந்தாள். “நீங்கள் எங்கே இருந்து வருகிறீர்கள் பிள்ளை.” பொருள் பொதிந்த கேள்விகளைக் காமாட்சி எழுப்ப ஆரம்பிக்கலானாள்.

"ஏழாலையிலிருந்து வருகிறேன். எங்கள் அப்பாவோடுதான் உங்கள் மகன் இத்தனை நாட்களும் வேலை பார்த்தவர்" என்றவள் தன் பெற்றோரின் கொலைத் திட்டம் இவர்களுக்குத் தெரிந்திருக்குமோ என்று அதிர்ந்து அஞ்சினாள்.

"அப்படியா பிள்ளை? நல்லது! அவன் யாழ்ப்பாணம் போயிருக்கிறான் உடுப்பு எடுக்க! வரநேரஞ் செல்லுமம்மா!"

"வரட்டும்! கண்டு கொண்டு போவம்?"

"அதுக்கென்ன ஆறுதாலாக இருந்து பார்த்துவிட்டுப் போங்கள். அது சரி பள்ளிக்கூடம் போகவில்லையா?" பூங்கொடி திடுக்கிட்டாள். "இல்லை நாளை தான் போவேன்?" என்று தட்டுத்தடுமாறினாள். காமாட்சி என்ன நினைக்கிறாளோ என்று அஞ்சிக்கொண்டு மேலும் பயங்கரமாகத் தன்னை உலுக்கி எடுக்கக் கூடிய வினாக்கள் எழுவதை தடுப்பதற்காகப் புத்தகப் பெட்டியைத் திறந்து ஒரு புத்தகத்தை எடுத்துப் படிப்பவள் போலப் பாசாங்கு செய்யலானாள். என்றாலும் "அப்பா இன்றும் நாலு மணிக்குக் கல்லூரிக்குக் காருடன் போய் என்னைத் தேடிக் காணாமல் பதைப்பார். என்னைத் துடிக்க வைத்தவர். இன்னொருவனைத் துடிக்கப் பதைக்க வெட்டிக் கொலை செய்யத் திட்டம் போட்டவர். நன்றாகத் துடிக்கட்டும். அவமானமாயிற்றே என்று புழுங்கட்டும். பதறட்டும்" என்று ஆத்திரத்தில் பதறிக் கொண்டிருந்தவளிடம் ஒரு பித்தளைக் கிண்ணத்தில் பால்விட்டுத்தடிப்பாக ஆற்றிய கோப்பியைக் கொண்டுவந்து கொடுத்தாள் காமாட்சி. பணிவோடும் மரியாதையோடும் அதனை இருகைகளும் நீட்டி வாங்கிக் கொண்டு பருகிய போது நடந்ததால் ஏற்பட்ட களைப்புப் பெருமளவில் தீர்ந்தது பூங்கொடிக்கு!.

பன்னிரண்டு மணியாகியது. பெருந்தகை வரவில்லை. ஒரு மணி போலப் பெருந்தகையின் தந்தை தோட்டத்திலிருந்து தலையில் புல்லுக்கடகத்தோடும் இடுப்பில் செம்மண் புழுதியில் ஆடி வியர்வையிற் குளித்த வேட்டியோடும், மேலெல்லாம் வியர்வையோடும் வந்து சேர்ந்தார். தலையில் இருந்த சுமையை இறக்கிப்போட்டு நிமிர்ந்தவரிடம் காமாட்சி ஒரு விதப் பரபரப்போடு ஓடினாள். ஏதோ அவசரமாகச் சொன்னாள். முத்தையா வந்து தலைவாசலை ஒரு முறை எட்டிப் பார்த்துத் திருடி போல விழித்துக் கொண்டிருந்த பூங்கொடியைக் கண்களால் அளந்து பார்த்துவிட்டுக் கிணற்றடிக்கு நடந்தார். காமாட்சி பின் தொடர்ந்தாள். நெடு நேரம் இருவரும் அங்கு நின்று எதையோ ஆழமாக அலசி உரையாடிக் கொண்டிருக்கிறார்களென்பதை ஊகித்துக் கொண்ட பூங்கொடி ஒரு புறம் பயமும் மறுபுறம் மகிழ்ச்சியும் நெஞ்சில் ஊசலாட இருந்து தவித்துக் கொண்டிருக்கையில் படலை திறக்கப்படும் ஓசை கேட்டது. ஒரு புதிய தோற்பை கொளுவிய மிதிவண்டியைத் தள்ளிக் கொண்டு பெருந்தகை வருவதைப் பார்த்த பூங்கொடி பீதி நடுக்கத்தோடும் அதேவேளை அவனை உயிரோடு கண்ட மகிழ்ச்சியுடனும்

எழுந்து நின்றாள். தன் கண் குளிர அவனை உற்றுப் பார்த்துப் பார்த்துக் கண் கலங்கினாள். மிதி வண்டியை முற்றத்துப் பனைகளில் ஒன்றில் சார்த்திவிட்டுத் தோற்பையுங் கையுமாகத் தலை வாசலுக்குள் குனிந்து புகுந்தவன் பூங்கொடி நிற்பதைக் கண்டு திடுக்கிட்டான். அவள் அழுது நிற்பது மேலும் திகைப்பைத்தந்தது.

"பூங்கொடி! எப்படி இங்கு வந்தாய்? ஏன் கல்லூரிக்குப் போகவில்லை?" என்று கேள்வி மேல் கேள்வியாக அடுக்கிக் கொண்டே போனவனை இடைமறித்து "இராத்திரி எப்படி வந்து சேர்ந்தீர்கள்?" என்றாள் பூங்கொடி.

"ஏன்? புன்னாலைக்கட்டுவனிலிருந்து ஒரு கார் பிடித்து வந்தேன், உன் அப்பா தந்த மூவாயிரம் ரூபாவையும் பாதுகாப்பாகக் கொண்டு வந்து உரியவர்களிடம் சேர்க்க வேண்டிய பொறுப்பு இருந்தது. நேரம் வேறு நள்ளிரவாகிவிட்டதால் மிதிவண்டியைக் காரில் போட்டுக்கொண்டு காசை அவர்கள் வீட்டில் கொடுத்து விட்டு நேரே நிலாவரைச்சந்தியால் வீடு சேர்ந்து விட்டேன்."

"நான் செய்த தவம் உங்களைக் காப்பாற்றியது, எனது வாழ்வைக் காப்பாற்றியது. ஏன் அந்தக் கொலைவெறி பிடித்த அப்பாவையும் அம்மாவையும் தான் காப்பாற்றியது."

" ஏன் பூங்கொடி? "

" எப்படிச் சொல்வேன்! நினைக்கவே நெஞ்சு நடுங்குகிறது. உங்களைக் கொல்வதற்குக் கையாட்களை இராத்திரி வழியில் ஒழுங்கு பண்ணிவிட்டுத்தான் சாட்டாகப் பணத்தையும் உங்கள் கையில் தந்து விட்டிருக்கிறார் என் அப்பா! மிதிவண்டியில் வருவீர்கள் என்று எதிர்பார்த்து இருந்தார்கள் அந்தக் குண்டர்கள். நீங்கள் காருக்குள் வந்தபடியால்தான் தப்பினீர்கள். அப்பா தன் சூழ்ச்சியை இராத்திரிப் பன்னிரண்டு மணிபோல் அம்மாவுக்குச் சொல்லி நெஞ்சில் தட்டிக் கொண்டது எனக்குக் கேட்டது. இடி விழுந்த நெஞ்சோடு கலங்கிக் கலங்கி அழுதபடி விடியும் வரை காத்துக் கிடந்து உங்களைக் காத்தருளும்படி உலகத்துத் தெய்வங்களை எல்லாம் வேண்டிக்கிடந்து, விடிந்ததும் உங்கள் நிலைமை அறிய ஓடோடி வந்தேன்!."

"என்ன பூங்கொடி? இது உண்மையா அம்மா?" என்று வியந்த பெருந்தகையை அதிர்ச்சி கவ்விக்கொண்டது. வெகுநேரத்தின் பின் விழித்துக்கொண்டு "அது சரி, இப்பொழுது நீ என்ன செய்யப்போகிறாய் அம்மா? நீ வெளியே போவது உயிருக்கே ஆபத்தாகி விடும். இனி உன்னை எங்கும் போகவிடமாட்டேன்" என்று கண் கலங்கிய பெருந்தகை பூங்கொடியின் கண்களில் வழிந்த நீரை அன்போடு துடைத்துவிட்டான்.

பூங்கொடி ஆனந்தத்தால் விம்மி விம்மி வடித்த கண்ணீரை அப்பொழுது தான் உள்ளே வந்த காமாட்சியின் கைகள் அன்போடு துடைத்துத் தலையைக்கோதி விட்டுக்கொண்டிருந்தன.

# 31. நச்சுப் பணத்தால் நானே அழிவேன்

அந்தப் பனிபுலராத விடியலிலே உலகநாதனின் கார் அற்பைச் சந்தியால் தெற்கு நோக்கித் திரும்பிப் பலாலி வீதியில் போய்க் கொண்டிருந்தது. இது வரை கொலை நிச்சயமாய் நடைபெற்றிருக்கும் என்று நம்பிய உலகநாதரின் மனக்கண் முன், தாடி அடர்ந்த முகத்துடன் கையில் விலங்கு பூட்டப்பட்டிருக்கும் தமது அவமானக் கோலம், நீதி மன்றத்தில் கைதிக் கூண்டில் குற்றத்தை மறுக்க முயன்று தோற்று நிற்கும் தம் குற்றவாளித் தோற்றம், சிறைச்சாலையில் கம்பிகளின் பின்னணியில் மனச் சான்றின் கோர விரல்கள் பிசைந்து பிழியும் நெஞ்சை இரு கைகளாலும் பற்றித் தாம் பதைக்கும் பரிதாபக் காட்சி எல்லாம் ஒன்று மாறி ஒன்று வந்து போய்ச் சித்திரவதை செய்கின்றன. காரைச் செலுத்திக் கொண்டே தெற்குப் புன்னாலைக் கட்டுவன் சந்தியைத் தாண்டுகையில் மெல்லக் கிழக்கு நோக்கித் திரும்பிப் பார்க்கிறார். துண்டாடப்பட்ட பெருந்தகையின் உடற் கூறுகளைச் சுற்றிச் சூழ்ந்து நிற்க வேண்டிய சனக் கும்பலை அங்கு காணவில்லை. தெரு வெறிச்சோடிக்கிடக்கிறது. கண்ணுக்கெட்டிய தூரம் வரை எந்தவித அசம்பாவிதம் நடந்தமைக்கான அறிகுறியும் தென்படவில்லை. அச்சத்தின் அசுரப்பிடியில் நிரந்தரமாகக் கலங்கிப் போய்க்கிடந்த அவர் அந்தராத்மா அவர் அறியாமலே "அப்பாடா!" என்று பெருமூச்சு விட்டுக் கொண்டதோ? "வீரசிங்கம் நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டானோ"? என்று அவர் எண்ணி ஒரு வேளை அவன் முயன்றும் பெருந்தகையின் வீரத்தால் அம்முயற்சி முறியடிக்கப்பட்டிருக்குமோ என்று தோன்றிய போது பெருந்தகையின் பழிவாங்கும் முரட்டுக் கரங்கள் தமது குரல் வளையைப் பக்கென்று பிடித்து நசுக்குவது போன்ற மரணபீதி!

எதற்கும் பரமலிங்கத்தைக் கச்சேரி அலுவலகத்தில் சந்தித்துப் பெருந்தகை பணத்தோடு வந்தானா? வந்திருந்தால் எப்படி வந்தான்? என்று விசாரித்து அறிவது தான் தமக்கு உள்ள வழிகளுள் மிகவும் தற்பாதுகாப்பானது என்று யூகித்துக் கொண்டு ஒன்பது மணிக்குக் கச்சேரிக்குப் போகும் வரை புதிதாக நடைபெறும் பள்ளிக்கூடக் கட்டட வேலையைப் பார்வையிடும் சாட்டில் பொழுதைப் போக்கலாம் என்று சென்றார் உலகநாதர்.

தங்கை பொன்மணி வீட்டுப்படிகளை மிதித்தும் தங்கையினதும் உலகநாதனதும் முகங்களில் விழித்தும் பதினெட்டு ஆண்டுகள் ஆனபின் முதல் தடவையாக சரவணச்சாமிக்கு அவர்களைப் போய்ப் பார்க்க வேண்டும் என்ற ஆசை பிடித்து. வெறியாகக் கிளம்பி அவரை உலுக்கி ஆட்டத் தொடங்கியது.

வேலியில் கறையான் தட்டிக் கொண்டு நின்ற சரவணரின் கையிலிருந்த தடி மெல்ல நழுவி விழுந்தது. ஒரு நாளுமில்லாத திருநாளாக இந்த மன உளைச்சல் தமக்கு ஏற்படக் காரணம் தங்கையின் வாழ்வில் பயங்கரமான சோதனை எதுவோ ஏற்பட்டுள்ளதுதான் என்று ஊகித்துக் கொண்ட சரவணச் சாமியார்

மரத்துப்போன தமது மனம் கனிந்தவிதம் தெரியாமல் கண்களைக் காவிச்சால்வைத் தலைப்பால் துடைத்துக் கொண்டு புறப்பட்ட நேரம் பிற்பகல் மூன்று மணி.

"பொன்மணி! பொன்மணி!" என்று அழைத்துக் கொண்டே தங்கையின் வீட்டுப் படலையைத் தள்ளித் திறந்து வளவுக்குள் அடியெடுத்து வைத்தார் சரவணச்சாமி. "யாரது?" என்று கேட்டுக் கொண்டே அவசரமாகக் கண்களைக் கசக்கித் துடைத்து விட்ட வண்ணம் அவரை எதிர்கொண்ட பொன்மணியம்மை திகைப்போடு உற்று உற்றுப் பார்க்கலானாள்.

கடைசியில் "யார் அண்ணனா?" என்று கேட்டுவிட்டுக் குலுங்கியழத் தொடங்கிவிட்டாள்.

"அம்மா பொன்மணி! என்ன நடந்தது? சொல்லு, உலகநாதன் எங்கே?" என்று நிதானமான குரலில் கேட்ட சரவணனை இடைமறித்து "அண்ணா நீங்கள் அன்று சொன்னது சரியாகிவிட்டதண்ணா! நான் பெற்ற மகள்... எங்களை ஊர் பழிக்க வைத்துவிட்டாள். பள்ளிக் கூடம் போகிறேன் என்று போய் யார் பின்னாலோ ஓடிவிட்டாள் அண்ணா?"

"எப்போது நடந்தது, பொன்மணி?"

"இன்றைக்குத்தான், அவள் அப்பா பள்ளிக்கு நாலு மணிக்குக் கார் கொண்டு போனார். அவள் இன்றைக்குப் பள்ளிக்கூடம் வரவில்லை யென்று வாத்திமார் சொன்னார்களாம். வீட்டுக்கு ஓடிவந்த அந்த மனிதர் என்னிடம் சொல்லித் தலையில் அடித்துக் கொண்டு அழுதார். பிறகு "நான் இனி ஊரிலே இருக்க முடியாது பொன்மணி! யார் முகத்திலும் விழிக்க முடியாது. நான் எங்காவது போகிறேன்!. நீயும் உன் வழியைப் பார்த்துக் கொள்" என்று விசர் பிடித்த மாதிரிப் பிதற்றிக் கொண்டு காரையும் எடுத்துக் கொண்டு போனார் அண்ணா. நான்.. மன்றாடிக் காலைப் பிடித்த போதும் என்னை உதறித்தள்ளி விட்டு ஓடிவிட்டாரே!. நான் என்ன செய்வேன் அண்ணா. அவர் மிகவும் முரட்டுச் சுபாவம் உள்ளவர். உயிருக்கு ஏதாவது முடிவு தேடிக் கொள்ளப்போகிறரே! ஐயோ அண்ணா!" என்று ஊரறியச் சத்தம் போட்டுக் கதறியழுவதற்கும் முடியாமல் முனகி முனகிப் புலம்பியழுதாள் பொன்மணி. அர்த்தம் நிரம்பிய சிரிப்பை உதிர்த்த சரவணச்சாமியார் தம் நரைத்த தாடியை ஒரு கை உருவ வானத்தைப் பார்த்தார். "தங்கச்சி! உலகநாதனின் உயிர் அவ்வளவு லேசில் கழலாது அம்மா!. உன் மஞ்சள் குங்குமத்துக்குப் பங்கம் வராது. பயந்து சாகாதே!. பதறாதே! அவன் திரும்பி வருவானம்மா!"

வீட்டை விட்டு ஆவேசத்தோடு கிளம்பிய உலகநாதர் காரை ஓட்டிக் கொண்டிருந்தபோது கச்சேரி அலுவலக மேசையில் வைத்துப் பரமலிங்கம் மூஞ்சியில் அடித்தது போல் வீசிய மூவாயிரம் ரூபா நோட்டுக்கற்றை அவர் சட்டைப்பையில்

கனத்துத் தொங்கிற்று. "சே! பரமலிங்கம் எனக்குச் செருப்பாலே அடித்த மாதிரி நடந்து கொண்டு விட்டானே!. 'பெருந்தகை பணம் கொண்டு வந்தானா? எப்படி வந்தான்?" என்று நான் கேட்டதுதான் தாமதம், உடனே பொக்கற்றில் இருந்த பணக்கற்றையை உருவியெடுத்து "இந்தாருங்கள்! அவன் நல்ல காலம், என் நல்ல தலை விதி அவன் கார் பிடித்து வந்தான். கடவுள் என்னை ஒரு கொலைப் பழியிலிருந்து காப்பாற்றினார். அவன் பாதுகாப்பாக என்னிடம் வந்து சேர்வதற்குள் என மனச்சாட்சி என்னைப் பதைக்கப் பதைக்கப் பழி வாங்கிவிட்டது. போய்விடுங்கள் உடனே! உங்களைப் போன்ற கொடியவர்கள் முகத்திலே விழிப்பதே பாவம்" என்று அவன் ஏசிய ஏச்சு என் நரம்புகளை மட்டுமல்லாமல் எலும்புகளையே தளர்ந்து நெளிந்து சுருங்கிச் சோர வைத்துவிட்டாற் போன்றிருந்ததே!. பெருந்தகை முன்கூட்டியே என் திட்டத்தை அறிந்திருந்ததால்தான் எச்சரிக்கையோடு நடந்து கொண்டானோ, கார் பிடித்துச் சென்றானோ?" என்ற பீதிக்குள்ளாகி அவர் சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்கையில், பூங்கொடி வேறு, பாடசாலைக்கு வரவில்லை என்ற அதிர் வெடியை ஆசிரியர்கள் தூக்கிப் போட்டார்களே! அந்த அதிர்ச்சி வேறு! கல்லூரி மாணவிகளுக்குள் பூங்கொடி எங்குபோனாள் என்ற வினாப்பரவி விபரீதயூகங்கள் ஏற்பட்டு அது அங்கிருந்து அப்பெண்கள் மூலம் பல ஊர்களின் பணக்காரக் குடும்பங்களுக்கும் எட்டிவிடலாமென்ற அவமான அதிர்ச்சி இன்னொரு பக்கம்.

அவருக்குத் தெரிந்து விட்டது! பூங்கொடிதான் இரவு அவரும் அவள் தாயும் பேசிக்கொண்டிருந்ததை ஒற்றுக் கேட்டு வைத்திருந்து விடிய எழும்பி அவன் வீடு தேடி ஓடிவிட்டாள் என்று அவர் முடிவுகட்டிக் கொண்டார். அவள் வேறு மைனர் நீங்கிய வயசுக்காரி. இதற்குள் கலியாணப்பதிவும் முடிந்திருக்கும். இனிப் பொலிஸ் துணை நாடுவது வீண்வேலை. அல்லாமலும் அவரது படுகொலைத்திட்டம் பொலிசுக்கு எட்டியிருந்தால் தாமாகப் போய்ப் பொலிசின் பொறியில் மாட்டிக் கொண்டதாகிவிடும் என்று எண்ணித் தடுமாறிய உலகநாதபிள்ளை "சரவணன் சொன்னது போல் ஆகிவிட்டதே!. நான் படுதோல்வி அடைந்து விட்டேனே! இனி நான் வாழ்ந்தென்ன செத்தென்ன?" என்று எண்ணினார்.

ஆயினும் அவரது வலிய நெஞ்சு தற்கொலை செய்ய என்ன முயன்றும் துணிவு கொள்ள மறுத்துவிட்டது. இனி ஊரிலும் தலைகாட்ட முடியாது. என்ன செய்வது என்று அறியாமல் காரை ஓட்டிச் சென்றவருக்கு தமது தொழிலுலகக்குருவின் ஞாபகம் வந்தது. ஓவசீயர் சின்னையா என்பவர் தொழில் தந்து, தொழில் அனுபவம் தந்து அவரை மனிதனாக்கிய தெய்வம். எந்த சிக்கலுக்கும் உடனடித் தீர்வு கண்டு நிலைமையைச் சமாளிக்கும் திறனும் மதிநுட்பமும் வாய்ந்தவர். அவர் இப்பொழுது விழுகிழமாகித் தமது இளையமகளோடு அட்டனில்

தேயிலைத் தோட்டம் ஒன்றில் வசித்து வருகிறார். அவரது முகவரியை மனதுள் ஞாபகப்படுத்திக் கொண்டவர் அவரிடம் போய் நிலைமைகளைச் சொல்லித்தீர்வு தேடலாம். புதிய இடம் புதிய சூழல் இவற்றிலே கொஞ்சம் மனச்சாந்தியும் ஏற்படக்கூடும் என்று எண்ணினார். தமது அதிகாரம், செல்வாக்கு, மமதை எல்லாம் ஒரே நாளில் சரிந்து மண்மேடாகிப் போக்கற்றநிலைக்குத் தாம் தள்ளப்பட்டு ஊரையேவிட்டு ஒளித்தோடவேண்டிய நிலை ஏற்பட்டதே என்று நினைத்த போது யார் இதற்கெல்லாம் காரணம் என்று கேட்டுக் கேட்டுக் குழம்பினார்; துடித்தார்.

“பூங்கொடியா? இல்லைப் பெருந்தகையா? இல்லை அன்று சாபமிட்ட சரவணனா? ஆமாம் அந்தச் சரவணன் சபித்தானா? இல்லையே! கண்ணீரினிடையில் அவன் கெஞ்ச நான் இணங்க மறுத்ததுடன் அவனை அவமதித்த போதும் “நான் கிளம்புவது உன் பாவங்களைக் கழுவி உன்னைப் புண்ணியாத்துமா வாக்கக்கூடிய குழந்தை வரம் உனக்குக் கிடைப்பதற்காகவே! அன்றி உன் மேல் கோபமோ வெறுப்போ எனக்கில்லை“ என்றானே! அதோடு எனக்குப் பிறந்த ஒரு குழந்தை நீடித்த ஆயுள் பெற்றால் என் பாவச் சொத்தைத் தீண்டாது ஓடிவிடும் என்றும் சொன்னானே! அவன் சொன்னபடி எல்லாம் நடந்துவிட்டனவே! நான்தான் எனது இன்றைய நிலைக்குக் காரணகர்த்தனா? அப்படியானால் என் சொத்துப் பழிச் சொத்துத்தானா? அதை தீண்டினால்தான் என் மகள் வாழ்வு அழிந்து ஒழிந்துவிடுமோ? அவள் அதனைத் துறந்து ஓடியிருப்பதால் அவள் வாழ்வு இனி மலர்ந்து விடுமோ? அதைத் தீண்டினால் அவள் மட்டும்தான் அழிவாளா? நான் தீண்டினால் மட்டும் அழிந்து விடமாட்டேனா? ஆமாம் நான் தேடிய சொத்து அழிப்பதானால் என்னையே அழித்து விடட்டும். என் சொத்து முழுவதையும் குடித்துச் சூதாடிச் செலவு செய்யப்போகிறேன். நேரடியாகத் தான் சாக முடியவில்லை. அணுஅணுவாக என்றாலும் செத்துத் தொலைந்துவிடுவோம். பொன்மணி தன் சீதனச் சொத்தை விற்று அவள் காலத்தைத் தள்ளட்டும்” என்று வெறிச் சிந்தனையின் ஆவேசத்தில் அவர் வைர உடல் பதறலாயிற்று,

## 32. கண்ணைத் திறந்தது கள்ளக்காதல்

இப்போதைக்கு அட்டன் போய் ஓவசியர் சின்னையருடன் அவர் மகள் வீட்டில் தங்குவோம். அவர் ஆலோசனையையும் கேட்டு விடுவோமே!. என்று எண்ணியவர் கார் அக்சிலறேட்டரை அழுத்தி மிதித்தார். கார் கண்டி வீதியில் சிறகின்றிப் பறக்கலாயிற்று,

உலகநாதபிள்ளை நாற்காலியில் கூனிக்குறுகி அமர்ந்தவராய்ச் சோகமும் ஆவேசமும் மாறி மாறி ரசவாதம் புரிந்து விளையாடிய தமது கதைச் சித்திரத்தைக் கூறி முடித்துப் பெருமூச்சு விட்டார். எதிரில் மெத்தைக் கட்டிலில் கம்பளிப்

போர்வைக்குள் புதைந்து சுருண்டு படுத்திருந்த சின்னையர் வற்றியுலர்ந்த முகத்தின் ஒளிச்சுடர் தெறிக்கும் கண்களை உருட்டி விழித்துக் கொண்டு நீண்டதோர் பெருமூச்சு விட்டார். பூட்டிய கதவின் ஓரமாக வயதை மறைக்க பூசிச்சுமத்திய அலங்கார இளமையுடன் ஒய்யாரமாக உட்கார்ந்திருந்த அவர் மகள் அமரா "சொச் சொச் பாதகி" என்று பூங்கொடியைக் குறித்துச் சுருக்க விமர்சனம் நடத்திவிட்டு எழுந்து கதவைத் திறந்து கொண்டு வெளியேறிய போது உலகநாதபிள்ளையின் நரம்புகள் ஒரு தடவை பகீர் என்று சூடேறித்தணிந்தன. சினத்தில் கருமையோடிய முகத்தோடு சின்னையரைத் திரும்பிப் பார்த்தார் உலகநாதபிள்ளை.

"ஹூம்! உவளா உப்பிடிச் சொல்லிவிட்டுப் போகிறாள்? உன் பிரச்சினைக்குத் தீர்வுகாண என்னை நாடி வந்திருக்கிறாய். நீ! என் பிரச்சினைக்குத் தீர்வு தேடி யாரிடமப்பா ஓடுவேன் நான்?"

"ஏன் ஐயா! உங்களுக்குமா பெரிய சோலிகள்?"

"என் வேதனையும் நான் பெற்ற உந்தப் பாவியாலேதான். என் கைப்படச் சம்பாதித்த சொத்து முழுவதையும் உந்த ஊத்தைச்சிக்குத்தான் எழுதிக்கொடுத்தேன். ஒரு சி.ஏ.எஸ். உக்குக் கட்டி வைத்தேன். நாலைந்து வருடமாகக் கொழும்பிலே சும்மா இருந்து கொண்டு நான் கொடுத்ததையெல்லாம் விற்றுச்சுட்டு அழித்த அவன் கடைசியில் இந்தத் தேயிலைத் தோட்டத்தில் கிளாக்காக வந்து சேர்ந்தான். அதுவரை தன்னை அழித்து வந்தவன் அன்றிலிருந்து என் மகளும் அழியக் கூடாத வகையில் அழிந்து போக வழி செய்து விட்டான்.

இரவு நேரங்களில் இங்கு நடைபெறும் திருக்கூத்துக்களை நீயே கவனித்துப் பார் இன்றைக்கு! என்னால் இனி இங்கே இருக்க முடியாது உலகநாதா! நீ ஊருக்குப் போகிறபோது என்னையும் கூட்டிப் போய் அராலியில் உள்ள என் மூத்த மகள் வீட்டில் விட்டு விடு."

"என்ன ஐயா! வீட்டுக்கு வீடு வாசல் படிதானா?" என்ற உலகநாதனுக்கு ஓரளவு அவ்விடத்து நடவடிக்கைகளை யூகிக்கமுடிந்தது. "அப்படியானால் அவர் இளையமகள் குடிக்கிறாள் அல்லது கெட்ட நடத்தையில் ஈடுபடுகிறாள். சீ இப்படியும் ஒரு குடும்பப்பெண்ணா?" என்று எண்ணினார்.

அமராவினால் அவசரப்படுத்தி உண்பிக்கப்பட்ட இரவுச்சாப்பாட்டின் பின் சின்னையர் கட்டிலுக்கு அருகே போடப்பட்ட கட்டிலில் உலகநாதர் படுத்துக்கிடந்தார். எதையோ கண்டுபிடித்து விடத்துடிக்கும் ஆவல் அவர் மனதிலே கூர்மை பெற்று நின்றது. அறைக்கண்ணாடி யன்னல்களுக்கூடாக வெளியே தூரத்தே தெரியும் பூதாகரமான கரிய மலைச்சாரலில் மின்மினிகளாக மின்னும் ஆயிரக்கணக்கான வீட்டு விளக்குகளை எதேச்சையாக விழிகள் மேய விட்டுக்கிடந்த உலகநாதரின் காதுகளில் பங்களாவின்வெளிவிறாந்தையில் சின்னையரின் மருமகன் நல்லையனின் குடிபோதைக் குழறல்களும் விகாரமான ஓசைகளும் விழுந்து நெஞ்சைக் குத்துகின்றன.

"குடியுங்கள் இன்னும் ஒரு சிப்! ஆகா? நீங்கள் மகா கெட்டிக்காரன் தான்" என்ற அன்னிய இளைஞன் ஒருவனின் உருவேற்றும் பாராட்டுக்கள்! "ஹூக்கும் டாலிங் நினைத்தால் ஒரு நொடியில் இன்னும் ஒரு போத்தலைக் காலியாக்கிவிடுவார். இல்லையா? சொல்லுங்க டாலிங்" அமராவின் குழையடிப்புக் கொஞ்சல்கள். "ஆமடி குடிப்பேன் இன்னும் குடிப்பேன். ஒரு போத்தல் என்ன ஒரு பரல்லே" சுய உணர்வை முற்காற் பங்கு இழந்துவிட்ட நல்லையனின் வீழ்ச்சிப் பிதற்றல். தொடர்ந்து போத்தல் திறக்கப்படும் ஒலி கண்ணாடிக் கிண்ணங்களின் உரஞ்சல் தடுக்கல் ஒலிகள்.

"அமரா மைடியர் டாலிங்" தொடர்ந்து அமைதி, ஆனால் அந்த அமைதி இன்னும் இன்னும் நீடிக்கிறதே! மெல்ல எழுந்த உலகநாதர் திறப்புத் துவாரத்தினூடாகப் பார்வையைச் செலுத்துகிறார். அவர் முகத்தில் அருவருப்பின் ஆத்திரத்தின் ரேகைகள் ஒன்றையொன்று அழித்து நிலை பெற நடத்தும் ஆதிக்கப் போராட்டம். பக்கத்து அறை திறந்து சார்த்தப்படும் ஒலி. தொடர்ந்து நிசப்தத்தின் அழுத்தத்தை மெல்ல வருடிப் பார்க்கும் ஓசை இழைகள். படாரென்று கதவை உடைத்துத் திறந்து வெளியே பாய்ந்து அடுத்தஅறைக்குள் புகுந்து அமராவையும் அந்த அன்னியக் கழிசடையையும் இழுத்துப் போட்டு உதை உதையென்று உதைக்கவேண்டும் போல் இருந்தது உலகநாதனுக்கு. அவர் வாழ்நாளில் அதர்மத்தைக் கண்டு முதல்தடவையாக ஏற்பட்ட வீராவேசம்! நாடிநரம்புகளில் என்றுமே ஏற்பட்டிராத – அவர் இதுவரைஅனுபவித்தே அறியாத தினவு முறுக்கு. "தர்மத்தின் காவலனாக ஒருவன் மாறும்போது அவனுக்கு அத்துணைத் துணிச்சலா? அசுர பலமா? அப்படியானால் பெருந்தகையின் அபாரமான துணிச்சலுக்கு அவன் தர்ம உணர்ச்சிதான் காரணமா?" என்று மிடுக்கோடு சிந்தித்தவர் நினைத்ததைச் செய்தே விட்டார். அவர் அறைக்கதவு படீரென்று திறக்க விறாந்தைக்கு அவர் பாயவும் மறு அறையிலிருந்து பதற்றத்தோடு அந்த வாலிபன் ஆபாசக் கோலத்தில் வெளியில் பாயவும் சரியாக இருந்தது. அந்த அரையிருளில் அவ்வன்னிய வாலிபன் வயிற்றை நோக்கி உலகநாதர் வீசிய காலால் தாக்குண்டு அவன் சுழன்று போய்ச் சுவர் அருகே வீழ்ந்தான். விழுந்தவன் எழமுடியாமல் தள்ளாடி எழும்வரை காத்து நின்ற உலகநாதர் தம் வலிய கையினால் அவன் கன்னத்தில் கொடுத்த அறை அவனை மீண்டும் தரையில் சாய்த்து விட்டது.

"அயோக்கியப்பயலே நீஇந்தப் பக்கம் தலை காட்டினால், உன் தலையை வெட்டிப்போட்டுவிடுவேன்." என்று அவர் ஏசிய போது மெல்ல எழுந்த அந்த வாலிபன் தலைகுனிந்தபடி இருளில் இறங்கித் தெருவை நோக்கித் தள்ளாடிப் போய்க்கொண்டிருந்தான்.

அப்பொழுதுதான் தன் ஆடையைச் சரிப்படுத்திக் கொண்டு அறையிலிருந்து வெளியே வந்த அமரா "மிஸ்டர் இது எங்கள் சொந்த விசயம்!

இதில் தலையிட நீர் யார்? இனி ஒரு நிமிடம் கூட இங்கிருக்க உமக்கு அனுமதியில்லை. போம் வெளியே" என்று இட்ட உத்தரவு கேட்டு உலகநாதர் காறிய எச்சியை "யூ ஆர் றைட் மை டியர்" என்று குழறிய கணவன் மூஞ்சியில் துப்பி விட்டார் மிகப் பொருத்தமான முகம் இதுவே என்றெண்ணி! "என்ன? இந்தச் சோணகிரி ஆண்பிள்ளையும் மனமொத்தா மனைவியை விற்றுப் பிழைக்கிறான். மானம், ரோசம், தோல், சுரணை இல்லாத நாய்கள்" என்று நெஞ்சங் கொதித்தார். "கண்டவனோடு ஓடிப்போன பரத்தை மகளைப் போய்த் திருத்தட்டும்" என்ற அமராவின் வார்த்தை கேட்டதோ? இல்லையோ? "அடி ஊத்தைவாளி நாயே! அவள் ஒருத்தனோடுதான் ஓடினாள். ஒருத்தனோடுதான் வாழவும் போகிறாள். தன்னைக்காக்கும் விடயத்தில் அவள் உயிரையே பலிகொடுக்கத்தயாராயிருந்தாள். நான் தேடிக்குவித்த பாவச் சொத்துச் சுமையிலிருந்து தன்னைக்காத்துக் கொள்ள வைத்த புண்ணிய நடத்தையுள்ளவள். மனத்தால் வரித்த ஒருவனையே வாழ்விலும் வரித்துக் கொண்டு தனது மானத்தை, பெண்மையைக் காத்துக் கொண்ட உத்தமி அவள். உன்போன்று சீரழிந்த சீரழியும் நாய்களை இந்த உலகம் மன்னித்து உயிரோடு விட்டுவைத்திருக்கும் போது நேர்மை, பெண்மை காப்பதற்காக ஓடிய என் பிள்ளையை நான் அணைத்துக் கொண்டால் என்ன? கட்டிய மனைவியை விற்றுப்பிழைக்கும் ரோசமற்ற கணவனை விட அந்தப்பையன் பெருந்தகை எத்தனை ஆயிரம் மடங்கு மேலானவன்? உங்களைப் பார்த்தபிறகுதான் என்பிள்ளையின் அருமை பெருமை தெரிகிறது. பெருந்தகையின் பெருந்தகைமை புரிகிறது. அந்தத் தெய்வக் கொழுந்துகளிடம் போய் மன்னிப்புக் கேட்டால் ஒழிய என் துயரம், என் பாவம் தீராது. உன்னைத் திருத்தப்போய்க் கிடைத்த சவுக்கடிபோதும். இதோ போய்விடுகிறேன்" என்று கத்திய உலகநாதர் தம்படுக்கை அறைக்குள் ஓடியவர் சின்னையரைக் குண்டுக்கட்டாகத் தூக்கிச் சென்று தம் வண்டிக்குள் இருத்திவிட்டு இயந்திரத்தை இயக்கி முடுக்கினார்.


"பொன்மணீ! பெருந்தகையா அந்தப்பையன்?"என்று கூவிய சரவணச்சாமி "ஆண்டவனே! உன் கருணைக்கு நிகர் ஏது ஐயா? இந்த ஏழை அடியவனுக்காக இத்தனையும் செய்தாயே?" என்றுபதறிய போது அவரது வெள்ளைத்தாடி கண்ணீரில் நனையலாயிற்று.

"அவன் நான் சென்று தரிசிக்கின்ற ஒரு நல்ல குடும்பத்துத் தங்கமான பையன் அம்மா. அவன் குடும்பமே மரியாதைக்குப் பேர்போனது. பெருந்தகையின் தகப்பன் முத்தையா தாய் காமாட்சி அடக்கம் மிக்கவர்கள்; பயபக்தியுடையவர்கள். பெருந்தகையின் உழைத்தே உண்ண நினைக்கும் நேர்மை சமதர்ம உணர்ச்சி, பட்டப்படிப்பு இவற்றைப் பார்க்கும் போது உன்மகள் மிகவும் கொடுத்து வைத்தவள். அவள் பாக்கியசாலிகளுள் பாக்கியசாலி. பெருந்தகையை மருமகனாக அங்கீகரித்து மருமகனாக ஏற்கின்ற பாக்கியம் - புண்ணியம் உனக்கும் கணவனுக்கும் இருக்கவேண்டுமே தங்கச்சி."

"அந்தப்பாக்கியம் நிச்சயமாக எனக்கும் இப்பொழுது இருக்கிறது" என்றபடி அந்த ஒன்பது மணிஇருளைக் கிழித்துக் கொண்டு படியேறிய உலகநாதரையும் அவரது வார்த்தைகளின் புரட்சிப் பொருளையும் கிரகித்துக் கொண்ட அண்ணனும் தங்கையும் ஆனந்த அதிர்ச்சிக்குள்ளாகி மீண்டு, துள்ளியெழுந்து வியப்போடும் மகிழ்ச்சியோடும் உலகநாதனின் முகத்தைப் பார்த்தனர்.

"இத்தனை காலமும் கல்லோடும் மண்ணோடும், தாரோடும், சீமெந்தோடும் கட்டிப்புரண்டு காசு பணப்பித்தில் அலைந்த நான் மனித வாழ்வின் அர்த்தங்களைத் தேடல் புரியத்தவறி அழிந்து விட்டேன்'' என்று அமைதியாகச் சொல்லிக் கொண்டுபோன உலகநாதன் சரவணனின் பார்வையில் குழப்பமும் ஐயுறவும் கொப்பளிப்பதை அவதானித்துத் தொடர்ந்தார். "நான் பட்டுக் கெட்டுத்தான் திருந்த வேண்டும் என்றிருந்த என் தலைவிதிதான் நான் அன்று நீங்கள் மன்றாட்டமாகச் சொன்ன புத்திமதிகளை ஏற்காமல் தடுத்து உங்கள் மீது ஆத்திரங் கொண்டு வீட்டைவிட்டே விரட்டவும் வைத்திருக்க வேண்டும். இந்த அளவிலாவது நான் மனம் திருந்தி நிம்மதிப்பட வைத்தது உங்கள் பிரார்த்தனைதான்'' என்று கூறிமுடிப்பதற்குள் சரவணன் ஓடிச்சென்று அவரைக்கட்டித் தழுவிக் கொண்டு குலுங்கியழுதார். "நான் பாவவழிகளில் சம்பாதித்த சொத்துக்களை என்னால் உறிஞ்சப்பட்ட கூலியாட்களுக்கும், திருநெல்வேலி சைவ அநாதை இல்லத்துக்கும் கைதடி முதியோர் இல்லத்துக்கும் ஒருவார காலத்துள் பங்கிட்டு வழங்கி, அதன் மூலம் புனிதமாகிவிட்ட என் புண்ணியக்கைகளாலேயே என் பூங்கொடியை அந்த ஆண்பிள்ளை பெருந்தகைக்குத் தத்தம் செய்து கொடுக்கப் போகிறேன்''என்று அவர் தீர்மானமாக நறுக்குத் தெறிக்கும் குரலில் சொல்லிக் கொண்டிருக்கையில் கணவன் கால்களை ஒருகையாலும் அண்ணன் கால்களை மறுகையாலும் கட்டிக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் பெருக்கிக் கொண்டிருந்தாள் பொன்மணி "முத்தையாவின் குடும்பம் கலங்கிக் கொண்டிருப்பது தெரிகிறது. விடியட்டும்'' என முணுமுணுத்துக் கொண்டது சாமியாரின் திருவாய்.

– முற்றும் –



# இந்நாவல் பற்றி....!

* "திருப்பங்களை - திகைப்பூட்டும் வகையில் மட்டுமல்லாமல், உள்ளம் சிலீக்கும் வகையிலும் ஏற்படுத்திக் கதையை நடத்திச் செல்லும் பாங்கு நண்பரின் தனிப்பாங்கு"

* "கூலிக்கு வந்தவன்" வாசிக்கப்பட வேண்டிய புதினமன்று, படித்துச் சுவைத்து இரைமீட்க வேண்டியதொன்று என்பது உறுதி!"

* "இந்த மண்ணை வளமாக்க - தமிழ்ப் பண்பையும் சால்பையும் காக்க பெருந்தகை, பூங்கொடி, சரவணச்சாமியார் போன்றோர் நம்மிடையே தோன்றப் பண்டிதர் ச.வே.பவின் "கூலிக்கு வந்தவன்" உதவ வேண்டும் என்று தமிழ்த்தாயை வணங்குகின்றேன்.

27.02.2003 மூதறிஞர் க.சிவராமலிங்கம் B.A